# தியானமும் அன்பும்



ஓஷோ

# பொருளடக்கம்


1. தியானமும் அன்பும் - இதுதான் என் கோஷம்
2. ஆணும், பெண்ணும் - தியானமும், அன்பும்
3. இரண்டும் தேவைதான்
4. நீ வாழ்வதின் மூலமாக பகிர்ந்துகொள்
5. கடவுள் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்
6. அன்பு என்றால் என்ன?
7. ஓஷோவின் அழைப்பு
8. உங்களுக்குச் சொந்தமான மலர்களைக் கொண்டு வாருங்கள்
9. ஏன் புரிவதில்லை
10. தந்திரசாலித்தனம்
11. வியாதியஸ்தர்கள்
12. வாழும் வழி
13. சில புதுவகைத் தியானங்கள்
    1. அந்த அரக்கன் விடாப்பிடியாக தொடர்ந்து கொண்டே இருக்கட்டும்
    2. மைத்திரி பாவனா
    3. பார்வையாளன் மட்டுமே நடனமாட முடியும்
    4. குகையின் உள்ளே
    5. வேலையில் விழிப்புணர்வு

# தியானமும் அன்பும். இதுதான் என் கோஷம்

ஓஷோ,

மேற்கில் எங்களது வளரும் வழிமுறைகளில் பல, உதாரணமாக சந்திப்புக் குழு மற்றும் பிஸியோடிராமா போன்றவை குழு அடிப்படையையே கொண்டுள்ளது.

கிழக்கில் தேடுபவர்கள் சேர்ந்து வாழும் இடமாகிய ஆசிரமங்கள் இருந்தும் கூட, தனித்துவத்தை வலியுறுத்துவதாகவே தெரிகிறது.

நீங்கள் இந்த இரண்டு விதமான அணுகுமுறைகளைப் பற்றி சொல்ல முடியுமா?

இங்கு, இரண்டு விதமான வளரும் வழிமுறைகள் உள்ளன. உன் ஆன்மீக வளர்ச்சியை தனியாக தேட உன்னால் முடியும், அல்லது நீ ஒரு குழு மூலமாக, ஒரு பள்ளி மூலமாக வேலை செய்ய முடியும். இரண்டு விதமான வழி முறைகளும் எப்போதும் கிழக்கிலும் கூட இருக்கின்றன. சூபி வழிமுறைகள், குழு வழிமுறைகள் தான். ஆனால் இஸ்லாமிலோ, சூபியிலோ போன்று அவ்வளவு பரவலாக இருந்ததில்லை.

கடைபிடிக்கும் அளவை பொறுத்தமட்டில், இது ஒரு புதிய விஷயம். அதாவது மேற்கு முழுமையுமாக குழு அடிப்படையை கொண்டுவிட்டது. தற்போது மேற்கே உள்ளதைப் போல ஏராளமான மக்கள் அந்த வழியே செல்வதும், ஏராளமான குழு வழிமுறைகள் தோன்றியுள்ளதும், முன்னெப்போதும் நடந்ததில்லை.

அதனால், ஒரு விதத்தில் கிழக்கு தனிமை முயற்சியிலேயே நின்றுவிட்டது என்றும், மேற்கு குழு வழிமுறையை நோக்கி இப்போது வளர்ந்து கொண்டிருக்கிறது என்றும் சொல்ல முடியும். இது ஏன் இப்படி? என்ன வித்தியாசம்! ஏன் இந்த வித்தியாசம்?

உன் தன்முனைப்பு. அது சுமப்பதற்கு ஒரு சுமையாகும். நேரம் வந்தால் தான் குழு வழிமுறைகள் உதவமுடியும். உன் தன்முனைப்பு மிகவும் சுமையாகும் போது, தனிமையாக இருப்பது வேதனையளிக்கும்போதுதான் குழு வழிமுறைகள் பொருளுள்ளவை ஆகும். ஏனெனில், குழுவில் உன் தன்முனைப்பை கரைத்துவிடலாம்.

தன்முனைப்பு வளரவில்லையெனில், பிறகு தனித்துவ வழிமுறைகள் உனக்கு உதவமுடியும். நீ ஒரு உயரமான மலைக்கு போகமுடியும். நீ தனிமையாக முடியும். ஒரு குருவுடன் ஆஸ்ரமத்தில் வசிக்கும்போதுகூட நீ தனியாக வேலை செய்யலாம். நீ உன் தியானத்தை செய்கிறாய். மற்றவர்கள் அவர்களது தியானத்தை செய்கிறார்கள். நீங்கள் எப்போதும் சேர்ந்து வேலை செய்வதேயில்லை.

இந்தியாவில், இந்துக்கள் எப்போதும் குழுவாக வழிபாடு செய்வதேயில்லை. முஸ்லீம்களுடன் சேர்ந்துதான் குழு வழிபாடு இந்தியாவில் நுழைந்தது. முஸ்லீம்கள் குழுவாகத்தான் வழிபாடு செய்வார்கள். இந்துக்கள் எப்போதும் தனியாகத்தான் வழிபடுவார்கள். அவர்கள் கோவிலுக்கு சென்றால்கூட, அவர்கள் தனியாகத் தான் செல்வார்கள். அது ஒரு ஒன்றுக்கு ஒன்று உறவு. நீயும் உன் கடவுளும்.

தன் முனைப்பு ஒரு சுமையாக இருக்கும் அளவிற்கு வளராத போதுதான் இது சாத்தியமாகும். இந்தியாவில் நாங்கள் அது வளர உதவுவதேயில்லை. முதலிலிருந்தே நாங்கள் தன்முனைப்பிற்கு எதிரானவர்கள். தன் முனைப்பு வளர்ந்தால்கூட, அது தெளிவில்லாமல் குழப்பமாகவே இருக்கும். நீ ஆபத்தில்லாதவனாகவே இருப்பாய். நீ உண்மையிலேயே முழு தன்முனைப்போடு இல்லை. அது ஒரு மலையின் சிகரமாக உன்னுள் இல்லை. அது தரைமட்டமாக உள்ளது. நீ தன்முனைப்பு உடையவன் தான். ஏனெனில், ஒவ்வொருவருக்கும் தன்முனைப்பு வேண்டும். ஆனால், முழு தன்முனைப்பாளனாக இல்லை. நீ எப்போதும் இது தவறு என்று நினைக்கிறாய். உன்னை நீயே கீழே இழுத்துக் கொள்கிறாய். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் நீ தூண்டப்படுகிறாய். உன் தன்முனைப்பு ஒரு சிகரமாகிறது - ஆனால், சாதாரணமாக அது ஒரு சிகரமாக இல்லை. அது தரைமட்டமாகவே இருக்கிறது.

இந்தியாவில் தன்முனைப்பு கோபத்தைப் போன்றது. யாராவது உன்னைத் தூண்டினால் நீ சினமடைவாய்; யாரும் உன்னைத் தூண்டாவிட்டால் நீ சினமடையமாட்டாய். மேற்கில் தன்முனைப்பு எப்போதும் நிலையாக உள்ள ஒன்று. அது சினத்தைப் போலன்றி மூச்சுக்காற்றை போன்று உள்ளது. அதை தூண்ட வேண்டிய அவசியமே இல்லை. அது அங்கே உள்ளது. அது ஒரு நிலையான விஷயம்.

இந்த தன்முனைப்பினால், குழு மிகவும் உதவி செய்யும் விஷயமாகிறது. குழுவில், குழுவாக உன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும்போது, நீ உன் தன்முனைப்பை சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியும்.

அதனால்தான், மதத்தில் மட்டுமின்றி அரசியலிலும் கூட ஒரு சில விஷயம் மேற்கில் மட்டுமே இருப்பதாக உள்ளது. உதாரணமாக, மேற்கிலேயே மிக தன்முனைப்பு உடைய நாடாகிய ஜெர்மனியில், மிக மேற்கத்திய நாட்டில் தான் பாசிசம் வந்தது. அங்குதான் அது சாத்தியமானது. ஜெர்மானியன் தன்முனைப் புக்கு இணையானது, உலகில் வேறெங்கும் இல்லை. அதனால்தான், ஹிட்லரால் சாதிக்க முடிந்தது. ஏனெனில், எல்லோரும் தன்முனைப்பாளர்கள். எல்லோருக்கும் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ள ஏதாவது தேவை இருந்தது.

நாஸி ஊர்வலங்களில், பல லட்சக்கணக்கான மக்கள் நடைபோடுகிறார்கள், அங்கு உன்னை நீ இழந்து விடலாம். அங்கு நீ, நீயாக இருக்கவேண்டிய அவசியமில்லை. நீ ஊர்வலமாக மாறிவிடுகிறாய். அந்த பேண்ட் வாசிப்பு, அந்த இசை, அந்த சத்தம், அந்த வசியப்படுத்தும் ஹிட்லர், மக்களை ஈர்க்கும் தன்மை கொண்டவன் அவன். எல்லோரும் ஹிட்லரையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உன்னைச் சுற்றிலும் கடலைப் போல் உள்ள மக்கள் கூட்டம் முழுதும். நீ வெறும் ஒரு அலையாக மாறிவிடுகிறாய். நீ நன்றாக உணர்கிறாய், நீ புத்துணர்வை உணர்கிறாய். நீ இளமையை உணர்கிறாய், நீ சந்தோஷத்தை உணர்கிறாய். நீ உனது துன்பங்களை, உனது வேதனைகளை மறந்துவிடுகிறாய், உனது தனிமையை, உனது வெறுப்புகளை, மறந்துவிடுகிறாய். நீ தனியாக இல்லை. இவ்வளவு பெரிய மக்கள் கூட்டம் உன்னோடு இருக்கிறது. நீ அதனோடு இருக்கிறாய். உனது சொந்த தனிப்பட்ட கவலைகள் மறைந்து போகின்றன. திடீரென அங்கு ஒரு திறப்பு - நீ மிகவும் லேசாக உணருகிறாய். நீ பறப்பதைப் போல.

ஹிட்லர் மிகவும் வெற்றிகரமானவனாக ஆனதற்கு காரணம், அவனது தத்துவம் மிகவும் அர்த்தமுள்ளது என்பது அல்ல. அவனது தத்துவம் மடத்தனமானது, குழந்தைத்தனமானது, முதிர்ச்சியில்லாதது. மேலும், அவன் தான் சொல்வது சரிதான் என்று ஜெர்மன் மக்களை ஒப்புக்கொள்ள வைத்தான் என்பதும் அல்ல... அதுவல்ல முக்கியமானது. ஜெர்மன் மக்களை ஏற்றுக்கொள்ள செய்வது மிகக் கடினம், அது மிகக் கடினமான காரியம், ஏனெனில், அவர்கள் தர்க்கவாதிகள். அவர்கள் மனத்தில் தர்க்கம் ஆழமாக இருக்கிறது. எல்லா விஷயத்திலும், மிகவும் அறிவுப்பூர்வமானவர்கள். அவர்களை ஒப்புக்கொள்ள வைப்பது மிகவும் கடினம்; அதுவும் ஹிட்லரால் ஏற்றுக்கொள்ள செய்வது என்பது முற்றிலும் சாத்தியமில்லாத ஒன்று. ஆகவே, ஹிட்லர் ஒருபோதும் அவர்களை நம்ப வைக்க முயற்சிக்கவில்லை. மாறாக, அவன் ஒரு வசிய சக்தியை கொண்ட ஒரு குழுத்தன்மையையே உருவாக்கினான்.

அது அவர்களை அவனை ஏற்றுக்கொள்ள வைத்தது.

இதில், ஹிட்லர் என்ன செய்கிறான் என்பது முக்கியமல்ல. அவர்கள் என்ன உணருகிறார்கள் என்பதே முக்கியம். அவர்கள் ஒரு குழுவில், ஒரு பெரிய மக்கள் கூட்டத்தில் இருக்கும்போது, அது அப்படி ஒரு ஒதுக்க முடியாத அனுபவம். அதற்காக, இந்த மனிதன் பின்னால் செல்வது கண்டிப்பாக தகும் என்பதைப்போல. அவன் சொல்வது எதுவாக இருந்தாலும், தவறோ, சரியோ. தர்க்கரீதியானதோ இல்லையோ, மடத்தனமானதோ - ஆனாலும், அவனை பின்பற்றுவது நல்லதாகப் பட்டது. அந்த அளவு அவர்கள், தங்களுக்கு தாங்களே சுமையாக இருந்தார்கள். அவர்கள், மக்கள் கூட்டம் தங்களை விழுங்க விரும்பினார்கள். அதனால்தான், பாசிஸம், நாசியிஸம், மற்றும் எல்லா வகையான குழு பயித்தியக்காரத்தனங்களும் மேற்கே தோன்றுவது சாத்தியமாயிற்று.

கிழக்கில், ஜப்பான் மட்டும்தான் பின்பற்றியது. ஏனெனில், ஜப்பானை கிழக்கத்திய ஜெர்மனி எனலாம். ஜப்பான் கிழக்கிலுள்ள மேற்கத்திய நாடு. ஆகவே, அதே நிலைமைதான். அதனால் தான், ஜப்பான் ஹிட்லரின் பைத்தியக்காரத்தனத்திற்கு கூட்டாளியாக முடிந்தது.

இதே விஷயம்தான் மதத்திலும், மனோரீதியிலும் நடக்கிறது. குழு தியானம் நடக்கிறது. மேலும் வரப்போகும் பல ஆண்டுகளுக்கு குழு தியானமே தொடர்ந்து நடைபெறும். நூற்றுக்கணக்கான மக்கள் சேர்ந்திருக்கும்போது - நீ ஆச்சரியப் படுவாய்.

குறிப்பாக, மேற்கத்திய மனதைப் பற்றி தெரியாதவர்கள் மிகவும் ஆச்சரியப்படுவார்கள் - வெறும் கரங்களை கோர்ப்பது, நூற்றுக்கணக்கான மக்கள் சேர்ந்து அமர்ந்து வெறும் கரங்களை கோர்ப்பது, ஒருவரையொருவர் உணருவது, இவற்றால் அவர்கள் மிகவும் ஆனந்தமடைகிறார்கள்.

நீ ஆனந்தமடைய மாட்டாய். எந்த இந்தியனும் ஆனந்தமடைய மாட்டான். அவன், “என்ன முட்டாள்தனம் இது, நூறுபேர் ஒரு வட்டமாக உட்கார்ந்து கொண்டு வெறும் கரங்களை கோர்ப்பது என்ன ஆனந்தத்தை தர முடியும்? நீ எப்படி பேரின்பமடைய முடியும்? அதிகபட்சம் மற்றவர்களுடைய கை வியர்வையை மட்டுமே நீ உணரமுடியும்” என்பான்.

ஆனால், மேற்கில் நூறுபேர் கரங்களை கோர்த்துக் கொள்வதன் மூலம் ஆனந்தத்தை, பேரின்பத்தை பெறுகின்றனர். ஏன்? ஏனெனில், தன்முனைப்பினால் கரங்களை கோர்த்திருப்பதுக் கூட, மிகவும் சாத்தியமில்லாததாக ஆகிவிட்டது. கணவனும், மனைவியும் கூட சேர்ந்திருப்பதில்லை. கூட்டுக்குடும்பம் மறைந்துவிட்டது. அது ஒரு குழுவைப் போன்றது. சமுதாயம் மறைந்து விட்டது. மேற்கில், இப்போது உண்மையில், சமுதாயம் என்பது இல்லை. நீ தனியனாகவே நகருகிறாய்.

நான், புள்ளி விவரங்களைப் படித்தேன். அமெரிக்காவில் ஒவ்வொரு மனிதனும், மூன்று வருடங்களுக்குள் வேறு நகரத்திற்குச் செல்கிறான். இந்தியாவில் ஒரு கிராமத்தில் இருக்கும் மனிதன் அங்கேயே இருக்கிறான். அவன் மட்டுமல்ல, அவன் குடும்பமும் நூற்றுக்கணக்கான வருடங்களாக அங்கேயே இருக்கிறது. அவன் அந்த மண்ணில் வேரூன்றி விட்டான். அவன் ஒவ்வொன்றுடனும் உறவு கொண்டுள்ளான். அவன் எல்லோரையும் அறிவான். எல்லோருக்கும் அவனைத் தெரியும். அவன் அன்னியனல்ல. அவன் தனியனாக இல்லை. அவன் கிராமத்தின் ஒரு அங்கமாகவே வசிக்கிறான். அவன் எப்போதும் அதுவே. அவன் அங்குதான் பிறந்தான். அவன் அங்குதான் இறப்பான்.

அமெரிக்காவில், சராசரியாக மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மக்கள் நகர்ந்து கொண்டேயிருக்கிரார்கள். இதுதான் இதுவரை இருந்ததிலேயே, அதிசயமான நாகரீகம். நாடோடிகள் - வீடில்லை, குடும்பமில்லை, நகரமில்லை, கிராமமுமில்லை, உண்மையிலேயே நிரந்தரமில்லை. மூன்றே வருடங்களில், நீ எப்படி வேரூன்ற முடியும்? எங்கு போனாலும், நீ ஒரு அன்னியன்தான். உன்னைச் சுற்றி ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஆனால், உனக்கு எந்த சம்பந்தமுமில்லை. உறவின்றி இருக்கிறாய். முழுச் சுமையும் உன்னுடையதாகிறது.

ஒரு குழுவினிடையே அமர்வது, ஒரு சந்திப்புக் குழுவில் அல்லது வளர்ச்சிக் குழுவில் பங்கேற்பது, ஒருவர் உடலை ஒருவர் தொட்டுக் கொள்வது போன்றவைகளால், நீ அந்தக் குழுவின் ஒரு அங்கமாகிறாய். ஒருவர் கையை ஒருவர் தொட்டுக் கொள்வது, பிடித்துக் கொள்வது, ஒருவர் அருகில் ஒருவர் படுத்துக் கொள்வது, அல்லது ஒருவர்மேல் ஒருவர் படுத்திருப்பது. இவற்றில் நீ ஒருமையை உணர்கிறாய். ஒரு மத ஆனந்தம் நிகழ்கிறது.

நூறுபேர் நடனமாடிக்கொண்டு, ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டு, ஒருவரை ஒருவர் சுற்றி ஆடிவந்து, ஒன்றாகிப் போகிறார்கள். அவர்கள் ஐக்கியமாகிறார்கள். தன்முனைப்பு, ஒருசில வினாடிகளுக்கு கரைந்துவிடுகிறது. அந்த ஐக்கியம் ஒரு வழிபாடான விஷயமாக மாறுகிறது.

அரசியல்வாதிகள், இதை அழிவுப் பாதைக்கு பயன்படுத்தமுடியும். மதம், இதை உருவாக்கும் விஷயமாக பயன்படுத்தமுடியும். இது ஒரு தியானமாக மாறமுடியும்.

கிழக்கில், மக்கள் மிகவும் கூட்டமைப்பில்தான் இருக்கிறார்கள். அதனால், எப்போதெல்லாம் ஆன்மீகத்தை விரும்புகிறார்களோ, அப்போதெல்லாம் அவர்கள் இமயமலைக்கு செல்ல விரும்புகிறார்கள். இந்தச் சமுதாயம் மிகவும் நெருக்கமாக சுற்றி இருக்கிறது. அவர்கள் அவர்களிடம் விரக்தியடையவில்லை. அவர்கள் சமுதாயத்திடம் விரக்தி அடைந்துவிட்டனர். இதுதான் வித்தியாசம்.

மேற்கில், நீங்கள் உங்களிடம் விரக்தியடைந்து விட்டீர்கள். மற்றவரிடம், சமுதாயத்திடம், கூட்டாக சேர்ந்து கொள்ள உங்களுக்குப் பாலம் தேவைப்படுகிறது. எப்படி மற்றவர்களிடம் பழகுவது, எப்படி பாலம் உண்டாக்கிக்கொள்வது என்பதில், நீங்கள் உங்களை மறந்துவிடமுடியும். கிழக்கில், மக்கள் சமுதாயத்திடம் விரக்தியடைந்துவிட்டார்கள். அவர்கள் அதனுடன் நீண்ட நாட்கள் வாழ்ந்து விட்டார்கள் - அவர்கள் எந்த விதமான சுதந்திரமும் உணர முடியாத அளவிற்கு, சமுதாயம் மிகவும் நெருக்கமாக சுற்றி இருக்கிறது. அதனால், ஒருவர் சுதந்திரமடைய, மௌனத்தில் இருக்க விரும்பும்போதெல்லாம் அவர் இமயமலைக்கு ஓடுகிறார்.

மேற்கில், நீ சமுதாயத்திடம் ஓடுகிறாய் - கிழக்கில் மக்கள் சமுதாயத்திடமிருந்து ஓடுகிறார்கள், அதனால்தான் தனிமை வழிமுறைகள் கிழக்கில் இருக்கின்றன. குழு வழிமுறைகள் மேற்கில் இருக்கின்றன.

இங்கு நான் என்ன செய்கிறேன்? என் வழிமுறைகள் கலவையானவை. டைனமிக் தியானத்தில் முதல் பகுதியில் நீ குழுவின் ஒரு பகுதியாக இருக்கிறாய். கடைசி பகுதியில் குழு மறைந்துவிடுகிறது. நீ தனிமையில் இருக்கிறாய். நான் இதை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத்தான் செய்கிறேன். ஏனெனில், இப்போது கிழக்கு என்பதும், மேற்கு என்பதும், அர்த்தமற்றதாகிக் கொண்டிருக்கிறது. கிழக்கு, மேற்க்கை நோக்கி திரும்பி கொண்டிருக்கிறது. மேற்கு, கிழக்கை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் கடைசியில் இங்கு கிழக்கும் இருக்கப்போவதில்லை. மேற்கும் இருக்கப்போவதில்லை - ஒரே உலகம்.

இந்தப் பூகோள பிரிவுகள் மிக நீண்ட காலமாக இருக்கின்றன. இனியும் இது இருக்கமுடியாது. விஞ்ஞான முன்னேற்றம் ஏற்கனவே அதை அழித்துவிட்டது. அது ஏற்கனவே இல்லாமல் போய்விட்டது. ஆனால், மனத்தின் பழக்கத்தின் காரணமாக அது தொடர்கிறது. அது மனத்திலுள்ள ஒரு விஷயமாகத் தான் தொடர்ந்து இருக்கிறது. உண்மையில் இல்லை. இந்த நூற்றாண்டின் கடைசியில் இங்கு கிழக்கும் இருக்கப்போவதில்லை, மேற்கும் இருக்கப்போவதில்லை. ஒரே உலகம். அது ஏற்கனவே அங்கு இருப்பதை பார்க்கமுடியும்.

ஒரு கலவை தேவைப்படுகிறது. குழுவும் தனிமையும் கலந்தது. முதலில் நீ குழுவில் வேலை செய்கிறாய். கடைசியில், நீ முழுமையாக நீயாகிவிடுகிறாய். சமுதாயத்திலிருந்து ஆரம்பமாகி உன்னை வந்தடைகிறாய்.

கூட்டமைப்பிலிருந்து தப்பிப் போகாதே. இந்த உலகத்தில் வாழ். ஆனால், அதன் ஒரு பகுதியாகி விடாதே. தொடர்புடன், இரு. ஆனால், அதே சமயம் தனிமையாக இரு.

அன்பும் தியானமும், தியானமும் அன்பும்.

முன்னால் என்ன நடந்தது என்பது கேள்வியல்ல, பின்னால் என்ன நடக்கப்போகிறது என்பதும் கேள்வியல்ல.

நீ ஒரு ஆணானால் தியானமும் அன்பும்,

நீ ஒரு பெண்ணானால் அன்பும் தியானமும்.

ஆனால், தேர்ந்தெடுக்காதே. அன்பு & தியானம். இதுதான் என் கோஷம்.

# ஆணும், பெண்ணும். தியானமும், அன்பும்.

அன்புள்ள ஓஷோ,

எங்களுக்கு பெண்மை சக்தியைப் பற்றி சில சந்தேகங்கள் உள்ளன.

சில பெண்கள் அவர்கள் உங்களை சந்தித்த பிறகு அவர்களது உடல் ஆசைகள் தொடர்ந்தாலும், ஒரு சராசரி மனிதன் அவர்களை திருப்திப்படுத்த போதுமானவனாக இல்லை என்று சொல்கிறார்கள்.

மற்றும் சிலர், அவர்கள் உங்களை சந்தித்த பிறகு முதலில் இருந்ததைவிட, மேலும்மேலும், அன்பாக உணர்கிறேன் என்கிறார்கள்.

குருட்ஜிப், ஒரு ஆணின் உதவியின்றி ஒரு பெண்ணால் அடையமுடியாது என்கிறார்.

பெண்மையைப் பற்றி நீங்கள் எங்களிடம் பேச முடியுமா?

ஆம். குருட்ஜிப் ஆணின் உதவியின்றி ஒரு பெண் அடைய முடியாது என்று சொன்னார். அவர் சொல்வதும் சரிதான். ஏனெனில், ஆண்மையிலிருந்து வேறுபட்டது பெண்மை.

இது, ஒரு பெண்ணால் மட்டுமே ஒரு குழந்தையை பெற்றெடுக்க முடியும் என்று ஒருவர் சொன்னால், எப்படி இருக்குமோ அதை போன்றது. ஒரு ஆணால் ஒரு குழந்தையை பெற முடியாது. அவன் பெண் மூலமாகத்தான் ஒரு

குழந்தையை பெற முடியும். பெண்ணின் உடல் அமைப்பு கர்ப்பப்பையை கொண்டுள்ளது. ஆணின் உடல் அமைப்பில் கர்ப்பப்பை இல்லை. அவன் பெண்ணின் மூலமாகத் தான் ஒரு குழந்தையை உருவாக்க முடியும். இதுவேதான், ஆன்மீகத்தில் நேர்மாறாக நடக்கிறது. ஒரு பெண் ஆண் மூலமாகத்தான் முக்தி அடைய முடியும். அவர்களது உடலமைப்பு வேறுபடுவதைப் போல, அவர்களது ஆன்மீக சக்தி வேறுபடுகிறது. ஏன்? ஏன் இதுமாதிரி?

ஞாபகத்தில் கொள்: இந்த கேள்வி சமம் என்பதைப் பற்றியோ, சமமில்லை என்பதைப் பற்றியோ அல்ல. இது வேற்றுமை பற்றியக் கேள்வி, அவர்கள் நேரிடையாக அடைய முடியாது என்பதால், அவர்கள் ஆணைவிட தாழ்ந்தவர்கள் அல்ல. ஆணால், ஒரு குழந்தையை பெற்றெடுக்க முடியாது. அவர்கள் பெண்ணைவிட தாழ்ந்தவர்கள் அல்ல. அவர்கள் வேறுபட்டவர்கள். இங்கு சமம் என்பதைப் பற்றியோ, சமமில்லை என்பதைப் பற்றியோ கேள்வியில்லை. இங்கு சமத்துவத்தைப் பற்றி கேள்வியில்லை. அவர்கள் வேறுபட்டவர்கள். இதுதான் உண்மையும்கூட.

பெண்ணுக்கு, நேரிடையாக முக்தி அடைவது ஏன் கஷ்டமாக இருக்கிறது. ஏன் ஆணால், நேரிடையாக முக்தி அடைய முடியும்?

முக்தியை சென்றடைய இரண்டு வழிகள். இரண்டே வழிகள், அடிப்படையான இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று தியானம், ஒன்று அன்பு. நீ அவற்றை தியான யோகம், பக்தி யோகம் என்றும் பக்தி வழி, தியான வழி என்றும் அழைக்கலாம். அடிப்படை வழிகள் இரண்டுதான்.

அன்பிற்கு இன்னொருவர் வேண்டும். தியானம் தனியே செய்யலாம். ஆண் தியானத்தின் மூலம் அடைய முடியும். அதனால்தான், அவனால் நேரிடையாக அடையமுடியும். அவனால் தனியாக இருக்க முடியும். அவன் அடி ஆழத்தில் தனியாகத்தான் இருக்கிறான். தனிமை ஆணுக்கு இயற்கையாகவே வருகிறது. பெண்ணுக்கு தனியாக இருத்தல் கடினமானது. மிகவும் கடினமானது. கிட்டத்தட்ட முடியாது எனலாம். அவளது முழு உயிரும் அன்பிற்கு ஆழமாக துடிக்கிறது. அன்பிற்கு மற்றவர் வேண்டும். அங்கு ஒருவரும் இல்லாமல், நீ எப்படி அன்பு செய்யமுடியும்? அங்கு ஒருவரும் இல்லையென்றால், நீ தியானம் செய்யலாம். பிரச்சனையில்லை.

பெண், பெண்மை அன்பின்மூலம் தியான நிலையை அடைகிறது. ஆண்மை தியானத்தின் மூலம் அன்பை அடைகிறது. புத்தர் மிகப்பெரிய அன்பு வெள்ளமாக மாறினார். ஆனால், தியானத்தின் மூலம்.

புத்தர் அவரது அரண்மனைக்கு திரும்ப வந்தபோது, அவரது மனைவி மிகவும் கோபமாயிருந்தாள். இயற்கைதானே, காரணம் 12 வருடங்கள் அவர் முகத்தைக் கூட காட்டவில்லை. ஒரு இரவில், ஒரு வார்த்தைக்கூட சொல்லாமல் திடீரென மறைந்து விட்டார். அவள் உறங்கிக் கொண்டிருக்கும்போது, ஒரு கோழை போல தப்பி சென்று விட்டார்.

புத்தரின் மனைவி, யசோதரை அவரை அனுமதித்திருப்பாள். அவள் தைரியசாலியான பெண். ஒரு வேலை புத்தர் கேட்டிருந்தால், அவள் அனுமதித்திருப்பாள். அங்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், புத்தர் கேட்கவில்லை. ஏதாவது ஏடாகூடமாக ஆகிவிட்டால், என்று அவர் பயந்துவிட்டார். அவள் அழவோ, கதறவோ அல்லது வேறு ஏதாவதோ செய்யலாம் என்று பயந்தார். ஆனால், அந்த பயம் அவளால் ஏற்பட்டதல்ல. அந்த பயம் அவர் ஆழத்தில் இருந்தது. அவர் யசோதரை அழுது கதறினால், விட்டுவிட்டு செல்வது கடினம் என்று பயந்தார். பயம் எப்போதும் தன்னைப் பற்றியதாகத்தான் இருக்கும். யசோதரை கதறும்போது, விட்டுச் செல்வது மிகவும் குரூரமானது. அவரால், குரூரமாக இருக்க முடியாது. அதனால், அவர் மனைவி உறங்கிக்கொண்டிருக்கும் போது தப்பிச் செல்வது சிறந்தது. அதனால், அவர் சென்று 12 வருடங்களுக்குப் பிறகுத் திரும்பி வந்தார்.

யசோதரை பல விஷயங்கள் கேட்டாள். அவள் கேட்டவற்றில் ஒரு கேள்வி: “அங்கு போய் என்ன பெற்றீர்களோ, அதை இங்கு என்னுடன் வாழ்ந்தே அடைந்திருக்க முடியாதா? பதில் சொல்லுங்கள். இப்போது என்ன அடைந்தீர்கள். அதை எனக்கு சொல்லுங்கள்”.

புத்தர் மௌனமாக இருந்துவிட்டார். ஆனால், நான் பதிலளிக்கிறேன். புத்தரால் அடைந்திருக்க முடியாது. ஏனெனில், ஆண் அன்பில் இருக்கும்போது முடியாது. அவர் யசோதரையின்மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அது மிகவும் நெருங்கிய உறவாகும். யசோதரையுடன் ஆழமான உறவில்லாமலோ, அன்பான உறவில்லாத ஒரு இந்து மனைவி போல, இருந்திருந்தாலோ, புத்தர் அவளுடன் வாழ்ந்தே அடைந்திருக்க முடியும். அங்கு எந்த பிரச்சனையுமில்லை. மற்றவர் வெளி வட்டத்திலேயே இருந்தால், நீ பிணைக்கப்படமாட்டாய். நீ பிணைக்கப்படாவிட்டால், மற்றவர் தடையாக அங்கு இல்லை. உறவு உடலளவில் மட்டுமே, மேல் மட்டத்திலேயே இருக்கிறது.

ஆனால், புத்தர் ஆழமான அன்பு கொண்டிருந்தார். ஒரு மனிதனுக்கு அவன் அன்பில் இருக்கும்போது தியானத்தை அடைவது கடினம். இதுதான் பிரச்சினை. மிகவும் கடினம். ஏனெனில், அவன் அன்பில் இருக்கும்போது, அவன் எப்போது மௌனமாக அமர்ந்தாலும், அவன் மனதில் மற்றவர் உதிப்பார். அவன்

முழுவதுமாக மற்றவரை சுற்றி இயங்க ஆரம்பித்து விடுவான். அதுதான் அந்த பயம். அதனால்தான், புத்தர் தப்பிச்சென்றார்.

இதற்கு முன் யாரும் இதைப்பற்றி பேசியதில்லை. ஆனால், புத்தர் உண்மையிலேயே அன்பு செய்ததால்தான் அவர் மனைவியிடமிருந்து, குழந்தையிடமிருந்து, வீட்டிலிருந்து தப்பிச் சென்றார். நீ ஒருவரை விரும்பினால் நீ எப்போது நிரம்பியிருந்தாலும், நீ அவரை மறந்துவிடுவாய். ஆனால், எப்போதெல்லாம் உனக்குள் காலி இடம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் உடனடியாக உன் அன்பிற்குரியவர் ஞாபகம் உள்ளே வந்துவிடும். பிறகு அங்கு இறைமை நுழைய இடம் இல்லை.

நீ நிரம்பியிருக்கும்போது, அதாவது நீ கடையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அல்லது..... புத்தர் அவரது அரியணையில் அமர்ந்து அரசவை வேலையை கவனித்துக்கொண்டிருக்கும் போது, அப்போது சரிதான், அவர் யசோதரையை மறந்து விடுவார். ஆனால், எப்போது அவர் எதுவும் இல்லாமல் இருக்கிறாரோ, அப்போது அங்கு யசோதா வந்து விடுவாள். அந்த இடம் யசோதரையால் நிரப்பப்பட்டுவிடும். அங்கு இறைமை நுழைய இடமேயில்லை.

ஆண் இறைமையை அன்பின்மூலம் அடையமுடியாது. அவனது முழு சக்தியும், பெண்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. முதலில் அவன் தியான நிலையை அடையவேண்டும். பின், அன்பு அவனுக்குள் நிகழும். பிறகு அங்கு பிரச்சனையில்லை. முதலில், அவன் இறைமையை அடைய வேண்டும். பிறகு, அவன் அன்பிற்குரியவரும் இறைமையாகி விடுவார்.

12 வருடங்களுக்கு பிறகு புத்தர் திரும்ப வந்தார். இப்போது எந்த சிக்கலுமில்லை. இப்போது யசோதரைக்குள் கடவுள் இருக்கிறார். இதற்கு முன், யசோதரைதான் இருப்பாள். கடவுளைக் காண்பது அரிது. இப்போது முழுக்கமுழுக்க கடவுள் இருக்கிறார். யசோதரைக்கு ஒரு இடம்கூட பாக்கியில்லை.

இதற்கு நேர் எதிரிடையானது பெண்ணுக்கு நடக்கிறது. அவளால் தியானம் செய்ய முடியாது. ஏனெனில், அவளது முழு உயிரும் அடுத்தவருக்காக துடித்துக்கொண்டிருக்கிறது. அவளால், தனிமையாக இருக்க முடியாது. எப்போதெல்லாம், அவள் தனியாக இருக்கிறாளோ, அப்போதெல்லாம், அவள் துயரத்தில் இருக்கிறாள். அதனால், தனிமை ஒரு ஆனந்தம், தனியாக இருத்தல் களிப்பு, என்று நீ சொன்னால் ஒரு பெண்ணால் அதை புரிந்துகொள்ள முடியாது. தனிமையாக இருக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஏனெனில், பல ஞானிகள் புத்தர், மஹாவீரர், ஜீஸஸ், முகம்மது

எல்லோரும் ஆண்களே. இவர்கள் எல்லோரும் தனிமைக்குள் சென்றிருக்கின்றனர். இவர்கள் தனிமையில்தான் அடைந்திருக்கின்றனர். அவர்கள் அந்த கருத்தை உருவாக்கிவிட்டனர்.

ஒரு பெண் தனிமையிலிருக்கும்போது, வேதனையடைவாள். அவள் மனதிலாவது, ஒரு காதலன் இருந்தால் அவள் மகிழ்ச்சியாயிருப்பாள். யாராவது அன்பு செய்தால், அவளைச் சுற்றி அன்பிருந்தால், அது அவளுக்கு ஊட்டமளிக்கும். அது ஒரு ஊட்டச்சத்து, அது ஒரு நுட்பமான உணவு. எப்போதெல்லாம், ஒரு பெண் அன்பில்லையென்று உணர்கிறாளோ, அப்போது துன்புறுகிறாள், அவஸ்தைப்படுகிறாள். அவள் முழுமையும் சுருங்கி விடுகிறாள். அதனால், ஒரு பெண்ணால், தனிமை ஆனந்தமாயிருக்கும் என்பதை நினைத்தே பார்க்க முடியாது.

பெண்மைதான், பக்தியையும் அன்பு வழியையும் உருவாக்குகிறது. இறைமை, அன்புக்கூட இதை செய்யக் கூடும். உடல் மூலம் அன்பு தேவை இல்லை. மீராவிற்கு கிருஷ்ணரே போதும் என்பதைப்போல, அங்கு சிக்கல் இல்லை. ஏனெனில், மீராவிற்கு மற்றவர் உள்ளார். அவன் அங்கு இல்லாமல் இருக்கலாம். கண்ணன் ஒரு மாயையாக இருக்கலாம். ஆனால், மீராவிற்கு அவர் உள்ளார். அன்பிற்குரியவர் உள்ளார். மீரா மகிழ்ச்சியடைகிறாள். அவள் ஆடுகிறாள், பாடுகிறாள், அவள் வளர்கிறாள்.

மற்றவர், அங்கு இருக்கிறார் அன்பு செய்ய என்ற அந்த கருத்தே, அந்த எண்ணமே, அந்த உணர்வே பெண்ணுக்கு நிறைவை அளித்துவிடுகிறது. அவள் மகிழ்வுடன் துடிப்புடன் வாழ்வாள். இந்த அன்பினால்தான் காதலிப்பவரும், காதலிக்கப்படுபவரும் ஒன்று என்ற முடிவிற்கு அவள் வருவாள். பிறகு தியானம் நிகழும்.

அன்பில் ஒருங்கிணையும்போது மட்டும்தான் பெண்மைக்கு தியானம் நிகழும். பிறகு அவளால் தனிமையில் இருக்க முடியும். பிறகு அங்கு சிக்கலில்லை, ஏனெனில், இப்போது அவள் தனிமையாக இருக்க முடியாது. இப்போது அன்பிற்குரியவர் அவளுடன் ஐக்கியமாகிவிட்டார். இப்போது அவர் அவளுள் இருக்கிறார். மீரா, ராதா, தெரசா எல்லோரும் ஒரு அன்பர் மூலமாகத்தான் அடைந்துள்ளனர். கிருஷ்ணன், இயேசு.

எப்போதெல்லாம் ஒரு ஆண் என்னிடம் வருகிறாரோ, அவர் தியானத்தில் தான் ஆர்வம் காட்டுகிறார். ஒரு பெண் என்னிடம் வரும்போதெல்லாம், அவள் அன்பில்தான் ஆர்வம் காட்டுகிறாள் என்று நான் உணர்கிறேன். நான் அன்பு தியானத்தின் மூலம்தான் நிகழும் என்று சொன்னால், அவள் தியானத்தில் ஆர்வம் காட்டுகிறாள். ஆனால், அவள் ஆழமான விருப்பமே அன்புதான். ஒரு பெண்ணிற்கு அன்புதான் தெய்வம்.

இந்த வேற்றுமை புரிந்துகொள்ள வேண்டியது. ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், எல்லா விஷயங்களும் இதைச் சார்ந்தே உள்ளது. அதனால் குருட்ஜிப் சொன்னது சரியானதுதான்.

பெண்மை அன்பு செய்கிறது, அன்பின் மூலமாகத்தான் தியான நிலை, சமாதி, சமாதியின் முதல் நிலை வரும். மலரும். ஆனால், ஆழத்தில் வேரில் அன்புதான் இருக்கும். சமாதியின் முதல் அனுபவம் மலராக மலரும்.

ஆண்மைக்கு சமாதியின் முதல் அனுபவம்தான், சமாதி, தியானம்தான் வேரில் இருக்கும். அதிலிருந்து அன்பு மலரும். இங்கு மலரும் நிலையாக இருப்பது அன்பு.

எப்போது உண்மையை தேடும் பெண்கள் என்னிடம் வருகிறார்களோ, அப்போதெல்லாம் இது நடக்கும். அவர்கள் அதிக அன்பை உணர்கிறார்கள். பிறகு உடல் துணையாக இருப்பவர்கள் திருப்தியளிப்பதில்லை. எப்போது, அங்கு ஆழமான அன்பிருக்கிறதோ, அப்போது உடல்துணையோடு திருப்தியடைய முடிவதில்லை. ஏனெனில், உடல்துணை வெளிவட்டத்தைத் தான் நிரப்ப முடியும். அவன் உள்ளே நிரப்ப முடியாது.

அதனால்தான், இந்தியா போன்ற பழமையான நாடுகளில் நாங்கள் காதலை அனுமதிப்பதேயில்லை. நாங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட கல்யாணங்களைத்தான் அனுமதிக்கிறோம். ஏனெனில், ஒருமுறை காதலை அனுமதித்தால் உடல்துணை இப்போதோ, பிறகோ திருப்தியில்லாமல் போக போகிறது. பிறகு அங்கு விரக்தி வரும்.

இப்போது மேலை நாடுகள் பாதிக்கப்பட்டுவிட்டன. இப்போது அங்கு திருப்தி எங்கேயும் இல்லை. ஒருமுறை நீ காதலை அனுமதித்தால் பிறது ஒரு சாதாரண ஆண் நிறைவளிக்க முடியாது. அவன் பாலுணர்வை பூர்த்தி செய்ய முடியும். அவன் மேல்மட்டத்தில் திருப்தி செய்ய முடியும். ஆனால், அவனால் ஆழத்தை நிரப்ப முடியாது. ஒருமுறை ஆழம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால், ஒருமுறை நீ ஆழத்தை கலைத்துவிட்டால், கடவுள் மட்டுமே பூர்த்தி செய்யமுடியும். வேறு யாராலும் முடியாது.

அதனால், உண்மையைத்தேடும் பெண்கள் என்னிடம் வரும்போது, அவர்களது ஆழம் அதிர்வுக்குள்ளாகிறது, அவர்கள் ஒரு புதிய துடிப்பை, ஒரு புதிய அன்பு உதயமாவதை உணர்கிறார்கள். ஆனால், இப்போது அவர்களது கணவனோ, ஆண் நண்பனோ, அவர்களது உடல் துணையோ திருப்திப்படுத்த முடிவதில்லை. இவர்களைவிட உயர்ந்த குணமுடைய உயிரால்தான், இந்த துடிப்பை திருப்திப் படுத்தமுடியும். இது இப்படித்தான் இருக்கும்.

அதனால் உன் கணவனோ, உன் ஆண் நண்பனோ மேலும் உயர்ந்த இயல்புகளை உருவாக்கிக்கொள்ள, மேலும் தியானத்தில் ஆழ வேண்டும். பிறகு மட்டுமே அவனால் நிறைவு செய்ய முடியும். இல்லாவிடில், மற்றபடி இந்த உறவு முறிந்துவிடும். அந்த பாலம் தொடர்ந்து இருக்க முடியாது. நீ ஒரு புதிய நண்பனை தேட வேண்டியதுதான். அல்லது ஒரு புதிய நண்பனை கண்டுபிடிப்பது முடியாதது, கடினம் எனில் - மீராவிற்கு ஏற்பட்டதை போல நீ இறைமையின் மேல் அன்பு செலுத்த வேண்டியதுதான். பிறகு உடலை பற்றி மறந்துவிட வேண்டும். ஏனெனில், இது உனக்கானதல்ல.

உண்மையை தேடும் ஆண்களுக்கும் இதுவேதான். ஆனால், வேறு வழியில் நடக்கிறது. அவர்கள் என்னிடம் வந்துவிட்டப்பின், அவர்கள் மேலும் தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார்கள். அவர்கள் அப்படி தியானத்தில் வாழும்போது, அவர்களுக்கும், பழைய துணைக்கும் உள்ள பாலம் உடைந்து விடுகிறது. பாதிக்கப்படுகிறது. இப்போது அவர்கள் மனைவியோ, பெண் நண்பியோ வளர்ந்தே ஆகவேண்டும். இல்லாவிடில், அந்த உறவு பாலைவனம் ஆகிவிடும். அதை பராமரிக்க முடியாது.

ஞாபகத்தில் கொள்: நமது உறவுகள் எல்லாம், எந்த உறவாயிருந்தாலும் சரி, எல்லாம் விட்டுக்கொடுத்தலே. ஒருவர் மாறினால் விட்டுக்கொடுத்தல் உடைந்து விடும். அது நல்லதற்கோ, கெட்டதற்கோ என்பதல்ல இப்போதைய பிரச்சனை. மக்கள் என்னிடம் வந்து, “தியானம் மேலும் உயர்ந்த பண்புகளை உருவாக்குமானால் பின் ஏன் இந்த உறவு முறிகிறது” என்று கேட்கிறார்கள். அதுவல்ல கேள்வி, இரண்டு நபர்கள் உறவாக இருக்க வேண்டுமெனில், அங்கு விட்டுக்கொடுத்தல் வேண்டும், இப்போது ஒருவர் மாறினால் மற்றவர் அவருடன் சேர்ந்து வளர வேண்டும். இல்லாவிடில் அங்கு சிக்கல் வரும். நடப்பவை அனைத்தும் தவறாக மாறும்.

ஒரு ஆண் இங்கிருக்கும்போதெல்லாம், அவன் அதிக தியானத்தில் ஆழ்கிறான். அப்படி தியானத்தில் ஆழும் போது அவன் தனிமையை நாடுகிறான். அவன் மனைவி, காதலி இதனால் பாதிக்கப்படுகிறாள். அவள் புரிந்து கொள்ளாவிட்டால், பிரச்சனை உண்டுபண்ண ஆரம்பிக்கிறாள். இவன் தனிமையில் இருக்க விரும்புகிறான். அவள் புரிந்து கொண்டுவிட்டால் பிரச்சனையில்லை. ஆனால் அவள் அன்பு வளர்ந்தால்தான் அந்த புரிந்து கொள்ளுதல் அவளுக்கு வரும். அவள் மேலும் அன்பை உணர்ந்தாலேயானால், பிறகு அவளது துணைவனை தனிமையில் தனியாக இருக்க அனுமதிப்பாள். அவனது தனிமையை பாதுகாக்கவும் செய்வாள். அது பாதிக்கப்படக்கூடாது என்று பார்த்துக்கொள்ள முயற்சி செய்வாள். இதுதான் இப்போது அவளது அன்பாகும்.

இதை மனிதன் உணர்ந்தால்........புத்தர் யசோதரை தனது தியானம் பாதிக்கப்படாமலிருக்க பாதுகாப்பாள், காவலிருப்பாள், பார்த்துக் கொள்வாள், தனது மௌனத்திற்கு உதவி செய்வாள், என்பதை உணர்ந்தால் அவளிடமிருந்து தப்பிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், யசோதரையின் அன்பு வளர்ந்தால் மட்டுமே இது நிகழும்.

ஒரு ஆணின் தியானம் வளருகிறபொழுதே, பெண்ணின் அன்பும் வளரவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் இணைந்து இருக்கமுடியும். மேலும் ஒரு உயர்ந்த இசைவும் அவர்களுள் ஏற்படும். மென்மேலும் அது உயர்ந்து கொண்டேச் செல்லும். ஆண் முழுமையாக தியானத்திலும், பெண் முழுமையாக அன்பிலும், இருக்கும் அந்தக் கணம் வரும்பொழுது, அப்போதுதான் மிகச் சரியான சந்திப்பு, உண்மையான, உயர்ந்த கலப்பு இரண்டு பேரிடையே சாத்தியமாகும். வெறும் உடல், வெறும் காமம் மட்டுமல்லாமல் முழுமையானது சாத்தியம். இரண்டு இயற்கையின் கூறுகள் சந்தித்து, தங்களுள் இரண்டறக் கலக்கின்றன. அப்பொழுது காதலன் ஒரு வாயில், காதலி ஒரு வாயில், மேலும் அவை இரணடுமே ஒரே இடத்தில் போய் சேர்கின்றன.

அதனால், யார் என்னிடம் வந்தாலும், என்னருகில் வருவது ஆபத்தானது என்பதை கவனத்தில் கொண்டு என்னிடம் வரவேண்டும். உன் பழைய ஏற்பாடுகள் பாதிக்கப்படும். அதற்கு நான் உனக்கு உதவ முடியாது. நான் உன் விட்டுக்கொடுத்தல்களுக்கு உதவி செய்வதற்காக இங்கு இல்லை. அதில் முடிவெடுக்க வேண்டியது நீதான்.

நீ வளர நான் உதவி செய்ய முடியும். தியானத்தில் வளர, அன்பில் வளர, என்னைப் பொறுத்தவரை இரண்டு வார்த்தைகளுமே ஒரே அர்த்தத்தைக் குறிக்கும். ஏனெனில் அவை சென்றடைவது ஒரே முடிவைத்தான்.

## *இரண்டும் தேவைதான்*

அன்புள்ள ஓஷோ,

ஒவ்வொரு குழந்தையும் கடவுளாக பிறக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். இருந்தும் என்னுடைய இரண்டு குழந்தைகளும் பிறப்பிலிருந்தே மிகவும் வேறுப்பட்டுள்ளன. ஒன்று மிகவும் அடக்கமாக, அமைதியாக, கடவுளைப்போன்று

உள்ளது. மற்றவள் அடுத்தவர்களுடைய தூண்டுதல் இல்லாமலேயே, பாதிக்கப்பட்டவளாக இருக்கிறாள். எப்படி நாங்கள் இந்த கஷ்டமான பெண்ணை கையாள்வது?

இது ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்புகிறது. இயற்கையே இறைமைதானே? பிறகு எங்கிருந்து சாத்தான் வருகிறது? எங்கிருந்து மோசம், ஒழுக்கமில்லாதது, கெட்டது வருகிறது.

நல்லது என்றால் சரி, ஏனெனில், நாம் நல்லதை கடவுளுக்கு மறுபெயராக வைத்துள்ளோம். நல்லது என்றால் கடவுள். ஆனால் தீமை எங்கிருந்து வருகிறது? இதுதான் மிகவும் கடினமான கேள்வியாக நூற்றாண்டுகளாக மனித இனத்திற்கு இருந்து வருகிறது. எவ்வளவு தூரம் நாம் பின்னோக்கிச் சென்றாலும், இந்த பிரச்சனை மனிதனின் மனத்தில் எப்போதும் உள்ளது.

மனம் காணக்கூடிய தீர்வு, அது ஒரு தர்க்கரீதியான தீர்வு, அது இயற்கையை பிரிக்கும், இருமையை உண்டாக்கும். கடவுள் இருக்கிறார் என்று சொல்லும், இது நன்மையின் பக்கம், சாத்தான் இருக்கிறார் என்று சொல்லும், இது தீமையின் பக்கம்.

இந்தப் பிரச்சனை முடிந்துவிட்டது என மனம் நினைத்தது. இப்போது தீமைகளெல்லாம், சாத்தானிடமிருந்து வருகிறது. நன்மைகளெல்லாம், கடவுளிடமிருந்து வருகிறது. ஆனால், பிரச்சனை தீரவில்லை. பிரச்சனை சிறிதே பின்னால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. பிரச்சனை அப்படியேதான் உள்ளது. நீ சிறிது ஒத்தி வைக்கலாம். ஆனால், எதுவும் தீராது. ஏனெனில் எங்கிருந்து தீமை வருகிறது? கடவுள்தான் எல்லாவற்றையும் உருவாக்குபவர் என்றால், அவர்தான் சாத்தானையும் முதலிலேயே உருவாக்கியிருக்க வேண்டும். இல்லையென்றால், கடவுள் எல்லாவற்றிற்கும் மேலானவர் இல்லை.

ஒரு எதிரியைப்போல, எதிர்மறையான சக்திபோல சாத்தான் எப்போதுமே உள்ளது. பிறகு, அப்படியானால் இரண்டுமே அழிவற்றது. சாத்தான் படைக்கப்பட்ட தாக இல்லாமலிருக்கும்போது, அதை அழிப்பது சாத்தியமில்லை. ஆகவே, இந்த சண்டை தொடர்ந்து கொண்டேத்தான் இருக்கும். கடவுள் வெற்றி பெற முடியாது. சாத்தான் எப்போதும் தொந்தரவு கொடுத்துக் கொண்டேத்தான் இருக்கும்.

ஜராஸ்த்ராவின் மதக்கொள்கை, முகம்மதுவின் மதக் கொள்கை, கிறிஸ்துவின் மதக்கொள்கை, ஆகிய மூன்றுக்கும் இதுதான் பிரச்சனை. ஏனெனில், இந்த மூன்று மத நம்பிக்கைகளுமே மனம் அறிவுறுத்திய இந்த தீர்வையே பின்பற்றுகின்றன. ஆனால், மனத்தால் இதை தீர்க்க முடியாது.

மற்றொரு சாத்தியக்கூறு உண்டு. அது மனத்திலிருந்து வராது. அந்த வழியை புரிந்துகொள்வதுகூட மனதிற்கு கஷ்டமானது. அந்த சாத்தியம் கிழக்கில் குறிப்பாக, இந்தியாவில் உதயமானது. சாத்தான் என்பது இல்லை. அங்கு அடிப்படை இருமை இல்லை, கடவுள் மட்டுமே இருக்கிறார். அங்கு வேறு சக்தி இல்லை என்பதுதான் அந்த சாத்தியக்கூறு.

இதுதான் அத்வைதம் என்பது. இதன் பொருள் கடவுள் மட்டுமே இருக்கிறார். ஆனால், நாம்தான் சாத்தானை அங்கு பார்க்கிறோம்.

இந்துக்கள், சாத்தான் உண்மையில் இல்லை. அது உனது பார்வையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நீ, அதை தீமை என்று அழைக்கிறாய். ஏனெனில், அதை உன்னால் புரிந்துகொள்ள முடியாது, அல்லது, நீ அதனால் பாதிக்கப்பட்டிருப்பாய்.

தீமை, தீமை போன்ற தோற்றம் எப்படி எடுத்துக் கொண்டாலும், அதற்கு காரணம் உன் பார்வைதான். சாத்தான் என்பது இல்லை. சாத்தான் என்பது இருக்க முடியாது. கடவுள் மட்டும் இருக்கிறார். இறைமை மட்டுமே இருக்கிறது.

இப்போது, நான் உன் பிரச்சனையை இந்த பின்னணியின் அடிப்படையில் எடுத்துக் கொள்கிறேன். இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளன. ஒன்று நல்லது, ஒன்று கெட்டது. நீ ஏன் ஒன்றை நல்லது என்கிறாய். மற்றொன்றை கெட்டது என்கிறாய். அது உண்மையிலேயே உண்மைதானா அல்லது உன் பார்வையா?

எந்த குழந்தை நல்லது, ஏன்? எந்த குழந்தை கீழ்படிகிறதோ, அது நல்லது. கீழ்படியாத குழந்தை கெட்டது. உன்னை பின்தொடருவது நல்லது. உன்னை எதிர்ப்பது கெட்டது. நீ என்ன சொன்னாலும், ஒன்று அதை ஒத்துக்கொள்ளும். பேசாமல் உட்கார் என்று நீ சொன்னால், ஒன்று உட்காரும். ஆனால், மற்றது கீழ்படியாமலிருக்க முயற்சி செய்யும். எதிர்க்கும். இது கெட்டது மோசம். இது, உன் பார்வை. நீ அந்த குழந்தைகளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. நீ உன் மனத்தின் சில விஷயங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறாய்.

ஏன் அந்த கீழ்படியும் ஒன்று மட்டும் நல்லது? உண்மையில் கீழ்படிபவர்களுக்கு புத்திசாலித்தனமே இருக்காது. அவர்களுக்கு சுறுசுறுப்பே இருக்காது. அவர்கள் எப்போதும் சோர்ந்து இருப்பார்கள். கீழ்படியும் குழந்தை எப்போதும் சிறந்த விஞ்ஞானியாகவோ, சிறந்த மதத்தன்மை கொண்டவனாகவோ, சிறந்த கவிஞனாகவோ ஆனதில்லை. எந்த கீழ்படியும் குழந்தையும் ஆனதில்லை. கீழ்படியாதவர்கள் மட்டும்தான் சிறந்த கண்டுபிடிப்பாளர்களாக, உருவாக்குபவர்களாக, உயர்ந்திருக்கின்றனர். எதிர்ப்பவர்களே பழமையை கடந்துப் போய் புதியதையும், முன் அறியாததையும் சென்றடைகிறார்கள்.

ஆனால், பெற்றோர்களின் தன்முனைப்பிற்கு கீழ்படியும் குழந்தையே நல்லதாக தெரிகிறது. ஏனெனில், அது உன் தன்முனைப்பிற்கு உதவி செய்கிறது. நீ என்ன சொன்னாலும், குழந்தை உன் பேச்சை கேட்டால், நன்றாக உணர்கிறாய். குழந்தை மறுத்தால், எதிர்த்தால் நீ சங்கடப்படுகிறாய்.

ஆனால், உயிரோட்டமுள்ள குழந்தை எப்போதும் எதிர்க்கத்தான் செய்யும். ஏன் அவன் உன்னை பின்பற்ற வேண்டும்? நீ யார்? ஏன் அவன் உன் பேச்சை கேட்க வேண்டும்? நீ தந்தை என்பதால் மட்டுமா? நீ தந்தையாக இருந்து என்ன செய்தாய்? நீ, ஒரு வழியாக மட்டுமே இருந்தாய். அதுவும் மிகவும் உணர்வற்ற நிலையில் இருந்தாய்.

உன் காமம் ஒரு உணர்வுள்ள செயல் அல்ல. நீ உணர்வற்ற சக்திகளால் அதனுள் உந்தப்பட்டாய். குழந்தை ஒரு விபத்தே. நீ, அதை வரவேற்கவில்லை. நீ, யார் வருவதற்கு அழைப்பு கொடுக்கிறாய் என்பதை பற்றிக்கூட முழுமையான தன்னறிவு உனக்கு இல்லை. குழந்தை திடீரென ஒரு அன்னியனாக வருகிறது. நீ அதை உருவாக்கி இருக்கலாம். ஆனால், நீ தந்தையாக இல்லை.

நீ அதை உருவாக்கியிருக்கலாம் என்று நான் சொல்லும்போது, அது ஒரு உடல்ரீதியான விஷயம். அதற்கு நீ தேவையில்லை. ஒரு ஊசியின் மூலம்கூட அதை செய்ய முடியும். ஆனால், நீ தந்தையாக இல்லை. ஏனெனில், நீ உணர்வுடன் இல்லை. நீ அழைப்பு கொடுக்கவில்லை. காதலியின், உன் மனைவியின் கர்ப்பப்பையில் நுழைய குறிப்பிட்ட அந்த ஆத்மா வேண்டுமென்று நீ கேட்கவில்லை. நீ அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

குழந்தை பிறக்கும்போது..........நீ அதற்கு என்ன செய்கிறாய்? நீ அதை உன்னை பின்பற்ற சொல்வதற்கு, நீ உண்மையை அறிந்தவன் என்ற நம்பிக்கை உனக்கே இருக்கிறதா? நீ எதையாவது அடைந்துவிட்டாய் என்ற உறுதியும் நம்பிக்கையும் உனக்கு இருக்கிறதா?

நீ, உன்னை குழந்தைமேல் திணிக்கமுடியும். ஏனெனில், குழந்தை பலவீனமானது, நீ பலசாலி. உனக்கும், உன் குழந்தைக்கும், உள்ள ஒரே வித்தியாசம் அதுதான். மற்றபடி நீயும் குழந்தைத்தனமான, அறியாமையில் தான் உள்ளாய். நீ வளரவில்லை. நீ முதிர்ச்சியடையவில்லை. நீயும் குழந்தைப்போலத்தான் கோபப்படுகிறாய். நீயும் குழந்தைப்போலத்தான் பொறாமைப்படுகிறாய். நீயும் குழந்தைப்போலத்தான் பொம்மைகளுடன்தான் விளையாடுகிறாய். உன் பொம்மை கள் வேறுபட்டவையாக இருக்கலாம். சிறிதளவு பெரியது, அவ்வளவுதான்.

உன் வாழ்க்கை என்ன? எங்கு நீ சென்றடைந்திருக்கிறாய்? என்ன ஞானத்தை நீ பெற்றிருக்கிறாய்? பிறகல்லவா, உன் குழந்தை உன்னை பின்பற்றும்! உன் கட்டளைக்கெல்லாம், ஆமாம் என்று சொல்லமுடியும்!

தந்தை இதைப்பற்றி உணர்வுடன் இருக்கவேண்டும். அவன் எதையும் குழந்தை மேல் திணிக்கக்கூடாது. அதுவுமின்றி அவன் குழந்தையை, அவனாகவே இருக்கவும் அனுமதிக்கவேண்டும். குழந்தை அவனாகவே இருக்க உதவி செய்யவேண்டும். அவன் குழந்தைக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும். ஏனெனில், அவனுக்கு ஏதாவது தெரியுமென்றால், சுதந்திரத்தின் மூலம் மட்டுமே உள்முக வளர்ச்சி ஏற்படும் என்று அவனுக்கு கண்டிப்பாக தெரியவேண்டும். அவன் ஏதாவது அனுபவம், அவன் வாழ்க்கையில் அடைந்தவனானால், அனுபவத்திற்கு தேவை சுதந்திரம் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். சுதந்திரம் அதிகமாக இருக்குமளவிற்கு அனுபவம் உயர்ந்ததாக இருக்கும். சுதந்திரமே இல்லையென் றால், பிறகு நிழலான காப்பியடித்த அனுபவங்களோடு மட்டுமே நீ இருக்க முடியும். ஆகவே அவை உண்மையானவை அல்ல. உறுதியானவை அல்ல.

ஒரு குழந்தைக்கு தந்தையாவது எனில், அவனுக்கு மேலும் மேலும் சுதந்திரம் தருவது, அவனை மேலும் மேலும் சுயசார்புள்ளவனாக்குவது, அவனை நீ இதுவரை அறியாததற்குள் கூட, செல்ல அனுமதிப்பது என்றுதான் அர்த்தம். அறியாததற்குள் அவன் உன்னை தாண்டிச் செல்லவேண்டும். அவனுக்கு உதவி செய்யப்பட வேண்டும். ஆனால், அமுக்கப்படக்கூடாது. ஏனெனில், நீ திணிக்க ஆரம்பித்துவிட்டால், குழந்தையை நீ அழிக்கிறாய். கொலை செய்கிறாய்.

உயிர் துடிப்பிற்கு தேவை சுதந்திரம். அது சுதந்திரத்தில்தான் வளரும். அது சுதந்திரத்தில் மட்டும்தான் வளரும். உண்மையிலேயே நீ தந்தை என்றால், குழந்தை புரட்சி சிந்தனையில் இருப்பதற்கு மகிழ்ச்சியடைவாய். ஏனெனில், எந்த தந்தையும் குழந்தையின் உயிர் துடிப்பை கொல்ல விரும்பமாட்டான்.

ஆனால், நீங்கள் தந்தைகள் அல்ல. நீ, நீயே உருவாக்கிக்கொண்ட நோய்களால், நோய்வாய்ப்பட்டு இருக்கிறாய். நீ உன்னை பின்பற்ற சொல்லி குழந்தையை வலியுறுத்தும்போது, நீ யாரையாவது அதிகாரம் செய்ய விரும்புகிறாய் என்றுதான் பொருள். நீ இவ்வுலகில் அதை செய்ய முடியாது. ஆனால், இந்த சிறு குழந்தையின் மூலமாவது அதிகாரம் செலுத்த விரும்புகிறாய். அந்த குழந்தையிடம் ஒரு அரசியல்வாதிபோல இருக்கிறாய். நிறைவேறாத சில ஆசைகளை அந்த குழந்தை மூலம் நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறாய். அதிகாரம் செய்பவனாக, சர்வாதிகாரியாக, குறைந்தபட்சம் ஒரு குழந்தைக்காவது சர்வாதிகாரியாக இருக்க முடிகிறது.

அவன் மிகவும் பலவீனமானவன். அவன் மிகவும் இளையவனாக, உதவியற்றவனாக இருக்கிறான். அவன் உன்னை மிகவும் சார்ந்திருப்பதால், நீ அவன்மேல் எதையும் திணிக்கலாம். ஆனால், அப்படி திணிப்பதன் மூலம் அவனை நீ அழிக்கிறாய். நீ அவனுக்கு பிறப்பை கொடுக்கவில்லை. அழிவை கொடுக்கிறாய்.

பின்பற்றும் குழந்தை நல்லவனாக தெரிவான். ஏனெனில், அவன் இறந்துவிட்டான். எதிர்ப்புடன் இருக்கும் குழந்தை கெட்டவனாக தெரிவான். ஏனெனில், அவன் உயிர் துடிப்புடன் இருக்கிறான்.

நாம் நம் வாழ்க்கையை தவறவிட்டு விட்டதால், நாம் வாழ்க்கைக்கு எதிராகி விட்டோம். நாம், மரணத்திற்கு முன்பே இறந்துவிட்டதால், உயிரற்றவர்களாய் இருப்பதால், நாம் எப்போதும் மற்றவர்களை கொல்ல விரும்புகிறோம். அதன் வழிகள் நுட்பமானவை. அன்பின் பெயரால் நீ கொல்ல முடியும், கருணையின் பெயரால் நீ கொல்ல முடியும், தொண்டின் பெயரால் நீ கொல்ல முடியும். நாம் அழகான பெயர்களை சூட்டியிருக்கிறோம். ஆனால், ஆழத்தில் கொலையாளி அமர்ந்திருக்கிறான்.

இதை உணர்: பின் இந்த குழந்தை நல்லது, இந்த குழந்தை கெட்டது என்ற அடிப்படையில் யோசிக்க மாட்டாய். உனக்கு தகுந்தபடி மாற்றாதே. ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மை பெற்றவன். ஒவ்வொரு மனிதனும் வேறுபட்டவன். அந்த புனிதமான படைப்பாற்றல் ஒருமுறை படைத்ததை மீண்டும் படைப்பதில்லை.

ஆகவே, இந்த குழந்தை அந்த குழந்தையிடமிருந்து வேறுபட்டது என்ற அளவிற்கு மட்டும் சொல். இவன் நல்லவன் அவன் கெட்டவன் என்று சொல்ல வேண்டாம். எது நல்லது, எது கெட்டது என்று உனக்குத் தெரியாது. இந்த குழந்தை கீழ்படிகிறது, அந்த குழந்தை கீழ்படிவதில்லை. ஆனால், எது நல்லது என்று யாருக்கும் தெரியாது.

கட்டாயப்படுத்தாதே. இந்த குழந்தை அவனே இயல்பாக கீழ்படிகிறான் என்றால் அது நல்லது. இதுதான் அவன் இயல்பு, அது வளர அவனுக்கு உதவு. அந்த குழந்தை யாரும் சொல்லாமலேயே சொந்தமாகவே எதிர்த்து கீழ்படிய மறுத்தால் இது இவன் இயல்பு. இது வளர இவனுக்கு உதவி செய். ஒன்று ஆழத்திலிருந்து சரி சொல்பவனாக வளரட்டும். மற்றொன்று ஆழத்திலிருந்து முடியாது என்று சொல்பவனாக வளரட்டும். ஆனால், உனக்கு தகுந்தபடி மாற்றாதே. ஏனெனில் நீ தலையிடும் அந்த கணத்திலிருந்து நீ கெடுக்க ஆரம்பிக்கிறாய். இவன் இயல்பு சரி சொல்வது, அவன் இயல்பு முடியாது என்று சொல்வது, இரண்டும் தேவைதான், முடியாது என்று சொல்ல ஒருவரும் இல்லையென்றால், வாழ்க்கை உற்சாகமில்லாமலும், சோர்வாகவும் இருக்கும். எல்லோரும் சரி சொல்பவராகவே இருந்துவிட்டால் அது நிச்சயமாக சோர்வாகவும், முட்டாள்தனமாகவும்

இருந்துவிடும். முடியாது என்று சொல்பவரும் தேவை, அதுதான் எதிர்துருவம். எதிர்ப்பவர் இல்லையென்றால் கீழ்படிதல் அர்த்தமற்றதாகிவிடும். தேர்ந்தெடுக்காதே, அந்த வேற்றுமையை உணர்ந்து உதவி செய். உன்னை அவர்கள் மேல் திணிக்காதே. வன்முறையாளனாக இருக்காதே.

ஆனால், ஒவ்வொரு தந்தையும் வன்முறையாக இருக்கிறார். ஒவ்வொரு தாயும் வன்முறையாக இருக்கிறாள். நீ அன்பின் பெயரால் வன்முறையோடு இருப்பதால், நீ வன்முறையை காட்டமுடியும். ஒருவரும் உன்னை குற்றங் கூற போவதில்லை. ஏனெனில், உன் குழந்தையை மிகவும் நேசிப்பதாக நீ சொல்கிறாய். நீ அவனை மிகவும் நேசிப்பதால் அவனை நேர்வழிப்படுத்த வேண்டியதற்காக அவனை அடிக்கிறாய் என்று சொல்கிறாய். நீ அவனை நேசிப்பதால் அவனை நேர்வழிப் படுத்த முயற்சி செய்வதாகவும், அவன் தவறாக போவதாகவும், நீ சொல்கிறாய்.

எது நன்மை எது தீமை என்று உனக்கு உறுதியாகத் தெரியுமா? ஒருவரும் உறுதியாக இல்லை. ஒருவரும் உறுதியாக இருக்க முடியாது. ஏனெனில், அதன் நியதி, இப்போது நல்லதாக இருக்கும் ஒரு விஷயம் அடுத்த வினாடி தீமையாக மாறிவிடுகிறது. ஆரம்பத்தில் தீமையாக காணப்படும் வழி கடைசியாக நல்லதாக மாறிவிடுகிறது. வாழ்க்கை ஓடிக்கொண்டேயிருக்கும். ஒவ்வொரு வினாடியும் மாறிக்கொண்டிருக்கும்.

அதனால், உண்மையிலேயே தாயாகவோ, தந்தையாகவோ உள்ளவர்கள் அவர்களது குழந்தைகளுக்கு தன்னறிவை மட்டும்தான் கொடுப்பார்கள், நீதியை அல்ல. ஏனெனில், அவை இறந்தவை. நீ இது நல்லது, பின்பற்று என்று சொல்கிறாய். ஆனால், அடுத்த வினாடி அந்த விஷயம் தீமையாக மாறிவிடுகிறது, அப்போது அந்த குழந்தை செய்ய வேண்டியது என்ன? அடுத்த வினாடி வாழ்க்கை முழுமையும் மாறும். அது மாறிக்கொண்டேயிருக்கிறது. அது நிற்காமல் மாறிக்கொண்டிருக்கும். உன் நீதிகள் நிலையானவை. நீ இதுதான் நல்லது. இதைத்தான் பின்பற்ற வேண்டுமென சொல்கிறாய். பிறகு நீ இறந்தவனாகிறாய், வாழ்க்கை மாறிக்கொண்டேயிருக்கிறது, நீ உன் நீதிகளுடன் அப்படியே இருக்கிறாய்.

அதனால்தான், மதத்தை சார்ந்தவர்கள் மிகவும் உற்சாகமின்றி காணப்படுகின்றனர். அவர்களது கண்கள் வெற்றிடமாக, மேலோட்டமாக, ஆழமின்றி இருக்கும். ஏனெனில், வாழ்க்கை என்னும் ஆற்றுடன் நகர்ந்து கொண்டேயிருந்தால் மட்டுமே ஆழம் சாத்தியமாகும்.

அதனால் தந்தையாகட்டும், தாயாகட்டும் அவர்களது குழந்தைகளுக்கு பரிசாக தரவேண்டியது என்ன? விழிப்புணர்வு மட்டுமே, குழந்தைகளுக்கு விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அவர்களை சுதந்திரமாய் இருக்க அனுமதிப்பதோடு,

“சுதந்திரமாக இரு, ஜாக்கிரதையாகவும் இரு” என்று சொல்லுங்கள். நீ தவறு செய்தால் பயப்பட வேண்டாம், ஏனெனில், வாழ்க்கை தவறுகள் மூலமாகவும் கற்றுக்கொள்கிறது. தவறுகள் மூலமாகவும் ஒருவர் ஜாக்கிரதையாகலாம். அதனால் பயப்பட வேண்டாம். தவறு செய்வது மனித இயல்பு.

ஜாக்கிரதையோடு தவறு செய்தால், ஒரே ஒரு விஷயம்தான் நடக்கும். ஒரே தவறை திரும்ப திரும்ப செய்யமாட்டாய். ஒருமுறை அந்த தவறை செய்து விட்டால், அதில் நீ அனுபவம் அடைந்துவிட்டாய். நீ அதைப்பற்றி ஜாக்கிரதையடைந்துவிடுவாய். பிறகு அது மறைந்துவிடும். அது உன்னை மேலும் உயர்த்தும். நீ பயமின்றி முன்னேறலாம். இதை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்: எதை கடந்து வந்தாலும், அதிக உணர்வோடு இரு. சரி என்று சொன்னால் உணர்வுடன் சொல். முடியாது என்று சொன்னாலும் உணர்வுடன் அதை சொல்.

ஒரு குழந்தை முடியாது என்று சொல்லும்போது புண்படவேண்டாம். ஏனெனில், அந்தக் குழந்தையை முடிவு செய்ய நீ யார்? அவன் உன் மூலம் வந்தான். நீ ஒரு வழி அவ்வளவுதான். ஆனால், சர்வாதிகாரியாக இருக்காதே. அன்பு எப்போதும் அதிகாரம் செய்வதில்லை. நீ எப்போதுமே அதிகாரம் செலுத்தாமலிருந்தால், பிறகு நன்மை, தீமை இவை மறைந்து விடும். பிறகு நீ இரண்டையும் நேசிக்க ஆரம்பித்து விடுவாய். உன் அன்பு நிபந்தனையற்று பெருகி வரும், கடவுளின் அன்பு இப்படித்தான் இவ்வுலகிற்கு நிபந்தனையின்றி பெருகி வருகிறது.

யாரோ ஒருவர் சூபி மாஸ்டர் ஜீனாய்டிடம் சொன்னார்; “ஒரு மோசமான மனிதன் நீங்கள் சொல்வதை கேட்க வருகிறான். நீங்கள் அவனை உங்களருகில் நெருக்கமாக விட்டுவிடாதீர்கள். அவனை விலக்கி விடுங்கள். அவன் நல்லவனல்ல”.

அதற்கு ஜீனாய்ட் சொன்னார், “கடவுள் அவனை, இயற்கையிலிருந்து துரத்தவில்லை. நான் யார் அவனை துரத்த? கடவுளே அவனை ஏற்றுக்கொள்ளும்போது, நான் கடவுளை விட பெரியவனல்ல. கடவுள் அவனுக்கு வாழ்க்கை தந்திருக்கிறார். உயிருடன் வாழ உதவிக் கொண்டிருக்கிறார். அந்த மனிதன் இன்னும் இளமையுடன் புத்துணர்வோடு இருக்கிறான். அவன் உன்னை விட அதிகம் அதிக நாள் உயிர் வாழப் போகிறான். அதனால், முடிவு செய்ய நான் யார்?

நல்லது கெட்டது என்ற இரண்டின் மீதும் கடவுள் பொழிகிறார். கடவுளுக்கு நல்லது கெட்டது இல்லை என்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது. நான் ‘கடவுள்’ என்று சொல்லும்போது வானத்தில் எங்கேயோ உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவரை பற்றி குறிப்பிடவில்லை. அது ஒரு பார்வை, நாம் நமது சொந்தக் கற்பனையில் தான் கடவுளை உருவாக்குகிறோம். ஒருவரும் அங்கே உட்கார்ந்து

கொண்டிருக்கவில்லை. கடவுள் என்றால் முழுமை. இயற்கை மொத்தத்தையும் குறிக்கும்.

கெட்டவனும் நல்லவனைப் போலவே மிகவும் அழகாக சுவாசிக்கிறான். பாவியும் சந்நியாசியைப் போலவேத்தான், இயற்கையால் ஒத்துக்கொள்ளப்படுகிறான். இயற்கை வேற்றுமையை உண்டாக்குவதில்லை. ஆனால், நாம் கிறிஸ்டியன், முகம்மதியன், ஜராஸ்தரன் போன்ற இருமை அடிப்படையிலான சிந்தனையால், நாம் ஒன்றுக்கொன்று எதிரானவையாக நினைக்கிறோம்.

ஒரு கதை சொல்வார்கள்: பழைய இஸ்ரேலில் சாடாம் என்றொரு ஊர் இருந்த து. அந்த ஊரில் இருந்த மக்கள் மிகவும் வக்கிரமானவர்கள். காமத்தில் வக்கிரமானவர்கள். ஓரினச் சேர்க்கையுடையவர்கள். அதனால் கடவுள் அந்த ஊரையே அழித்துவிட்டார், முழு ஊரையும் அழித்துவிட்டார். பெருந் தீ வந்திறங்கி எல்லோரும் அதில் அழிந்துவிட்டனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஒரு ஹஸாடிக் துறவி, ஹஸிடிக்(Hassidic) ஞானியிடம், கடவுள் சாடாம் நகரை அழித்தபோது அதில் ஒரு சில நல்ல மனிதர்கள் இருந்திருக்க வேண்டும். எல்லோரும் அழிந்து விட்டனர். தீமை அழிந்த தை ஏற்றுக்கொள்ள முடியும். ஏனெனில், அவை கெட்டவை. ஆனால் நல்லவர்கள் ஏன் அழிய வேண்டும் என்று கேட்க்கப்பட்டது.

இப்போது இந்த தந்திர மனதைப் பாருங்கள். அந்த ஹாஸிட் இதைப் பற்றி சிந்தித்து விட்டு சொன்னார்; ‘கடவுள் நல்லவர்களையும் அழித்துவிட்டார். ஏனெனில், கெட்டவர்கள், கெட்டவர்களாக இருந்ததை நிரூபிக்கும் சாட்சிகளாக இருப்பார்கள் என்பதால்’.

இது ஒரு தந்திரமான கணக்கு, இது ஒரு கண் துடைப்பு, ஆனால், உண்மையான விஷயம் என்னவென்றால், கடவுளுக்கு இது நல்லது, அது கெட்டது கிடையாது. அவர் படைக்கும்போது இரண்டையும் படைத்தார். அழிக்கும்போது நிபந்தனையின்றி இரண்டையும் அழித்துவிட்டார், அவ்வளவுதான்.

நல்லது கெட்டது என்ற இந்தப் பார்வை உண்மையிலேயே மடத்தனமானது. சிகரெட் குடிக்கும் மனிதன் கெட்டவனாகிறான், மது அருந்தும் மனிதன் கெட்டவனாகிறான். மற்றவனுடைய மனைவி மேல் காதல் கொள்ளும் மனிதன் கெட்டவனாகிறான். கடவுள் எங்கோ உட்கார்ந்து கொண்டு, இவன் புகைப்பிடிக்கிறான், இவன் மது அருந்துகிறான், இவன் தவறு செய்கிறான், இவன் வரட்டும் நான் பார்த்துக் கொள்கிறேன், என்று கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதாக, நாம் நினைக்கிறோம். இது மடத்தனம், கடவுள் கேவலம் இந்தச்

சின்ன விஷயங்களையா கணக்கெடுப்பார்? இது நமது சின்னப் புத்தியை காட்டுகிறது.

இயற்கை எதையும் திரித்துப் பார்ப்பதில்லை, அதனிடம் எந்த பிரிவுகளும் இல்லை. நல்லதும் கெட்டதும் மனிதனின் கருத்தே, இறைமையுடையது அல்ல.

ஒவ்வொரு சமுதாயமும், நல்லது கெட்டதுப் பற்றி அதற்கே உரிய சொந்தக் கருத்தை கொண்டுள்ளது. ஒவ்வொரு தலைமுறை மாறும்போதும், நல்லது கெட்டதை பற்றி, அதனுடைய அபிப்பிராயங்கள் மாறுகின்றன. நல்லது, கெட்டது பற்றிய முடிவான கருத்து கிடையாது. நன்மையும், தீமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. சமுதாயத்தோடு, கலாச்சாரத்தோடு, நம்மோடு தொடர்புடையது. கடவுள் முடிவானவர், - அவரைப் பொறுத்தவரை இங்கு பிரிவுகள் இல்லை. நீ எண்ணங்கள் மறைந்து போகும் ஆழத்திற்கு தியானத்தில் செல்லும்போது அங்கு பிரிவுகள் இல்லை. ஏனெனில், நன்மையும் தீமையும் எண்ணங்களே, நீ அமைதியில் இருக்கும்போது, எது நல்லது? எது கெட்டது? இது நல்லது, இது கெடுதல், என்ற யோசனை உதயமாகும் அந்த வினாடியே, அந்த மௌனம் தொலைந்து விடுகிறது. ஆழமான தியானத்தில் அங்கு ஏதுமில்லை. நல்லதுமில்லை, கெட்டதுமில்லை.

லாவோட்ஸூ, “ஒரு மயிரிழை இடைவெளியில்தான் நரகமும் சொர்க்கமும் பிரிக்கப்பட்டிருக்கின்றன” என்று சொன்னார்.

தியானத்தில் இருப்பவரின் மனதில் ஒரு சிறிய வேறுபாடு உதயமானால் கூட, பிறகு முழு உலகமும் பிரிந்துவிடும். தியானம் என்பது பிரிவுகளற்றது. அங்கு பிரிவுகள் இல்லை. நீ வெறுமனே பார். நீ முழுமையைப் பார். பிரிக்காதே. இது அசிங்கம். அது அழகு, இது நல்லது, இது கெட்டது என்று சொல்லாதே. நீ எதையும் சொல்லாதே. நீ சும்மா இரு. நீ எதையும் சொல்ல வேண்டாம். நீ எந்த பிரிவையும் உண்டாக்க வேண்டாம். இருமைகளற்றதே அங்கு உள்ளது.

தியானத்தில் நீ கடவுளாகிறாய். மக்கள் தியானத்தில் கடவுளைக் காணலாம் என்று நினைக்கிறார்கள். இது தவறு. அங்கு பார்ப்பதற்கு ஒருவரும் இல்லை. கடவுள் ஒரு பொருளல்ல. தியானத்தில் நீயே கடவுளாகிறாய். ஏனெனில், எல்லா வேற்றுமைகளும் மறைந்து விடுகின்றன. தியானத்தில் நீ முழுமையுடன் ஒன்றி விடுவாய். ஏனெனில், தியானத்தில் நீ உன்னை முழுமையிடமிருந்து வேறுபடுத்த முடியாது. எல்லா பிரிவுகளும் விழுந்து விடும். அங்கு எந்த எல்லைகளும் இல்லாததால், மிகவும் அமைதியாகி விடுவாய். ஒவ்வொரு எல்லைக்கோடும் ஒரு தொந்தரவுதான். நீ மௌனத்தில் இருக்கும்போது, அங்கு நாம் இல்லை. நம்மைப் பற்றிய எந்த எண்ணமும் இல்லை. நீ அமைதியில் இருக்கும்போது எல்லா எல்லைகளும் கலைந்துவிடுகின்றன. மறைந்துவிடுகின்றன. ஒன்றுதான் இருக்கும்

ஒருமை மட்டுமே இருக்கும் இதைத்தான் இந்துக்கள் பிரம்மம், இயற்கையின் முடிவாயுள்ள ஒருமை என்று அழைக்கிறார்கள்.

பிளப்பதும், பிரிவுகளை உண்டாக்குவதும், இதுதான் இது, அதுதான் அது என்று சொல்வதும் எல்லாம் மனது. தியானத்தில் பிரிவுகள் இல்லை. அங்கு இருப்பது இருப்பதுதான். நீ தியானத்தில் இருக்கும்போது நீ கடவுள். தியானத்தினால் மட்டுமே, உன்னால் நிபந்தனைகளற்ற அன்பை தெரிந்துகொள்ள முடியும்.

நீ தந்தையாயிருந்தால், உன்னுடைய இரண்டு குழந்தைகளுமே வெறும் குழந்தைகள் மட்டும்தான். தெரியாத ஒரு உலகத்திலிருந்து, தெரியாத ஒரு இயற்கைக்குள் நகரும் அன்னியர்கள், வளர்கிறார்கள். ஆளாகி விடுகிறார்கள், உன் அன்பின் வெளிப்பாடாய் உன் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளலாம். உன் அனுபவங்களை அவர்களுக்கு கொடுக்கலாம். ஆனால், நீ எதையும் திணிக்கக் கூடாது. நீ கட்டாயப்படுத்தவில்லையானால், யார் கீழ்படிகிறார்கள்? யார் எதிர்க்கிறார்கள்? நீ கட்டாயப்படுத்தாதபோது யார் நல்லவன், யார் கெட்டவன் என்று நீ எப்படி முடிவெடுக்க முடியும்?

இப்போது நான் கடைசி கட்டத்திற்கு வருகிறேன். நீ கட்டாயப்படுத்தாவிட்டால், ஒன்று கீழ்படிதலாகவும், மற்றொன்று எதிர்ப்பதாகவும் எப்படி ஆகும்? அந்த முழு வாக்குவாதமே மறைந்துவிடும். பிறகு நீ மற்றவரையும், குழந்தை, மனைவி, கணவன், நண்பன் யாராயிருந்தாலும் அவன் எப்படியோ, அப்படியே, நடப்பாகவே ஏற்றுக்கொள்வாய்.

நல்லது கெட்டது இன்றி, அவசியம் கட்டாயம் இன்றி, நீ அடுத்தவரை அப்படியே ஏற்றுக்கொண்டாயானால், வாழ்க்கை இந்த கணமே சொர்க்கமாக மாறிவிடும்.

நாம் மறுதலிக்கிறோம். நாம் யாரையாவது ஏற்றுக்கொண்டால் கூட, ஒரு பகுதியைத்தான் ஏற்றுக்கொள்கிறோம். உன் கண்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால், மற்றவையெல்லாம் அழுக்காக இருக்கின்றன என்று சொன்னால், இதுவா ஏற்றுக்கொள்ளுதல்? உன்னுடைய இந்த செயல் நல்லது. ஆனால், மற்றவை எல்லாம் மோசம், ஒத்துக்கொள்ள முடியாது, என்கிறோம். எது நல்லதோ, அதை மட்டும்தான் ஏற்றுக்கொள்வேன் என்றால், எனக்கு தகுந்ததை மட்டும்தான் ஏற்றுக்கொள்வேன் என்றுதான் அர்த்தம்.

நீங்கள் ஒருவருக்கொருவர் எப்படி கெடுத்துக் கொள்கிறீர்கள் என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஏனெனில், எப்போதெல்லாம் பெற்றோர் குழந்தையிடம் நாங்கள் இந்த பகுதியை மட்டும் ஒத்துக்கொள்வோம். மற்ற எதையும் ஏற்க மாட்டோம் என்று சொல்கிறார்களோ, அப்போதெல்லாம், மனைவி கணவனிடம்

நான் உன்னிடமுள்ள இதை மட்டும் ஏற்றுக்கொள்வேன். அதை ஏற்க மாட்டேன் என்னும்போதெல்லாம், நீ மற்றவர் மனதிலும் பிரிவை உண்டு பண்ணுகிறாய்.

தந்தை இதை செய்யாதே, நான் இதை ஒத்துக்கொள்ள மாட்டேன், எனக்கு இதனால் கோபம் வரும் என்று சொல்லும்போதும், குழந்தை ஏதோ தவறு செய்து விட்டதாக கருதி அவர் குழந்தையை தண்டிக்கும்போதும், அவர் என்ன செய்கிறார்?

அவர் குழந்தையைப் பாராட்டும்போதும், அவனுக்கு பொம்மை வாங்கி தரும்போது, அவனுக்காக இனிப்பு மிட்டாய், பூக்கள் கொண்டு வரும்போது, நீ இதை நன்றாகச் செய்தாய், நான் பாராட்டும்படியாக, நீ இந்த நன்மை செய்தாய் என்று சொல்லும்போது அவர் என்ன செய்கிறார்? அவர் குழந்தையிடம் பிளவை உண்டு பண்ணுகிறார். மெல்ல மெல்லக் குழந்தையும் பெற்றோர்கள் ஒதுக்கியதை தானும் ஒதுக்குகிறது. அவன், பிளவுப்படுகிறான்: அவன் இரண்டு 'நான்' களாகிவிடுகிறான்.

சிறு குழந்தையை கவனித்துப் பார்: அவர்கள் அவர்களையே தண்டித்துக் கொள்வர். அவர்கள், அவர்களுக்குள்ளேயே பேசிக்கொள்வர். " பாப்பா, இது தப்பு. நீ கெட்டது செய்கிறாய்", என்று பேசிக்கொள்வர். அவர்களும், அந்தப் பகுதியை அவர்கள் பெற்றோரால், ஒதுக்கப்பட்டதை ஒதுக்க ஆரம்பிப்பர். பிறகு ஒரு பிளவு உருவாகிவிடுகிறது. ஒதுக்கப்பட்ட பகுதி, அமுக்கப்பட்டதாக, உணர்வற்ற மனமாக, மாறிவிடுகிறது. ஒத்துக் கொள்ளப்பட்டது, தெரிந்த மனமாக, உணர்வுள்ளதாக ஆகிவிடுகிறது. பிறகு, அவர்களது முழு வாழ்வும் நரகமாகி விடுகிறது. ஏனெனில், ஒத்துக்கொள்ளப்பட்டதும் ஒதுக்கப்பட்டதும், எப்போதும் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கும். தொடர்ந்தாற்போல், அங்கே கொந்தளிப்பு இருந்து கொண்டேயிருக்கும்.

ஒதுக்கப்பட்டதை அழிக்க முடியாது. அது நீ தான். அதுவும் உன்னிடம்தான் இருக்கிறது. அது எப்போதும் உனக்குள் வேலை செய்து கொண்டேயிருக்கும். நீ அதை இருட்டுள் வைக்கலாம். அவ்வளவுதான். ஆனால், ஒரு முறை உன் ஒரு பகுதியை இருட்டுள் வைத்துவிட்டால், பின் அந்த பகுதி மேலும் சக்தியுள்ளதாகி விடுகிறது. ஏனெனில், அது இருட்டில் வேலை செய்கிறது. நீ அதை பார்க்க முடியாது. நீ அதைப்பற்றி தன்னறிவுடன் இருக்க முடியாது. அது அதனுடையப் பழியை எடுக்கிறது. உன் உணர்வு நிலை வலிமையாக இல்லாதபோது, எப்போது பலமிழக்கிறதோ, அப்போது அது வெளிவரும், நீ இருபத்தி மூன்று மணி நேரம் நல்லவனாக இருக்கலாம். ஆனால், ஒரு மணி நேரம், எப்போது உணர்வு நிலை சோர்வடைகிறதோ, அப்போது உணர்வற்ற நிலை அதை சாதகமாக்கிக் கொள்கிறது.

அதனால், துறவிகளுக்குக்கூட பாவ கணங்கள் உண்டு. துறவிகள் கூட, அவர்கள் துறவு நிலையிலிருந்து விடுப்பு எடுக்க வேண்டி வரும். அவர்களும், விடுமுறையில் இருப்பார்கள். சில நேரங்களில் அவர்களும் அப்படி ஆக வேண்டும். அதனால், நீ ஒரு துறவியை அவரது விடுமுறை நாட்களில் பார்த்தால் மிகவும் பாதிக்கப்பட்டுவிடாதே. ஒவ்வொருவருக்கும் விடுமுறை வேண்டும்.

ஒவ்வொருவரும் சோர்வடைந்து விடுகிறார்கள். முழுமையாக இருந்தாலேயொழிய. முழுமையாக இருந்தால் பிறகு, அங்கு சோர்வில்லை. ஏனெனில், நிரந்தரமாக சண்டை போடவும், பிரச்சினைகள் உண்டுபண்ணவும், பழி தீர்க்கவும், அதற்கு சாதகமாக மாற்றிக்கொள்ளவும், வேறு பகுதி அங்கில்லை. நமக்கு இரண்டு வார்த்தைகள் உண்டு. ஒன்று துறவி. மற்றொன்று தவசி. துறவி என்பவனுக்குள் பாவி எப்போதும் மறைந்திருக்கிறான். தவசி முழுமையானவன். தவசி விடுமுறையில் இருக்க முடியாது. ஏனெனில், அவன் எப்போதும் விடுமுறையில்தான் இருக்கிறான். அங்கு ஒதுக்கப்பட்ட பகுதி இல்லை. அவன் முழுமையாக வாழ்கிறான். அவன் வினாடிக்கு வினாடி முழுமையாக நகர்கிறான். அவன் எதையும் ஒதுக்குவதில்லை. அவனை, முழுக்க முழுக்க ஒத்துக்கொள்கிறான். இந்த ஒதுக்கப்படுதல் என்பது பெற்றோர்களாலும், சமுதாயத்தாலும் உருவாக்கப்படுகிறது.

சிறிய குழந்தை எப்போதும் ஒரு பெரிய கண்டுபிடிப்பாளனாகும். அவன் அவனது கண்டுபிடிப்பை, அவன் உடலிலிருந்தே தொடங்குகிறான். அதுதான் அவனுக்கு மிக அருகிலிருக்கும் இயற்கை. அவனால், எவரெஸ்ட் சிகரத்திற்கோ, நிலாவிற்கோ போக முடியாது. அவைகள் மிக தொலைவிலுள்ளன. ஒருநாள் அவன் போகக்கூடும். ஆனால், இப்போது அவனுக்கு மிக அருகிலிருப்பது அவனது உடல்தான். அவன், அதில் கண்டுபிடிக்க ஆரம்பிக்கிறான். அவன், அவனது உடலை தொட்டுப் பார்க்கிறான், அனுபவிக்கிறான்.

ஒரு பாப்பா, அதன் கட்டைவிரலை தொடுவதை கவனித்துப் பாருங்கள். அந்த மகிழ்ச்சி - நீ அதை அடையவே முடியாது. நீ நிலாவிற்கு சென்றால் கூட, அந்த மகிழ்ச்சியை காண முடியாது. அவன், அவன் உடலை கண்டுபிடித்துவிட்டான். அவன், அவனது கால் கட்டைவிரலை தொடுகிறான். அதை, அனுபவிக்கிறான். அதை அவன் வாய்க்கு கொண்டு வருகிறான். ஏனெனில், அவன் கண்டுபிடிக்கும் வழிகள் சுவைத்துப் பார்த்து, மோந்து பார்த்து, தொட்டுப்பார்த்து - இப்படித்தான்.

ஆனால், அவன், அவனது பிறப்புறுப்பிற்கு வரும்போது பெற்றோர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த பாதிப்பு பெற்றோர்களிடம்தான் உள்ளது. குழந்தையிடம் இல்லை. அவன் எந்த பிரிவையும் உண்டுபண்ணுவதில்லை. கட்டை விரலோ, பிறப்புறுப்போ இரண்டும் ஒன்றுதான். இதுவரை அவனது

உடலில் பிரிவுகள் இல்லை. முழு உடல்: விரல்கள், கண்கள், மூக்கு, பிறப்புறுப்பு, கட்டைவிரல் எல்லாமே ஒன்று. அங்கு உயர்ந்தது, தாழ்ந்தது என்று பிரிவு இல்லை.

இந்துக்களில் ஒரு பிரிவு உண்டு. உலகம் முழுவதும் எல்லா கலாச்சாரங்களிலும், பிரிவுகள் உண்டு. இந்துக்கள் 'தொப்புழுக்குக் கீழ், உன் வலது கையால் தொடாதே. ஏனெனில், தொப்புளுக்கு கீழ் உள்ள பகுதி அழுக்கானது. தொப்புளுக்கு கீழ் பகுதியை, இடது கையால் தொடு. தொப்புளுக்கு மேல் உள்ள பகுதியை, வலது கையால் தொடு' என்கிறார்கள். உடல் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பிளவு மனதிற்குள் ஆழ சென்றுவிட்டது. அதாவது, வலது என்றால் நன்மை, இடது என்றால் தீமை. அதனால், நீ யாரையாவது கண்டனம் செய்ய விரும்பினால் அவன் ஒரு இடதுசாரி கம்யூனிஸ்டு என்கிறோம். இடது -கெடுதல் என்கிறோம்.

குழந்தைக்கு, எது இடது, எது வலது என்று தெரியாது. குழந்தை ஒரு முழுமை. அவன் ஒரு ஒருமை. அவனுக்கு, எது தாழ்ந்தது, எது உயர்ந்தது, என்று தெரியாது. உடல் பிரிக்கப்படாதது.

அவன் அவனது பிறப்புறுப்பை கண்டுபிடிக்கும்போது, பெற்றோர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு குழந்தை ஆணோ, பெண்ணோ பிறப்புறுப்பை தொடும்போதெல்லாம், உடனே நாம் தொடாதே என்கிறோம். கையை எடுத்துவிடுகிறோம். குழந்தை அதிர்ச்சியடைகிறது. நாம், அதற்கு மின்சார அதிர்ச்சி கொடுக்கிறோம். நீ செய்வதை அவனால் புரிந்து கொள்ள முடியாது.

பல தடவைகள் இதைப்போல நடக்கிறது. நீ பாடுபட்டு அவனது உடலின் ஒரு பகுதி ஒதுக்க வேண்டியது என்று குழந்தையினுள் உருவாக்கி விடுகிறாய். உடலின் பிறப்புறுப்பு கெடுதல் என்று ஆக்கிவிட்டாய். மனோரீதியில் நீ ஒரு உணர்வை உண்டாக்கி விட்டாய். குழந்தை வளரும். ஆனால், அவன் பிறப்புறுப்பை மட்டும் அவனால் எப்போதும் ஒத்துக்கொள்ள முடிவதேயில்லை. நீ உன் உடலை முழுமையாக ஒத்துக்கொள்ளவில்லையென்றால், பிரச்சனைகள் உருவாகின்றன. சிக்கல்கள் வரும். ஏனெனில், அவன் நேசிக்கும்போது, அவன் சேர்க்கையில் நுழையும்போது அங்கு குற்றவுணர்வு வருகிறது. ஏதோ தவறு நடக்கிறது என்று அவன், அவனையே கண்டித்துக் கொள்கிறான்.

கலவி, இந்த உலகத்திலேயே ஒரு மிக அழகான விஷயம். அவன் கண்டித்துக்கொள்கிறான். குற்ற உணர்வடைகிறான். அவனால் முழுமையாக கலவி செய்ய முடியாது. அவனால் முழுமையாக அடுத்தவருள் செல்ல முடியாது. ஏனெனில், அவன் பின்னால் பிணைக்கப்பட்டிருக்கிறான். பாதி சுதந்திரமாக, மறுபாதி கட்டுப்படுத்தப்படுகிறது. இது பிளவை உண்டுபண்ணுகிறது. அன்பு துன்பமாக மாறுகிறது.

இது வாழ்வின் எல்லா பரிமாணங்களிலும் நடக்கிறது. ஒவ்வொன்றும் துன்பமாக மாறுகிறது. ஏனெனில், ஒவ்வொன்றிலும் பெற்றோர், பகுதியை, பிரிவை உண்டாக்கியுள்ளனர். இது நல்லது, இது கெட்டது. உன் பெற்றோர், இந்த சமுதாயம் இவற்றால்தான் நீ துன்பமடைகிறாய். இதையே, உன் குழந்தைகளுக்கும் செய்யாதே.

நீ பிரிவடைந்திருப்பதால், குழந்தையிடமும் பிரிவுண்டாக்க விருப்பப்படுகிறாய் என்பதை ஏற்றுக்கொள்வது கஷ்டம்தான், இது உணர்வற்ற செயலால், நீ ஜாக்கிரதையாகி விடுவாய். அதே சிதறிய மனநிலையை உன் குழந்தைக்கும் உண்டுப்பண்ணாதே. பிரிக்காதே. பிளவை உண்டாக்காதே. நீ வேண்டிய அளவு துயரப்பட்டு விட்டாய். அந்த துயரத்தையே, உன் குழந்தைக்கும் உண்டாக்காதே.

நீ உண்மையிலேயே நேசித்தால், நீ அவனை பிரிக்காதே. ஏனெனில், பிரிவுகள் துயரங்களைத்தான் உண்டாக்கும். நீ அவன் முழுமையாகவே இருக்க உதவு. ஏனெனில், முழுமைதான் புனிதம். முழுமை ஆனந்த சாத்தியக்கூறுகளை அளிக்கும். அனுபவத்தின் எல்லைக்கான கதவுகளை திறந்துவிடும்.

நீ குழந்தை முழுமையாகவே இருப்பதற்கு எப்படி உதவ முடியும்? ஒரு விஷயம்: அவனை உன் உணர்வற்ற நிலையில் பிரிக்காமல் ஜாக்கிரதையாக இரு. எந்த விஷயத்தையும் கண்டிக்காதே. நீ அது அபாயம் என்று உணர்ந்தால், குழந்தையிடம் அது அபாயகரமானது என்று சொல். ஆனால், அது கெட்டது என்று சொல்லாதே. ஏனெனில், நீ அபாயகரமானது என்று சொன்னால், நீ ஒரு நடப்பைக் குறிக்கிறாய். நீ அது கெட்டது என்று சொன்னால் அதில் நீ ஒரு கருத்தைக் கொண்டு வருகிறாய்.

பெற்றோர் பல விஷயங்களை குழந்தைகளிடம் சொல்ல வேண்டும். ஏனெனில், குழந்தைகளுக்குத் தெரியாது. நீ நெருப்பின் அருகே செல்லவேண்டாம் என்று சொல்ல வேண்டும். ஆனால், 'இது அபாயகரமானது. நீ சுட்டுக்கொண்டால், நீ வேதனைப்படுவாய். பிறகு உன்னிஷ்டம். இது என் அனுபவம். நான் சுட்டுக்கொண்டு வேதனைப்பட்டேன். நான் என் அனுபவத்தை உன்னிடம் சொல்லிவிட்டேன். ஆனாலும், நீ அதை செய்ய விரும்பினால் நீ செய்யலாம்'. அது அபாயம் என்றுதான் சொல்லவேண்டும்.

எது அபாயம், எது உபயோகமானது என்று சொல். நல்லது, கெட்டது என்று சொல்லாதே. நீ ஜாக்கிரதையாய் இருந்தால், உன் அகராதியிலிருந்தே நல்லது, கெட்டது என்ற வார்த்தைகளை விட்டுவிடலாம். ஏனெனில், நல்லது கெட்டது என்பதுடன், உன் சொந்தக் கருத்தையும் செயல்களுக்கு கொண்டு வருகிறாய். அபாயம் என்று சொல். ஆனாலும், சுதந்திரமாகவும் இருக்கவிடு. ஏனெனில், உன் அனுபவம் குழந்தையின் அனுபவமாக முடியாது. அவர்கள், அவர்களேதான்

அனுபவப்பட வேண்டும். சில நேரங்களில், அபாயகரமான விஷயங்கள் கூட செய்ய வேண்டி வரலாம். அதன் மூலமே கூட, அவர்கள் உணரலாம். சில சமயம் அவர்கள் கீழே விழுந்து அடிபட்டுக் கொள்ளலாம். பிறகு தான் அவர்களுக்குத் தெரியும். காயமாகக் கூடிய, வேதனையளிக்கக் கூடிய விஷயங்களை அவர்கள் கடந்து வரவேண்டும். ஆனால், அது ஒன்றுதான் அவர்கள் வளர்வதற்கான வழி.

நீ குழந்தையை அளவுக்கு மீறி பாதுகாத்தால், அவன் வளரவே மாட்டான். பலர் இன்னும் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். அவர்களது மனவளர்ச்சி, குழந்தை நிலையைவிட்டு வளரவே இல்லை. அவர்கள் கிழவர்களாகி விடலாம். வயது எழுபதாகலாம். ஆனால், அவர்களது மனவயது ஏழுக்குமேல் இருக்காது. ஏனெனில், அவர்கள் அளவுக்கு மீறி பாதுகாக்கப்பட்டுவிட்டார்கள்.

செல்வ செழிப்புள்ள குடும்பங்களைப் பாருங்கள். அவர்களது குழந்தைகள் அளவுக்கு மீறி பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்படுவதேயில்லை? தவறு செய்ய, அனுபவமடைய, தப்பு செய்ய, சாலையை கடக்கக்கூட, அனுமதி கிடையாது. கிட்டதட்ட ஒவ்வொரு வினாடியும், யாரோ அவர்களை தொடர்ந்துகொண்டே இருக்கிறார்கள். வேலையாட்கள், ஆசிரியர், மேனேஜர் - அவர்கள் தனிமையில் இருப்பதே இல்லை. பிறகு அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள். செல்வக் குடும்பத்தினர் எப்போதும் நோயாளியான, மூளையில்லாத, அறிவற்ற குழந்தைகளைத்தான் உருவாக்குகின்றனர். சிறந்த அறிவாளிகள் செல்வந்தர் வீட்டிலிருந்து எப்போதும் வருவதேயில்லை. கஷ்டம், புதுமைவாதிகள் அங்கிருந்து வருவதேயில்லை. வீரதீர செயல் புரிபவர்கள் வருவதேயில்லை. அது சாத்தியமேயில்லை. அவர்கள் அளவுக்கு மீறி பாதுகாக்கப்படுவதால், அவர்கள் வளர்வதேயில்லை.

வளர்வதற்கு பாதுகாப்பற்ற தன்மையும் வேண்டும். பாதுகாப்பும் வேண்டும், இரண்டும் வேண்டும். தோட்டக்காரன், மரங்களிடம் வேலை செய்வதைப் பார். அவன் அவற்றிற்கு உதவுகிறான். அவன் அவற்றை பாதுகாக்கிறான். ஆனாலும், அவன் அவற்றிற்கு சூரியனை, மழையை, புயலை சந்திக்க முழு சுதந்திரம் கொடுக்கிறான். அவன் புயலிலிருந்து, வெய்யிலிலிருந்து, எப்போதும் வெளியிலுள்ள அபாயங்களிலிருந்து, பாதுகாப்பதற்காக அவற்றை வீட்டிற்குள் கொண்டு செல்வதில்லை. நீ மரத்தை உள்ளே கொண்டு சென்றால், அது இறந்து விடும். ஒரு வெப்ப வீட்டின் செடி செயற்கையானது. நமது பெற்றோரின் அளவு கடந்த பாதுகாப்பால் நாம் எல்லோரும் வெப்ப வீட்டுச் செடிகள் ஆகிவிட்டோம்.

குழந்தைகளை பாதுகாக்க வேண்டாம். பாதுகாக்காமலும், அவர்களை விட்டுவிடவும் வேண்டாம். அவர்களை நிழலைப்போல தொடருங்கள்.

அவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். மிகவும் கவனமாக இருங்கள். ஒரு சமநிலையை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் இறந்துவிடலாம் போல உள்ள மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால், இது ஒன்றும் மிகவும் அபாயம் அல்ல என்று நீ உணர்ந்தால் அவர்களை அனுமதி.

நீ எந்த அளவிற்கு அனுமதிக்கிறாயோ, அந்த அளவிற்கு அவர்கள் வளர்கிறார்கள். ஒரு குழந்தை பாலுணர்வில் முதிர்ச்சி அடையும்போது, நீ அவனுக்கு முழு சுதந்திரம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். இயற்கை அவனை இப்போது ஒரு ஆணாக்குகிறது. இப்போது அதிகளவு கவலைப்படத் தேவையில்லை. சில நேரங்களில் விபத்துக்கள் நேரலாம். ஆனால், அவைகளும் மதிப்புள்ளவைதான்.

குழந்தையை முழுமையாக்கு. உனது தன்னறிவு அவனையும் தொற்றிக் கொள்ளட்டும். அவனை நேசி. உன் அனுபவத்தை அவனிடம் சொல். ஆனால், உன் அனுபவங்களை அவன் பின்பற்ற எந்த முயற்சியும் செய்யாதே. திணிக்காதே. அவன், அவனது சொந்த விருப்பத்தினால் பின்பற்றினால் நல்லது. அப்படி அவன் பின்பற்றவில்லையா? காத்திரு. அவசரமில்லை.

தந்தையாகவோ, தாயாகவோ இருப்பது கடினம். உலகிலேயே மிகக் கடினமான விஷயம். ஆனால் மக்கள் அது மிகவும் சுலபம் என்று நினைக்கிறார்கள்.

நான் ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். ‘ கடைவீதியிலிருந்து ஒரு பெண்மணி அவள் வீட்டிற்கு வாடகை காரில் வந்தாள். கார் ஓட்டுனர் கிறுக்கன். அவன் எந்த வினாடியும் விபத்து நேரலாம் என்பது போல காரோட்டினான். அவன், மிகவும் வேகமாக போனான். அந்த பெண்மணி மிகவும் படபடப்போடு இருக்கையின் விளிம்பில் அமர்ந்திருந்தாள். பல தடவைகள், ‘வேகமாகப் போகாதே. எனக்கு பயமாயிருக்கிறது’ என்று சொன்னாள். ஆனால், அவன் கேட்கவேயில்லை. பிறகு அவள், ‘இங்கேப்பார், பன்னிரெண்டு குழந்தைகள் வீட்டில் எனக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது தவறு நடந்தால் என் பன்னிரெண்டு குழந்தைகளின் நிலை என்ன?’ என்று கேட்டாள்.

ஓட்டுனர் உடனே கேட்டான்; நீ ஜாக்கிரதையாக இருப்பதைப் பற்றி என்னிடம் சொல்கிறாய்! என்று.

இதைப் புரிந்து கொள்வது கடினம்தான். அவன், “நீ பன்னிரெண்டு குழந்தைகளைப் பெற்றிருக்கிறாய். நீ ஜாக்கிரதையாக இல்லை. நீ என்னிடம் ஜாக்கிரதையாக ஓட்டும்படி சொல்கிறாய்!” என்றான்.

பல குழந்தைகள் பெறுவது சுலபம்தான். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. விலங்குகள் கூட இதைச் சுலபமாக செய்துவிடும். ஆனால், ஒரு தாயாக இருப்பது

மிகவும் கடினம். உலகிலேயே மிகவும் கடினமான விஷயம். தந்தையாக இருப்பது இன்னும் கடினம். ஏனெனில் தாயாக இருப்பது இயற்கையானது. தந்தையாக இருப்பது அந்த அளவு இயற்கையானது அல்ல. தந்தை என்பது சமுதாயத்தின் பரிமாணம், நாம் தந்தையை உருவாக்கியுள்ளோம். அது இயற்கையில் இல்லாத து, தந்தையாக இருப்பது இன்னும் கடினமானது, ஏனெனில், அதற்கான இயற்கையான ஈடுபாடு அங்கு இல்லை. அது கஷ்டமானது. ஏனெனில், இது மிக உயர்ந்த படைப்புச் செயல். ஒரு மனிதனை உருவாக்கும் செயல்.

ஜாக்கிரதையாக இரு. சுதந்திரம் கொடு. நல்லது கெட்டது பற்றி பிரிவுகள் உண்டாக்காதே. இரண்டையும் ஏற்றுக்கொள். இரண்டு விதமாக உள்ளவர்களும் வளர உதவி செய். விரைவில் குழந்தைகள் வளர அவர்களுக்கு உதவுவது உனக்கு ஒரு ஆழமான தியானமாக ஆகிவிடும். உன் குழந்தை சரி சொல்பவனாகவோ, முடியாதென்று சொல்பவனாகவோ, மலரும்போது நீயும் அவர்களுடன் வளர்வாய். ஏனெனில், இங்கு பல அழகான முடியாதென்று சொல்பவர்கள் இருந்திருக்கின்றனர். நீட்சே, ஒரு முடியாது சொல்பவர். ஆனால், அழகானவர். முடியாது, என்று சொல்வதில்கூட, அவனது அறிவொளி அழகாகவும் அற்புதமாகவும் பரிமளிக்கும். நீட்சே போன்ற மக்கள் இல்லையென்றால், இவ்வுலகம் இவ்வளவு செழிப்புடன் இருக்காது. அவனால் சரி சொல்ல முடியாது. அது அவனுக்கு கஷ்டமானது. முடியாது என்பதே அவனது முழுத் துடிப்பும்.

கௌதம புத்தர் முடியாது சொல்பவர், எதிர்மறையானவர். அவர் ‘பிரம்மம் என்று எதுவும் இல்லை, ஆன்மா என்று எதுவும் இல்லை, உலகம் என்று எதுவும் இல்லை’ என்றார். அவரைவிட பெரிய எதிர்மறையாளரை நீ காண முடியாது. அவர் ஒன்றுமில்லை என்பதைத்தான் விட்டுச்சென்றார். அவர் ஒன்றுமில்லை என்பதைத்தான் சொன்னார். அவர் இல்லை என்று சொல்லிக்கொண்டே இருந்தார். அவர் எல்லாவற்றையும் இல்லாமலாக்கிக்கொண்டே இருந்தார். அவரிடம் சரி என்பதைக் காண்பது மிகவும் கடினமானது. முடியாதது. ஆனால், அந்த எதிர்மறையிலிருந்து எழுந்த மிக அழகான உயிரோட்டம் அல்லவா அவர்! அதற்கு அந்த எதிர்மறை மிகவும் முழுமையானதாக இருக்க வேண்டும்.

இங்கு சரி சொன்னவர்களும், பக்தர்களும் இருந்திருக்கிறார்கள். மீரா, சைதன்யா, ஜீஸஸ், முகம்மது எல்லோரும் சரி சொல்பவர்கள், நேர்மறையானவர்கள், இரண்டுவிதமான மதங்கள் உண்டு. எதிர்மறையை அடிப்படையாக கொண்ட ஒன்று, நேர்மறையை அடிப்படையாக கொண்ட மற்றொன்று. நீயும் அதில் ஏதோ ஒன்றைச் சேர்ந்தவன்தான். நீ எதிர்மறையாளன் என்றால் உனக்கு புத்தமதம் உதவக்கூடும். நீ நேர்மறையாளன் என்றால், உனக்கு புத்தமதம் உதவமுடியாது. அது அழித்துவிடும். கிறிஸ்த்தவ மதம் உதவமுடியும். இந்து மதம் உதவமுடியும்.

ஆனால், இரண்டும் வேண்டும். நான் இதை சொல்லும்போது, அவை எப்போதும் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில், ஆணும் பெண்ணும் போல இருக்கின்றன என்று குறிப்பிடுகிறேன். அவை எப்போதும் கிட்டத்தட்ட சம எண்ணிக்கையில்தான் உள்ளன. இந்த முழு உலகமும் பிரிந்திருக்கிறது. பாதி ஆண், பாதி பெண், இயற்கை இந்த விகிதாச்சாரத்தை எப்படிக் காப்பாற்றுகிறது என்பது ஒரு பெரிய அதிசயம்தான். ஒவ்வொரு பரிமாணத்திலும், இது போன்ற விகிதாச்சாரம் பராமரிக்கப்படுகிறது. எப்போதும் நேர்மறையானவர்கள் பாதியும், எதிர்மறையானவர்கள் பாதியுமாகவே உலகில் உள்ளனர். அறிவைப் பின்பற்ற முடிகிறவர்கள் பாதி, அன்பைப் பின்பற்ற முடிகிறவர்கள் பாதி. அன்பு எப்போதும் நேர்மறையானது, அறிவு எப்போதும் எதிர்மறையானது. இந்த விகிதாச்சாரம் எப்போதும் இயற்கையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆகவே, உனக்கு இரு குழந்தைகள் இருந்தால், ஒன்று எதிர்மறையாகவும் ஒன்று நேர்மறையாகவும் இருந்தால், இது ஒரு சரியான விகிதாச்சாரம்தான். நீ உன் வீட்டிலேயே இரண்டையும் பெற்றிருப்பது நல்லது. அவைகளுக்கு இடையே ஒரு இசைவை உன்னால் உருவாக்க முடியும். எதிர்மறையை அழிக்க முயற்சிக்காதே. நேர்மறைக்கு மட்டும் உதவி செய்யாதே. இரண்டுக்கும் இடையே ஒரு இசைவை உருவாக்கு. இந்த இரு குழந்தைகளும் இந்த முழு உலகின் பிரதிநிதிகள், எதிர் துருவங்கள், எதிர் எதிரானவர்கள், சைனாவின் யிங் - யங் போல, அவர்களிடையே ஒரு இசைவை உருவாக்கு. உன் குடும்பம் உண்மையிலேயே ஒரு குடும்பமாக, ஒரு முழுமையாக, ஒரு முழு இசைவாக ஆகும்.

ஆனால், இடைமறிக்காதே, கண்டிக்காதே, நீதி சொல்பவனாக இருக்காதே. ஒரு தந்தையாக, ஒரு தாயாக மட்டுமே இரு. அவர்களை நேசி, ஏற்றுக்கொள், அவர்கள் அவர்களாகவே இருக்க உதவு. மற்றவர்கள் அவர்களாகவே இருக்க உதவி செய்வதுதான் எல்லா அன்புக்கும் அடிப்படை. நீ கட்டுப்படுத்தவோ, மாற்றவோ விருப்பப்பட்டால், நீ நேசிக்கவில்லை. நீ அழிப்பவனாகிவிடுகிறாய்.

## *நீ வாழ்வதின் மூலமாக பகிர்ந்து கொள்.*

அன்புள்ள ஓஷோ,

நாங்கள் மற்றவர்களை பொருட்படுத்த வேண்டாம் என்று இந்த வாரம் எங்களிடம் சொன்னீர்கள். ஆனால், மேற்கிலிருந்து வரும் எங்களில் பலருக்கு நாங்கள் கண்டதை பகிர்ந்து கொள்ள விரும்பும் அளவிற்கு நண்பர்களும் உறவினர்களும் உண்டு.

நாங்கள் சன்னியாசத்தைப் பற்றி, அவர்களிடம் என்ன சொல்வது?

நாங்கள் உங்களைப் பற்றி, அவர்களிடம் என்ன சொல்வது?

விவரிக்க இயலாததை நாங்கள் எப்படி விவரிப்பது?

சொல்ல முடியாத சில விஷயங்கள் உண்டு. உன்னால் வார்த்தைகளால் பகிர்ந்து கொள்ள முடியாது. ஆனால் அவற்றை பகிர்ந்து கொள்ள ஒரு வழி உண்டு. உன் வாழ்வின் மூலமாகத்தான். ஒரு சன்னியாசியாக இரு. சன்னியாசத்தைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வதற்கான ஒரே வழி அதுதான்.

நீ ஒரு சன்னியாசியானால், சொல்ல முடியாததை உன் ஒவ்வொரு அசைவும் சொல்லும். விளங்க வைக்க முடியாததை, நீ வாழும் வழி கதை கதையாக சொல்லும்.

மொழி சக்தியற்றது. வாழும் விஷயங்களைப் பற்றி அதனால் எதுவும் சொல்ல முடியாது. அதனால் இறந்த விஷயங்களைப் பற்றித்தான் சொல்ல முடியும். நீ சன்னியாசைப் பற்றி எதையாவது சொல்ல முடியும். ஆனால், அது உண்மையாக இருக்காது. எப்படி நீ சன்னியாசைப் பற்றி எதையாவது சொல்ல முடியும்? அது ஒரு உள் மலர்ச்சி, அது ஒரு உள் சுதந்திரம், அது ஒரு உள் பரவசம், ஒரு பேரானந்தம்.

நீ அதை பகிர்ந்து கொள்ள முடியும்; ஆனால், உன் வாழ்வின் மூலமாகத்தான் அந்த பகிர்தல் இருக்கும், உன் ஆத்மார்த்தமான வாழ்வின் மூலமாகத்தான். நீ நடக்கும் விதம், நீ உட்காரும் விதம், நீ பார்க்கும் விதம் - உன் கண்கள், உன் உடல், நீ விடும் மூச்சிலும் கூட. உன்னை சுற்றி படர்ந்துள்ள மோனம், உன்னிலிருந்து வீசிக் கொண்டேயிருக்கும் பேரானந்தம், உன் அதிர்வலைகள் அவை சொல்லும், அவைகளால் மட்டுமே சொல்ல முடியும்.

ஒரு சன்னியாசியாக இரு. அதுதான் ஒரே வழி. சன்னியாஸ் என்றால் என்ன? அது மனதிலிருந்து விடுதலை. மனம் என்றால் என்ன என்பதை நீ புரிந்து கொள்ளாவிட்டால், சன்னியாசைப் பற்றி புரிந்து கொள்வது கடினமாக இருக்கும்.

மனம் என்பது கடந்த காலக் குவியல். நீ அனுபவப்பட்ட எல்லாமும், நீ அறிந்த எல்லாமும், நீ வாழ்ந்து கடந்த எல்லாமும் நினைவில் சேகரிக்கப்பட்டிருக்கிறது. குவியலாக இருக்கிறது. அந்த கடந்தகாலக் குவியல்தான் மனது. மனது எப்போதும் இறந்தது. ஏனெனில், அது இறந்த காலத்தைச் சேர்ந்தது. மனது எப்போதும் இறந்தது. ஒரு போதும் அது வாழ்வு இல்லை. ஒரு விஷயம் இறந்த தாகி விடும்போது, அது மனதின் ஒரு பகுதியாகிவிடுகிறது. அது ஒரு பயணியிடம் சேரும் தூசியைப் போன்றது.

இப்போது இங்கே, நீ இருக்கிறாய். மனது எப்போதும் கடந்த காலத்தில் இருக்கிறது. மனது உன்னைத் தொடரும் உன் நிழல்.

கடந்த காலத்திலிருந்து விடுதலையடைவதுதான் சன்னியாஸ். இந்த கணத்தில் வாழ்வது - தலையில் கடந்த காலத்தை சுமக்காமலிருப்பது, கடந்த காலம் சுமையாகாமல் வாழ்வது. கணத்திற்கு கணம் கடந்த காலத்தோடு இற. அது இருந்ததே கிடையாது என்பது போல, நீ இப்போதுதான் புதிதாக பிறந்ததைப் போல இரு. ஒவ்வொரு வினாடியும் புத்துணர்வோடும், இளமையாகவும் இரு. கடந்த காலத்தை தள்ளி வைத்து விடு. தூசியை, குப்பையை சேகரிக்காதே.

நீ குப்பையை சேகரித்தால், ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் சோர்வாகி கொண்டே வருவாய். உன் உள் உணர்வு மூடப்பட்டுவிடும். உன் கண்ணாடி போன்ற ஆன்மா எதையும் பிரதிபலிக்க முடியாது போகும். நீ எந்த அளவு அதிகமாக கடந்த காலத்துடன் இருக்கிறாயோ, அந்த அளவிற்கு உன் கண்ணாடி மூடப்பட்டு விடும். அது பிரதிபலிக்காது. உன் உணர்வு கூர்மை கம்மியாகிக் கொண்டே வரும். இதுதான் நடக்கிறது.

சன்னியாஸ் என்பது ஒரு புது திறப்பு. கடந்த காலத்தைப் பார்த்து இது பயனற்றது. ஏனெனில், இது இல்லாதது , என்பதை புரிந்து கொள்வது, இது பயனற்றது. ஒரு சுமை என்பதை புரிந்து கொள்வது, இதன் மூலம் நீ அதை ஒதுக்கி வைக்கிறாய். பிறகு இங்கே, இப்போது நீ இருப்பாய். நிகழ்காலத்தின் இந்த கணத்தில் வாழ்வது.

சன்னியாஸ் என்றால் காலமின்றி வாழ்வது, கடந்த காலத்தால் பாதிக்கப்படாமல் இருப்பது, எதிர்காலத்தை சுமக்காமல் இருப்பது. கடந்த கால சுமையோ எதிர்கால ஆசையோ இன்றி இருப்பது. சன்னியாஸ் என்றால், எந்த திட்டமும் போடாமல் எந்த பயனும் எதிர்பாராமல் வாழ்வது.

சன்னியாஸ் என்பது கடவுளை அடையும் வழி என்று யாராவது சொன்னால் அவன் உளறுகிறான். சன்னியாஸ் எதையும் அடைவதற்காக அல்ல. சன்னியாஸ் என்பது நீ எல்லாவற்றையும் அடைந்து விட்டாய் என்று வாழும் வழி. அது ஒரு ஆசையல்ல. நீ செல்வத்தையோ, அதிகாரத்தையோ, கௌரவத்தையோ, அடைய ஆசைப்படுவதற்கோ, அல்லது கடவுள், முக்தி இவற்றை அடைய ஆசைப்படுவதற்கோ, எந்த வித்தியாசமுமில்லை. அடிப்படை இயக்கம் ஒன்றாகவேதான் இருக்கிறது. நீ ஆசைப்படுகிறாய்.

நீ ஆசைவயப்படும்போதெல்லாம், எதிர்காலம் உள்ளே வருகிறது. எதிர்காலம் இருக்கும்போதெல்லாம் அது ஒரு கடந்த காலத்தின் நீட்டிப்பே அன்றி வேறொன்றுமில்லை. எதிர்காலம் என்னும் போதெல்லாம், அது நீ ஏற்கனவே அறிந்ததை மாற்றியமைக்கப்பட்டதேத் தவிர, வேறெதுவுமில்லை. அது உனக்கு

தெரியாதது அல்ல. நீ அறியாததன் மேல் எப்படி ஆசைப்பட முடியும்? அதைப்பற்றி உனக்கு தெரியாதபோது எப்படி நீ அதை ஆசைப்பட முடியும்?

கடவுள் மேல் ஆசைப்படமுடியாது. நீ ஆசைப்பட்டால் அது வேறொன்றாய் இருக்கும். ஏனெனில், கடவுளை நீ அறிந்ததில்லை. எப்படி நீ ஆசைப்பட முடியும்? கடவுளை நீ அனுபவித்ததில்லை, பின் எப்படி நீ ஆசைப்பட முடியும்?

நீ பாலுணர்வை விரும்பலாம்; பதவி மேல் ஆசைப்படலாம; நீ தன்முனைப்பை விரும்ப முடியும்; ஏனெனில், உனக்கு அவைகளைத் தெரியும். உனக்கு அவைகளை பலபல வாழ்க்கைகளாகவே தெரியும். ஆனால், நீ எப்படி கடவுளை ஆசைப்பட முடியும்? நீ எப்படி அன்பை விரும்ப முடியும்? நீ எப்படி பரவசத்தை விரும்ப முடியும்? உனக்கு அவைகளைத் தெரியவேத் தெரியாது. விரும்புவதற்கு சாத்தியமேயில்லை.

அதனால்தான் எல்லா புனித நூல்களும், எல்லா ஞானமடைந்தவர்களும் சொல்கிறார்கள். நீ ஆசைகளேயில்லாமல் இருக்கும்போது கடவுள் உன்னிடம் நிகழ்கிறார். முக்தி உன்னிடம் வருகிறது. நீ முக்தியை நோக்கி போவதில்லை. நீ போக முடியாது. ஏனெனில், உனக்குத் தெரியாது. நீ எந்த ஆசைகளும் இல்லாமலிருக்கும்போது, (நிர்வாணா) முக்தி உனக்கு நிகழும்.

சன்னியாஸ் என்பது ஆசைகளற்று இருப்பது. ஆசைகளற்று இருப்பது என்றால், நிகழ்காலத்தில் வசிப்பது.

ஞாபகத்தில் கொள், நிகழ்காலம் நேரத்தின் ஒரு பகுதியல்ல. இப்போது என்பது நேரத்தைக் கடந்தது. கடந்த காலத்தை ஒட்டியோ, எதிர்காலத்தை ஒட்டியோ நீ நினைக்கும்போது மட்டும்தான் நேரம் வருகிறது. இந்த கணம் நேரத்தின் ஒரு பகுதியல்ல. இந்த கணம் உன் கடிகாரத்தில் பதிவாகியிருக்காது. ஏனெனில், கடிகாரம் எப்போதும் எதிர்காலத்தில்தான் நகர்கிறது. அது எப்போதும் எதிர்காலத்தில்தான் நகரும். அது இப்போது இங்கே இருந்ததில்லை. அது கடந்த காலத்திலிருந்து வருகிறது. எதிர்காலத்தில் நகருகிறது.

கடிகாரம் உன் மனதின் பிரதிநிதி - அது இங்கே இருப்பதேயில்லை! அது இங்கிருக்கிறது என்று நீ சொல்லும் அந்த கணத்தில் அது நகர்ந்து விடுகிறது. அது எங்கிருக்கிறது என்று நீ பார்க்கும் கணத்தில், அது கடந்த காலமாகிறது. கடந்த காலத்திலிருந்து, எதிர்காலத்திற்கு அது குதிக்கிறது. உன் கடிகாரத்தில் வினாடிகளாக நீ பார்த்தால் அது நகராது. அது குதித்துக்கொண்டிருப்பதை காணலாம். நிமிடமுள் நகர்வதைப்போல தோன்றும். ஏனெனில், குதிப்பது மிகவும் மெதுவாக இருக்கிறது. ஆனால், வினாடியை குறிக்கும் முள்ளைப் பார்த்தால் அது குதிப்பதை உன்னால் பார்க்க முடியும். அது கடந்த காலத்திலிருந்து

எதிர்காலத்திற்கு குதிக்கிறது. அது இங்கே இப்போது இருப்பதேயில்லை. இதுதான் மனதின் வழி.

இப்போது என்பது காலத்தை கடந்தது. அது நேரமில்லாதது; அல்லது நீ அதை நித்தியமானது என்றும் அழைக்க முடியும். நீ அதை விட்டு விலகுவதேயில்லை. அது எப்போதும் இங்குள்ளது. நீ அதனுள் போகவும் முடியாது. அதைவிட்டு வெளியே வரவும் முடியாது. அது அங்கேயே உள்ளது.

உன் முழு வாழ்க்கையும், இப்போது என்பதில் சூழப்பட்டதாக நீ வாழ்ந்தால், நீ ஒரு சன்னியாசி. நீ ஆசையில்லாதவன், நீ கடவுளைக் கூட ஆசைப்படாதவன்.

நீ கடவுளை விரும்பும் அந்த கணமே நீ கடவுளை ஒரு விலைபொருளாக்கி விடுகிறாய். பிறகு நீ பாதிரிகளால், மத குருமார்களால் ஏய்க்கப்படுகிறாய். ஏனெனில், அவர்கள் அந்த விலைப்பொருளை விற்கிறார்கள். பிறகு நீ கோவில்களாலும், சர்ச்சுகளாலும், மசூதிகளாலும் ஏய்க்கப்படுகிறாய். ஏனெனில், அவைகள்தான் அந்த விலைபொருள் விற்க்கப்படும் கடைகள். ஒரு சன்னியாசி கோவில்களிலும், சர்ச்சுகளிலும் செய்யக்கூடியது எதுவுமில்லை. ஏனெனில், கடவுள் ஒரு விலைபொருளல்ல.

நீ ஆசைபடாமலிருக்கும்போது என்ன நடக்கிறது? இதற்கு நீ உன்னை கொல்ல வேண்டும். உன்னை அமுக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமல்ல; நீ உன் ஆசைகளை கொன்றுவிட வேண்டும் என்று அர்த்தமல்ல; இந்த கருத்து ஆழமாக புரிந்து கொள்ளப்பட வேண்டும், ஏனெனில் இதை தவறாக புரிந்து கொள்கிறார்கள்.

புனித நூல்களும், யார் அறிந்தவர்களோ, அவர்களும் சொல்கிறார்கள்; நீ ஆசையின்றி இருக்கும்போது, அந்த இறைமை உனக்குள் நிகழ்கிறது. உடனே பூனை எலியின் மேல் பாய்ந்து பிடிப்பதைப்போல, மனது பாய்ந்து ஆசையின்மையை பிடித்துக்கொண்டு சரி, கடவுளை ஆசையின்மை மூலமாகத்தான் அடைய முடியுமானால், நான் ஆசையின்மையை ஆசையாக்கிக்கொள்கிறேன் என்கிறது. இப்போது இதுவே ஆசையாகிவிடுகிறது. திரும்பவும் நீ நழுவ விட்டுவிட்டாய். பிறகு சந்நியாசிகள் ஆசையில்லாமல் இருக்க முயற்சி செய்கிறார்கள். பிறகு ஆசையில்லாமல் இருக்கும் இந்த நிலையானது எதிர்காலத்தில் அடையப்போகிற ஒரு விஷயமாகி விடுகிறது.

நீ என்ன செய்ய முடியும்? நீ ஆசையை கொல்லமுடியும் என்றும், ஆசையில்லாதவனாக ஆகமுடியும் என்றும் நீ நினைக்கிறாய். ஆசையின்றி இருப்பது ஆசையின் மரணமல்ல. ஏனெனில், ஆசை இறக்கும்போது நீயும் இறந்து விடுகிறாய் - இது மிகவும் நுட்பமானதாகவும் கடினமானதாகவும் தோன்றுகிறது

இல்லையா? இங்கு ஆசையில்லையென்றால், நீ எல்லா ஆசைகளையும் கொன்று விட்டால், நீயும் இறந்து விடுவாய்.ஆசையின்றி இருத்தல் நிகழ இது வழியல்ல. இது ஆசையின் மரணமல்ல, இது ஆசையின் உருமாற்றம்.

ஆசை எதிர்காலத்தில் நகர்வது ஆசையின் ஒரு வழி. ஆசை, இங்கேயே, இப்போது இருந்து நிகழ்காலத்தை ரசிப்பது ஆசையின் மற்றொரு வழி. இந்த இரண்டாவது வழிதான் ஆசையின்றி இருப்பது. ஏனெனில், அது எதிர்காலத்தில் நகர்வதில்லை.

ஆசையின்றி இருக்கும் ஒரு மனிதன் இறந்தவனல்ல. அவன் உன்னை விட உயிர் துடிப்புள்ளவன். ஏனெனில் அவன் ஆசை, இங்கே இப்போது நிலைப்படுத்தப் பட்டுள்ளது. அவன் அவனது உணவை உட்கொண்டானானால், அவன் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறான் என்பதை உன்னால் ஊகிக்கக் கூட முடியாது. வெறும் ரொட்டியும், வெண்ணையும், அவனது சாதாரண உணவு, அதை உட்கொள்வதே அவனுக்கு மகிழ்ச்சி, ஏனெனில், அவனது முழு வாழ்வும் அங்கேயே உள்ளது. அவன் பொருள்களை உள்ளே வீசுவதில்லை.

எதிர்காலத்தில் வாழும் ஒரு மனிதன் நன்றாக சாப்பிடவே மாட்டான். அவன் உணவை உள்ளே தள்ளுவான். அவன் சாப்பிடுவதைப் பற்றி கவலைப்பட மாட்டான். ஏனெனில், அவன் மனது எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுகிறது. அவன் ஆசைகளில்தான் வாழ்கிறான். அவன் நன்றாக சாப்பிட முடியாது நாளைக்கு என்ன சாப்பிடுவது என்பதைப் பற்றி அவனால் சிந்தனை செய்ய முடியும். ஆனால், அவனால் இந்த வினாடி சாப்பிட முடியாது; அவனால் என்ன விதமான உணவு, எங்கே போய் நாளை சாப்பிடுவது என்பதைப் பற்றி கற்பனை செய்ய முடியும். ஆனால், இன்று வெற்றிடமாகவும் காலியாகவும் உள்ளது. ஒவ்வொரு நாளையும் துரதிஷ்டவசமாக, இன்றாகி விடுகிறது - அவன், அவனது முழு வாழ்க்கையையும் நழுவவிட்டு விடுவான்.

அவன் கலவியில் இருக்கும்போது கூட, அவன் எதையும் உணருவதில்லை. அவன் மனமுடைந்தவனாகி விடுகிறான் - ஆனால், அவன் நாளை எதிர்காலத்தில் அடைய விரும்பும் பெண்ணைப் பற்றிச் சிந்திக்கிறான். ஆனால், அதுவே தான் திரும்பவும் நடக்கப்போகிறது. ஒவ்வொரு பெண்ணுடனும், ஒவ்வொரு ஆணினுடனும் - ஏனெனில், சந்திப்பு இங்கே, இப்போது இருக்கிறது. மனம் எப்போதும் நகர்ந்து விடுகிறது.

அவன் கலவி செய்ய முடிவதேயில்லை. அவனால் சாப்பிட முடிய போவதேயில்லை. அவனால் எப்போதும் அவனைச் சுற்றி இயற்கை சொரிந்து கொண்டிருக்கும் பேரானந்தத்தை ரசிக்க முடியபோவதில்லை. இலையுதிர் காலத்தில் இலைகள் மௌனமாக மரத்திலிருந்து விழுந்து கொண்டிருப்பதைப் போல, பேரானந்தம் ஒவ்வொரு வினாடியும் மௌனமாக எந்தவிதமான

சத்தத்தையும் உண்டு பண்ணாமல் உன்னைச் சுற்றி சொரிந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றும் எல்லாமே அழகாயிருக்கிறது. ஒவ்வொன்றும் மகிழ்ச்சியாய் இருக்கிறது. ஆனால், நீ நிகழ்காலத்தில் இல்லை.

ஆகவே ஒரு சன்னியாசி என்றால், தன் ஆசைகளை கொன்றவன் என்று அர்த்தமல்ல, சன்னியாசி என்றால், அவனது ஆசை சக்தி முழுவதையும், இப்போது, இங்கே கொண்டு வருபவன் என்றுதான் பொருள். அவன் முழுமையாக வாழ்கிறான். அவன் என்ன செய்தாலும் அவன் முழுமையாக அதில் கிரகிக்கப்பட்டவனாக இருக்கிறான். எதுவும் பின்னால் மீதி இருப்பதில்லை, அவன் பகுதியாக இல்லை, சாப்பிடும்போது அவன் சாப்பிடுபவனாக மாறுகிறான். அவன் நேசிக்கும்போது நேசிப்பாகவே மாறுகிறான். நகரும்போது அவன் நகர்வாகவே மாறுகிறான்.

புத்தர் சொன்னார். வெகுசிலரே அவர் என்ன சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டனர். நீ நகரும்போது, நகருதல் மட்டுமே இருக்கிறது. நகருபவர் இல்லை; நீ பேசும்போது பேசுதல் மட்டுமே இருக்கிறது. பேசுபவர் இல்லை. நீ கிரகுக்கும்போது, கிரகித்தல் மட்டுமே இருக்கிறது, கிரகிப்பவர் இல்லை; நீ கவனிக்கும்போது கவனித்தல் மட்டுமே இருக்கிறது. கவனிப்பவர் இல்லை.

சன்னியாசி என்றால் இதுதான், செயல் முழுமையாகிறது. செய்பவர் செயலில் இல்லாமலிருக்கிறார். அங்கு எவரும் பின்னால் நிற்கவில்லை. பகுதிகள் இல்லை. நீ முழுவதுமாக நகருவாய். நீ செயல் எதுவாக இருந்தாலும் அந்த செயலில் பரிணமிக்கிறாய், இந்த நிலையில் முழுமையான இன்பத்தை அடைகிறாய்.

சன்னியாசி என்றால், இறந்த ஆசைகளோடு இருப்பவனல்ல, ஆசைகளின்றி இருப்பவன். ஆசைக்கு பயனுறும் எல்லாச் சக்திகளையும், எல்லா பலங்களையும் இந்த நிகழ்கால வினாடிக்கு திருப்பிவிட்டவன் அவன். அவைகள் எதிர்காலத்திற்கு ஓடுவதில்லை. அவைகள் இந்த நிகழ்கால வினாடிக்கு திருப்பிவிடப்பட்டுள்ளன. அவனது ஆசைகள் இங்கே, இப்போது நிலைப்படுத்தப்பட்டுள்ளன. அவன் ஒரு உலகமாகவே மாறுகிறான். எல்லாம் அவனுக்கு பின்னால் நகர்கிறது. ஒன்றும் எதிர்காலத்திற்கு செல்வதில்லை. ஏனெனில், எதிர்காலம் என்பது பொய்யானது, அது இல்லாதது.

உன் ஆசை எதிர்காலத்தில் நகர்ந்தால், அது ஒரு நதி பாலைவனத்திற்குள் செல்வதற்கு ஒப்பானதே; அது தொலைந்துவிடும், அது கடலையடையவே அடையாது. அது ஒரு நதி கடலை சந்திக்கும்போது ஏற்படும் பேரானந்தத்தை ரசிக்கவே முடியாது. ஒரு நதி கடலை போய் அடையும்போது நடனம், பரவசம், பேரானந்தம், உயிர்துடிப்பு நதி முழுமையிலும் உணரப்படுகிறது. ஒரு நதி பாலைவனத்திறகு சென்றால் அது ஓடாது. நதி காணாமல்போய்விடும். அது

ஆவியாகிவிடும். அது இறந்துவிடும். அங்கு இயற்கையுடன் எந்த சந்திப்பும் இருக்காது.

ஆசை எதிர்காலத்தில் நகரும்போது, ஆசையாகிய நதி பாலைவனத்திற்குள் செல்கிறது. எதிர்காலம் எங்குமில்லை, எப்போதும் நிகழ்காலம்தான் உள்ளது. எதிர்காலம் என்பது மனிதனின் படைப்பு, அது பொய்யானது; அது ஒரு கனவு. ஒரு சன்னியாசி நிஜங்களில்தான் வாழ்வான். கனவில் வாழ்பவனல்ல. அவன் நிஜத்தில் ஆனந்தப்படுவான்.

ஆகவே ஞாபகத்தில் வைத்துக்கொள்; நான் திரும்ப திரும்ப வலியுறுத்துகிறேன். சன்னியாசி என்பவன் வாழ்க்கைக்கு எதிரானவனல்ல; அவன் உண்மையில் வாழ்க்கைக்கு ஆதரவாக இருப்பவன். சன்னியாசி என்பவன் அவன் எல்லா உயிர்த் துடிப்பையும், ஆசைகளையும் கொன்று ஒரு இறந்த போனவனாக ஆகிவிட்டவன் அல்ல. அவன் அதிக அளவு வாழ்பவன். அவன் வாழ்வின் மிகப்பெரிய ஊற்றுக்கண்.

நீ பசியை உணர்கிறாய். உடனே உணவைப்பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறாய். நீ முழுமையான பசியை உணர்வதேயில்லை. அப்படி உணர்ந்தால், அது அதற்கென்று ஒரு அழகோடு இருப்பதை உணரமுடியும். பசியை உணர முடியா மனிதன் ஏற்கனவே இறந்துவிட்டவன். பசி அங்கிருக்கும்போது, பசி ஆஜராகும்போது, நீ உணவைப்பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறாய். உணவு அங்கிருக்கும் போது, நீ நாளை அடையப்போகும் வேறு உணவைப்பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறாய்.

சன்னியாசி, நிகழ்காலத்தில் பசிக்கும் மனிதன், பசி அங்கிருக்கும்போது பசியை ரசிக்கிறான். அவன் முழுமையாக பசியோடிருக்கிறான், அவன் பசியாகவே மாறுகிறான். உடலின் ஒவ்வொரு அணுவும் உணவுக்காக காத்திருக்கிறது. பல நாட்களாக மழையில்லாமலிருக்கும்போது, பூமி மழைக்காக காத்திருப்பதைப் போல காத்திருக்கும். ஒவ்வொரு அணுவும் பிரார்த்திக்கும்; காத்திருக்கும்; அழைத்துக்கொண்டிருக்கும்; பிறகு உணவு அங்கிருக்கிறது. அவன் உணவை ரசிக்கிறான். திருப்தி முழு உயிருக்கும் வருகிறது. உடல், மனது, ஆன்மா எல்லாவற்றிற்கும் பரவுகிறது. அவன் அந்த திருப்தியை ரசிக்கிறான்.

ஒரு ஜென் குருவிடம் கேட்கப்பட்டது: தியானம் என்றால் என்ன? அவர் சொன்னார்: எனக்கு பசியெடுக்கும்போது, நான் பசியாயிருக்கிறேன், நான் தூக்கம் வருவதாக உணரும்போது நான் தூங்குகிறேன்.

கேள்வி கேட்டவனால் புரிந்துக்கொள்ள முடியவில்லை: அவன் சொன்னான்: நான் தியானத்தைப்பற்றி கேட்கிறேன். உங்களைப்பற்றி அல்ல.

குரு சொன்னார்: தியானம் செய்வதைபற்றி எனக்கு தெரிந்ததெல்லாம் இதுதான். நான் பசியை உணரும்போது நான் பசியாயிருக்கிறேன். இங்கு பிரிவுகளில்லை. நான் சாப்பிடும்போது சாப்பிடுகிறேன், தூக்கத்தை உணரும்போது நான் தூங்குகிறேன்.

வாழ்க்கையுடன் சணடையில்லை, எந்த எதிர்ப்பும் இல்லை. சரணடைதல், மிதத்தல், ஒரு வெண்மேகமாக மாறிவிடுதல், சன்னியாசி நீலவானத்தில் நகரும் ஒரு வெண்மேகம். கடவுளால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வினாடியையும் ரசிப்பவன். அவனிடம் வருகிற ஒவ்வொரு அருளையும் ரசிப்பவன்.

இது சாத்தியமென்றால் சாத்தியம்தான். இது பலருக்கு நடந்திருக்கிறது., இது உனக்கும் நடக்க முடியும். ஒரு ஆழமான புரிந்து கொள்ளுதல் மட்டுமே தேவை. பிறகு எந்தவிதமான வினைப்பயனும் சேர்வதில்லை. பிறகு நீ எதையும் சேர்த்து வைக்கமாட்டாய். நீ சாப்பிடு, நீ நேசி, நீ எல்லாவற்றையும் செய் - ஆனால் நீ அவைகளிலிருந்து எந்த நினைவுகளையும் சேர்த்துக்கொள்ளும் தன்முனைப்பு இல்லாமல் முழுமையாக அவைகளை செய். நீ எப்போதும் நான் இதை செய்தேன் என்று சொல்லாதே, எப்படி உன்னால் சொல்லமுடியும்? செயல் அங்கிருக்கும்போது நீ அங்கில்லை, ஆகவே யார் கூறமுடியும் நான் இதை செய்தேனென்று.

நீ ஒரு சன்னியாசியை பார்த்து, நீ பசியாயிருக்கும்போது நீ உன் உணவை அருந்துகிறாயாயென்று கேட்டால் அவன் சொல்வான்; நான் பசியோடு இல்லை, நான் என் உணவை எடுத்துக்கொள்வதில்லை - பசி அங்கிருக்கிறது. அந்த பசி உணவை எடுத்துக்கொள்கிறது; என் பக்கத்திலிருந்து எந்த விதமான செயலும் இல்லை, நான் அங்கில்லை. நீ அங்கில்லை என்றால், செய்பவர் அங்கில்லை என்றால் வினைப்பயன் யாரை சேரும்?

இதைத்தான் கிருஷ்ணர் அர்ஜூனனிடம் சொன்னார்; உனக்கு என்ன நிகழ்வதானாலும், சூழ்நிலை என்ன வேண்டுகிறதோ அதை செய். செய்பவனை மறந்து விடு. நான் செய்கிறேன் என்று நினைக்காதே; பதிலாக் கடவுள் என் மூலமாக செய்கிறார் என்று நினை. இது அதே விஷயத்தை சொல்வதற்கான மற்றொரு வழி; கடவுள் என் மூலமாக செய்கிறார் நான் ஒரு வெறும் நிமித்தம் - ஒரு கருவி, ஒரு வழி, ஒரு வாகனம். நான் ஒரு வெறும் புல்லாங்குழல், வெற்றிடம் உள்ளே எதுவுமில்லாதது; கடவுள் வாசித்துக்கொண்டேயிருக்கிறார், புது லயங்கள் கொண்டு வருகிறார், புதிய பாடல்கள் உருவாக்குகிறார் நான் ஒரு வெறும் பாதை, ஒரு மூங்கில் புல்லாங்குழல்.

ஒரு சன்னியாசி என்பவன் ஒரு மூங்கில் குழல், ஒரு வழி. அவன் அங்கு இல்லை. அவனைச்சுற்றி பலவும் நடக்கும், அவன் மூலமாக பலவும் நடக்கும். ஆனால், அவன் அங்கில்லை.

ஒரு சன்னியாசியாக மாறு. ஏனெனில் இது.... இது மிகவும் அழகானது!

நீ பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாக உன் மனதிற்கு தோன்ற வேண்டும் நீ இங்கிருக்கிறாய் - உன் தாய் உனக்காக வீட்டில் காத்துக்கொண்டிருப்பாள் - உன் மனைவி அல்லது உன் கணவன், உன் குழந்தைகள், மேலும் அன்பு எப்போதும் பகிர்ந்து கொள்ளும்.

நீ திரும்பி போகப்போகிறாய். நீ உன்னுடன் எந்த காணும் பொருளையும் எடுத்துச் செல்ல மாட்டாய் - உன் மனைவிக்கோ, உன் அம்மாவிற்கோ, சில நகைகளோ, அல்லது இந்த நாட்டிலிருக்கும் சில பொருட்களோ பரிசாக எடுத்துச்செல்லமாட்டாய் - நீ காணமுடியாததை எடுத்துச் செல்வாய்.

இந்த காணமுடியாததைப்பற்றி பேசமுடியாது. ஏனெனில், நீ உன்னுடன் ஒரு தத்துவத்தை எடுத்துச் செல்லவில்லை. நான் உனக்கு ஒரு தத்துவத்தை கொடுக்கவில்லை, நான் உனக்கு ஒரு கொள்கையை கொடுக்கவில்லை - நான் உனக்கு ஒரு வித்தியாசமான வாழ்க்கையை, உயிர் துடிப்போடு இருக்கும் வழியை கொடுக்கிறேன்.

அதைப்பற்றி அவர்களுக்கு சொல்வது கடினம். அவர்கள் நேரிடையாக கேட்டால், அது மிகவும் கடினம். எதையும் சொல்ல முயற்சி செய்யாதே. ஏனெனில், அது எந்த விதத்திலும் உதவாது, அது மேலும் பிரச்சினைகளை உண்டு பண்ணலாம். பதிலாக அவர்கள் பகிர்ந்து கொள்ள முடியும்படி திறந்திரு. பதிலாக, பகிர்ந்து கொள்ள தாயாராய் இரு. அவர்களுடன் இரு - சிரி, ரசி, சாப்பிடு, தியானம் செய், உனக்கு நிகழ்ந்திருக்கும் புதிய வாழ்வை அவர்களிடம் பகிர்ந்து கொள்ள சொல், நீ அங்கு இருப்பதே உன் சிரிப்பும் ரசிப்புமாய் இருக்கும் உயிர் துடிப்பே, தொற்றிக்கொள்ளக் கூடியது - அது தொற்றிக்கொள்கிறது. அவர்கள் அதை உணருவார்கள்.

இது நடக்க காலம் பிடிக்கும். அது சுலபமல்ல, அது கடினம். நீ போவதற்கு முன்னால் தயாராகு. பகிர்ந்து கொள்ள தயார் செய்து கொள்.

அவர்கள் புரிந்துக்கொள்வது எப்போதும் நடக்கக்கூடியதல்ல. ஆரம்பத்தில் அங்கு தவறாகவே புரிந்துக்கொள்வார்கள். தவறாக புரிந்துக்கொள்வதற்க்குத்தான் சாத்தியகூறு உள்ளது. ஏனெனில், அவர்கள் இதைப்பற்றியெல்லாம் நினைத்தே பார்த்திருக்க மாட்டார்கள். இது சிறிதும் தெரியாத ஒன்று. மேலும் முன் அறியாதது, எப்போதெல்லாம் கதவைத் தட்டுகிறதோ, அப்போதெல்லாம் மனம்

பயந்து நடுங்குகிறது. ஏனெனில், மனதால் இதை வகைப்படுத்திக்கொள்ள முடியாது, மனதால் இதை சமாளிக்க முடியாது. இது நொறுங்க வைக்கிறது. அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. மனது ஒரு விஷயத்தை வகைப்படுத்திக்கொள்ள முடியும்போது எப்போதும் மகிழ்ச்சியை உணரும், அதை ஒரு மூலையில் வைக்கும், பிறகு சொல்லும்; இது இதுதான் - லேபிளை ஒட்டிவிடும்...... இத்தோடு முடிந்தது. ஒரு விஷயத்தை அலசமுடிந்தால் மனது சந்தோஷப்படும் - அதைப் பிரித்து, வெட்டி, அதற்குள் பார்த்து, அதை ஒரு வழியாக முடித்துவிடும்.

ஆனால் சன்னியாசம் வகைப்படுத்த முடியாதது. அது ஒரு வகையல்ல. அது உயிர் வாழ்க்கையின் முற்றிலும் வித்தியாசமான ஒரு தன்மை. அங்கு அதை எதிலாவது வகைப்படுத்துவது என்பதே இல்லை. அது பகுத்துப் பார்க்க முடியாதது. அது பல பிளவுகளாக உடைக்க முடியாதது - அது ஒரு இயந்திரத்தன்மை அல்ல. நீ அதை உடைத்து, பாகங்களாக தனியாக எடுத்துவிட்டு திரும்பவும் ஒன்று சேர்த்தல் முடியாது, இயலாது - அது ஒரு ஜீவனுள்ள ஒருமைப்பாடு. நீ அதை பகுத்துப்பார்த்தால் அது அங்கு இல்லாமல் போய்விடும். மேலும் நீ அதை ஒருபோதும் பழையபடி ஒருங்கிணைக்க முடியாது.

சன்னியாஸ் என்பது ஒரு வாழும் சக்தி. ஜீவனுள்ளது. ஒரு மலரைப் போல. மலரை ஆராய்ந்தால், ஒவ்வொரு இதழாக எடுத்து, பிய்த்து. உள்ளே பார்த்து விசாரித்ததில் திருப்தி அடைந்த பின், திரும்பவும் அதை ஒன்று சேர்க்க முயற்சித்தால் முடியுமா? ஆனால், அந்த நேரத்தில் மலர் மடிந்து விட்டது. இதழ்கள் இறந்துவிட்டன. அவற்றைத் திரும்பவும் அதேபோல் பொருத்த முடியவே முடியாது. ஏனெனில், அது ஒரு ஜீவனுள்ள ஒருமை. அது இயந்திர தன்மை கொண்டதல்ல.

சன்னியாஸ் ஒரு மலர்ச்சி, மனித உள் உணர்வின் மலர்ச்சி. ஒரு மரத்தில் மலர்கள் வருவதைப்போன்றது. அது இப்போது அந்த மரம் நிறைவடைந்து விட்டதை காட்டுகிறது. இப்போதோ, பிறகோ பழங்கள் உண்டாகும். மலர்கள் பழம் தர தயாராகிவிட்டதை , காட்டும் ஒரு அடையாளம். மரம் தயாராகிவிட்டது. அது நிறைவடைந்து விட்டது. மலர்கள் மரம் பழங்கள் தரபோவதற்கு முன்னால் அடையும் பரவசமே. ஏனெனில், பழங்கள் நிறைவை குறிக்கும். மரம் அதன் எல்லைக்கு, உச்சிக்கு வந்து விட்டது. அதனுடைய உயிர் வாழ்தலின் உச்சியை அடைந்துவிட்டது. அது மகிழ்கிறது, மரம் தன்னை இரசிக்கிறது. அது இருந்தது வீண்போகவில்லை. இப்போது பழங்கள் வரப்போகிறது. மரம் தன் பரவசத்தில் மலர்களை அளிக்கிறது.

சன்னியாசம் ஒரு மலர்ச்சி. முக்தி, அதன் கனி. சன்னியாசி என்றால் உன் உயிர்வாழ்க்கை, உனது உள் மரம், குதிக்க வெளிப்பட ஒரு முனைக்கு வந்து

விட்டது. நடக்கப்போகிறது என்று பொருள். அது நடப்பதற்கு முன்னால் உன் முழு உயிரும் அதை ரசிக்கிறது. நீ நிறைவடைந்து விட்டாய், அது வீணாகாது. பல பல வாழ்க்கைகளாக நீ காத்திருந்தாய். அது இப்போது வந்துள்ளது. நீண்ட கால காத்திருத்தல், மிக அதிகமான பொறுமை.... ஆனாலும் அது பயனுள்ளது. இப்போது நீ அடைந்து விட்டாய, நீ சேர்ந்து விட்டாய். முழு உயிர் வாழ்வும் மலர்கிறது.

இந்துக்கள் சன்னியாசத்தைக் குறிக்க மலர்களைப் போலவே என்பதால் சிவப்பு, ஆரஞ்சு, இளஞ்சிவப்பு ஆகிய நிறங்களை தேர்ந்தெடுத்துள்ளனர். இயற்கையில் பச்சையும் சிவப்பும்தான் அடிப்படை வண்ணங்கள். பச்சை மரத்திற்கு, சிவப்பு மலருக்கு.

உன் வாழ்வு மலரும் நிலைக்கு வருகிறது. விரைவில் கனி கனியும். விரைவில் விதைகள் வரும். மலருவதை உன்னுடன் எடுத்துச்செல்.

எப்படி நேசிப்பவர்களுடன், நண்பர்களுடன் மனைவி அல்லது கணவனுடன், குடும்பத்துடன் பகிர்ந்து கொள்வது என்று நீ நினைத்தது நல்லது; எப்படி இதை பகிர்ந்து கொள்வது? இது அழகானது, இது நல்லது, இத்தகைய ஒரு அழகான விஷயத்தை பகிர்ந்து கொள்வதைப்பற்றி சிந்தித்தது, உன் நல்ல இயல்பை காட்டுகிறது. ஆனால், உனக்கு இது நிகழ்ந்தால் மட்டுமே, உன்னால் பகிர்ந்து கொள்ள முடியும். நீ மலராமல், என்னை கேட்பதை மட்டுமே செய்து கொண்டிருந்தால், மலர்களை பற்றி சிந்தனைமட்டுமே செய்து கொண்டிருந்தால், உன்னால் பகிரந்து கொள்ள முடியாது.

நீ என் வார்த்தைகளை எடுத்துச் சென்றால், அவைகள் உண்மையான மலர்களாகாது. ஏனெனில், வார்த்தைகள் உண்மைகளாக முடியாது. - அவைகள் செயற்கை மலர்களாகத்தான் இருக்கும். நீ அவற்றை எடுத்துச் செல்ல முடியும். நீ அவற்றை உன் நண்பர்களிடம் கொடுக்க முடியும். ஆனால், அவற்றில் எந்த விதமான மணமும் இருக்காது. அவை நான் என்ன உன்னிடம் சொன்னேனோ, அதை சொல்லாது. அவை எந்த விஷயத்தையும் தெரியப்படுத்தாது. அவற்றின் வழியாக எந்த தொடர்பும் கொள்ள முடியாது.

சன்னியாசம், தியானம் இவற்றை நீ பகிர்ந்து கொள்ள விரும்பினால், - தியான நிலையில் இரு, இந்த வகையான வாழ்வில் மேலும் மேலும் ஆழமாக ஈடுபடு. விருப்பமின்றி, ஒவ்வொரு விருப்பத்தையும் அது வரும்போது ரசி. அது நிகழும்போது, அதை ஒரு பரிசாக, ஒரு அருளாக நினைத்து ரசி. அதற்காக ஒரு போதும் அதைக் கேட்காதே, அதை ஒரு போதும் கட்டாயமாக கேட்காதே, அதற்காக ஒரு போதும் திட்டமிடாதே, ஒருபோதும் அதைப்பற்றி யோசிக்காதே, முழுமையாக வாழு - எண்ணங்களின் வழியாக அல்ல.

எண்ணங்கள் தடம்புரளவைக்கும் சக்தி. அது எல்லாவற்றையும் சிதைத்துவிடுகிறது., முழுமையாக சிதைத்து விடுகிறது, ஏனெனில், எண்ணம் தந்திரமானது - அது தந்திரமே உருவெடுத்தது.

நீ யோசனை செய்யும் அளவிற்கு, நீ தந்திரமானவனாகிவிடுவாய். நீ அதை மதிநுட்பம் என்று நினைத்துக்கொள்வாய், அதை புத்திசாலித்தனம் என்று நினைத்துக்கொள்வாய், அது அல்ல - ஏனெனில் அது புத்திசாலித்தனமானால், பிறகு யோசனை தேவையில்லை. உனக்கு யோசனை தேவை. ஏனெனில், புத்திசாலித்தனம் அங்கில்லை. புத்திசாலித்தனமிருந்தால் பிறகு நீ கணத்திற்கு கணம் எதிர்கொள்வாய்.

அடுத்தது நீ செய்ய வேண்டியது என்ன என்பதைப்பற்றி, நீ யோசனை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அடுத்த கணம் வரும்போது புத்திசாலித்தனம் அங்கிருக்கும், நீ எதிர்கொள்வாய்.

ஒரு முகம் காட்டும் கண்ணாடி, மற்றொரு மனிதன் தன் எதிரில் வந்தால் நான் என்ன செய்யப்போகிறேன் என்று ஒரு போதும் நினைப்பதில்லை. அதற்கு அவசியமில்லை! கண்ணாடி அப்படியே இருக்கிறது - அது பிரதிபலிக்கும். புத்திசாலித்தனமிருந்தால், நீ ஒருபோதும் அடுத்த பிரச்சினையைப்பற்றி யோசனை செய்ய மாட்டாய். ஏனெனில், பிரச்சினை வரும்போது உனக்கு புத்திசாலித்தனம் இருக்கிறது - புத்திசாலித்தனம் எதிர்கொள்ளும். நீ அதை சார்ந்திருக்கலாம்.

நமக்கு புத்திசாலித்தனமில்லாத காரணத்தால், நாம் அதைப்பற்றி யோசனை செய்கிறோம். யோசனை ஒரு மாற்றுவழி. புத்திசாலித்தனம் அதிகமிருந்தால் - யோசனை கம்மியாயிருக்கும். புத்திசாலித்தனம் முழுமையாக இருக்கும்போது யோசனையில்லை. ஞானமடைந்தவர்கள் யோசிப்பதில்லை, அதற்கு அவசியமில்லை! வாழ்க்கை அவன் முன்னால் என்ன கொண்டு வந்தாலும், அவன் எதிர்கொள்வான்.

நீ உன் புத்திசாலித்தனத்தை சார்ந்திருக்க முடியாததால், யோசனை செய்கிறாய். அதனால், நீ முன்கூட்டியே திட்டமிடவேண்டும். அந்த கணம் வரும்போது, நீ அந்த முன்கூட்டியே தயாரித்த, திட்டமிட்டதை, பின்பற்றுகிறாய். என்ன விதமான வாழ்க்கை இது? நீ கடந்த காலத்தின் மூலமாகவே வாழ்கிறாய்! அதனால்தான், பல தவறுகள் தேவையில்லாமல் செய்கிறாய். ஒவ்வொன்றும் தடைபடுகிறது - இறந்து விடுகிறது. ஏனெனில், நீ எப்போதும் கடந்த காலத்தின் மூலமாகவே செயல்படுகிறாய். வாழ்க்கை ஒவ்வொரு நிமிடமும், புதிதாக, ஆறுபோல மாறிக்கொண்டேயிருக்கிறது. மாறுதல் ஒரு போதும் நிற்பதேயில்லை. ஆனால், நீ கடந்த காலத்திலேயே நின்று விடுகிறாய்.

நீ ஒரு திட்டத்தை சுமந்து கொண்டிருக்கிறாய். வாழ்க்கை உனக்கு ஒரு பிரச்சினையை கொடுக்கும் போதெல்லாம், நீ உன் நினைவுத் தொகுப்பை, திட்டத்தை, வரைபடத்தை பார்த்து அதன்படி செயல்படுகிறாய். நீ நழுவவிட்டு விடுகிறாய். வாழ்க்கை எப்போதும் புதிது, உன் திட்ட வரைபடங்கள் எப்போதும் பழையது.

வாழ்க்கை பறவைகள் வானத்தில் பறப்பதைப் போன்றது. அங்கு அவைகள் எந்தவிதமான குறியையும் விட்டுச்செல்வதில்லை. அங்கு பாதையில்லை. அவைகள் பறந்துபோனபின், வானம் முன் இருந்ததைப் போலவே வெற்றிடமாகவே இருக்கிறது. அது மக்கள் நடக்கும் பூமியைப் போன்றதல்ல. அவர்கள் நடப்பதால், அவர்களது பாத சுவடுகளால் பாதைகள் உருவாகின்றன. வாழ்க்கை வானத்தைப் போன்றது. பாதைகள் உருவாவதில்லை.

ஒரு சன்னியாசி என்பவன், பறவை வானத்தில் பறப்பதைப் போன்றவன். பாதச்சுவடுகளை பின்பற்றுவதில்லை. பாதைகளை பின்பற்றுவது இல்லை. ஏனெனில், அங்கு பாதைகளே கிடையாது. அவன் கணத்திற்கு கணம், அவனது நிகழ்கால புத்திசாலித்தனத்தினால் நகர்கிறான், அவனது கடந்த கால நினைவுகளால் அல்ல.

பார்!

நாம் நேர் எதிரிடையானதை செய்து கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொன்றையும் திட்டமிட்டதாக்கி விடுகிறோம். ஒரு கணவன் அவனது வேலையிலிருந்து, அலுவலகத்திலிருந்து, திரும்பி வரும்போது கூட எப்படி தன் மனைவியை சந்திக்க வேண்டும் என்று யோசித்துக்கொண்டு வருகிறான். உள்ளே திட்டமிட்டபடி, அவனுக்குள் பேசியபடி வருகிறான். அவன் இதை சொல்ல வேண்டும், அவன் அவளது கையை இந்த வகையில் தொடவேண்டும், அவன் அவளுக்கு ஒரு நீண்ட முத்தம் அல்லது, வேறு ஏதாவது தரவேண்டும். இப்படி அதைப்பற்றி திட்டமிட வேண்டிய அவசியம் என்ன? உனக்கு ஏதாவது அன்பு இருக்கிறதா?

அன்பு இல்லையென்றால், பின் திட்டமிடுதல் வேண்டும். ஏனெனில், நீ உன்னை சார்ந்திருக்க முடியாது, ஏனெனில் நீ முழுக்க முழுக்க மறந்து விடலாம். நீ முன்கூட்டியே திட்டமிடவில்லையென்றால், நீ வீட்டையடைவாய். நீ உன் மனைவி நாள் முழுக்க உனக்காக காத்திருப்பதை, உனக்காக உணவு தயாரித்து, உன் துணிகளை துவைத்து, உன்னைச் சுற்றியே இருப்பதை நீ முழுமையாக மறந்து விடலாம். அவள் காத்திருந்து காத்திருந்து பொறுமையிழந்திருக்கிறாள். இப்போது நீ வருகிறாய். நீ அவளை பார்க்கக்கூட இல்லை. நீ உன் நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் படிக்க ஆரம்பிக்கிறாய். அல்லது, உன் ரேடியோ, டிவியை போடுகிறாய், உன் மனைவி அங்கு இல்லாதது போல.

நீ இதற்காகப் பயப்படுகிறாய். நீ இதை செய்யக்கூடும், அதனால் திட்டமிடுகிறாய். நீ ஞாபகபடுத்திக் கொள்ள வேண்டிய ஒரு விஷயமாக ஆக்குகிறாய். உன்னை நீயே உன் மனைவியிடம், உன் அன்புக்குரியவளிடம் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று, ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறாய். என்ன வகையான அன்பு இது, திட்டமின்றி எதிர்கொள்ள முடியாதது?

அன்பு இருந்தால் அதைப்பற்றி அங்கு சிந்தனை இருக்காது. புத்திசாலித்தனத்திலும் இதேதான் உண்மையாகும். புத்திசாலித்தனமிருந்தால், அதைப்பற்றி அங்கு சிந்தனை இருக்காது. யோசனை ஒரு மாற்றுதான்.

எண்ணம் மிகவும் தந்திரமானது. மதிநுட்பமானது. உண்மையின் மாயையை உருவாக்க முடியும். இதுதான் மதிநுட்பம். நீ புன்னகைக்காமலேயே புன்னகை செய்ய முடியும். புன்னகை உன் உதடுகளில் வரும். ஆனால், அது உதட்டளவில் மட்டும்தான். ஓவிய புன்னகைப்போல - அது உன்னுடன் எந்த விதத்திலும் தொடர்புடையதல்ல. அங்கு எந்த பாலமுமில்லை. அது உன் உயிரின் மையத்திலிருந்து வரவில்லை. நீ அதை உதட்டில் வைத்திருக்கிறாய் - அது ஒரு முகமூடி. எண்ணம் இதை செய்யமுடியும். பிறகு, மெதுவாக நீ மேலும் மேலும் தவறானவனாக மாறிக்கொண்டேப் போவாய். தந்திரம் என்பது உன்னைச் சுற்றி, பொய்மையான வாழ்க்கையை உண்டாக்கிக் கொள்வது.

சன்னியாசி உண்மையானவன். அவன் புன்னகைத்தால், அந்த புன்னகை அவன் உயிரிலிருந்து வருகிறது. அவன் சினமடைந்தால், அந்த சினம் அவன் உயிரிலிருந்து வருகிறது. அவன் நேசித்தால், அவன், அவனது உயிரிலிருந்து நேசிப்பான். அவன் பொய்மையானவன் அல்ல. அவன் போலி அல்ல. அவன் உண்மையானவன், ஆணித்தரமானவன், நீ அவனை சாரமுடியும். அவன் நேசித்தால், அவன் நேசிப்பான். அவன் ஒரு நண்பனானால், அவன் ஒரு நண்பன், அவன் இல்லையென்றால், அவன் இல்லைதான், அவன் நடிப்பவன் அல்ல.

ஒரு நல்ல குணமுடைய, உண்மையான மனிதன் என்று நான் சொல்வது இதைத்தான். ஆணித்தரமானவன், சாரக்கூடியவன். என்ன இருக்கிறதோ, அது உண்மையிலேயே அங்கு இருக்கிறது. அவன் முகமூடி அணிவதில்லை, அவன் பொய்முகங்கள் உபயோகிப்பதில்லை. அவன் உண்மையுடன் வாழ்கிறான். ஞாபகம் வைத்துக்கொள்: நீ உண்மையாக இருந்தால், உண்மைக்கு உன்னால் வரமுடியும். நீ பொய்யானவனாக இருந்தால், உண்மைக்கு ஒருபோதும் உன்னால் வரவே முடியாது. நீ உண்மையில்லாதவனாக இருந்தால், பிறகு நீ பார்க்கும் இந்த உலகம் உண்மையில்லாமல் போய்விடும். ஏனெனில், உண்மையில்லாதது உண்மையில்லாததுடன் தான் தொடர்பு கொள்ள முடியும். நீ பொய்யானவன்,

அதனால்தான் இந்த உலகம் ஒரு மாயை. நீ உண்மையாயிருந்தால், இந்த உலகம் மறைந்துவிடும் இது இறைமையாகிவிடும். இந்த உலகம் உண்மையாகிவிடும்.

மாயை என்ற வார்த்தை அழகானது. அதற்கு அளக்கக்கூடியது என்று பொருள். மாயை என்றால், அளக்கக்கூடியது என்று பொருள். மனது ஒரு அளக்கக்கூடிய விஷயம். மனது விஷயங்களை அளந்து, வரைந்து, அலசிக்கொண்டே இருக்கிறது. மனது எல்லாவற்றையும் அளக்க முயற்சிக்கிறது. அதனால்தான், இந்துக்கள் இந்த உலகத்தை மாயை என்று அழைத்தனர். மனதால் அளக்கக்கூடியது.

உங்கள் விஞ்ஞானம் என்பது என்ன? வேறொன்றுமில்லை, அளத்தல். இந்துக்கள் விஞ்ஞானத்தை, “அவித்யா” என்று அழைத்தனர். அவர்கள் அதை அறிவு என்று சொல்லவில்லை.. ஆனால், அறிவுக்கு எதிரானது. அது உண்மையான அறிதல் அல்ல, ஏனெனில், உண்மையை அளக்க முடியாது. அது அளவிடற்கரியது, அது முடிவில்லாதது. அதற்கு முதலுமில்லை, முடிவுமில்லை. உண்மையானது அளவுகளை கடந்தது. உண்மையில்லாதது அளக்கக்கூடியது. அளவுடன் காரணம், தர்க்கம் வருகிறது. அளவுகளற்றதுடன் காரியம் போய்விடுகிறது. தர்க்கம் அற்றுவிடுகிறது. மனம் தந்திரமானது, நுட்பமானது, அது மாயையான உலகத்தை உருவாக்குகிறது.

பிறகு சன்னியாசி என்றால் என்ன? அவன் மனமல்ல - பதிலாக, எதிர்மறையாக அவன் அப்பழுக்கற்றவன். அவன் குழந்தையைப் போல அப்பழுக்கற்றவன். இப்போது பிறந்தவன், கடந்த காலமற்றவன், எதிர்கால சிந்தனை அற்றவன். ஒரு சன்னியாசி என்பவன் ஒவ்வொரு கணமும் கடந்த காலத்திற்கு இறந்தவனாகிறான். கடந்து போனது எதுவாக இருந்தாலும், அவன் அதை எறிந்து விடுகிறான். அதை துறந்து விடுகிறான். ஏனெனில், அது ஒரு இறந்த விஷயம், குப்பை; அதை சுமக்க வேண்டிய அவசியமில்லை. அவன் அவனையே சுத்தப்படுத்திக்கொள்கிறான். அவன் கண்ணாடி திரும்பவும் புதிதாக மாறுகிறது. அவன் கண்ணாடியை சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்கிறான். இந்த சுத்தப்படுத்துதலைத்தான் நான் தியானம் என்கிறேன்.

மக்கள் என்னிடம் கேட்கிறார்கள்: நாங்கள் தியானத்தை விடுபவர்களாக முடியும்? நீ அதை விடவே முடியாது. அது எப்போது நீ இல்லையோ, அன்று அது போய்விடும். ஆனால், உன்னால் அதை விடவே முடியாது. ஏனெனில், உனக்கு சுத்தப்படுத்துதல் தேவைபடுகிறது. நீ தொடர்ந்து அசுத்தமாகிக் கொண்டேயிருக்கிறாய்; ஒவ்வொரு கணமும் இந்த அழுக்கு சேருகிறது, இது வாழ்வின் இயற்கை. ஒவ்வொரு கணமும் சுத்தப்படுத்துதல், குளியல் உனக்கு தேவைப்படுகிறது.

நீ அங்கில்லையென்றால், பிறகு ஒன்றுமில்லை..... பிறகு பிரச்சினையில்லை, ஏனெனில், அசுத்தமடைவதற்கு அங்கு ஒருவரும் இல்லை. ஆனால், நீ அங்கிருந்தால், பிறகு தியானம் தொடர வேண்டியதாகிறது. அது அப்பழுக்கற்றவனாக இருப்பதற்கான ஒரு முயற்சி.

நீ அப்பழுக்கற்றவனாயிருந்தால், நீ எந்த குறையும் உள்ளவனல்ல. நீ அப்பழுக்கற்ற கணங்களோடு வானத்தை பார்க்க முடிந்தால், நீயே வானமாகிவிடுகிறாய். மனதுடன் இருந்தால் நீ அளக்க ஆரம்பிக்கிறாய். நீ சொல்கிறாய்: இது அழகானது அல்லது அழகற்றது. இன்று வானம் மேகமூட்டமாக இருக்கிறது. நாளை வானம் நன்றாக இருக்கலாம் அல்லது நேற்றைய வானம் இன்னும் அழகாக இருந்தால், நீ அளக்க ஆரம்பிக்கிறாய்.

ஆனால், அப்பழுக்கற்றவனாக இருந்தால், மனதாக இல்லாமல், ஒரு உயிர் வானத்தை பார்ப்பதுப்போல அங்கு பேசவோ, யோசிக்கவோ ஒன்றுமில்லை. வானம் அங்கு இருக்கிறது. நீயும் வானத்தைப் போலவே, அங்கு இருக்கிறாய். உள்ளும் புறமும் சந்திக்கின்றன. இரண்டு வெளிகளும் ஒன்றாகின்றன, அங்கு எல்லைகளில்லை. கவனிப்பவரே கவனிப்பதுமாகிறார். இதைத்தான் கிருஷ்ணமூர்த்தி சொல்லிக்கொண்டே இருக்கிறார். கவனிப்பவரே கவனிப்பவராகிறார். உள்ளும் புறமும் அவற்றின் எல்லைகளை இழந்து ஒன்றாகின்றன.

நீ அப்பழுக்கற்று ஒரு மரத்தைப் பார்த்தால், மனதின் அளத்தலின்றி பார்த்தால் என்ன நடக்கிறது? அங்கு மரம் நீ என்ற இரண்டில்லை. ஏதோ ஒரு விதத்தில் மரம் உன்னுள் நுழைந்து விடுகிறது. நீ மரத்திற்குள் நுழைந்து விடுகிறாய். பிறகு மட்டுமே மரத்தைப்பற்றி உனக்கு தெரியவரும். நீ நட்சத்திரங்களைப் பார், ஆற்றைப்பார், பறவைகள் ஒரே வரிசையில், வானத்தில் பறந்து செல்வதைப் பார்...... எல்லைகள் கரைந்து விடுகின்றன. எல்லா வேற்றுமைகளும், எல்லா பிரிவுகளும், மறைந்து விடுகின்றன. ஒருமை உதயமாகிறது.

எண்ணங்களால் சேர்க்கப்பட்ட ஒருமை அல்ல இது. இது தத்துவவாதிகளின் ஒருமை அல்ல. இது ஒரு முற்றிலும் வேறுபட்ட ஒருமை. நீ அதை ஒன்று என்று நினைக்கமாட்டாய். உனக்கு திடீரென, அது ஒன்று என்று தெரியவரும். நீ உபநிஷத்துக்கள் சொல்லியிருக்கின்றன இது ஒன்று என்று, வேதங்கள் சொல்லியிருக்கின்றன இது ஒன்று என்று. அதனால், இது ஒன்று என்று நீ மனதிற்குள் சொல்லமாட்டாய். அது ஒன்றுதான்.

வேதங்களும், உபநிஷத்துக்களும் உன் மனதில் இருந்தால், நீ அப்பழுக்கற்றவனல்ல. நீ தந்திரமானவன், அளத்தல் தொடர்கிறது. நீ அளக்கிறாய். மனது எண்ணம் இவற்றை உபயோகிக்கிறாய், ஒப்பிடுகிறாய். நீ மிகவும் நுட்பமான

தந்திரசாலி, நீ புத்திசாலியல்ல. நீ எவ்வளவு மதிநுட்பம் வாய்ந்தவனாக இருந்தாலும், ஒரு நுட்பமான மனது என்பது நல்லதல்ல. புத்திசாலித்தனம் தேவைப்படுகிறது.

பிறக்கும் குழந்தை - அவன் மதிநுட்பம் வாய்ந்தவனல்ல, புத்திசாலி. அவன் உலகத்தை தெளிவான கண்களோடு பார்க்கின்றான்; அவனது புரிந்து கொள்ளுதல் மிகவும் தெளிவானது, மேகமூட்டங்களற்றது.

அப்பழுக்கற்ற தனம்தான் சன்னியாசம் என்று நான் சொல்லும்போது, உன் புரிந்துகொள்ளுதல் தெளிவாக இருக்கவேண்டும் என்பதே என் அர்த்தம். எண்ணங்கள் எதுவும் தடையாக இல்லாமல், நீ பார்க்க வேண்டும், பார்வையாகவே மாற வேண்டும். நீ கவனிக்க வேண்டும், ஆனால், அங்கு உனக்கு பின்னால் உன்னை கையாளும் கவனிப்பவர் எவரும் இருத்தல் கூடாது.

அப்பழுக்கற்றத்தனம் சாத்தியம்தான். இந்த அப்பழுக்கற்றத்தனம் மட்டும்தான் இடத்தையும், நேரத்தையும் தாண்டிச்செல்லும். இந்த அப்பழுக்கற்றத்தனம் மட்டும்தான் முடிவானதை சென்றடையமுடியும் - முழுமையான சுதந்திரத்தை முக்தியை அடையமுடியும்.

சன்னியாசியாக மாறு - ஒரு அப்பழுக்கற்ற ஒன்றாக, புதிதாக பிறந்ததைப் போல, சுத்தமாக, கணத்திற்கு கணம் அறியாததற்குள் நகருபவனாக மாறு. பிறகு உன்னால் பகிர்ந்து கொள்ளமுடியும்.

மனிதக் கல்வி, கலாச்சாரம், நிலை ஆகிய முழு இயக்கமும், நேர் எதிரிடையாக இருக்கிறது என்ற நான் சொல்லப்போகிறேன்; அது, நீ எப்படி மதிநுட்பமாகவும், தந்திரசாலியாகவும் ஆவது என்று போதிக்கிறது. அது, உனக்கு மனதை போதிக்கிறது. அது, உனக்கு அப்பழுக்கற்றத்தனத்தை, போதிப்பதேயில்லை. அது, உனக்கு இயந்திரத்தனத்தை போதிக்கிறது. இந்த வார்த்தையை ஞாபகத்தில் கொண்டேயாக வேண்டும். அது, உன்னை மேலும் மேலும், இயந்திரத்தனமாக்குகிறது, ஏனெனில், நீ மேலும் மேலும் இயந்திரமாக, மாற மாற நீ மேலும் திறமையுள்ளவனாகிறாய்.

நீ கார் ஓட்டுதலை கற்றுக்கொள்கிறாய்; முதலில் அது கடினம். கடினம் ஓட்டுதலிலோ, காரிலோ, வேறெதிலுமோ இல்லை - கஷ்டம் உன்னுள் உள்ளது, ஏனெனில், நீ ஜாக்கிரதையாக இருந்தாகவேண்டும். முதலில் நீ ஜாக்கிரதையுடன் இருந்தேயாக வேண்டும்; ஆபத்து அங்கு இருக்கிறது நாம் என்ன செய்துக்கொண்டிருக்கிறோம் என்று, தொடர்ந்து உள் உணர்வுடன் இருந்தேயாக வேண்டும். நீ, போக்குவரத்திலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மக்கள் கடப்பதில், இயக்குவதில், கிளட்ச், கியர், சக்கரம் என்று ஒவ்வொன்றிலும் நீ

ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உன் மனது அதனது வழக்கமான உள்மடத்தனமான உளறலை தொடரமுடயாமல், நீ பல விஷயங்களில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது பல பிரச்சினைகளை உண்டு பண்ணுகிறது.

நாட்கள் செல்ல செல்ல, சில நாட்களில் நீ இயந்திரமாகி விடுவாய். இப்போது கைகளும் கால்களும் வேலை செய்து கொண்டேயிருக்கும். காரும் நீயும் ஒரே இயந்திரமாக மாறிவிடுகிறாய். உன் மனது அதனது உள் உளறலைத் தொடரமுடியும். அங்கு பிரச்சினையில்லை - உன் மனது தேவையில்லை.

இயந்திரத்தனமானது என்று நான் சொல்வது இதைத்தான், இப்போது உன் உடல் ஒரு இயந்திரம்; அது இயங்கிக்கொண்டிருக்கிறது. நீ குறிப்பிட்ட சில விஷயங்களில்தான் தேவைப்படுவாய். ஒரு விபத்து நடக்கப்போகும்போது, திடீரென நீ தேவைப்படுவாய். அப்போது உன் சிந்தனை இயக்கம் நின்றேயாக வேண்டும். திடீரென அங்கு ஒரு அதிர்ச்சி, உன் முழு உடல் இயந்திரமும் நடுங்குகிறது. நீ அங்கே இருக்க வேண்டும். நீ ஜாக்கிரதையாக வேண்டும். ஆனால், இவை அபூர்வமான கணங்கள். பிற சமயங்களில் எப்போதும் போல நீ தொடரமுடியும்; நீ புகைக்க முடியம்; நீ பாட முடியும்; நீ வேறு யாருடனோக்கூட பேசமுடியும்; ரேடியோ கேட்கமுடியும்; அல்லது உன் உள்பேச்சை, உன் வசனத்தை தொடரமுடியும் - அங்கு இருக்க வேண்டிய அவசியமில்லை.

நீ இயந்திரமாகி விட்டாய். ஆனால், இது மேலும் திறமையுள்ளது. ஏனெனில், நீ தொடர்ந்து தன்னறிவுடன் இருக்கும் தேவை ஏற்பட்டால், உன்னால் மிகவும் திறமையுள்ளவனாக இருக்கமுடியாது. உன்னால் மிகவும் வேகமாக போகமுடியாது. ஏனெனில், உனக்கு எப்படி தன்னறிவுடன் இருப்பது என்று தெரியாது.

இதன் காரணமாக அதாவது மக்களின் தன்னறிவு இல்லாமையால், அவர்கள் உணர்வற்ற வாழ்க்கை வாழ்கிறார்கள். சமுதாயம் ஒரு குறுக்கு வழியை கற்றுள்ளது; ஒவ்வொருவரையும், மேலும் மேலும் இயந்திரத்தனமாக்குவது. இந்த முழுக் கல்வி சாலைகளும் ஒன்றுமில்லை, உன்னை இயந்திரத்தனமாக்குவதுதான். மொழி, கணக்கு - ஒவ்வொன்றும் இயந்திரத்தனமாக்குகிறது. நீ அதைப்பற்றி கவலைப்படாமல் செய்யமுடியும். ஏனெனில், அது இயந்திரத்தனமாகிவிடுகிறது.

அப்பழுக்கற்றவனாக மாறு என்று நான் சொல்லும்போது, அதன் பொருள் இயந்திரத்தனத்திலிருந்து வெளிவருவது. என்ன செய்தாலும், அதை முழு உள் உணர்வுடன் செய் என்று அர்த்தம். ஒரு காரை ஓட்டிச் சென்றால், ஓட்டுதல் மட்டுமே செய் - ஓட்டுதலாக மாறு, வேறு எதையும் செய்யாதே; உள் பேச்சை

தொடர்ந்து பேசிக்கொண்டிருக்காதே. அதில் ஓட்டுநர் இல்லாமல், ஓட்டுதல் மட்டும் இருத்தல்போல, முழு உள் உணர்வுடன், ஆழமான ஈடுபாட்டுடன் ஜாக்கிரதையாக இரு.

அது கடினமாக இருக்கும். அதனால்தான் சமுதாயம் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. தனிமனிதன் மட்டுமே இந்த மாதிரியான மிக கஷ்டமான பாதையை கடக்க முடியும். எதையும் உள்உணர்வுடன் செய்: மெது மெதுவாக, உன் உடலிலுள்ள இயந்திரத்தன்மை மறைந்துவிடும், நீ இயந்திரத்தனமில்லாதவனாகி விடுவாய். பிறகு அப்பழுக்கற்றத்தன்மை மலரும்.

குழந்தை ஒன்றுமறியாதது, அப்பழுக்கற்றது. ஏனெனில், இன்னும் ஒன்றும் இயந்திரத்தனமாகவில்லை. அவன் எதையும் இன்னும் கற்கவில்லை. அவன் இன்னும் கட்டுப்பாடு செய்யப்படவில்லை. ஆனால், இப்போதோ பிறகோ நாம் அவனை கட்டப்படுத்தி விடுவோம். அவன் விஷயங்களை கற்பான், மேலும் மேலும் மனம் பெருகும்.

அவன் அவனை கொஞ்சங் கொஞ்சமாக, இழந்து விடுவான், உயிர்தன்மை கொஞ்சங் கொஞ்சமாக இழக்கப்பட்டு மேலும் மேலுமாக மனம் அங்கிருக்கும். பிறகு அவன் ஒரு இயந்திரமாக, இயந்திரத்தன்மை உடையவனாக மாறிவிடுவான் - திறமைமிக்கவனாக, நன்கு வேலை செய்பவனாக, சமுதாயத்திற்கு சேவை செய்பவனாக, ஆனால் இறந்தவனாக.

சேவை செய், இந்த சமுதாயத்திற்கு உதவி செய். ஆனால், இயந்திரத்தனமானவனாக மாறாதே. ஆனால் நீ ஏற்கனவே இயந்திரத்தனமாகிவிட்டாய். ஆகவே, உன்னை இயந்திரத்தனமற்றவனாக்கு. மெதுமெதுவாக, மேலும் மேலும் உள் உணர்வை கொண்டு வா, நீ எது செய்தாலும் அதிகமான உள் உணர்வை கொண்டுவா. ஏனெனில், நீ என்ன செய்தாலும், உன் உள் உணர்வு குறைவாக இருந்தால், அது இயந்திரத்தனமாயிருக்கும். இதுதான் இயந்திரத்தன்மையாகும் வழி - உள் உணர்வு, மேலும் மேலும் குறைந்து இயந்திரத்தைப்போல காரியங்களை செய்வது.

மேலும் மேலும் உள் உணர்வுடன், ஒரு இயந்திரம் போல அல்லாமல், நிகழ்கால உணர்வுடன் செய் - பிறகு அப்பழுக்கற்றத்தனம் உன்னுள் மலரும். அந்த அப்பழுக்கற்ற தன்மை தான் மனித உயிருக்கு நிகழக்கூடிய மிகச்சிறந்த விஷயம்.

அப்பழுக்கற்ற தன்மையாகும்போது, நீ இறைமையின் அம்சம். அப்பழுக்கற்றத்தனத்தால், நீ கடவுளாக மாறிவிடுவாய்.

# கடவுள் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

அன்புள்ள ஓஷோ,

நேற்று நீங்கள் குருவின் வார்த்தையை பின்பற்ற வேண்டிய அவசியத்தைப் பற்றி தெளிவாக சொன்னீர்கள். ஆனால், ஒவ்வொரு செயலுக்கும் நாங்கள் உங்களை ஆலோசனை கேட்க முடியாது. அப்படி இருக்கும்போது, எப்போதும் சுலபமான வழியையே தேடிக்கொண்டிருக்கும் இந்த மனதுடன் எப்படி நாங்கள் சரியான வழியை தேர்ந்தெடுப்பது?

உண்மையான காரணம் குருவை ஆலோசனை கேட்க முடியாதது அல்ல. தியானத்தில் இருப்பது எப்படி என்பதுதான். ஏனெனில், குருவின் உடல் நிலையானது அல்ல. நீ தியானத்தில் அதிகமாக சென்றால், நீ ஒவ்வொரு வினாடியிலும், குருவை ஆலோசனை கேட்க முடியும். உடல் தரிசனம் அவசியமில்லை. தியான நிலையில் இல்லாததால்தான் அது அவசியமாகிறது.

ஏனெனில், நீ உனது உடலுடன்தான் அடையாளம் கண்டுகொள்கிறாய். அதனால். உன் மனதில் குருவையும் அவர் உடல் மூலம்தான் கண்டுகொள்கிறாய். காரணம், நான் என்பது ஒரு உடல் என்று நீ நினைப்பதால், குரு என்பவரும் ஒரு உடல் என்றுதான் நினைக்கிறாய். குரு என்பவர் உடலல்ல. நான் குரு என்பவர் ஒரு உடலல்ல என்று சொல்லும்போது, அவர் இடம், காலம் இதற்கெல்லாம் உட்பட்டவரல்ல என்றும் குறிப்பிடுகிறேன்.

அவர் முன்னிலையில் இருப்பது ஒரு கேள்வியல்ல. நீ எங்கிருந்தாலும் தியான நிலைக்குச் சென்றால், நீ அவர் முன்னிலையில் இருப்பாய். குரு இறந்துவிட்டாலும்கூட அவர் உனக்கு காட்சித் தருவார்.

புத்தர் இன்றும் காட்சித் தருகிறார். பதிலும் சொல்கிறார். புத்தர் எங்கேயோ உட்கார்ந்து கொண்டு, உனக்கு பதில் தருவதாக அர்த்தமல்ல, நீ தியானத்தில் ஆழ்ந்தால் நீயே புத்தராகிறாய். உன் புத்த இயல்பு எழுகிறது. உன்னுடைய புத்த இயல்பு பதில் சொல்கிறது. அவர் எங்கேயும் இருப்பார். இதற்கு 'யாரால் பார்க்க முடிகிறதோ, அவர்களுக்கு அவர் ஒவ்வொரு இடத்திலும் தென்படுவார். பார்க்க தெரியாதவர்களுக்கு அவர் எங்கேயும் தென்படமாட்டார்' என்றுதான் பொருள்.

நீ எங்கிருந்தாலும், நீ உன் குருவுடன் தொடர்பு கொள்ளலாம். அதற்கு வழி அவரை நோக்கி செல்வதல்ல. அது உன் உள் நோக்கி செல்வது. எவ்வளவு ஆழம்

நீ உனக்குள் செல்கிறாயோ, அவ்வளவு ஆழமாக நீ அவருடன் தொடர்பு கொள்ளலாம்.

பதில்கள் வரும். அது உனக்குத் தெரியும். அந்த பதில்கள் உனது மனதினால் கொடுக்கப்பட்டவை அல்ல என்பதையும் நீ உணர்வாய். அதில் ஒரு வேறுபட்ட குணாதிசயம் இருக்கும். எந்தக் குழப்பமும் இல்லாமல் நிச்சயமாக மாறிய குணாதிசயமாக இருக்கும். உன் மனது பதில் சொல்லும்போது நீதான் பதில் சொல்கிறாய் என்று நீ உணர்வாய். மனம் இல்லாதபோது, தியான நிலையில் இருக்கும்போது, வேறு எவரிடமிருந்தோ பதில்கள் வருவது போல வரும். உன்னிடமிருந்தல்ல. நீ அதைக் கேட்கலாம்.

இதுதான் குரானின் அதிசயம். முகம்மது நபி தாம் இதைக் கேட்கிறோம் என்று நினைத்தார், அது சரிதான். முஸ்லீம்கள் தவறு செய்கிறார்கள். அவர்கள் கடவுள் பேசியதாக நினைத்துக் கொண்டார்கள். நபி குரானைக் கேட்டதாக நினைத்தபோது அவர் நினைத்தது சரியானது. முஸ்லீம்கள் கடவுள் பேசியதாக நினைத்துக்கொண்டபோது, அவர்கள் செய்தது தவறு, ஒருவரும் பேசவில்லை.

ஆனால், உன் மனது அமைதியாக இருக்கும்போது, உன் உள் ஆழத்திலிருந்து, பதில்கள் எழும். மிக ஆழத்திலிருந்து, நீ மனது என அழைக்கும் எல்லாவற்றிற்கும் பின்னாலிருந்து, நாம் கேட்கிறோம் என்று நீ உணரும்படி வரும். அது உன்னிடம்தான் வரும். உனக்காகத்தான் வரும்.

நீ எப்போதும் மேல் மட்டத்திலேயே இருக்கிறாய். அந்த பதில்கள் ஆழத்திலிருந்து வரும். உன்னுடைய ஆழம் உனக்குத் தெரியாது. அதனால்தான் கடவுள் உனக்கு பதில் சொல்வதாக, நீ உணர்கிறாய். குரு பதில் அளிப்பதாகத் தோன்றுகிறது. ஒரு வகையில் நீ நினைப்பதும் சரிதான். ஏனெனில், உள் ஆழத்திலிருந்து வரும் பதில் குருவினிடமிருந்து வரும் பதில்தான்.

இந்துக்கள் எப்போதும் உன்னுடைய உண்மையான குரு உனக்குள்தான் இருக்கிறார் என்பார்கள். வெளியேயுள்ள குரு உன் உள்ளேயுள்ள குருவை எழுப்ப, அவரை செயல்படுத்த வைக்கத்தான் முயற்சிக்கிறார். எப்போது, உன்னுடைய உள்குரு செயல்பட ஆரம்பிக்கிறாரோ, அப்போது வெளியேயுள்ள குருவின் வேலை முடிந்தது. உள் குருவின் பிரதிநிதியே வெளி குரு ஆவார்.

நானே உன் ஆழம்,. ஒருமுறை உன் ஆழம் செயல்பட ஆரம்பித்துவிட்டால், பின் நான் தேவையில்லை. உன் ஆழம் உனக்கு பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டதாக நான் உணர்ந்தால், நான் உனக்கு பதில் சொல்வதை நிறுத்திவிடுவேன். என்னுடைய எல்லா பதில்களும், உன் கேள்விகளோடு தொடர்புடையவை அல்ல. என் பதில்கள் அனைத்தும் உனக்குள் எப்படி விளைவை ஏற்படுத்தும் என்பதோடு

தொடர்புடையவையே. உன் உள் ஆழம், உன்னுடன் பேச ஆரம்பிக்கும்போது உள் ஆழமே உனக்கு குருவாகிவிடும்.

அதிகமாக தியானம் செய். அமைதியாக இரு. அசையாத்தன்மையை மேலும் மேலும் கொண்டுவர முயற்சி செய்.

என்ன செய்யவேண்டும்? மேலும் மேலும் தியான நிலையில் இருப்பது எப்படி?

ஒரு விதத்தில் எதையும் நேரிடையாகச் செய்ய முடியாது. ஏனெனில், எதை நேரிடையாகச் செய்தாலும், அங்கு உன் மனது வந்துவிடும். நீ மௌனமாக இருக்க முயற்சி செய்தால், உன்னால் இருக்க முடியாது. ஏனெனில், மனம் முயற்சிக்கிறது. எங்கு மனம் இருக்கிறதோ, அங்கு இடைஞ்சல் வரும். மனம் ஒரு இடைஞ்சல். மனம் ஒரு சத்தம்.

நீ மௌனமாக இருக்க முயற்சிக்கும்போது, மனம்தான் அமைதியாக இருக்க முயற்சிக்கிறது. இப்போது நீ அதிக சத்தத்தைதான் உண்டாக்குவாய். ஆனால், இந்தச் சத்தம் மௌனத்தைப் பற்றியதாக இருக்கும். நீ மேலும் மேலும் முயற்சியும், யோசனையுமாக அதையும் இதையும் செய்யச் செய்ய நீ மேலும் மேலும் சங்கடத்திற்கே உள்ளாவாய்.

அமைதியாக இருக்க எதுவும் செய்ய வேண்டியதில்லை. அது அங்கேயே இருக்கிறது. நீ அதை அனுமதிக்க வேண்டியதுதான். அது சூரிய வெளிச்சம் போன்றது. உன்னுடைய ஜன்னல்கள்தான் மூடியிருக்கின்றன. பக்கெட்டிலும், மூட்டையிலும் சூரிய வெளிச்சத்தை உன் வீட்டிற்குள் கொண்டு வரமுடியாது. அதைச்செய்யவே முடியாது. நீ முயற்சி செய்தால் நீ ஒரு முட்டாள். ஆனால், எல்லோரும் அதைத்தான் செய்கிறார்கள். கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவிட்டால் போதும். காற்று உள்ளே நுழைய அனுமதித்தால் போதும். அழைத்துவிட்டு காத்திரு.

நீ கட்டாயப்படுத்த முடியாது. நீ எப்பொழுதெல்லாம் கட்டாயப்படுத்துகிறாயோ, அப்பொழுதெல்லாம் நடப்பவை மிக அசிங்கமாக மாறும். ஒரு மனிதன் தன்னைத்தானே கட்டாயப்படுத்திகொண்டு, அமைதியாக இருந்தால், அவனது அமைதி அசிங்கமானதாகவும், தொல்லையாகவும், பலவந்தப்படுத்தப்பட்டதாகவும், செயற்கையானதாகவும், மேம்போக்காகவுமே இருக்கும். ஆனால் உள்ளே ஆழத்தில் பலமுனை சந்திப்பாக இருக்கும்.

என்னதான் செய்ய வேண்டும்? உன் மனதை திறந்து வைத்துக்கொண்டு காத்திரு. மரத்தைப் பார், கிளிகள் மிழற்றுவதைப் பார். அவைகளை கவனி, வேறெதுவும் செய்ய வேண்டாம். உன்னைச் சுற்றி எது நடந்தாலும் “நடக்கட்டும்” என்ற ஒரு விழிப்புணர்வுடன் இரு. தண்ணீரில் விழும் வெளிச்சம், ஓடும் ஆறு, அதன் சத்தம்,

குழந்தைகளின் விளையாட்டு, சிரிப்பு, கலகலப்பு. நீ வெறுமனே அந்த வினாடியில் இரு, திறந்திரு, கவனித்திரு, பார்த்திரு. - யோசிக்காமல்.

மரத்தில் பறவைகள் உள்ளன. அவை இரைகின்றன, பாடுகின்றன. அவற்றைக் கவனி. சிந்திக்காதே. அடுத்து நடக்கப்போவதைப் பற்றி உன் மனதில் கற்பனை செய்யாதே. நடக்கட்டும். சீக்கிரமாகவோ, மெதுவாகவோ. உன் மனது கரைவதையும், ஒரு அமைதி உன்னுள் வருவதையும் நீ உணர்வாய். அது உன் மேல் படர்வதையும், உன் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவுவதையும், ஆழத்தை அடைவதையும் நீயே உணர்வாய்.

முதலில், அது சில நிமிடங்களுக்குத்தான் இருக்கும். ஏனெனில், யோசிக்கும் பழக்குமுடையவன், போதை மருந்துக்கோ, மதுவுக்கோ அடிமையான மனிதன் போல, நீ சிந்திப்பதற்கு அடிமையானவன். அதனால், அந்த இடைவெளி சில நிமிடங்களுக்குத் தான் இருக்கும். பிறகு திரும்பவும் நீ சிந்திக்க ஆரம்பித்து விடுவாய். உன்மேல் படரும் அமைதியை பற்றியேக் கூட நீ சிந்திக்க ஆரம்பிப்பாய். நீ “ஓ, இதுதான் அந்த மௌனம். எல்லா குருவினாலும் சொல்லப்பட்டு வந்த மௌனம் இதுதான்” என்று சிந்திப்பாய். அதை கலைத்து விடுவாய். நீ, ‘உபநிஷத் சொல்லி வந்த அடைய வேண்டிய இலக்கு இந்த மௌனம்தான், கவிகள் பேசிவந்த மௌனமும் இதுதான். புரிந்து கொள்ளவேண்டிய மௌனம் இது’ என்று யோசிக்க ஆரம்பிப்பாய். அந்த மௌனத்தை நழுவ விட்டுவிடுவாய்.

கவிகள் வருவார்கள், குரு வருவார், உபநிஷத் வந்து விடும், ஆனால் நீ நழுவ விட்டுவிடுவாய். நீ இழந்து விடுவாய். இப்போது திரும்பவும் நீ தொல்லைக்குள்ளாவாய். இப்போது நீ திறந்த மனதுடன் இல்லை. நீ விழிப்புடன் இல்லை. இப்போது பாடும் பறவைகள் உனக்காக இல்லை. உன் மனம் உள்ளே வந்துவிட்டது. இப்போது அந்த அழகான மரங்கள் மறைந்துவிட்டன. அந்த சூரியன் வானத்தில் இல்லை. இந்த மேகங்கள் தவழவில்லை. நீ இப்போது திறந்திருக்கவில்லை. மூடியிருக்கிறாய். உன் கதவும் ஜன்னல்களும் மூடியிருக்கின்றன.

எண்ணம், யோசனைதான் உன்னை மூடும் வழி. எண்ணமில்லாமலிருப்பதுதான் திறந்திருக்கும் வழி. எப்போதெல்லாம் யோசிக்காமலிருக்கிறாயோ, அப்போது நீ திறந்திருக்கிறாய். நீ யோசிக்க ஆரம்பிக்கும்பொழுது, ஒரு சுவர் எழுகிறது. ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு செங்கல். யோசனை செய்வது ஒரு சுவராகி விடுகிறது. நீ சுவருக்கப் பின்னால் மறைந்திருக்கிறாய். சூரியன் என்னை அடையவில்லையே என்று நீ அழுகிறாய்; தேம்புகிறாய்; தன்னைச் சுற்றி சுவர் எழுப்பிக்கொண்டது கதிரவன் அல்ல; நீதான்.

தியானம் செய். எப்போது சந்தர்ப்பம், இடம் காலம், நேரம் கிடைத்தாலும் உன்னைச் சுற்றி நடப்பவற்றை அனுமதி. ஆழமாகப் பார். கவனமாக இரு. ஆனால், செயல்படாதே. ஏனெனில், செயல்படுவது என்பது சிந்திப்பதை குறிக்கும். மௌனமாக அமர்ந்து நடப்பவற்றை அனுமதி. நீயே அமைதியாவாய்.

அப்போது உனக்குத் தெரியும். அமைதி என்பது மனதின் குணமல்ல என்பது. மனது, அமைதியை உண்டாக்கவே முடியாது. அமைதி, உன் ஆன்மாவின் குணம். அது உன் உள்ளிருப்பு, அது எப்போதும் அங்கேயே இருக்கிறது. ஆனால், மனதின் தொடர்ந்த ஏமாற்றுதலால் நீ அதைக் கேட்கவே முடிவதில்லை. எப்பொழுதெல்லாம், யோசனையில்லாமல் பொறுமையுடன் இருக்கிறாயோ, அப்போதெல்லாம், நீ அதைப்பற்றி விழிப்படைய ஆரம்பிக்கிறாய். பிறகு நீ நிரப்பப்பட்டவனல்ல. ஆக்கிரமிப்பு அப்படி நிரப்பப்படாமலிருக்கும் தருணத்தில் தியானம் நிகழும்.

அதனால் எந்த சூல்நிலையாயிருந்தாலும் சரி, சந்தையில் அமர்ந்திருந்தாலும், பறவைகளின் பாடல்தான் தேவை என்று நினைக்காதே. அது தேவையல்ல. சந்தையின் சத்தம் பறவைகள் போடும் சத்தத்தைப் போன்றே அழகானது. மக்கள் நாலாபுறமும் சத்தம் போட்டு பேசிக்கொண்டு ஏமாற்றிக்கொண்டு அவரவர் வேலையை செய்து கொண்டிருப்பர். நீ அங்கு பொறுமையாக அமர்ந்திரு.

ஞாபகம் வைத்திரு, பொறுமை, மற்றொரு வார்த்தை விழிப்பு விழிப்புடன் கூடிய பொறுமைதான் அதன் சாவி.

திறந்த மனது, எதுவும்செய்யாமல் கவனித்துக்கொண்டிருப்பது, கவனிப்பது என்பது செய்வதல்ல. நீ கவனிப்பதுடன் எதுவும் செய்ய வேண்டியதில்லை. உன் காதுகளும் பார்ப்பதற்கு கண்களும் திறந்திருந்தால், போதும். அந்த அளவு செயல் போதும் கவனிப்பதற்கு அந்த அளவுக்கூட தேவையில்லை. காதுகள் எப்போதும் திறந்திருக்கின்றன. நீ எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறாய். எதுவும் செய்யாமல் கவனித்துக்கொண்டிருந்தால் போதும்.

ஆணையிடாதே. ஏனெனில், ஆணையிடுவதோடு சிந்தனையும் ஆரம்பமாகிறது. ஒரு குழந்தை அழுகிறது. உள்ளுக்குள் எதுவும் பேசாதே: ஏன் அவன் அழுகிறான்? இருவர் சண்டையிடுகின்றனர். உள்ளுக்குள் சொல்லாதே: ஏன் அவர்கள் சண்டை போடுகின்றனர்? நாம் சென்று அவர்கள் சண்டை போடாமலிருக்க ஏதாவது செய்யலாமா, வேண்டாமா, எதுவும்பேசாதே. என்ன நடக்கிறது என்று கவனி. என்ன நடக்கிறதோ, அதோடு நில். அப்போது அங்கே திடீரென ஒரு அமைதி ஏற்படும்.

இந்த அமைதி, நீ உருவாக்கும் அமைதியிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். நீ அமைதியை உருவாக்கலாம். நீ உன் வீட்டின் கதவுகளை மூடிவிட்டு உட்கார்ந்துகொண்டு, ஜபமாலையை எடுத்துக்கொண்டு அதன் மணிகளை உருட்டலாம். ஒரு அமைதி உனக்கு வரலாம். ஆனால், அது உண்மையான அமைதி அல்ல அது விளையாட ஒரு பொம்மை கொடுக்கப்பட்ட குழந்தையைப் போன்றது. அதனால், அந்தக் குழந்தை விளையாடிக்கொண்டிருக்கும். அதில் ஒன்றிப்போய்விடும். அப்போது, அது எந்தக் குறும்பும் செய்யாது.

அதனால் பெற்றோர் குழந்தையின் குறும்பைக் குறைக்க, பொம்மையை குறுக்கு வழியாக உபயோகிக்கின்றனர். அவன் ஒரு மூலையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்பான். பெற்றோர் குழந்தையின் தொந்தரவில்லாமல் அவர்கள் வேலையை அவர்கள் தொடரலாம். ஆனால், அந்தக் குழந்தை குறும்பை விட்டுவிடுவது இல்லை. அவன் குறும்பு இப்போது பொம்மையின் மீது இருக்கிறது அவ்வளவுதான். அந்தக் குறும்பும் இருக்கிறது. அந்தக் குழந்தையும் இருக்கிறது. இப்போதோ அல்லது சற்று நேரம் கழித்தோ, அவன் அந்த பொம்மையின்மீது வெறுப்படைவான். சலித்து விடுவான். பின் அதை வீசிவிட்டு குறும்பு செய்ய ஆரம்பித்து விடுவான்.

ஜபமாலைதான் வயதானவர்களின் பொம்மை, நீ குழந்தைகளுக்கு பொம்மை கொடுப்பது போல வயதானவர்களுக்கு ஜபமாலை தருகிறார்கள். அப்போது அவர்கள் குறும்பு செய்யமாட்டார்கள். அவர்கள் ஒரு மூலையில் அமர்ந்து ஜபமாலையை உருட்டிக் கொண்டிருப்பர். ஆனால், அவர்களும் வெறுப்படைந்துவிடுவர். அவர்களும் சலிப்படைந்து விடுகிறார்கள். பிறகு அவர்கள் ஜபமாலையை மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். பிறகு அவர்கள் வேறொரு குருவிடம் சென்று வேறு மந்திரம் கேட்கிறார்கள். ஏனெனில், பழையது இப்போது வேலை செய்வதில்லை. அவர்கள் சொல்கிறார்கள்: முதலில் அது வேலை செய்தது.

பலர் என்னிடம் வந்து சொல்கிறார்கள்: நான் ஒரு மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தேன். முதன்முதலில் அது உதவியது. இப்பேது அது எந்த விதத்திலும் உதவுவதில்லை. இப்போது நாங்கள் எதுவும் உணருவதில்லை. அது ஒரு சலிப்பான வேலையாக மாறிவிட்டது. அதை இப்போது ஒரு கடமையாகச் செய்கிறோம். அன்பு மறைந்துவிட்டது. ஆனால், அதைச் செய்யாவிட்டால் எதையோ இழந்துவிட்டதைப் போல உணருகிறோம். ஆனால், அதைச்செய்வதால் எதுவும் பெறுவதில்லை.

பழக்கம் என்பது இதுதான். நீ செய்தால் எதையும் பெறுவதில்லை. செய்யாவிட்டால் எதையோ இழந்துவிட்டதைப் போல உணருவாய். இப்படித்தான்

புகை பிடிப்பவன் உணருகிறான். அவன் புகைப்பிடிப்பதால், எதுவும் வருவதில்லை என்று அவனுக்குத் தெரியும். அவன் மடத்தனமான முட்டாள்தனமான செய்கை செய்கிறான். புகையை உள்ளிழுத்து வெளியே விடுகிறான். ஆனால், அதுவும் ஜெபமாலை போலத்தான். நீ புகையை உள்ளிழுத்து பின் வெளியே விடுகிறாய். உள்ளிழுத்து, வெளிவிட்டு, உள்ளிழுத்து, வெளிவிட்டு, அது ஒரு ஜபம், மணிகளை உருட்டிக்கொண்டேயிருக்கிறாய். நீ ஒரு மந்திரத்தைப் போல அதைச் செய்யலாம். புகையை உள்ளிழுக்கும்போது ராமா என்று சொல். அதை வெளிவிடும்போது ராமா என்று சொல். அது ஒரு மந்திரம், பூஜை போல் ஆகிவிடும்.

எதை நீ தொடர்ந்து செய்து கொண்டிருந்தாலும், அது மந்திரம் போலாகிவிடும். மந்திரம் என்பது ஒரு சத்தத்தை, ஒரு வார்த்தையை, ஏதோ ஒன்றை திரும்பத் திரும்ப சொல்வதாகும். மந்திரம் மனதைப் பார்த்து புரிந்து கொள்ள உதவுகிறது. அது ஒரு பொம்மை போல. சில நிமிடங்களுக்கு அது சுகமாயிருக்கும். ஏனெனில், குறும்பு நின்றிருக்கிறது. மனது வேலை செய்யாததால், நீ அதில் லயிக்க முடிகிறது. ஆனால், அது திணிக்கப்பட்ட மௌனம். அது மருந்தைப் போன்றது. பரிதாபப்படத்தக்கது. அது சிறந்ததல்ல. அது எதிர்மறையானது. அது முடிவானதல்ல.

அந்த மௌனம் சுடுகாட்டில் இருக்கும் மௌனத்தைப் போன்றது. அது மரணத்தின் மௌனம்.

ஆனால், நான் சொல்லும் மௌனம் முற்றிலும் வேறுபட்ட குணத்தை உடையது. அது குறும்பிற்கு மாற்றானதல்ல. அது திணிக்கப்பட்ட ஒன்றல்ல. அது போலியான மந்திரமல்ல. நீ பொறுமையாக, கவனமாக, எதுவும் செய்யாமல், உன்னுடைய ஜபமாலையைக்கூட உருட்டாமல் முழு கவனமாக பொறுமையாக இருக்கும்போது உனக்குள் அந்த மௌனம் நிகழும்.

ஞாபகத்தில் வைத்திரு: பொறுமையாக இருப்பது தூக்கமாக மாறிவிடும். அதனால்தான் நான் ‘கவனம்’ என்ற வார்த்தையை வலியுறுத்துகிறேன். ஏனெனில், நீ பொறுமையாக இருக்கும்போது, தூக்கத்திற்குள் போய் விடுவாய். தூக்கம் என்பது தியானமல்ல. தூக்கத்தின் குணமும் அங்கு உண்டு. ஒரு குணம், அதுதான் பொறுமை. விழித்திருப்பதின் குணமும் அங்கு உண்டு. அதுதான் கவனம். நீ தூங்கும்போது இருப்பது போல உன்னை நிதானப்படுத்திக்கொள். நீ விழித்திருக்கும்போது இருப்பது போல கவனமாக இரு.

தூக்கத்திலிருக்கும் ஒரு விஷயம் தேவையில்லை. அது உணர்வற்ற நிலை. அது நிச்சயமாகத் தேவையில்லை. ஏனெனில், தியானம் உணர்வற்ற நிலையாக இருக்கக்கூடாது. விழித்திருக்கும் நிலையில் ஒரு விஷயம் தேவையில்லை, அது

நிரம்பியிருத்தல். ஏனெனில், நீ நிரம்பியிருந்தால் மனது வேலை செய்ய ஆரம்பித்துவிடும், எண்ணங்களால் நீ மூடப்பட்டு விடுவாய்.

நீ விழித்திருக்கும் நிலையில் கவனமாகவும், நிரம்பியும் இருப்பாய்.

நீ தூங்கிக்கொண்டிருக்கையில் பொறுமையாகவும், உணர்வற்ற நிலையிலும் இருப்பாய். தூக்க நிலையிலிருந்து ஒன்று, விழிப்பு நிலையிலிருந்து ஒன்று, பொறுமையும், கவனமும் இவை இணைந்ததே தியானமாகும். ஆனால் நீ, மீதமுள்ள மற்ற இரண்டையும் எடுத்துக் கலந்தால் (நிரம்பியிருத்தல், உணர்வற்ற நிலை) நீ பைத்தியமாவாய், நிரம்பியிருத்தல், உணர்வற்ற நிலை ஆகிய இரண்டின் கலவைதான் பைத்தியத்தை உண்டு பண்ணுகிறது. பொறுமையும் கவனமும் தியானத்திலிருக்கும் மனிதனை, ஒரு புத்தரை உருவாக்குகிறது.

இந்த நான்கு குணாதிசயங்களும் உங்களுக்கு உண்டு. இரண்டை கலந்தால் நீ பைத்தியமாகலாம். மற்ற இரண்டை கலந்தால் நீ தியானத்தை அடையலாம்.

இதையும் ஞாபகம் கொள்: நான் திரும்ப திரும்ப சொல்கிறேன். நீ திறந்த மனதுடன் இருக்கும்போது உன்னிடம் படரும் அந்த மௌனம், அந்தப் பேரானந்தம் நீ செய்யக் கூடியதில்லை. அதுதானாக வரும். அது உனக்கு நடக்கிறது. அது உன்னிடம் வருகிறது.

மக்கள் என்னிடம் வந்து சொல்கிறார்கள். நாங்கள் கடவுளைத் தேடுகிறோம். அவரை எப்படி அடைவது? நான் அவர்களிடம் சொன்னேன்: நீங்கள் அவரை அடைய முடியாது. அவரை நீங்கள் தேடவும் முடியாது. ஏனெனில், உங்களுக்கு அவரைத் தெரியாது. அவர்தான் கடவுள் என்று நீங்கள் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வீர்கள்? உங்களுக்கு அவரைத் தெரியாது. எங்கு போவீர்கள்? எந்த வழியை தேர்ந்தெடுப்பீர்கள்? அவரை உங்களுக்குத் தெரியாது. இதுதான் அவர் வீடு, இதுதான் அவரது இல்லம் என்று எப்படி தீர்மானிப்பீர்? இல்லை - உங்களால் முடியாது. உங்களால் இறைமையை தேடமுடியாது. ஆனால், அதற்கு தேவையில்லை. ஏனெனில், இறைமை எப்போதும் உன்னருகில், உன்னுள் உள்ளது. எப்போது நீ அனுமதித்தாலும், உன்னைத் தேடிக்கொண்டிருக்கும் அவர் உன்னை அடைந்து விடுவார்.

கடவுள் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார், கடவுள் உன்னை எப்போதும் தேடிக்கொண்டிருக்கிறார், உன்னிடமிருந்து எந்த தேடலும் தேவையில்லை. தேடினால் நீ அதைத்தவற விட்டுவிடுவாய். தேடாதே, பொறுமையாகவும் ஜாக்கிரதையாகவும் இரு, அதனால், அவர் வரும்போது நீ திறந்திருப்பாய்.

பல தடவை அவர் வந்து உன் கதவை தட்டியுள்ளார். ஆனால், நீ உறங்கிக்கொண்டிருப்பாய். அல்லது அந்த தட்டல் உன் காதில் விழுந்தாலும்,

அதை உனக்கு தகுந்தபடி எடுத்துக்கொண்டிருப்பாய். காற்று வேகமாக வீசுகிறது, அதனால்தான் என்று நினைப்பாய். அல்லது யாரோ தட்டுகிறார்கள். அவர்கள் தாங்களாகவே போய்விடுவார்கள் நான் என் தூக்கத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று நினைப்பாய்.

இப்படி உங்களுக்கு தகுந்தபடி எடுத்துக்கொள்வது உங்களுக்கே எதிரி. அது மட்டுமல்ல அப்படி செய்வதில் நீங்கள் மன்னர்கள். எதுவாயிருந்தாலும் சரி, நீங்கள் உடனடியாக தகுந்தபடி மாற்றி விடுவீர்கள். உன் மனது வேலைசெய்ய ஆரம்பித்தால் அதை அரைத்து உடனடியாக மாற்றி விடுவாய். அதற்கு சாயம் பூசிவிடுவாய்; அதற்கு இல்லாத வேறு ஒரு அர்த்தத்தை தருவாய்.

உன்னை அதற்குள் திணித்துக்கொள்வாய். அதை கெடுத்தும் விடுவாய்.

உண்மையை உனக்கு தகுந்தபடி மாற்றிக்கொள்ளத் தேவையில்லை. சத்தியத்தைப்பற்றி எந்த சிந்தனையும் தேவையில்லை. எவரும் சிந்தனையின் மூலம் சத்தியத்தை அடைந்ததில்லை. அதனால்தான், தத்துவங்கள் அனைத்தும் தவறானவை. அது தவறாகத்தான் இருக்கும். எந்த தத்துவமும் உண்மையாகாது, ஆகவே தத்துவவாதிகள் சண்டையிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். தங்களுடைய தத்துவம்தான் உண்மையானது என்பதை நிரூபிப்பதற்காக அவர்கள் போராடிக்கொண்டே இருக்கிறார்கள். எந்த தத்துவமும் உண்மையாக முடியாது. உண்மைக்கு எந்த தத்துவமும் தேவையில்லை. தத்துவம் என்பது ஒன்றைப்பற்றி சிந்திப்பது, ஒன்றைப்பற்றி காரணம் காண்பது, தத்துவம் என்பது நடைமுறையை தகுந்தபடி எடுத்தாள்வது.

தயவுசெய்து திசைதிருப்பாதீர்கள். எப்போது நீ அங்கு இருப்பதை உணர்கிறாயோ, அதை நிகழ அனுமதித்து விடு. அதை நிகழ நீ அனுமதித்தால், அது மேலும் மேலும் உண்மையாகும். நான் இங்கே இருப்பதை போலவே, அங்கேயும் இருப்பது சாத்தியமாகும். சில சமயம் இன்னும் அதிகமாக. ஏனெனில், அது உன்னைப் பொறுத்தது. எந்த அளவிற்கு உண்மை நடப்பை நீ அனுமதிக்கிறாய் என்பதை பொறுத்தது. மேலும், உன் கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும்.

தியானம் அதிகமாக செய்ய, செய்ய நீ என்னருகில் வருவாய். தியானத்தில் ஒருமுறை முழுமையாக ஆழந்து விட்டால் நீயே நான். பின்பு அங்கு வேற்றுமையில்லை.

இன்னும் ஒரு விஷயம்: நீ தியானம் செய்ய, செய்ய அங்கு கேட்க ஏதுமில்லை. கேள்விகள் நின்றுவிடும். ஏனெனில், கேள்விகள் தியான நிலையில் இல்லாத மனதிலிருந்துதான் வருகின்றன. ஒரு கேள்விக்கு பதிலளித்தால் அந்த பதிலிலிருந்து பத்து கேள்விகள் எழுகின்றன.

மனது மிகப்பெரிய கேள்விகள் உருவாக்கும் சக்தி. அது கேள்விகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது. நீ ஒரு பதில் கொடுத்தால் மனது அதைத்தாண்டி அதிலிருந்து பத்து கேள்விகள் உருவாக்கிறது.

ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதை தள்ளவேண்டியதில்லை. அதற்கு அவசியமில்லை. அதுதானே ஓடும். நீ ஒரு பதில் கொடுத்தால் மனது அதைத்தாண்டி அதிலிருந்து பத்து கேள்விகள் உருவாக்குகிறது.

ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதை தள்ளவேண்டியதில்லை. அதற்கு அவசியமில்லை. அதுதானே ஓடும். நீ கரைமேல் காத்திரு. அது ஓடும். நீ தைரியசாலியானால் உன்னை ஆற்றில் விட்டுவிடு. அதில் மித, நீந்தாதே. ஏனெனில், நீந்துதல் என்பது போராடுதலே. மித.

ஆனால், நீ எந்த இலக்கையும் வைத்திருக்க முடியாது. ஏனெனில், உன் இலக்கும் ஆற்றினுடையதும் ஒன்றாயிருக்க முடியாது. அப்போது அங்கே விரக்தி வரும்.

நீ நீந்தினால், போராடினால் ஒரு இலக்கை நோக்கி செல்லலாம். அப்போது நீ எதிர் நீச்சல்கூடப் போடலாம். அங்கே பெரிய போராட்டம் வரும். எப்போது நீ போராடுகிறாயோ, அப்போது உன் தன்முனைப்பு பலமாகும். ஆற்றை எதிர்ப்பதில் உற்சாகமடைவாய். ஆனால், அந்த உற்சாகம் தற்காலிகமானது. இப்போதோ, பிறகோ நீ சோர்ந்துவிடுவாய்: இப்போதோ, பிறகோ நீ இறந்து விடுவாய். ஆறு உன்னை எடுத்துச் செல்லும்.

கங்கையின் கரையில் வாழும கிராம மக்கள் இறந்த உடல்களை கொண்டு வந்து ஆற்றில் விட்டுவிடுவர். ஆனால், நீ இறந்த பின் உன்னை ஆற்றில் விடுவது உபயோகமில்லாதது. ஏனெனில், இறந்தால் நீ ஆற்றில் மிதப்பாய். ஆனால் அது அர்த்தமில்லாதது. ஏனெனில், நீ அங்கு இல்லை. நீ உயிருடன் இருக்கும்போதே, உன்னை கங்கையில் விட்டுவிடுவதைத்தான் நான் சொல்கிறேன்.

உற்சாகமாக, உணர்வுடன், முழு கவனமாக நீ மிதந்தாயானால், நீ ஆறாகி விடுவாய். எங்கு ஆறு சென்று சேர்த்தாலும் அதுதான் இலக்கு. அதுதான் விதியாகும். உண்மையில் அது எங்கு சென்று சேர்க்கிறது என்பதைப்பற்றி பிறகு கவலைப்பட மாட்டாய். ஒவ்வொரு கணமும் மிதப்பதே பேரானந்தமாயிருக்கும். ஒவ்வொரு கணமும் மிதப்பதே, அதுவே இலக்கு போல மிகவும் உற்சாகமாக இருக்கும். அந்த ஒவ்வொரு நிமிடமும்தான் இலக்கு. அப்போது காரணம் முடிந்துவிடும். கணங்கள் நிலைத்துவிடும்.

மதம், அது எதுவோ, அதை நிகழ அனுமதி. நீ செய்யக்கூடியதெல்லாம் தயவுசெய்து தொந்தரவு கொடுக்கமாலிருப்பதே, அது நிகழ அனுமதித்துவிடு, என்று சொல்கிறது.

பொறுமையாகவும், ஜாக்கிரதையாகவும் இருந்தால், என்னிடம் வரவேண்டிய அவசியமே இல்லை. நான் உன்னிடம் வருவேன். நீ மௌனத்தில் இருக்கும் சமயங்களிலெல்லாம், பல தடவைகள் ஏற்கனவே நான் உன்னிடம் வந்திருக்கிறேன். அதனால், இது முடிவு அல்ல. உங்களில் பலர் இதை ஏற்கனவே அனுபவத்தின் மூலம் அறிந்திருக்கிறீர்கள். ஆனால், அதையும் உனக்கு தகுந்தபடி மாற்றிக் கொள்கிறாய்.

மக்கள் என்னிடம் வந்து சொல்கிறார்கள்; "இன்று காலை தியானத்தில் இருக்கும்போது, திடீரென நான் உங்களை உணர்ந்தேன். ஆனால், அதை என் மனதின் மாயை என்று நான் நினைத்தேன்" என்று சொல்கிறார்கள். "நேற்று இரவு நான் திடீரென ஒருவரை உணர்ந்தேன். நான் ஜாக்கிரதையானேன். பிறகு என் அருகில் யாரோ கடந்து போயிருப்பார்கள் என்று நினைத்தேன். காற்று அறைக்குள் நுழைந்து காகிதங்களை புரட்டியிருக்கலாம், அல்லது பூனை கடந்து போயிருக்கலாம்" என்று நினைத்தேன் என்று சொல்கிறார்கள். அதனால் நான் என்ன சொன்னாலும் உங்களில் பலர் ஏற்கனவே உணர்ந்திருக்கின்றனர். அதனால்தான் நான் சொல்கிறேன். மற்றபடி நான் தெரிவிக்க மாட்டேன்.

இது நடக்க முடியாததாகக் கூடத் தோன்றலாம். ஆனால், இது சத்தியம். அதனால், நான் இதை சொல்கிறேன். எங்கு கேள்விகள் இருக்கிறதோ, அங்கு பதில்கள் இல்லை. எங்கு கேள்விகள் இல்லையோ, அங்கு பதில் இருக்கிறது. நீ கேள்வி கேட்காதபோதுதான் பதில் வரும். கேள்விகளற்ற நிலை தியானத்தின் மூலம் மட்டுமே உனக்கு நிகழும்.

எத்தனை கேள்விகள் இருக்கிறதோ, அத்தனை பதில்கள் இருக்கின்றன என்று நினைத்துக்கொள்ளாதே. இல்லை. அங்கு ஒரே பதில்தான் உள்ளது. கேள்விகள் பலகோடி. பதில் ஒன்றுதான். நோய்கள் பலகோடி. மருந்து ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான். அனைத்தும் மறைந்துவிடும். ஆனால், அந்த ஒன்று உனக்கு நிகழமுடியாது. ஏனெனில், நீ அதை நிகழ அனுமதிப்பதில்லை.

எதையும் நிகழ அனுமதிக்க பயப்படுகிறாய். இதை கற்றக்கொள்ள வேண்டும். நீங்கள் இந்த ஒரே ஒரு ஒழுக்கத்தை மட்டும் செய்யவேண்டும் என்று , நான் விரும்புகிறேன். உங்கள் பயத்தை கைவிடுங்கள். உங்கள் பயத்தை உதறிவிடுங்கள், செயல்களை நிகழ அனுமதித்துவிடுங்கள். இந்த ஒரே ஒரு ஒழுங்கை மட்டும் நீங்கள் கடைபிடிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஆமாம், நீ முழுவதுமாக உன் குருவை பின்பற்ற வேண்டும். நீ அவரை வெளித்தோற்றத்தின் மூலம் கலந்தாலோசிக்க முடியாத நேரங்களும் உண்டு, குரு இப்போதோ, எப்போதோ உடலிலிருந்து மறைந்து விடுவார். அப்போது, அவரை வெளித்தோற்றத்தின் மூலம் கலந்தாலோசிக்க வழியில்லை. அவரை உள்

மனத்தின் மூலம் அணுகுவது சிறந்தது. இல்லாவிடில், நீ அழுது தேம்ப வேண்டிவரும்.

என் உடல் எந்த வினாடியிலும் மறைந்துவிடும். இப்போது, இதை சுமக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுக்காகத்தான் இதை சுமந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நீங்கள் என் உள்மனதுடன் தொடர்புகொள்ளாவிட்டால் இப்போதோ, பிறகோ நீ மிகவும் விரக்தியும் துயரமும் அடைந்து விடுவாய். மிகவும் வேதனையடைவாய். அப்போது, பிறகு என் உள் மனதுடன் தொடர்பு கொள்வது, மிகவும் கடினமாகிவிடும்.

அதனால் நான் என் உடல் பிணைப்பை மேலும் மேலும் நிறுத்தப்போகிறேன். நீ அப்போதுதான் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும், உள் மனதுடன் தொடர்பு கொள்ள முடியும். அப்போது, உன்னால் அடைய முடியும். அது ஒன்றும் கடினமல்ல. தியான நிலைக்குச் செல்ல செல்ல, அது உனக்குள் நிகழ தொடங்கும்

Taken From : " LOVE & MEDITATION"

## அன்பு என்றால் என்ன?

அன்பு என்பது ஒவ்வொருவரைப் பொறுத்த காரியம், எத்தனைவிதமான மனிதர்கள் இருக்கின்றார்களோ அத்தனைவிதமான அன்பு நிலவுகின்றது.

அன்பு என்பது ஒரு தரவரிசையைக் கொண்டது. அன்பு கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் என பல நிலையில் காணப்படுகின்றது.

பாலுணர்விலும் அன்பு இருக்கின்றது. உயர் மனசாட்சியிலும் அன்பு இருக்கின்றது. நீங்கள் கீழ்த்தர வாழ்க்கை வாழ்பவராக இருந்தால், உயர் வாழ்க்கை வாழ்பவர்கள் கொண்டிருக்கும் அன்பு எனும் கருத்துக்கு வித்தியாசமானக் கருத்தை கொண்டவராக இருப்பீர்கள்.

ஹிட்லருக்கும் அன்பு இருந்தது. புத்தருக்கும் அன்பு இருந்தது. இருவரும் எதிரும் புதிருமானவர்கள். வெவ்வேறு மட்டத்தில் வாழ்ந்தவர்கள்.

கீழ்மட்ட அன்பு என்பது ஒருவகை அரசியல் ஆதிக்கம். எங்கு அன்பு மூலம் ஒருவர் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றாரோ, அது அரசியல்தனம் என்றுதான்

கூறவேண்டும். நீங்கள் அதனை அரசியல்தனம் என்று கூறாவிட்டாலும், அரசியல்தன்மை கொண்டது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் செய்வீர்கள்.

ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்தமாதிரி அரசியல்தான் தெரியுமேத்தவிர, அன்பு தெரியாது. கணவன் மனைவி நட்பு கொண்டாடும், ஆண் பெண் எல்லோருமே அன்புமூலம் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

இது அரசியல்தன்மை கொண்டதல்லாமல் வேறு எதைக்கொண்டது என்று கூறுவது? நீங்கள் அடுத்தவர் மீது ஆதிக்கம் செலுத்துவதில் மகிழ்ச்சியடைகிறீர்கள்.

எனவே, அன்பு என்பது இனிப்புத் தடவிய கசப்பு மாத்திரை - அடியில் அரசியல்தான் இருக்கின்றது. நீங்கள் அன்பு குறித்து பேசுகின்றீர்கள். ஆனால், அந்தரங்கத்தில் அடுத்தவரை எப்படி உங்களுக்கு இசைவாகப் பயன்படுத்திக் கொள்வது என்பதில்தான் குறியாக இருக்கின்றீர்கள்.

வேண்டுமென்றோ, தன்னுணர்வுடனோ இதனைச் செய்கின்றீர்கள் என்று நான் கூறவில்லை. அந்த அளவுக்கு உங்களிடம் தன்னுணர்வு ஏற்படவில்லை. வேண்டுமென்றே நீங்கள் இதனைச் செய்யாவிட்டாலும், இது தன்னுணர்வற்ற நடவடிக்கை.

உங்கள் அன்பில், சொந்தம் கொண்டாடுவதும், பொறாமையும், மறைவான அம்சமாக உள்ளன. எனவேதான், மகிழ்ச்சியைக்காட்டிலும் அன்பு துன்பத்தை ஏற்படுத்துகின்றது. அதில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் துவர்ப்புதான் உள்ளது. ஒரு சதவீத இனிப்பை அதன்மேல் தடவியிருக்கின்றீர்கள். விரைவில் அந்த இனிப்பும் மறைந்துபோகும்.

காதல் மோகத்தில் இருக்கும்போது - தேனிலவுக்காலத் தொடக்கத்தில் இனிப்பை சுவைக்கின்றீர்கள். விரைவில் இனிப்புமாறி அதன் உண்மையானத் துவர்ப்பு தோன்றிவிடும்போது, அது அசிங்கமாக மாறிவிடுகின்றது. மனிதர்களை நேசிக்கவேண்டாம் என்று ஆயிரக்கணக்கான மக்கள் தீர்மானித்துவிட்டனர். ஒரு நாயை, பூனையை, கிளியை நேசிப்பது நல்லது என்று, தீர்மானித்துவிட்டனர். ஒரு நாயைக்கூட நேசிப்பது நல்லது என்று , அவர்களுக்கு தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஏனென்றால், அவை மீது நீங்கள் ஆதிக்கம் செலுத்தலாம். அவை உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாது. இந்த மாதிரி அன்பு எளிதானது. மனிதர்களுடன் ஏற்படும் சிக்கல் ஏதும் இதில் இல்லை. மனிதர்களுள் அன்பு பாராட்டும்போது நரகமாகிவிடுகின்றது. போராட்டம் தொடர்கதையாகி விடுகின்றது. ஒருவர் கழுத்தை மற்றவர் பிடித்து நெரிக்கின்றனர்.

இதுதான் கீழ்மட்ட அன்பு. இதனை படிக்கட்டாக நீங்கள் பயன்படுத்தினால் தவறில்லை. இதனைப் பிரார்த்தனையாகவும் பயன்படுத்தலாம். இதனைக் கவனித்துப் புரிந்து கொள்வீர்கள் என்றால், அந்த விழிப்பு நிலையே உங்களை மேல்மட்டத்திற்கு உயர்த்திச் சென்றுவிடும்.

உயர்மட்ட அன்பு ஏற்படும்போது - நீங்கள் அன்பாகவே மாறிவிடும்போது, அன்பு வெறும் உறவுமுறையாக இருக்காது. அப்போதுதான் அன்பு எனும் தாமரை மலர்ந்து மணம் வீசும் - உயர்மட்டத்தில் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். கீழ்மட்டத்தில் அன்பு அரசியல் உறவுதான். மேல்மட்டத்தில் அன்பு என்பது தெய்வீக உணர்வுநிலை.

நானும் உங்களை நேசிக்கின்றேன். அதைப்போண்று புத்தர் நேசித்தார். ஏசு நேசித்தார். அவர்கள் அன்பு உங்களிடமிருந்து எந்தப் பலனையும் திருப்பி எதிர் பார்க்கவில்லை. அதில் பேரம் ஏதுமில்லை. கொடுப்பதில் ஏற்படும் மகிழ்ச்சிக்காக மட்டுமே அன்பு அளிக்கப்படுகின்றது.

அதனால்தான், அந்த அன்பு அழகுடன் மிளிரும் வகையில் உருமாறி விடுகின்றது. உங்களுக்குத் தெரிந்த எல்லா மகிழ்ச்சியையும் இது தூக்கி அடித்து விடுகின்றது.

நான் அன்பைப் பற்றி பேசும்போது, அதனைஒரு படிநிலை என்று தான் குறிப்பிடுகின்றேன். அதற்கு எந்தவித முகவரியுமில்லை. இவரை நேசிக்கின்றேன், அவரை நேசிக்கின்றேன், என்று குறிப்பிட்டுக் கூறமுடியாது. நீங்கள் வெறுமனே நேசிக்கிறீர்கள். நீங்களே அன்புதான்.

நீங்கள் பிறரை நேசிக்கிறீர்கள் என்பதைவிடவும் நீங்களே அன்பாக இருக்கின்றீர்கள் என்றுதான் கூற வேண்டும். இதில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் அனைவரும் பங்கு பெறலாம்.

அள்ளஅள்ளக் குறையாத அந்த நீரூற்றிலிருந்து, அன்பை மொண்டு பிறர் அனுபவிப்பதற்கு நீங்கள் தாராளமாக இருக்கின்றீர்கள். எந்தவித நிபந்தனையும் போடாமல் இருக்கின்றீர்கள்.

அன்பு மேலும் மேலும் பிரார்த்தனையாக மாறும்போது தான் இந்த மாதிரியான நிலை ஏற்படும். ஒவ்வொருவருக்கும் அன்பு குறித்து ஒவ்வொரு கருத்து இருக்கின்றது.

அன்பு குறித்த எல்லாக் கருத்துக்களும் மாறி, அன்பு என்பது வெறும் கருத்தல்லவென்று உணர்ந்து, நீங்கள் அன்பாகவே மாறிவிடும்போதுதான், அன்பிற்கு எவ்வளவு சுதந்திரம் கிடைக்கிறது என்பதை புரிந்து கொள்வீர்கள். அப்புறம் அன்புதான் கடவுள். அன்புதான் இறுதியான சத்தியம்.

உங்கள் அன்பு பிரார்த்தனை வழியாக செயல்படட்டும். கவனித்து வாருங்கள். உங்கள் மனதின் தந்திரத்தை கவனியுங்கள். அதன்மூலம் உங்கள் அரசியல் தன்மையைக் கவனியுங்கள். தொடர்ந்து கவனித்து உற்றுநோக்கினாலன்றி, வேறு எந்த முறையும் உங்களுக்கு உதவமுடியாது.

உங்கள் கணவர், அல்லது மனைவியிடம் நீங்கள் அன்பாக சில வார்த்தைகள் பேசும்போது, அதன் உள் நோக்கம் என்னவென்று கூர்ந்து கவனியுங்கள்.

நீங்கள் ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள்? இதற்கு ஏதாவது நோக்கம் இருக்கின்றதா? அப்படியிருந்தால் அது என்ன? அந்த நோக்கத்தை உங்கள் உள்ளுணர்விலிருந்து மேலேகொண்டு வாருங்கள். உணர்வு நிலைக்கு மேலே கொண்டுவருவதுதான், உங்கள் வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு உதவும் இரகசிய திறவுகோல். உணர்வு நிலையில் இருக்கும் எல்லாம் விரைவில் மறைந்து போய்விடும்.

உங்கள் நோக்கங்கள் உள்ளுணர்வில் கிடப்பதினால்தான், அவற்றின் பிடியில் சிக்கியுள்ளீர்கள். அவற்றை உணர்வுநிலைக்கு கொண்டுவாருங்கள்; வெளிச்சத்திற்கு கொண்டுவாருங்கள். அவை மறைந்துபோகும்.

மரத்தோடு வேரோடு பிடுங்கி சூரிய வெளிச்சத்தில் வேரைக்கொண்டு வருவது மாதிரி இது. அவை மடிந்துபோகும். மண்ணுக்கடியில் இருட்டில் தான் அவை உயிர்வாழும்.

உங்கள் நோக்கங்களை உள்ளுணர்விலிருந்து, உணர்வுக்கு கொண்டு வருவதுதான் உங்கள் அன்பை உருமாற்றுவதற்குச் சிறந்த வழி. மெல்ல மெல்ல அந்த உள்நோக்கங்கள் அழிந்துபோகும்.

அன்பிற்கு உள்நோக்கம் ஏதுமில்லாதபோதுதான், அன்பு எல்லோருக்கும் ஏற்பட்டிருக்காத மிகப்பெரிய காரியமாகத் தோன்றும். பிறகு, அன்பு அப்பாலுக்கும் அப்பால் இருக்கும் இறுதியான ஒன்றாக இருக்கும்.

கடவுள் அன்பாக இருக்கிறார் என்று, ஏசு கூறியதன் பொருளும் இதுதான். அன்புதான் கடவுள் என்று நான் கூறுவதும் இதைத்தான்.

கடவுளை வேண்டுமாயின் மறந்துவிடலாம். அன்பை மட்டும் மறந்து விடாதீர்கள். அன்பை சுத்திகரிக்கும் போதுதான் கடவுள் முன்னால், அது உங்களைக் கொண்டு நிறுத்தும். நீங்கள் கடவுளை முழுக்க மறந்தாலும்கூட, ஒன்றையும் இழந்துவிடப்போவதில்லை.

ஆனால், அன்பை மறந்துவிடாதீர்கள். அன்புதான் பாலம். உங்கள் மனசாட்சியில் நடைபெறும் ரசவாத வித்தையினால் ஏற்படும் மாற்றம்தான் அன்பு.

# ஓஷோவின் அழைப்பு

மனிதனை இருள் கப்பி இருப்பதை நான் காண்கிறேன். இருண்ட இரவில் விளக்கணைந்து, இருள் சூழ்ந்த வீட்டைப்போல இருக்கிறது அவன் நிலை. அவனிடமிருந்த ஏதோ ஒன்று விட்டுப்போய்விட்டது. ஆனால், ஒரு அணைந்த விளக்கை மறுபடியும் ஏற்ற முடியும்.

அதேப்போல மனிதன் தடம்புரண்டுவிட்டதையும், நான் காண்கிறேன். அவன் அலைக்கடலில் திக்குத் தெரியாமல், சிக்கிக்கொண்டுவிட்ட படகைப் போல இருக்கிறான். அவன் எங்கே போக விரும்புகிறான் என்பதையும், எப்படி இருக்க விரும்புகிறான் என்பதையும், அவன் மறந்துவிட்டான். ஆனால், அவன் மறந்திருப்பதை மறுபடியும் அவனுக்கு நினைவூட்ட முடியும்.

இருள் சூழ்ந்த நிலையிலும், நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. இருள் ஆழமாக இருக்கின்ற அளவு விடியல் அருகில் இருக்கிறது. மிக அருகிலேயே, உலகம் முழுவதும ஒரு ஆன்மீக மலர்ச்சியை நான் காண்கின்றேன். ஒரு புது மனிதன் பிறக்கப் போகிறான். நாமெல்லாம், அவன் பிறப்பதற்கான வலியில் இருக்கிறோம். ஆனால், இந்த மறுமலர்ச்சிக்கு நம் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் தேவை. அது நம் மூலம்தான் நிகழும். நமது மூலம் மட்டுமே நிகழ முடியும். நாம் வெறும் பார்வையாளனாக இருப்பது சாத்தியமில்லை. நாம் அனைவரும்இந்த நமக்குள்ளேயே ஆன மறுபிறப்பிற்குத் தயாராக வேண்டும்.

அந்த புது நாளின் தொடக்கம். அந்த புதிய விடியல், நாம் ஒளியால் நம்மை நிறைத்துக் கொண்ட பின்பே, நிகழும். ஆகவே, இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வது நம்மிடம்தான் உள்ளது. நாளைய கட்டடத்தின் செங்கற்கள் நாம். எதிர்காலச் சூரியனை உருவாக்கப் போகும் ஒளிக்கற்றைகள் நாம். நாம் வெறும் பார்வையாளர்களல்ல, படைப்பாளிகள், இந்தத் தேவை எதிர்காலத்தை உருவாக்குவதற்காக மட்டுமல்ல, இது நிகழ்காலத்தை உருவாக்கவும்தான். இது நம்மை உருவாக்கிக் கொள்ளத்தான். தன்னை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தான், ஒரு மனிதன் மனித சமுதாயத்தை உருவாக்குகிறான். சமுதாயத்தின் அங்கம் தனிமனிதனே மேலும், பரிணாம வளர்ச்சியும், புரட்சியும் ஆகிய இரண்டுமே தனிமனிதன் மூலம் நடக்க முடியும். ஆகவே, நீங்கள் அத்தகைய ஒரு அங்கம்.

ஆகவேதான், நான் உங்களை அழைக்க விரும்புகிறேன். நான் உங்களை, உங்களின் நீண்ட உறக்கத்திலிருந்து எழுப்ப விரும்புகிறேன், உங்களுடைய

வாழ்க்கை பயனற்றதாகவும் அர்த்தமற்றதாகவும், முற்றிலும் வெறுப்பூட்டுவதாகவும் (TOTALLY BORING) போய்விட்டதை நீங்கள் பார்க்கவில்லையா? வாழ்க்கை அதன் முழு அர்த்தத்தையும் பலன் முழுவதையும் இழந்துவிட்டது. ஆனால், இது இயற்கையானதுதான், மனிதனுடைய இதயத்தில் ஒளி இல்லாதபொழுது, அவனுடைய வாழ்க்கையில் எந்த அர்த்தமும் இருக்கமுடியாது. அவனது உயிரில் ஒளியில்லாதபோது, அவனது வாழ்வில் சந்தோஷம் இருக்கமுடியாது.

நாம் இன்று தேவையில்லாத, அதிக சுமை கொண்டவர்களாக, இருப்பதை காண்கிறோம். இதன் காரணம் வாழ்க்கை உண்மையிலேயே பயனற்றது என்பதல்ல. வாழ்க்கை என்பது ஒரு முடிவேயில்லாத நிறைவு. ஆனால், நாம் அந்த நிறைவை, அந்த நிலையை நோக்கிச் செல்லும் பாதையை மறந்துவிட்டோம். நாம் வெறுமனே ஜீவித்திருக்கிறோம். அவ்வளவுதான். மற்றபடி வாழ்வோடு செய்வதற்கு நமக்கு ஒன்றுமில்லை. இது வாழ்வதல்ல, மரணத்திற்காக காத்திருப்பது. பின் இந்த மரணத்திற்காக காத்திருக்கும் வாழ்வு வெறுப்பூட்டுவதாக இல்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்? அது எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்?

நான் இங்கு வந்தது உங்களிடம் கீழ்க்கண்டவாறு சொல்வதற்குத்தான்: வாழ்க்கை என்று நீங்கள் தவறாகக் கருதிக்கொண்டிருக்கும் இந்த கெட்ட கனவிலிருந்து விழித்தெழ ஒரு வழி இருக்கிறது. அந்த பாதை எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இருளிலிருந்து ஒளிக்கு வழி நடத்திச் செல்லும் அந்தப் பாதை அழிவில்லாதது. அது கண்டிப்பாக அங்கு இருக்கிறது. ஆனால், நாம் நம் முகத்தை அதனிடமிருந்து திருப்பிக்கொண்டுவிட்டோம். நீங்கள் உங்கள் முகங்களை அதை நோக்கி திருப்ப வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தப் பாதைதான் தர்மம், மதம், இது மனிதனுள் விளக்கேறும் வழி. வயோதிகமும் இறப்பும் கொண்ட இந்த உலகின் சம்சார வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களுக்கு மதம்தான் பாதுகாப்பான தீவு, நங்கூரம், முடிவு, சரண் புகும்இடம் என்று மஹாவீரர் கூறினார்.

வாழ்வை சந்தோஷத்தால் நிரப்பும் ஒளி பற்றிய தாகம் உங்களுக்கு இருக்கிறதா? அழிவற்ற தன்மையை மனிதனுக்குக் கொடுக்கும் சத்தியத்தை அடைய வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படியானால் நான் உங்களை அழைக்கிறேன். சந்தோஷத்திற்கு, ஒளிக்கு, மரணமில்லா பெருவாழ்வுக்கு, என் அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். இது வெறும் உங்கள் கண்களைத் திறக்கும் விஷயம்தான். அதன்பின் ஒளி பொருந்திய ஒரு புதிய உலகத்தை அடைவீர்கள். நீங்கள் வெறும் கண்களைத் திறப்பதைத் தவிர, செய்ய வேண்டியது

எதுவுமில்லை. நீங்கள் விழித்தெழுந்து பார்க்க வேண்டியது மட்டுமே செய்ய வேண்டும்.

உண்மையில் மனிதன் எதையும் இழந்துவிடவோ, திக்குத் தெரியாமலோ, போய்விடவில்லை. ஆனால், அவனது கண்கள் மூடியிருப்பதால், எங்கும் இருள் சூழ்ந்தும், திக்குத் தெரியாமலும் இருக்கிறான். கண்களை இறுக மூடிக்கொள்வதால் ஒரு மனிதன் எல்லாவற்றையும் இழக்கிறான். அதைத் திறப்பதால் அவன் அரசனாகிறான்.

நான் உங்களை உங்கள் கனவாயிருக்கின்ற வீழ்ச்சியிலிருந்து, பெருமை மிகு வீரனாக அழைக்கின்றேன். நான் உங்கள் தோல்வியை வெற்றியாகவும், உங்கள் இருளை ஒளியாகவும், உங்கள் மரணத்தை நிலைபெற்ற பெருவாழ்வாகவும் மாற்றியமைக்க விரும்புகிறேன். நீங்கள் இந்தப் பயணத்தை என்னோடு மேற்கொள்ள தயாராக இருக்கிறீர்களா?

நமது செயல்களைத் துவக்குமுன், தயவுசெய்து என் அன்பை ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த தனிமையான, விலகி இருக்கும் இந்த மலைக்கு நான் உங்களை வரவேற்க என்னிடம் இருப்பது என் அன்பு ஒன்றுதான். என்னிடம் உங்களுக்கு கொடுப்பதற்கு வேறு எதுவும் இல்லை. என்னில் நிறைந்திருக்கும் கடவுள், என்னிடம் உருவாக்கியுள்ள அளவற்ற அன்பை, நான் உங்களுடன் பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன். நான் அதை விநியோகிக்கவிரும்புகிறேன். அதன் ஆச்சரியம் என்னவென்றால், நான் எந்த அளவு அதிகமாகப் பகிர்ந்து கொள்கிறேனோ, அந்த அளவு அதிகமாக அது வளர்கிறது. உண்மையான செல்வம் விநியோகிப்பதால் அதிகரிக்கிறது. ஆனால், எந்த செல்வம் பகிர்ந்து கொள்வதனால் குறைகிறதோ, அது உண்மையான செல்வம் அல்ல. என் அன்பை இப்போது ஏற்றுக்கொள்கிறீர்களா? நான் உங்கள் கண்களில் நீங்கள் ஏற்றுக் கொள்வதையும் அதன் காரணமாக அவைகளிலிருந்தும் அன்பு பொங்கி வழிவதையும் காண்கிறேன்.

அன்பு அன்பையும், வெறுப்பு வெறுப்பையும் தோற்றுவிக்கிறது. நாம் கொடுப்பதேதான், நமக்கு திரும்பிவருகிறது. இது இயற்கையின் ஒரு மாறாத விதி. ஆகவே, நீங்கள் எதை விரும்புகிறீர்களோ, அதைத்தான் நீங்கள் இந்த உலகத்திற்கு கொடுக்க வேண்டும். நீங்கள் முட்களுக்கு பதிலாக மலர்களை மாற்றிக்கொள்ள முடியாது.

நான் உங்கள் கண்களில் அன்பும் அமைதியும் பூத்து மலர்ந்துள்ளதை காண்கிறேன். அதற்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன். இப்போது இங்கு பல வகையிலும் வித்தியாசமானவர்கள் இல்லை. அன்பு எல்லோரையும் ஒன்று சேர்த்து, பலரை ஒன்றாக மாற்றியமைக்கிறது. பூத உடல்கள் தனிப்பட்டவைதான். தொடர்ந்தும் அப்படித்தான் இருக்கும். ஆனால், இந்த உடல்களின் பின் இருக்கும்

ஏதோ ஒன்று எல்லோரையும் கூடச் சேர்த்து அன்பில் ஒருங்கிணைக்கிறது. இப்படி இரண்டற கலந்தப் பின்பு மட்டுமே எதையும் எடுத்துக்கூறவோ, எதையும் புரிந்துக்கொள்ளவோ முடியும், பரிமாற்றம் அன்பில் மட்டுமே சாத்தியம். அன்பு ஒன்றால் மட்டுமே சாத்தியம்.

நான் சிலவற்றை உங்களிடம் சொல்ல முடிவதற்கும், அதை நீங்கள் என்னிடம் கேட்டுணர முடிவதற்குமாகத் தான், நாம் இங்கே இந்த தனியிடத்தில் கூடியிருக்கிறோம். இந்த சொல்லுதலும், இந்த கேட்டலும், அன்பு நிலையில் மட்டுமே நடக்கும். இதயத்தின் கதவுகள் அன்பிற்கு மட்டுமே திறக்கும். மேலும், இதயத்தின் மூலமாக நீங்கள் கேட்கும் போது மட்டுமே, உண்மையாகவே, நீங்கள் எதையாவது கேட்டுணர முடியுமேயன்றி, தலையின் மூலமாக அல்ல என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இதயத்தில்கூட கேட்க முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், எப்போதெல்லாம் கேட்டுணர்கிறீர்களோ, அப்பொழுதெல்லாம் உங்கள் இதயம் மட்டுமே கேட்கிறது என்று நான் கூறுகிறேன். இதுவரை தலை எதையுமே கேட்டது கிடையாது. தலையானது டமாரச் செவிடு. இது அதேப் போல சொல்லும் விஷயத்திலும் உண்மையில்லை. வார்த்தைகள் இதயத்திலிருந்து வரும்பொழுது மட்டுமே அவை அர்த்தமுள்ளவை. இதயத்திலிருந்து வெளிவரும் அவை அர்த்தமுள்ளவை. இதயத்திலிருந்து வெளிவரும் வார்த்தைகள் மட்டுமே, அன்று மலர்ந்த உண்மைப் பூக்களின் நறுமணத்துடன் இருக்கும். இல்லாவிட்டால், அவை பழையதாகவும், வாடியும் இருப்பதோடு மட்டுமல்ல, மேலும் காகிதத்தினால் செய்யப்பட்ட செயற்கை பூக்களைப் போலவே இருக்கும்.

நான் என் இதயத்தை உங்களிடம் கொட்டப்போகிறேன். உங்கள் இதயங்கள் என்னை நுழைய அனுமதித்தால் சந்திப்பும், பரிமாற்றமும் அங்கே நிகழும். அந்த இரண்டற கலக்கும் கணத்தில்தான் வார்த்தைகள் வெளிப்படுத்த சக்தியற்ற விஷயத்தை பரிமாறிக்கொள்ள முடியும். பலசொல்ல முடியாத விஷயங்கள் இப்படித்தான் கேட்கப்பட்டிருக்கின்றன. மேலும், வார்த்தைகளில் வடிக்க முடியாததையும், வரிகளுக்கு இடையே உள்ளதையும் இப்படித்தான் பரிமாறிக்கொள்ள முடியும். வார்த்தைகள் மிகவும் சக்தியற்ற அடையாளங்கள்தான். ஆனாலும், முழு அமைதியோடும், மோனத்தோடும் கேட்கப்பட்டால் அவையும் சக்தியுள்ளவையாகிவிடுகின்றன. நான் இதயத்திலிருந்து கேட்பது என்று கூறுவது இதைத்தான்.

ஆனால், மற்றொருவரை காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும் போதுக்கூட, நம்மைப்பற்றிய எண்ணங்களால் நாம் நிறைந்து இருக்கிறோம். அப்படி கேட்பது தவறானது. அப்போது நீங்கள் உண்மையாகக் கேட்பவர் இல்லை. நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக ஒரு பொய் நினைப்பின் கீழ் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால், உண்மையைச் சொல்லப்போனால், நீங்கள் அப்படியில்லை.சரியாகக்

கேட்க வேண்டுமென்றால், மனமானது அமைதியான சாட்சிபாவத்தில் சரியாக நிலைபெற்றிருப்பது அவசியம். நீங்கள் வெறும் கேட்பதைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது. அப்போது மட்டுமே உங்களால் கேட்கவும், அதைப் புரிந்து கொள்ளவும் முடியும். அப்படி புரிந்துகொள்வது ஒரு விளக்காக இருக்கும். அது உங்களிடம், உங்களுக்குள் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும். இந்த மனநிலை இல்லாவிட்டால், நீங்கள் ஒருவர் பேச்சையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் உங்களை மட்டுமே எப்போதும் கேட்டுக்கொண்டிருப்பீர்கள். உங்களுக்குள் இருக்கும் படபடப்பும், சத்தமும் உங்களை விழுங்கிவிடுகிறது. நீங்கள் இந்த அளவு அடைபட்டு கிடக்கும்போது, உங்களுடன் எந்தவித தொடர்பும் சாத்தியமில்லை. நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பது போலத் தெரிந்தாலும், நீங்கள் பார்க்கவில்லை. நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது போலத் தெரிந்தாலும், நீங்கள் கேட்கவில்லை.

“பார்க்கும் கண்கள் யாருக்கு இருக்கிறதோ, அவர்கள் பார்க்கட்டும், கேட்கும் காதுகள் யாருக்கு இருக்கிறதோ, அவர்கள் கேட்கட்டும்” என்று கிறிஸ்துக்கூட சொன்னார். காதுகளும், கண்களும், இல்லாதவர்களுடனா அவர் பேசிக்கொண்டிருந்தார்? அவர்களுக்கு கண்களும், காதுகளும் இருக்கத்தான் செய்தன. ஆனால், கண்களும், காதுகளும் இருப்பது மட்டுமே பார்ப்பதற்கும், கேட்பதற்கும் போதுமானது அல்ல. வேறு ஏதோ ஒன்று வேண்டும். அந்த ஒன்று இல்லாவிட்டால் காதுகளும், கண்களும் இருத்தலும், இல்லாதிருத்தலும் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. அந்த வேறு ஏதோ ஒன்று உள் அமைதியும், கவனமான தன்னறிவும்தான். இந்த குணாதிசயங்கள் அங்கு இருக்கும்போது மட்டுமே மனத்தின் கதவுகள் திறந்திருக்கின்றன. அப்போதுதான் ஏதாவது சொல்லவோ, கேட்கவோ முடியும்.

நான் இந்த வகையான கேட்டலை உங்களிடமிருந்து இந்த “சாதனா கேம்ப்” நாட்களில் எல்லாம் எதிர்பார்க்கிறேன். நீங்கள் ஒருமுறை இந்த கலையில் தேர்ச்சிப்பெற்றுவிட்டால், இது உங்கள் வாழ்க்கை முழுவதுமான துணையாக மாறிவிடும். இது மட்டுமே உங்கள் தேவையற்ற தயாரிப்பை விட்டு, உங்களுக்கு சுதந்திரமளிக்கும். மிகப்பெரிய, புதிர் நிறைந்த, உங்களுக்கு வெளியே உள்ள உலகை, இது உங்களுக்கு உணர்த்த முடியும். மேலும், இதன்மூலம் நீங்கள் அந்த உள்ளுணர்வின் அழியாத ஒளிவெள்ளத்தை அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள். மனத்தின் பெரும் சத்தத்திற்கு பின்னால் உள்ளது இதுதான்.

சரியாகப் பார்த்தலும், சரியாகக் கேட்டலும் இந்த “சாதனா கேம்ப்” பிற்கான தேவை மட்டுமல்ல, சரியாக வாழ்வதற்கான அஸ்திவாரமும் ஆகும். எப்படி ஒரு முழுமையான சலனமற்ற ஏரியில், எல்லாமும் முழுத் தெளிவாகப் பிரதிபலிக்கிறதோ, அதுப்போலவே, நீங்கள் சலனமற்று அமைதியாக மாறும்போது, உங்களிடம் சத்தியமும், கடவுளும் பிரதிபலிப்பார்கள். நான் உங்களிடம் அப்படி

ஒரு சாந்தமும், அமைதியும் வருவதைப் பார்க்கிறேன். மேலும், உங்கள் கண்கள் நான் என்ன சொல்ல விரும்புகிறேனோ, அதைச் சொல்ல எனக்கு அழைப்பு விடுவதையும் காண்கிறேன். என் ஆன்மாவைத் தொட்ட சத்தியங்களை பகிர்ந்துகொள்ளும்படி அவை என்னை வலியுறுத்துவதை, நான் காண்கிறேன். உங்கள் இதயங்கள் அவைகளைக் கேட்பதற்காக பொறுமையிழந்தும், ஆர்வத்தோடும் இருக்கின்றன. என்னைக் கேட்பதற்கு, உங்களுக்குள்ள இந்த முழு ஆர்வமான தயார்நிலையைப் பார்க்கின்றபொழுது,, என் இதயம் உங்களிடம் பொங்கிப் பிரவகிக்கத் துடிக்கிறது. இந்த அமைதியான சூழ்நிலையில், உங்களின் மனங்களும் முழு அமைதியாயிருக்கும், இந்த தருணத்தில் நான் எதைச் சொல்ல விரும்புகிறேனோ, அதை உங்களிடம் கண்டிப்பாக என்னால் கூற இயலும். இதற்குமுன் பல சமயங்களில் செவிடாகிப்போன இதயங்களை என் முன்னால நான் காணுகிறபோது, நான் பேசுவதை வேறு வழியின்றி தவிர்க்கவேண்டி வந்திருக்கிறது. நீங்கள் உஙகள் வீட்டின் கதவுகளை எல்லாம் மூடிக்கொள்ளும் போது வெளிச்சம் வெளியே நின்றுவிடுகிறது. அல்லவா! அதுப்போலவே, நானும் பலசமயம் பல வீடுகளில் வெளியே நின்றிருக்கிறேன். ஆனால், இங்கு உங்கள் கதவுகள் திறந்திருப்பது ஒரு நல்ல அடையாளம். இது ஒரு நல்ல ஆரம்பம்.

நாம் இந்த ஐந்து நாள் "சாதனா கேம்ப்" நிகழ்ச்சியை நாளைக் காலையிலிருந்து துவக்குவோம். அதை அறிமுகப்படுத்தும் வகையில் இப்போது சில விஷயங்களை நான் உங்களிடம் கூற விரும்புகிறேன்.

ஒருவரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு, சத்தியத்தை உணர்வதற்கு, பூக்களைப் பயிரிட மண் பயன்படுத்தப்படுவதைப் போல மனம் தயார் செய்யப்பட வேண்டும். அதற்காக நீங்கள் எப்போதும் சில கருத்துள்ள மொழிகளை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

முதல் மொழி: நிகழ்காலத்தில் வாழு. இந்த கேம்ப் நாட்கள் முழுவதும் இறந்தகாலம் பற்றியும், எதிர்காலம் பற்றியும் சிந்தித்துக்கொண்டே இருக்கும், உங்கள் பழக்கத்திற்கு ஆட்படாமல் இருங்கள். அப்படி ஆட்பட உங்களை நீங்கள் அனுமதித்தால், இந்த வாழும் கணம், மிக முக்கியமான கணம் வீணடிக்கப்பட்டு, எந்தவித பயனுமின்றி கழிந்துப்போய்விடும். இறந்த காலமோ, எதிர்காலமோ உயிரோடு இல்லை. அந்த இறந்தகாலம் வெறும் நினைவுகள் மட்டுமே; அந்த எதிர்காலம் வெறும் கற்பனை. நிகழ்காலம் மட்டுமே உண்மையானதும், உயிரோடிருப்பதும். மேலும் சத்தியத்தை அறிய முடியுமென்றால், அதை நிகழ்காலத்தின் மூலம் மட்டுமே அறிய முடியும்.

இந்த கேம்ப் நாட்களில், உங்களை இறந்த காலத்திலிருந்தும், எதிர்காலத்திலிருந்தும் தயவுசெய்து துண்டித்துக் கொள்ளுங்கள். அவைகள்

உயிரோடு இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இருக்கும் இந்தக் கணம் மட்டுமே உயிரோடிருப்பது. நீங்கள் உயிர்வாழும் இந்தக் கணம் மட்டுமே இருக்கிறது. மற்றெதுவும் இல்லை. நீங்கள் இதில் வாழ்ந்தாக வேண்டும். இதில் முழுமையாக வாழ வேண்டும். உங்கள் முழு இறந்தகாலமும் உங்களிடமிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது போன்று, இன்று இரவு ஆழமாக தூங்குங்கள். கடந்தவைகளுக்கு இறந்தவராகிவிடுங்கள். காலையில் புதுமனிதனாக எழுந்திருங்கள், ஏனெனில், அது ஒரு புதிய காலை, படுக்க சென்றவன் எழுந்திருக்க வேண்டாம். அவன் நன்மைக்காக தூங்கியே போகட்டும். எப்போதும் புதியவனான, எப்போதும் புத்துணர்ச்சிகொண்டவனானவன் வரட்டும்.

நிகழ்காலத்தில் வாழ, இறந்தகாலம் பற்றிய, எதிர்காலம் பற்றிய இயந்திரத்தனமான எண்ணங்கள் மறுபடியும் எழுந்தோட ஆரம்பித்துவிடாமல், தினந்தோறும், இருபத்து நாலு மணிநேரமும், காவலிருந்து பார்த்துக்கொள்ளுங்கள். இதை எப்போதும் ஞாபகப்படுத்திக்கொண்டே இருங்கள். கவனித்துக்கொண்டே இருப்பது போதுமானது. நீங்கள் கவனித்தால் அது மறுபடியும் எழும்பாது. கவனித்துக்கொண்டேயிருப்பதும், தன்னறிவும் பழக்கத்தை உடைத்துவிடும்.

இரண்டாவது மொழி: இயல்பாக வாழு. மனிதனின் முழு நடத்தை கட்டுப்பாட்டில் விளைந்ததாக, செயற்கையானதாக இருக்கிறது. நாம் எப்பொழுதும் பொய்யான ஆடையையே தரித்துக்கொள்கிறோம். இந்த போலித்தனத்தின் காரணமாக நாம் படிப்படியாக நம் உண்மைத்தன்மையை மறந்துவிடுகிறோம். இந்தப் பொய்யான தோலை உரித்து தூர எறியுங்கள். நாம் இங்கு ஒரு நாடகத்தை அரங்கேற்ற கூடியிருக்கவில்லை. மாறாக, நாம் உண்மையான நம்மைப் பார்க்கவும், அறியவுமே கூடியுள்ளோம். நடிகர்கள் எப்படி அரங்கேற்றம் முடிந்தவுடன் தங்கள் வேஷங்களைக் கலைத்து ஒதுக்கி எடுத்து வைத்துவிடுகிறார்களோ, அதுப்போல, இந்த ஐந்து நாட்களும் உங்களின் போலி முகங்களை கண்டிப்பாக கழற்றி ஒதுக்கி வைத்துவிட வேண்டும். அடிப்படையாகவும், இயல்பாகவும் உங்களுக்குள் இருப்பது வெளியே வர அனுமதியுங்கள். அதில் வாழுங்கள். ஒருவரின் முன்னேற்றம், ஒருவரின் பாதை இயல்பாக சாதாரணமாக வாழ்வதிலிருந்தே பிறக்கும். இந்த “சாதனா கேம்ப்” காலம் முழுவதும் நீங்கள் எந்த மட்டத்திலுமிருப்பவரல்ல, எந்தப் பதவியிலுமில்லை, எந்த மதிப்பையும் உடையவரல்ல, என்பதை உணர்ந்திருங்கள். இந்த முகமூடிகளையெல்லாம் உங்களிடமிருந்து கழற்றுங்கள். நீங்கள் வெறும் நீங்கள்தான், பெயரற்ற, மதிப்பற்ற, சாதியற்ற, மதமற்ற, குடும்பமற்ற ஒரு மிகச் சாதாரண மனித உயிர் நீங்கள். பெயர் தெரியாத ஒரு மனிதன், ஒரு மிகச் சாதாரணமான தனி நபர் நீங்கள். இது போன்று வாழ நீங்கள் பயில வேண்டும். ஏனெனில், உண்மையான நீங்கள் இதுதான்.

மூன்றாவது மொழி: ஒருவனாக வாழுங்கள். ஒருவருடைய முன்னேற்றம் முழுமையான ஒருமையிலிருந்துதான் பிறக்கிறது. ஒருவன் முற்றிலும் ஒருவனாக இருக்கும்போதுதான் பிறக்கிறது. ஆனால், பொதுவாக மனிதன் ஒருபோதும் ஒருவனாக இருப்பதில்லை. அவன் எப்பொழுதும் மற்றவர்களால் சூழப்பட்டிருக்கிறான். வெளியே அவனைச் சுற்றி ஒரு கும்பல் இல்லையென்றாலும், உள்ளே அவன் ஒரு கும்பலின் நடுவேதான் இருக்கிறான். இந்தக் கூட்டம் கலைக்கப்பட வேண்டும்.

உள்ளே, உங்களுக்குள் கும்பலாக பல விஷயங்கள் சேர அனுமதிக்காதீர்கள். இது வெளியேயும் பொருந்தும், நீங்கள் ஒருவர் மட்டுமே இந்தக் கேம்பில் இருப்பதுப்போல நீங்கள் உங்களை வைத்தே வாழுங்கள். நீங்கள் வேறு எவருடனும் தொடர்பு வைத்துக்கொள்ளத் தேவையில்லை. நீங்கள் இப்படிப்பட்ட எண்ணமுடியாத தொடர்புகளுக்கு நடுவே உங்களையே மறந்துவிட்டீர்கள். பகைவன், நண்பன், தகப்பன், மகன், கணவன், மனைவி, போன்ற இந்த எல்லா தொடர்புகளும் உங்களையே விழுங்கிவிட்டன. இதன் நடுவே உங்களுக்குள் உங்களையே கண்டு கொள்ளவோ, அறிந்து கொள்ளவோ உங்களால் முடியவில்லை.

உங்களுடைய இந்த உறவுகளைக் கடந்து நீங்கள் யார் என்று, எப்பொழுதாவது கற்பனை செய்து பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் எப்பொழுதாவது இந்த உறவுகளின் பிடியை உதறித்தள்ளிவிட்டு, அவற்றிலிருந்து பிரிந்து நின்று உங்களைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த பந்தங்களிலிருந்தெல்லாம், உங்களை அறுத்துக்கொள்ளுங்கள், நீங்கள் உங்கள் பெற்றோர்களின் மகனல்ல, உங்கள் மனைவியின் கணவனல்ல, உங்கள் குழந்தையின் தந்தையல்ல, உங்கள் நண்பர்களின் நண்பனல்ல, உங்கள் எதிரிகளின் எதிரியல்ல என்பதை அறிந்துக்கொள்ளுங்கள். இவற்றின் பின் எது மீதமிருக்கிறதோ, அதுவே, நீங்கள். இந்த கேம்ப் காலத்தில் நீங்கள் ஒருவராக இந்தத்தன்மையில் வாழ வேண்டும்.

இந்தக் கருத்துள்ள மொழிகளைக் கடைபிடித்தால் அமைதியை அடைவதற்கும், சத்தியத்தை உணருவதற்குமான, உங்கள் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான மனநிலையை நீங்கள் பெறமுடியும். இந்த மூன்று கருத்துள்ள மொழிகளைத் தவிரவும், நான் உங்களுக்கு நாளை நாம் செய்யப்போகும் இருவகை தியானங்களைப் பற்றியும் விளக்க விரும்புகிறேன்.

முதல் தியானம், காலை நேரத்திற்கானது. இந்த தியானத்தின்போது நீங்கள் உங்கள் முதுகுத்தண்டை நேராக வைத்திருங்கள்.

உங்கள் கண்களை மூடிக்கொண்டு உங்கள் கழுத்தை நிமிர்த்திக்கொள்ளுங்கள். உங்கள் உதடுகள் மூடியும், உங்கள் நாக்கு மேலேத் தொட்டபடியும் இருக்கட்டும்.

மெதுவாக, ஆனால், ஆழமாக மூச்சு விடுங்கள். உங்கள் கவனம் தொப்புளில் இருக்கட்டும். மூச்சு விடுவதால் தொப்புளில் ஏற்படும் சிறு அதிர்வைப் பற்றிய தன்னறிவோடு இருங்கள். இதுதான் நீங்கள் செய்யவேண்டிய அனைத்தும். இது மனதை அமைதிப்படுத்தும். எண்ணங்களை நிறுத்தும். இந்த சூன்யத்திலிருந்து நீங்கள் உள்ளே செல்லத் துவங்குவீர்கள்.

இரண்டாவது தியானம் இரவு நேரத்திற்கானது. உங்கள் உடலை தரையில் பரத்துங்கள். கை, கால்களை முழுமையாக ஓய்த்துவிடுங்கள். கண்களை மூடிக்கொண்டு ஒரு இரண்டு நிமிட நேரத்திற்கு உடல் ஓய்வதாக, உங்களுக்கு நீங்களே உரைத்துக்கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக உடல் ஓய்வடையும். பின் இரண்டு நிமிட நேரத்திற்கு, உங்கள் மூச்சு மெதுவாக அசையாமல் இருப்பதாக, உங்களுக்கு நீங்களே உரைத்துக்கொள்ளுங்கள். மூச்சு சப்தமின்றி ஆகிவிடும். கடைசியாக மறுபடியும், இரண்டு நிமிடத்திற்கு எண்ணங்கள் நின்றுவிட்டதாக, உங்களுக்கு நீங்களே உரைத்துக்கொள்ளுங்கள். இந்த உறுதியான தன் - உரையாடல் முழுமையான ஓய்வுக்கும், சூன்யத்திற்கும் இட்டுச் செல்லும். மனம் முழுமையாக அமைதி படர்ந்தநிலையில், உங்கள் உள் - தன்மையில் விழித்தெழுங்கள். சலனமற்ற நிலைக்கு சாட்சியாய் இருங்கள். இந்த சாட்சியாய் இருந்து கொண்டிருத்தல், உங்களை உங்களிடம் கொண்டு சேர்க்கும்.

இந்த இரண்டு தியானங்களையும் நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும். ஆனால், உண்மையில் இவை செயற்கையான வழிமுறைகள். மேலும், நீங்கள் அவைகளைப் பற்றிக்கொள்ளவும் கூடாது. அவைகளின் உதவியால் மனதின் ஓய்ச்சலற்ற நிலை கரைந்துப்போகிறது. எப்படி நமக்கு ஏறி முடித்தப் பிறகு ஏணி தேவையில்லையோ, அதுப்போலவே ஒருநாள் இந்த வழிமுறைகளையும் நாம் விட்டுவிட வேண்டும். தியானம் செய்வது எந்தக் கணத்தில் தேவையற்றதாகிறதோ, அப்பொழுதுதான் தியானம் முழுமையடைகிறது. இந்த நிலைதான் “சமாதி”.

இப்பொழுது இரவு நன்கு ஏறிவிட்டது. வானம் நட்சத்திரங்களால் நிறைந்திருக்கிறது. அந்த மரங்களும் அந்த பள்ளத்தாக்கும் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டன. நாமும் இப்பொழுது உறங்கச் செல்வோம். எல்லாம் எவ்வளவு சலனமற்றும், அமைதியாகவும் இருக்கின்றன! நாமும் இந்த அமைதியில் கலப்போம். ஆழமான உறக்கத்தில், கனவுகளற்ற உறக்கத்தில் கடவுள் வசிக்கும் இடத்திற்கே நாமும் செல்கிறோம். இது இயல்பானது. இயற்கை நமக்குத் தந்திருக்கும் உணர்வற்ற சமாதி - நிலை. இந்த “சாதனா கேம்ப்” உதவியால், நாமும் அதே இடத்தை அடைய முடியும். ஆனால், அப்போது நாம் உள் உணர்வோடும், தன்னறிவோடும் இருப்போம். இதுதான் வித்தியாசம். ஆனால், இது

மிகப்பெரிய வித்தியாசமல்லவா. முதலில் சொன்னதில், நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறோம். பின் சொன்னதில் நாம் முழு விழிப்போடு இருக்கிறோம்.

நாம் சமாதி நிலையை அடைவோம் என்ற முழு நம்பிக்கையோடு நாம் இப்போது உறங்குவதற்காக கலைந்து செல்வோம். நமது நம்பிக்கைகள் உறுதியோடும், சரியான முயற்சியோடும் இணைந்ததாக இருக்கும்பொழுது அவை நிறைவேறுவது திண்ணம்.

கடவுள் நமக்கு வழி காட்டட்டும். இது ஒன்றே எனது பிரார்த்தனை.

மூலம் : The Perfect Way

## உங்களுக்குச் சொந்தமான மலர்களைக் கொண்டு வாருங்கள்.

அன்புள்ள ஓஷோ,

நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே என்னை ஏற்றுக்கொள்ள நான் ஏன் பயப்படுகிறேன்?

(Why I am Scard to accept myself the way I am?)

கல்யாண் மிட்டோ, ஒவ்வொருவரும் இதுமாதிரியான நிலையில்தான் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எந்த வழியில் இருக்கின்றார்களோ, அப்படியே அதை ஏற்றுக்கொள்ள பயந்துகொண்டுதான் இருக்கிறார்கள். கடந்த பல நூற்றாண்டுகளாக உள்ள மனித வர்க்கம் இப்படித்தான், ஒவ்வொரு குழந்தையையும் கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

இந்த உபாயம் மிக எளிதானது. ஆனால், ஆபத்தானது. இந்த உபாயம் உன்னை உதவாக்கரையானவனாக ஆக்கி, நீ வேறு யாரோ ஒருவர் மாதிரி ஆக வேண்டுமென்ற, இலட்சியத்தைக் கொடுப்பதற்காக உள்ளது. ஒரு கிறிஸ்த்துவன் ஒரு இயேசுவாக முயற்சித்தல், ஒரு புத்த பிட்சு ஒரு புத்தபிரானாக முயற்சித்தல். இந்த உபாயம் வெகு கெட்டிக்காரத்தனமாக உன்னை, உன்னிடமிருந்து விலகிச் செல்ல வழி வகுக்கிறது. இந்த உபாயத்தைக் கையாள்பவர்களே, இந்த உண்மையை அறியாதவர்களாக இருக்கக்கூடும்.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டப் பொழுது இந்த மனித வர்க்கத்திற்குச் சொன்ன கடைசி வார்த்தைகள் அனேக வழிகளில் மிகவும் முக்கியமானது. அவர் கடவுளிடம் வேண்டிக்கொண்டார். "பரமண்டலத்திலிருக்கும் பிதாவே, இந்த மக்களை மன்னித்துவிடுங்கள். ஏனெனில், இவர்கள் தாங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை உணராதவர்களாக இருக்கிறார்கள்".

இந்த வாசகம் ஒவ்வொரு தந்தைக்கும், ஒவ்வொரு தாய்க்கும், ஒவ்வொரு ஆசிரியருக்கும், ஒவ்வொரு மத போதகருக்கும் பொருந்தும். - இவர்கள்தான் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனையும், ஒரு குறிப்பிட்ட வழியில் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள். இவர்கள்தான் பண்பாடு, சமூகம், நாகரீகம் இவைகளை நடத்திச் செல்லுபவர்கள். இவர்களும், தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாதவர்களாக இருக்கக்கூடும். இவர்கள் உனக்கு நல்லது செய்வதாக எண்ணிக்கொண்டு இப்படி செய்திருக்கலாம். நான் அவர்களுடைய நோக்கத்தைப் பற்றி சந்தேகப்படவில்லை. ஆனால், அவர்கள் அறியாதவர்கள், அவர்களுக்கு தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை உணராதவர்கள் என்பதைத்தான் நீ கண்டுகொள்ள வேண்டுமென விரும்புகிறேன்.

இந்த அறியாத சமுதாயத்தின், கைகளிலே ஒரு சிறு குழந்தை பிறக்கிறது. இந்த அறியாத, உணர்வற்ற சமூகம் அதனுடைய கொள்கைகள், கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு குழந்தையை உருவாக்குகிறது. ஆனால், அது ஒரு முக்கியமான அடிப்படையான விஷயத்தை மறந்துவிடுகிறது. அதாவது, அந்தக் குழந்தைக்குள் இயற்கையாகவே மறைந்து கிடக்கும் சக்திகளைப்பற்றி எவ்வித கவனமும் எடுத்துக்கொள்வதில்லை. அவன் ஒரு இயேசுவாகவோ, அல்லது ஒரு புத்தராகவோ அல்லது ஒரு கிருஷ்ணராகவோ வளர வேண்டுமென்பதில்லை. அவன் அவனாக இருக்கவே வளரவேண்டும்.

அவன், அவனாகவே வளராமலிருக்கும் பட்சத்தில் அவனுடைய வாழ்க்கை முழுவதும் துன்பத்துடன் கூடியதாகவே இருக்கும். அவனுடைய வாழ்க்கையே நரகமாக ஆகிவிடுகிறது, தவறு எங்கு நேர்ந்தது என்று அவனுக்கு தெரிவதில்லை. அவன் ஆரம்பத்திலிருந்தே தவறான திசையில் திருப்பப்பட்டுவிட்டான்.

அவனை தவறான திசையில் இட்டுச்சென்றவர்கள்தான், இவனை மிகவும் நேசிப்பதாக அவன் எண்ணுவான். இவர்கள்தான், அவனுடைய நலத்தைப் பேணிக்காப்பவர்களாக கருதுவான். ஆனால், உண்மையில் பார்க்கப்போனால், இவர்கள்தான் அவனுடைய பெரிய எதிரிகளாவார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மதபோதகர்கள், சமூகத்தின் தலைவர்கள், இவர்களெல்லோருமே, இப்பூவுலகில் இதுவரை பிறந்த ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் பெரிய எதிரிகளாவார்கள்.

விழிப்புணர்வின்றி, அவர்கள் உன்னை உன்னிடமிருந்து திசை திருப்பிவிடுகின்றனர்.

இவ்வாறு, உன்னை திசை திருப்ப, நீ ஒரு வகையில் மிகவும் கட்டுப்பட்டவனாக ஆக்கப்படுகிறாய். அதாவது, நீ இருக்கும் இந்த நிலையில், நீ எதற்கும் லாயக்கில்லாதவன், உபயோகமில்லாதவன், தகுதி இல்லாதவனாக, நீயே உன்னைப் பற்றி இவ்விதம் கணிக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டுள்ளாய். மற்றவர்கள் சொல்லுகிற சட்டத்திட்டங்களைப் பின்பற்றினால், நீ மிகுந்த செல்வாக்குள்ளவனாக, கௌரவமுள்ளவனாக ஆகிவிடலாம் என்று எண்ணுகிறாய். நீ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி செயல்பட வல்லவனாக இருக்கும் பட்சத்தில், இந்த சமூகத்தின் மிகவும் கௌரவிக்கப்படத்தக்க மனிதனாக ஆகிவிடலாம்.

ஆனால், நீ உண்மையாக, நேர்மையாக நாணயமுள்ளவனாக, நீயாக இருக்கவேண்டுமென்று நினைத்தால், உன்னை எல்லாரும் கண்டனம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். இவ்வாறு மற்றவர்களால் கண்டனம் செய்யப்படுவதற்கு, நீ மிகவும் தைரியமுள்ளவனாக இருக்க வேண்டும். “நான் வேறு யார் போலவும் இருக்க மாட்டேன், நல்லதோ, கெட்டதோ அனுமதிப்பார்களோ, மாட்டார்களோ, கௌரவமிக்கதோ, அல்லது கௌரவமில்லாததோ, இவைகளைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் நான் நானாகவே இருப்பேன் என்னைத்தவிர, வேறு யாராகவும் இருக்க மாட்டேன்” என்று சொல்ல ஒரு மனிதனுக்கு இரும்பினால் ஆன முதுகெலும்பு தேவைப்படுகிறது.

இதற்கு வாழ்க்கையைப்பற்றி மிகவும் பெரிய புரட்சிகரமான நோக்கம் தேவைப்படுகிறது. ஒரு மனிதன் வாழ்வின் துன்பச்சக்கரத்திலிருந்து வெளியேற விரும்பினால், இந்த அடிப்படைப் புரட்சி தேவைப்படுகிறது.

நீ என்னைக் கேட்கிறாய், “நான் எப்படி இருக்கிறேனோ, அப்படியே என்னை ஏற்றுக்கொள்ள நான் ஏன் பயப்படுகிறேன்”, ஏனெனில், நீ இப்பொழுது இருக்கின்றபடி இருப்பதை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நீ இருக்கின்றபடியே, நீ உன்னை ஏற்றுக்கொண்டால், நீ மற்றவர்களால் ஒதுக்கப்பட்டுவிடுவாய் என்ற பயத்தை, எண்ணத்தை அவர்கள் உருவாக்கிவிட்டார்கள்.

ஒன்று நீ உன்னை அப்படியே ஏற்றுக்கொண்டு, மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவனாக இருக்கவேண்டும். அல்லது, நீ உன்னை ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றவர்களால், இந்த சமூகத்தினால் மதிப்பை, செல்வாக்கை சம்பாதித்துக் கொள்பவனாக இருக்க வேண்டும். இதுதான் இதுவரை இப்பூவுலகில்

தோன்றிய சமூகம், நாகரீகத்தின் முழுமையான நிபந்தனையாகும். உண்மையில் இதைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினமானது.

பெரும்பாலானோர் சமூகத்தின் மதிப்பையும், செல்வாக்கையும் உடையவர்களாகவே இருக்க விரும்புவார்கள். ஆனால், இந்த செல்வாக்கையும், மதிப்பையும் பெற நீ மிகவும் படபடப்புள்ளவனாக, வேதனையுள்ளவனாக, ஒரு அர்த்தமில்லாத வாழ்க்கை வாழவேண்டியிருக்கிறது. அங்கு ஏதும் வளர்ச்சி அடைவதில்லை, அங்கு ஒன்றும் பசுமையாக இருப்பதில்லை, அங்கு ஒரு மலரும் மலர்வதில்லை. ஆனால், நீ நடந்துகொண்டே இருக்கவேண்டும், எவ்வளவு தூரம் நடந்துசென்றாலும் நீ பாலைவனச்சோலையைக் காணப்போவதில்லை.

எனக்கு லியோடால்ஸ்டாயைப்பற்றிய ஞாபகம் வருகிறது. சில நாட்களுக்குமுன் மாஸ்கோவில் ஒரு பெரிய புத்தகக்கண்காட்சி நடைபெற்றது. அங்கு “லானி” என்ற என்னுடைய சன்னியாசி இருந்தாள். அவளுடன் என் ரஷ்ய சன்னியாசிகளும் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சிரியப்பட்டுப்போனார்கள். ஏனெனில் உலகப் புகழ்பெற்ற புத்தகக்கம்பெனிகளால் நடத்தப்பட்ட அரங்கத்தில் உள்ள கூட்டத்தைவிட, நம் புத்தக அரங்கத்தில் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. எந்த நேரத்தில் கணக்கெடுத்தாலும் நூற்றுக்கு அதிகமானோர் இருந்தனர்.

ஒரு வயோதிகர் என்னுடைய புகைப்படத்தைப் பார்த்துவிட்டு “லானி”யைக் கேட்டார். இவர் லியோடால்ஸ்டாயைப்போல் இருக்கிறாரே? என்னுடைய தாடியைப் பார்த்துவிட்டு இப்படிக் கேட்டிருக்கிறார். லியோடால்ஸ்டாய்க்கு அழகான தாடி இருந்தது.

டால்ஸ்டாய்க்கு அடிக்கடி ஒரு கனவு வருவதுண்டு. இந்தக் கனவுக்கு பல வழிகளில் பயின்றுவரும் மனோதத்துவ வல்லுனர்கள் அர்த்தம் சொல்லிவருகிறார்கள். இந்தக கனவு மிகவும் வேநோதமானது. ஆனால், எனக்கு அப்படித் தோன்றவில்லை. என்னைப் பொறுத்தவரை இதற்கு அர்த்தம் சொல்ல மனோதத்துவம் தேவையில்லை. எளிமையான பொதுஅறிவே போதுமானது. இந்தக் கனவு ஒவ்வொரு நாள்இரவும் பல வருடங்களுக்கு வந்து கொண்டிருந்தது. இந்த வினோதமான கனவு வரும்பொழுது, டால்ஸ்டாய் உடனடியாய் எழுந்துவிடுவார், உடம்பு முழுவதும் வியர்த்துவிடும், கனவில் எவ்வித பயங்கரமும் இல்லையென்றாலும், அவர் திகில் அடைந்துவிடுவார்.

நீ இந்தக் கனவின் அர்தமற்ற தன்மையை உணர்ந்து கொள்ளாததால்தான் இவ்வித பயம் ஏற்படுகிறது. இந்தக் கனவு எல்லோருடைய வாழ்க்கைக்கு அடையாளமாக இருக்கிறது. எந்த மனோத்த்துவ வல்லுனரும் இந்தக் கனவு எப்படிப்பட்டது என்று

கண்டு சொல்லமுடியவில்லை, ஏனெனில் இதற்கு இணையானது இருந்ததில்லை. இது முற்றிலும் எதிர்பாராதது.

இந்தக் கனவு ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. ஒரு பெரிய பாலைவனம், கண்ணுக்கு எட்டிய தூரம் முழுவதும் பாலைவனம்தான். அங்கு இரண்டு மிதியடிகள், டால்ஸ்டாய் அவைகள் இரண்டும் அவருடையதாக உணர்ந்தார். அவைகள் இரண்டும் நடந்து கொண்டிருந்தன. ஆனால், அவர் அங்கு இல்லை. வெறும் மிதியடிகள் மட்டுமே அதற்குரிய ஓசையை மணலில் எழுப்பிக்கொண்டு போய்க்கொண்டிருந்தன. அது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஏனெனில், பாலைவனத்திற்கு முடிவே இல்லாமலிருக்கிறது. அவைகள் எங்கும் போய்ச் சேரவில்லை. பின்புறம் பார்த்தால் மைல்கணக்கிறகு அவர் மிதியடிகளின் தடத்தைப் பார்க்க முடிகிறது. முன்புறம் பார்த்தால் மிதியடிகள் நடந்து முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

சாதாரணமாக இதை ஒரு பயங்கரக் கனவாக நீ நினைக்கமாட்டாய். ஆனால், இதைப்பற்றி இன்னும் சற்று நெருங்கி சிந்தித்தால் - ஒவ்வொரு நாள், இரவும் இதேப்போன்றே, ஒன்றுக்கும் உபயோகமற்ற, எந்த இடத்திற்கும் போய்ச் சேராத ஒரு கனவை மீண்டும், மீண்டும் கண்டுக்கொண்டிருந்தால், - போய்ச் சேருமிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மிதியடிகளில் ஒருவரையும் காணோம் - அவைகள் காலியாக இருக்கின்றன.

டால்ஸ்டாய் அவர் இருந்த காலத்தில் ரஷ்யாவில் உள்ள மிகவும் பிரபலமான மனோதத்துவ வல்லுனர்களிடம் தன் கனவைப்பற்றிச் சொன்னார். ஒருவராலும் இந்தக் கனவு எதைச் சுட்டிக்காட்டுகிறது என்று சொல்லமுடியவில்லை. ஏனெனில், இதுமாதிரி அல்லது இந்தக் கனவைப் போன்று சிறிதளவாவது ஒத்திருக்கும், வேறு கனவைப் பற்றிய விளக்கம் உள்ள புத்தகங்கள் ஏதுமில்லை. இந்தக் கனவு மிகவும் தனிப்பட்டது.

ஆனால், என்னைப் பொறுத்தவரை இதில் மனோதத்துவ பாகுபாடுகளுக்கான கேள்விக்கே இடமில்லை. இது ஒரு சாதாரண கனவு, இது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் பிரதிபலிக்கிறது. நீ ஒரு பாலைவனத்தில் நடந்துகொண்டிருக்கிறாய், ஏனெனில், நீ எந்த இலக்கையும் நோக்கி நடக்கவில்லை, இதுதான் உன் ஆத்மாவின் இயற்கையுமாகும். நீ எங்கேயும் சென்று அடையப்போவதில்லை. நீ எவ்வளவுக்கெவ்வளவு அதிக தூரம் செல்லுகின்றாயோ, அவ்வளவு தூரம் நீ உன்னை விட்டு விலகிச் செல்லுகின்றாய். நீ எவ்வளவுக்கெவ்வளவு ஏதேனும் அர்த்தத்தை தேடிக்கொண்டிருக்கிறாயோ.... அவ்வளவுக்கவ்வளவு நீ வெறும் காலித்தன்மையைத்தான் காண்பாய். இதுதான்

அர்த்தம். மனிதன் காணாமல் போய்விட்டான், மிதியடிகள் மட்டுமே நடந்து செல்கின்றன.

நீ எதைச் செய்துகொண்டிருக்கிறாயோ, அதில் நீ இல்லை.

நீ உன் ஆத்மாவில் இல்லை.

நீ எதில் இருப்பதாக பாசாங்கு செய்கிறாயோ, அதில் நீ இல்லை. இது முழுவதும் வெறுமையானது, சுத்தமான பாசாங்குத்தனம். ஆனால், இதன்மூலம் ஒரு சாதாரண உபாயம் உருவாக்கப்பட்டுவிட்டது. நீ இருக்கின்றபடியே, இருப்பது ஒன்றுக்கும் தகுதி இல்லாமையாகும். இந்த உலகில் இருப்பதற்கே, தகுதியற்றவனாகிவிடுவாய் என்று ஒவ்வொருவருக்கும் சொல்லப்படுகிறது. நீ இருக்கின்றபடியே இருப்பது மிகவும் அசிங்கமானது. தற்செயலானது. நீ இருக்கின்றபடியே இருப்பதைப் பார்த்து நீ வெட்கமடைய வேண்டும். ஏனெனில், உன்னை மதிக்கக்கூடிய கௌரவிக்கக்கூடிய எதுவுமே உன்னிடமில்லை.

இயற்கையாகவே, ஒவ்வொருக் குழந்தையும், மற்றவர்களால் மதிக்கப்படக்கூடிய காரியங்களையே செய்ய ஆரம்பிக்கின்றனர். அவன் வளர வளர பொய்யனாக ஆகிவிடுகிறான். அவன் வளர வளர வேடக்காரனாக, அவனுடைய உண்மைத்தின்மையிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்று விடுகிறான். அவன் ஆத்மாவை விட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிடுகிறான். பிறகு பயம் ஆரம்பமாகிறது.

எப்பொழுதெல்லாம், உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டாகும்பொழுது, உடனடியாக பயமும் அதைத் தொடர ஆரம்பித்துவிடுகிறது. நீ உன்னைப்பற்றித் தெரிந்துக்கொள்ளும் பொழுது, நீ உன்மீது கொண்டுள்ள மதிப்பை இழக்க நேரிடக்கூடுமாதலால், உனக்கு பயம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் மீதும், இந்தச் சமூகம் மிகவும் பெரிய பாரமாக உள்ளது. இது உன்னை வெகு அதிகமான அளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது, நீயே இந்தக் கட்டுப்பாடுகளை உனக்காக ஏற்படுத்திக்கொண்டு, நீ உன் ஆத்மாவுக்கு, எதிராக, நீ இந்த சமூகத்தின் ஒரு பகுதி என்று எண்ண ஆரம்பித்து விடுகிறாய். நீ ஒரு கிறிஸ்தவனாக ஆகிவிடுகிறாய். நீ ஒரு இந்துவாக ஆகிவிடுகிறாய். நீ ஒரு முகமதியனாக ஆகிவிடுகிறாய், நீ ஒரு மனிதனாக எவ்வித மதமுமின்றி, எவ்வித அரசியலுமின்றி, எவ்வித தேசமுமின்றி, பிறந்ததை முற்றிலுமாக மறந்துவிடுகிறாய்.

நீ ஒரு வளர்சியடையக்கூடிய வாய்ப்புளவனாகப் பிறந்திருக்கிறாய்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த “சந்நியாஸ்” என்பது எது நேரிடினும், எதை இழப்பினும், உன்னை மீண்டும் உன்னிடம் கொண்டு சேர்ப்பதுதான், நீ உன்னிடமே திரும்பி வரவேண்டும். நீ அங்கே இயேசுநாதரைக் காணப்போவதில்லை, அது தேவையுமில்லை. ஒரு ஏசுநாதரே போதும். நீ புத்தரைக் காணப்போவதில்லை. அநேக புத்தர்கள் தோன்றிவிட்டால், மிகுந்த அலுப்புத் தட்டிவிடும்.

இந்த உலகம், இந்த இருப்புத்தன்மை ஒரே மாதிரியான மனிதனை மீண்டும் உருவாக்க விரும்புவதில்லை. அது எப்பொழுதும், ஏதேனும் புதிதாக ஒன்றை ஒவ்வொருவரிடமும் கொண்டுவருகிறது. ஒரு புதிய சக்தியை, ஒரு புதிய வாய்ப்பை, ஒரு புதிய கோணத்தை, ஒரு புதிய உயரத்தை உருவாக்குகிறது.

இந்தச் சமூகம், இந்த நாகரீகம், இந்தப் பண்பாடு இவைகளுக்கெல்லாம் எதிராக புரட்சி செய்வதே “சந்நியாஸ்” ஆகும். ஏனெனில், இவைகளெல்லாம் தனிப்பட்ட நபருக்கு எதிரானதாக இருக்கிறது.

நான் முழுக்க முழுக்க தனிப்பட்ட நபருக்காகவே இருக்கிறேன். வெறும் ஒரு தனி நபருக்காக மட்டுமே. ஒவ்வொரு சமூகத்தையும், ஒவ்வொரு மதத்தையும் - ஒவ்வொரு நாகரீகத்தையும் இழக்கத் தயாராக இருக்கிறேன். தனிப்பட நபர்தான் மிகவும் முக்கியமானவர். ஏனெனில் தனிப்பட்டவர்தான் இந்த உலகின், இருப்புத் தன்மையின் பகுதியாக இருக்கிறார்.

நீ உன்னுடைய பயத்தைக் கைவிடவேண்டும். அது உன்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ளது. அது இயற்கையானதல்ல. ஒவ்வொரு சிறு குழந்தையையும் கவனி. அது அப்படியே அதை ஏற்றுக்கொள்கிறது. அங்கு எவ்விதகுற்ற உணர்வுமில்லை. அதற்கு வேறு யாராகவாவது, ஆகவேண்டுமென்ற ஆசையும் கிடையாது. ஆனால், ஒவ்வொருவரும் வளர வளர திசைமாறிப் போய்விடுகின்றார்கள். நீ மீண்டும் உன்னிடம் வருவதற்கு அதிகமாக தைரியத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இந்த முழு சமூகமும் உன்னை தடை செய்யும். உன்னை குற்றவாளியாக்கிவிடும். பொய்மையானதாகவும், துன்பத்துடன் கூடியதாகவும், யாரோ வேறு ஒருவரைப்போல் வாழ்வதைக் காட்டிலும், இந்த உலகம் முழுவதும் உன்னைக் குற்றவாளி என்று சொல்வது மிகவும் நல்லது.

நீ ஒரு பேரானந்தமான வாழ்க்கையை வாழலாம். இதற்கு இருவழிகள் கிடையாது. ஒரே ஒரு வழி மட்டும்தான் உள்ளது. அந்த ஒரே வழி எப்படியிருந்தாலும் நீ நீயாக இருப்பதுதான்.

அங்கிருந்துதான், நீ உன்னை அப்படியே ஏற்றுக்கொள்ளுதலிலிருந்துதான், நீ வளர்ச்சி அடைய ஆரம்பிப்பாய். நீ உனக்குச் சொந்தமான மலர்களைக் கொண்டுவருவாய் - கிறிஸ்துவனாக இல்லாமல், புத்தமதத்தினனாக இல்லாமல்,

இந்துவாக இல்லாமல் நீ உனக்குச் சொந்தமான உனக்குரியதை இந்த உலகுக்குக் கொடுக்கலாம்.

மிகுந்த கூட்டத்துடன், மிகப்பெரிய போட்டியில் செல்வதிலிருந்து விலகி தனியாகச் செல்வதற்கு மிகுந்த தைரியம் தேவைப்படுகிறது. கூட்டத்துடன் இருப்பதில் மிகுந்த சௌகரியம் இருக்கிறது. தனியாகச் செல்லும் ஒருவர் மிகவும் பயந்துவிடுகிறார். நாம் தனிமையில் செல்லும் பொழுது இந்த மனம் சதா, இந்தக் கூட்டம் தவறான வழியில் செல்லாது என்று வாதிட்டுக்கொண்டே இருக்கும். இந்தக் கூட்டத்துடன் இருப்பதே நல்லது என்றும், தவறாகிவிட்டால் அதற்கு நீ பொறுப்பு அல்ல என்றும், சொல்லிக்கொண்டே இருக்கும்.

ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்கள். ஆனால், எந்த க்ஷணத்தில் நீ கூட்டத்தைவிட்டு விலகிச் செல்லுகின்றாயோ, அப்பொழுது உன்னுடைய பொறுப்புகளையெல்லாம், நீயே உன் கைகளில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏதும் தவறு நிகழ்ந்துவிட்டால், அதற்கு நீதான் பொறுப்பு ஆகிறாய்.

ஆனால், ஒரு அடிப்படையான விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள். ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் பொறுப்பு என்று இருந்தால் அதன் மறுபக்கம் சுதந்திரம் இருக்கிறது. நீ இந்த இரண்டையும் வைத்துக்கொள்ளலாம், அல்லது இந்த இரண்டையும் விட்டுவிடலாம். உனக்குச் சுதந்திரமும் கிடையாது. சுதந்திரம் இல்லாமல் வளர்ச்சி கிடையாது.

ஆகவே, நீ உன்னுடைய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். முழு சுதந்திரத்துடன் வாழ வேண்டும். அப்பொழுதுதான் நீ எப்படி இருந்தாலும் நீ வளர்ச்சி அடையமுடியும். நீ ஒரு அழகான ரோஜா மலராக ஆகலாம், அல்லது மல்லிகையாக ஆகலாம் அல்லது பெயர் தெரியாத ஒரு காட்டுபுஷ்பமாக ஆகலாம். ஆனால், ஒன்று நிச்சயம். நீ என்னவாக ஆனாலும், நீ பேரானந்தம் அடைவாய். நீ முழுவதுமாக மகிழ்ச்சியிலிருப்பாய்.

ஆனால், உனக்கு மரியாதையோ, கௌரவமோ இருக்காது. ஒவ்வொருவரும் உன்னை குற்றவாளிப்போல் ஒதுக்குத் தள்ளிவிடுவார்கள். ஆனால், உன் அந்தரங்கத்திற்குள் நீ பேரானந்தத்தை உணர்வாய். ஆனால் இதை ஒரு சுதந்திரமாக செயல்படுபவனால்தான் உணரமுடியும். சுதந்திரமான தனிநபர்தான், ஒவ்வொரு அடுக்காக தன் உணர்வில் மலர்சியடையமுடியும். இமயமலையின் உயரத்துக்குச் செல்லமுடியும்.

இந்தச்சமூகம், ஒவ்வொருவரையும் பின் தங்கவைத்து விடுகிறது. ஒவ்வொருவரையும் முட்டாளாக ஆக்கிவிடுகிறது. இந்தச் சமூகத்திற்கு முட்டாள்கள்தான் தேவைபடுகிறார்கள். அதற்கு புத்திசாலிகள்

தேவைப்படுவதில்லை. அது புத்திசாலித்தனத்திற்கு மிகவும் பயப்படுகிறது. ஏனெனில், புத்திசாலித்தனம் எப்பொழுதும் அடிமைத்தனத்திற்கு எதிராகவும், மூடப்பழக்கங்களுக்கு எதிராகவும், எல்லாவிதமான முட்டாள்தனங்களுக்கு எதிராகவும், எல்லாவிதமான ஜாதி, சமய, நிற வேறுபாடுகளுக்கு எதிராகவும், கிளர்ந்து எழும். புரட்சி செய்யும்.

புத்திசாலித்தனம் தொடர்ந்து புரட்சிகரமானதாக இருந்துவரும்.

முட்டாள்கள் மட்டுமே கீழ்படிதலுள்ளவர்களாக இருப்பார்கள்.

கடவுள்கூட, ஆதாமை முட்டாளாகவே இருக்கவேண்டுமென்றுதான் விரும்பினார். இப்படி இருந்தால்தான், ஆதாமும், ஏவாளும் கடவுளை வணங்கிக்கொண்டே இருப்பார்கள்.

என்னுடைய பார்வையில் சாத்தான்தான், இந்த உலகில் தோன்றிய முதல் புரட்சிகாரனாக இருக்கிறான், இந்த சாத்தான் கடந்துபோன சரித்திரத்தில் மிகவும் முக்கியமானவனாக இருந்திருக்கிறான். முழு நாகரீகமும், முன்னேற்றமும் இந்த சாத்தானுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது - கடவுளுக்கு இல்லை. கடவுள் முட்டாள்தனமுள்ள ஆதாமையும், ஏவாளையுமே விரும்புகிறார். ஆதாம் கடவுளுக்குக் கீழ்படிந்திருந்தால் இன்றும், ஈதன் தோட்டத்திலுள்ள புற்களைத்தான் நீ தின்று கொண்டிருந்திருக்கக்கூடும்.

மனிதன் முன்னேறி இருக்கிறான். ஏனெனில், அவன் கடவுளுக்கு எதிராக புரட்சி செய்தான். கடவுள் ஒரு நிர்வாக அமைப்பாக இருந்தார். நிர்வாக அமைப்பு, அதிகாரம், சக்தி, ஆதிக்கம் செலுத்துதல் இவைகளுக்கெல்லாம் பிரதிநிதியாக இருந்திருக்கிறார், புத்தி கூர்மையுடையவனை அடிமையாக்க முடியாது. அவன் அடிமையாவதை விட இறந்துபோவதற்கு சம்மதிப்பான். அவனை இஷ்டத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்த முடியாது, அவனை அவனுடைய மையத்திலிருந்து இழுத்துவருவது மிகவும் கடினம்.

புரட்சி செய்யக்கூடிய மதத்தைத்தான் நான் நம்புகிறேன் என்பதை, என்னுடைய மக்கள் உணரவேண்டும். இதைத்தவிர வேறு ஏதும் மதம் இல்லை. இதைத்தவிர, உன்னுள் மறைந்துகிடக்கும் ஆற்றல்கள் வெளிப்பட வாய்ப்பே இல்லை.

“பாடி” என்பவன் அவன் ஊரில் உள்ள வானத்திலிருந்து குதிக்கும் பயிற்சியைக் கற்றுக்கொடுக்கும் சங்கத்தில் சேர்ந்து முதன்முறையாக குதிப்பதற்கு ஆயத்தமானான். எல்லாம் ஒழுங்காக நடந்துக்கொண்டிருந்தது. “பாடி” குதிக்கும் வேளை வந்தது.

“பயிற்சியாளர் கத்தினார்” “அப்படியே நிறுத்து. நீ இன்னும் உன்னுடைய பாராசூட்டை அணியவில்லை”.

அதற்கு “பாடி” சொன்னான், அதனால் பரவாயில்லை, நாம் இப்பொழுது பயிற்சிதானே செய்துக்கொண்டிருக்கிறோம். அப்படித்தானே?

இந்த மாதிரி முட்டாள்கள்தான், சமூகத்திற்குத் தேவைப்படுகிறது. அவர்கள் முற்றிலும் கீழ்படிதலுள்ளவர்களாக இருக்கிறார்கள். மிருகங்கள் அளவுக்கு தாழ்ந்து போகவும் தயாராகிவிடுகிறார்கள்.

உன்னை நீ ஏற்றுக்கொள்ளப் பயப்படாதே. அங்கு தான் உன்னுடைய உண்மையான பொக்கிஷம் இருக்கிறது. அங்குதான் உன்னுடைய வீடு உள்ளது. புத்திமான்கள் என்று சொல்லப்படுபவர்களின் பேச்சுக்கு செவிசாய்க்காதே. அந்த விஷமிடுபவர்கள்தான் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று, அவர்கள் வாழ்க்கையை நாசமாக்கி வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை அழித்துவிட்டார்கள்.

நீ யாராக இருப்பினும், பரவாயில்லை. ஆனால், நீ எப்படி இருக்கிறாயோ, அப்படியே இருக்கவேண்டும். அதுதான் முக்கியம். ஏனெனில், உன்னுடைய வளர்ச்சி அங்கிருந்துதான் ஆரம்பமாகிறது.

தியானிப்பதற்கு சில சூத்திரங்களைச் சொல்லுகின்றேன். இவைகள் உனக்கு தைரியத்தை கொடுக்கலாம். கெட்டிக்காரத்தனத்தைக் கொடுக்கலாம்.

வெவ்வேறு விஷயங்களில் எல்லாருமே அறியாதவர்கள்தான்.

ஆகவே, நீ அறியாதவனாக இருப்பதைப்பற்றிக் கவலைக்கொள்ளாதே. எல்லாருமே அப்படித்தான்.

எல்லாரும் சுதந்திரமானவர்களாகத்தான் பிறந்தார்கள். ஆனால், ஒருசிலர் திருமணம் செய்து கொண்டார்கள். ஆகவே நீ உஷாராக இரு. சுதந்திரம் உன்னுடையதாக இருக்கட்டும்.

எல்லா இன்பங்களிலும் முதன்மையானது மாயை.

இதை ஞாபகத்தில் வைத்துக்கொள். வாழ்க்கையின் வளர்ச்சி சாதாரண இன்பங்களைத் தாண்டிச் செல்கிறது. இன்பம் என்பது முக்கியமானதல்ல. அது உன்னுடைய சருமத்தை சற்று சொறிந்து விடுதல் போலாகும். சிறிது நேரத்திற்கு இன்ப உணர்வைக் கொடுக்கும். இன்னும் சொறிந்துகொண்டே போனால், இரத்தம் வந்துவிடும். பிறகு இன்பம் துன்பமாக மாறிவிடும். உன்னுடைய இன்பத்தை எல்லாம் நீ துன்பமாக மாற்றியது உனக்கே தெரியும்.

உண்மையான கெட்டிக்காரத்தனமுள்ளவன் துன்பமாக மாறாத இன்பத்தையே தேடி அலைகின்றான். நான் பேரானந்தம் என்று சொல்லுவது இந்த இன்பங்களை அல்ல. ஏனெனில், பேரானந்தத்தை அதற்கு எதிராக மாற்ற முடியாது. பேரானந்தத்திற்கு எதிரானது ஏதும் இல்லை.

அழியாததைத்தான் தேடவேண்டும். ஒவ்வொருவரும் இந்த அழியாமையை அனுபவிக்கக்கூடிய தகுதியுடையவர்கள்தான். ஆனால், இந்த உடல் இன்பம், உண்ணும் இன்பம், சிற்றின்பம் இவைகளிலேயே மக்கள் தங்கள் வாழ்க்கையைக் கழித்து தங்களுக்கு கிட்டிய வளர்ச்சி அடையக்கூடிய இந்தச் சிறு காலத்தை வீணடித்துவிடுகிறார்கள்.

ஒரு மனிதன் மன இயல் மருத்துவரிடம் சென்று "என் மனைவியைப் பற்றி மிகவும் கவலைப்படுகின்றேன், அவள் எந்த நேரமும், எதையாவது சாப்பிட்டுக்கொண்டே சோபாவில் அமர்ந்துகொண்டு நாள் முழுவதும் டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டு இருக்கும்போதும், ஐஸ்க்ரீம் அல்லது ஏதாவது தின்பண்டங்களைத் தின்றுகொண்டே இருக்கிறாள். ஏதேனும் தின்பண்டங்கள் இல்லையென்றாலும், சூயிங்கம்மையாவது மென்றுகொண்டே இருக்கிறாள். இப்பொழுது, அவள் அவளுடைய அழகையெல்லாம் இழந்துவிட்டாள். அவள் இப்பொழுது எவ்வித அங்க நெளிவுகளுமின்றி ஒரு தோல் மூட்டையைப் போல் காட்சியளிக்கிறாள், இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

மன இயல் மருத்துவர் சொன்னார் "நீ ஒரு காரியத்தை முயற்சி செய்துபார், நிச்சயம் உனக்கு வெற்றிக்கிட்டும்" என்று சொல்லி ஆடையின்றி அழகான அங்க அமைப்புகளுடன் இருக்கும் ஒரு பெண்ணின் படத்தை அவர் அவனுக்கு கொடுத்தார்.

அதைப்பார்த்த அந்த மனிதன் "அடக்கடவுளே, இந்தப்படம் எனக்கு எந்த விதத்தில் உதவப்போகிறது".

மன இயல் மருத்துவர் கூறினார். "நீ இதில் அடங்கியிருக்கும் உபாயத்தை புரிந்துகொள்ள வேண்டும். உன்னுடைய குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே இந்தப் படத்தை கண்ணுக்குத்தெரியக்கூடிய இடத்தில், உன் மனைவி சுலபமாக எடுத்துவிடாதபடி, நன்றாக ஒட்டிவிடு. அவள் எப்பொழுதெல்லாம், குளிர்சாதனப்பெட்டியைத் திறக்கிறாளோ, அப்பொழுது அந்தப் படத்திலுள்ள அழகிய பெண்ணையும் பார்ப்பாள். தன்னையும் பார்த்துக்கொள்வாள். தனக்கும், அவளுக்கும் உள்ள வித்தியாசத்தை மெல்ல உணரத் தொடங்கி, அவளுடைய எடையை குறைக்கஆரம்பித்துவிடுவாள்".

சுமார் மூன்று அல்லது நான்கு மாதங்கள் வரை இந்த மன இயல் மருத்துவர், இந்த மனிதனை எதிர்பார்த்திருந்தார். அவன் வரவே இல்லை. நேராக மருத்துவரே விஷயம் எப்படி இருக்கிறது என்று பார்க்க, அவனுடைய வீட்டுக்குச் சென்றார், அவரால் நம்பமுடியவில்லை. அந்த மனிதன் சோபாவில் அமர்ந்திருந்தான். அவன் டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டு எதையோ சாப்பிட்டுக்கொண்டிருந்தான். முன் இருந்ததைக்காட்டிலும் மிகவும் பருத்துப்போய் காணப்பட்டான். மருத்துவர் கேட்டார் “என்ன நடந்தது, ஏன் இப்படி ஆகிவிட்டாய்”.

அதற்கு அந்த மனிதன் சொன்னான். எல்லாம் அந்தப்படத்தினால் ஏற்பட்டுவிட்டது. இந்தப்படத்தை பார்க்க வேண்டுமென்ற ஆவலினால், குளிர் சாதனப்பெட்டியைத் திறப்பேன். பெட்டியைத்திறந்தவுடன் அதனுள் இருக்கும் தின்பண்டங்களின் வாடை என்னை அடிக்கடி சாப்பிட வைத்துவிட்டது. ஒவ்வொரு முறையும் குளிர்சாதனப்பெட்டியை திறக்கும்பொழுது எதையாவது சாப்பிடும்படி ஆகிவிடுகிறது. “நீங்கள் சொல்லித்தந்த உபாயம் வேலை செய்தது. ஆனால், அது எதிர்மறையாக வேலை செய்துவிட்டது. எய்தவரையே தாக்கிவிட்டது”.

மக்கள் முட்டாள்தனமாக அவர்களுடைய வாழ்க்கையில் நடந்து கொள்ளுகிறார்கள். ஒருவன் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறான். டாக்டர்கள் அவனைக்கண்டிக்கின்றனர். ஒவ்வொருவரும், இதுமிகவும் ஆபத்தானது என்று அவனை எச்சரிக்கின்றனர். இதில் என்ன சுகம் இருக்கிறது. நாக்கின் ஒரு சிறு பகுதியில் தான் இந்த உணவின் ருசி உணரப்படுகிறது. நாக்கைத் தாண்டியதும் எந்த ருசியும், எந்த சுகமும் உணரப்படுவதில்லை, இது மிகவும் முட்டாள்தனமானது.

ஆனால், மக்கள் இம்மாதிரி இன்பங்களையே தேடி அலைகின்றனர், அவர்கள் தங்கள் பொன்னான காலத்தை வீணடிக்கிறோம் என்பதை உணர்வதில்லை - இந்த மாதிரி சமயங்களில்தான் ஒருவர் கௌதம்புத்தர் ஆகிறார். ஒருவர் சாக்ரடீஸ் ஆகிறார். அவருக்கும் இதே மாதிரி காலம், இதே மாதிரி திறமை இருந்தது. ஆனால், உன்னுடைய இதேமாதிரி காலம், திறமைகளை அரத்தமில்லாத விஷயங்களைத் தேடி வீணடிக்கிறாய்.

ஒரு பெண்ணை தன்னைத்தவிர, மற்ற ஆண்களிடமிருந்து பாதுகாப்பதே தீரச் செயலாக கருதப்படுகிறது.

“நீ சரியான வழியில் சென்றுக்கொண்டிருந்தாலும், அங்கு உட்கார்ந்து விட்டாயானால், நீ நசுக்கப்பட்டுவிடுவாய்”.

“இவ்வுலகில் சும்மா இருப்பதே மிகவும் கடினமான காரியம்.”

ஒவ்வொருவரும், எதையாவது செய்துகொண்டே இருக்கிறார்கள். வெகு சிலருக்கே ஏதேனும் சில நேரங்களில் ஒன்றும் செய்யாமலிருக்கக் கூடிய கலை தெரிந்திருக்கிறது. நீ ஏதும் செய்யாமலிருக்கும்போதுதான், நீ வெகு எளிதாக, தூய்மையாக, உன்னுடைய ஆத்மாவாக இருக்கிறாய். நீ, நீயாக இருந்துகொண்டிருப்பதுவும், நீ எதையாவது செய்து கொண்டிருப்பதுவும், உன் வாழ்க்கையை வாழக்கூடிய இரண்டு வழிகளாகும். இந்த இரண்டு வழிகளில், எதையாவது செய்துகொண்டு வாழ்வது சாதாரணமாகும். நான் உன்னை எல்லாவற்றையும் விட்டுவிடும்படி சொல்லவில்லை. நீ செய்யக்கூடியவைகள் உன் வாழ்வில் இரண்டாம்பட்சமாகவும், நீ, நீயாக இருப்பதே உன் வாழ்வில் மிக முக்கியமானதாகவும், இருக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். உன் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுபவைகளுக்கே, நீ செய்பவனாக இருக்கவேண்டும். ஆனால், நீ நீயாக இருப்பதே, உன்னுடைய உண்மையான ஆனந்தமாக இருக்கவேண்டும்.

பூரண சந்தோஷத்துடன் இருக்கவேண்டுமெனில், ஒருவன் பூரண முட்டாளாக இருக்கவேண்டும்.

நீ சந்தோஷமாகவுள்ள மனிதனைப் பார்க்கும்போதெல்லாம், இதை ஞாபகத்தில் வைத்துக்கொள். முட்டாள்கள் எல்லாரும் மிகுந்த சந்தோஷத்துடன் இருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஒரு நிறைவேற்றப்பட வேண்டிய வேலை இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. மந்தமான குழந்தை தன்னுடைய பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருப்பதைப்போல், அவர்கள் இருக்கிறார்கள். உன்னுடைய பொம்மையின் உருவம் வேண்டுமானால், மாறி இருக்கலாம். சிலருடைய பொம்மை பணமாக இருக்கிறது. சிலருடைய பொம்மை பெண்ணாக இருக்கிறது. வேறுசிலருடைய பொம்மை ஆணாக இருக்கிறது. ஆனால், நீ எது செய்தாலும், பணம் சேரச்சேர உனக்கு சந்தோஷம் அதிகமாகிறது, ஒரு பெண் சிநேகிதியைப் பார்த்ததும், உனக்கு பதவி உயர்வு கிட்டியதும், நீ மிகவும் சந்தோஷமாக இருக்கிறாய், நீ முட்டாளாக இல்லாத பட்சத்தில் இதற்கு வாய்ப்பே இல்லை.

புத்திசாலித்தனம் உள்ள மனிதன், இம்மாதிரி வாழ்க்கையில் நடக்கும் சிறிய விஷயங்களெல்லாம், உன்னை அப்பால் செல்லவிடாமல் தடைகளாக இருக்கிறது, என்பதைக் கண்டுகொள்வான். இந்தச் சிறிய விஷயங்களெல்லாம் உன்னை இங்கேயே இருக்கச் செய்துவிடுகிறது. ஆனால், இந்த இடம் உன்னுடைய வீடு

அல்ல. இந்த விஷயங்களெல்லாம் உன்னை சுடுகாட்டிலே முடியும் இந்த வாழ்க்கையுடன், பந்தப்பட, உறவாட வைத்துவிடுகிறது.

புத்திசாலித்தனமுடையவன் கேட்கிறான். இதுவே அவனுடைய அடிப்படையான தேடுதலாகவும், தாகமாகவும் இருக்கிறது. இந்த சுடுகாட்டுக்குப்பின், இந்த சுடுகாட்டுக்கு அப்பால், ஏதேனும் இருக்கிறதா அல்லது இல்லையா? சுடுகாட்டுக்கு அப்பால் ஒன்றுமே இல்லையென்றால், பிறகு இந்த வாழ்க்கை வெறும் கனவு போன்றது, அர்த்தமற்றதாகிறது. சுடுகாட்டுக்கு அப்பால், வேறு ஏதும் இல்லையெனில், இந்த வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை. இந்த வாழ்க்கைக்கு முக்கியத்துவமே இல்லாமல் போய்விடுகிறது.

ஆனால், முட்டாள் மனிதன் இந்தச் சமூகம் கொடுக்கும் பொம்மையை வைத்துக்கொண்டு மிக அதிகமாக சந்தோஷப்படுகிறான். முட்டாள் மனிதனாக இருக்காதே.

“தவறு செய்வது மனித இயல்பு, அதை ஏற்றுக்கொள்வது தெய்வீகம்”

தவறு செய்வது மனித இயல்பு. அதை எவ்வித குற்ற உணர்வுமின்றி ஏற்றுக்கொள்வது, நீ மனிதத்தன்மையை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்பாகும். இது உன்னிடம் ஒரு மாற்றத்தைக்கொண்டு வருகிறது. அப்பாற்ப்பட்ட விஷயங்கள் தெரிய ஆரம்பிக்கின்றன.

ஒவ்வொரு மேகத்திலும், ஒரு வெள்ளி இழை ஓடுகிறது, வெறும் பழைய. துணியில்கூட பிரகாசமான பகுதி உள்ளது.

மக்கள் ஒருவரை ஒருவர் ஒப்பிட்டு பார்த்துக்கொள்ளுகிறார்கள். ஒருவரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சந்தோஷம் அடைகிறார்கள். அதே சமயம் இன்னொருவரை ஒப்பிட்டுப்பார்க்கும்போது துன்பம் அடைகிறார்கள்.

நான் ஒரு புகழ்பெற்ற இந்து துறவியைச் சந்தித்திருக்கிறேன். எங்களிருவருக்கும் இடையே நடந்த கருத்துப்பரிமாற்றத்தைப்பற்றி, அந்த இந்து துறவி அவரைச் சுற்றியிருந்த சிலருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். ‘சந்தோஷமில்லாதிருப்பவர்களைக் கண்டுகொள்வதே சந்தோஷத்தின் இரகசியமாகும், முடமாகிப்போனவர்களைப் பாருங்கள், தான் ஒரு முடமாக இல்லாமல் இருக்கிறேன் என்று உடனே நீ சந்தோஷப்படுவாய். ஒரு குருடனைப் பாருங்கள், தான் ஒரு குருடனாக இல்லையே என்று உடனே நீ சந்தோஷமடைவாய். ஏழைகளைப்பாருங்கள், உடனே நான் ஒரு ஏழையாக இல்லாமல் இருக்கிறேன் என்று எண்ணி நீ சந்தோஷமடைவாய்’.

நான் அந்த முட்டாளை நிறுத்த வேண்டியதாயிற்று நான் சொன்னேன். “நீங்கள் ஒரு எளிதான உண்மையைப் புரிந்துகொள்ளவில்லை. ஒருமுறை ஒரு மனிதன் மற்றவனுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கிவிட்டால், அவன் அவனைவிட துரடிஷ்டசாலிகளை மட்டும் ஒப்பிடுப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான், அவன் அவனைவிட பணக்காரனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பான், அவனைவிட பலசாலியுடன் ஒப்பிட்டுப்பார்ப்பான், அவனைவிட அழகில் சிறந்தவனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பான், அவனைவிட கௌரவமுடையவர்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பான். பிறகு அவன் துயரமடைய ஆரம்பித்து விடுவான். நீங்கள் அவனுக்கு சந்தோஷத்தின் இரகசியத்தைச் சொல்லவில்லை, நீங்கள் அவனுக்கு முழு துன்பத்திற்கான இரகசியத்தைத்தான் சொல்லுகின்றீர்கள்”.

ஆனால், நெடுங்காலமாக இப்படித்தான் போதிக்கப்பட்டு வந்துள்ளது. வித்தியாசமான வார்த்தைகளில், ஆனால், முக்கியமான இரகசியம், இதேதான். இப்படித்தான். எல்லா மதங்களிலும், எல்லா புராணங்களிலும், சொல்லப்பட்டு வந்துள்ளது. இருப்பதைக்கொண்டு திருப்தியாக இருங்கள். ஏனெனில், இதைவிட மோசமானவர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு மோசமானவர்களாக இல்லாமல் இருக்கிறோமே, என்று கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.

ஆனால், அது எப்பொழுதுமே ஒருதலைப்பட்சமாக இருக்காது. ஒருமுறை ஒப்பிட்டுப்பார்க்க கற்றுக்கொண்டால், நீ உன்னை விடக்குறைபாடு உடையவர்களுடன் மட்டும் ஒப்பிட்டுப் பார்ப்பதோடு நில்லாமல், உன்னைவிட மேன்மை பெற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அப்புறம் அங்கு அதிகப்படியான துன்பம் உண்டாகிவிடுகிறது.

உண்மையில், ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது சரியான செயல் அல்ல. நீ நீதான், உன்னுடன் ஒப்பிட்டுப் பார்க்க யாருமே கிடையாது.

நீ யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதவன்.

உன்னைப்போன்றேதான் அடுத்தவனும்.

யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதே. இந்த ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மைதான் உன்னை இந்த உலகியலுடன் பிணைத்து வைப்பதற்கான காரணங்களில் ஒன்றாக உள்ளது. ஏனெனில், இந்த ஒப்பிட்டுப்பார்க்கும் தன்மைதான் போட்டி மனப்பான்மையை உருவாக்குகிறது. இந்த ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மைதான், முன்னேறும் ஆசையை உருவாக்குகிறது. அது மட்டும் தனியே வருவதில்லை. தன் கூட்டாளியையும் உடன் கூட்டிக்கொண்டு வருகிறது. நீ ஒருமுறை போட்டி போடக்கூடியவனாக ஆகிவிட்டால், அதற்கு முடிவே இருப்பதில்லை. அது

முடிவதற்குள், நீ இறந்துவிடுவாய். நீ முன்னேறக்கூடிய ஆசைகளை உடையவனாக ஆகிவிட்டால், நீ வாழ்க்கையில் முட்டாள்தனமான பாதையை தேர்ந்தெடுத்துவிட்டாய் என்று அர்த்தமாகிறது.

ஹென்றி போர்ட் (Henry Ford) டைக் கேட்டனர். அவர் இந்த நூற்றாண்டின் மிகவும் புத்திசாலியான மனிதர்களில் ஒருவர். ஏனென்றால், அவருடைய சிறு வாக்கியங்கள் மிகவும் அதிகப்படியான விஷயங்களைச் சொல்லக்கூடியவைகளாக உள்ளன. அவர்தான் முதன்முதலாக “சரித்திரமே ஒரு பொய்” என்று சொன்னார். அது முற்றிலும் உண்மை, அவரைக் கேட்டனர். “உங்களுடைய வெற்றிகரமான வாழ்க்கையில் என்ன கற்றுக்கொண்டீர்கள்?” அவர் மிகவும் வெற்றிகரமான மனிதர். மிகவும் ஏழ்மையான நிலையிலிருந்து, உலகிலேயே மிகப்பெரிய பணக்காரனாக உயர்ந்தார். அவர் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கூடியவை.

ஹென்றி போர்டு சொன்னார், “என்னுடைய வெற்றிகரமான வாழ்க்கையில் நான் ஒரே ஒரு விஷயத்தைக் கற்றுகொண்டேன். நான் மாடிப்படிகளில் ஏறுவதை, ஏணிப்படிகளில் ஏறுவதைக் கற்றுக்கொண்டேன். நான் உயரே உள்ள படியில் ஏறியதும் நான் முட்டாள்தனத்தை உணர்ந்தேன். குழப்பமடைந்தேன். ஏனெனில், அங்கிருந்து அதற்கு மேல் செல்ல இடமில்லை”.

என் பின்னே நான் வந்த ஏணிப்படிகளிலே ஏறி உச்சியை அடைய முயன்றவர்களிடம் ஏதும் சொல்லமுடியாதவனாக இருந்தேன். நான் எதற்காக இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன்? “நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருந்து விடுங்கள், உங்கள் காலத்தை வீணடிக்காதீர்கள் - உச்சியில் ஒன்றுமில்லை” என்று சொல்லியிருந்தாலும் அதைக் கேட்பதற்கு ஒருவரும் இல்லை. நீ உச்சியை அடைந்ததும் அங்கு அப்படியே தங்கிப் போய்விடுகிறாய். கீழேயும் இறங்கிப்போக முடியாது, அப்படி இறங்கினால் தோல்வியை அடைந்தது போன்ற உணர்வு ஏற்பட்டுவிடும். உச்சிக்கு மேலும் போகமுடியாது. ஏனெனில், அதற்குமேல் போக அங்கு வேறு வழியுமில்லை”.

ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் இதே போன்ற ஒரு இடத்தில் தங்கிப்போன உணர்வைத்தான் உணர்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிகழக்கூடிய விஷயம் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. அது வீழ்ச்சியில்தான் உள்ளது. அவர்கள் அதைவிட உயரமாகச் செல்ல வேறு வழி ஏதுமில்லை. கீழே விழுவதைத் தவிர வேறு வழி கிடையாது. இதனால்தான் அவர்கள் நாற்காலியிலேயே ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இது ஒரு சரியான வாழ்க்கை இல்லை. முதலில் நீ, ஏணியில் ஏற ஆரம்பிக்கிறாய், மற்றவர்களுடன் சிரமப்பட்டுக்கொண்டு கடைசியில் ஏணிப்படியின்

உச்சிப்படியை அடைந்துவிடுகிறாய், பிறகு அங்கேயே ஒட்டிக்கொண்டு விடுகிறாய். இது என்ன பைத்தியக்கார விடுதியா

மனிதன் இந்த உலகத்தை பைத்தியக்கார விடுதியாக மாற்றிவிட்டான். நீ புத்திசாலித்தனமாக இருக்கவேண்டுமெனில், முதலில் நீ எவ்வித குற்ற உணர்வுமின்றி நீயாக இருக்கவேண்டும். நீ எளிதாக, அடக்கத்துடன் உன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதுதான் இந்த உயிர்வாழ்தல், (Existence) இருப்புணர்வு உனக்கு கொடுத்த வெகுமதியாகும். மிகவும் நன்றியுள்ளவனாக உணர்ந்து, நீ வளர்ச்சியடைய எவைகள் உனக்கு உதவுகின்றன என்பதைத் தேடு - இன்னொருவரைப் பார்த்து அவரைப் போல் நகலான வாழ்க்கை வாழ முயற்சிக்காதே; ஆனால், நீ உன்னுடைய உண்மையான ஆத்மாவுடன், உண்மையான உன்னுடன் இரு.

உன்னுடைய உண்மையான முகத்துடன் இருப்பதை விட, பேரானந்தம் ஏதும் இல்லை.

## *ஏன் புரிவதில்லை?*

அன்புள்ள ஓஷோ,

நான் ஏன் உங்களைப் புரிந்துகொள்ளவில்லை?

ராம்கோபால்,

புரிந்துகொள்வது என்பது இரண்டாவது படி. முதல்படி காதில் வாங்கிக்கொள்வது, முழுமையாகக் கேட்பது. நீ என்னை கேட்பது இல்லை. நீ முதல்படியை தவறவிடுவதால் இரண்டாவது படி சாத்தியமில்லை.

நீ என்னைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது, ஆயிரக்கணக்கான எண்ணங்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவை உன்னைக் காது கேளாதவனாகச் செய்கின்றன. என் வார்த்தைகள் அவற்றின் தூய்மையோடு, முழுமையோடு ஒருபோதும் உன்னை சேர்வதில்லை. அவை மாற்றப்பட்டு, உனது எண்ணங்களால், உனது முடிவுகளால், உனது பாரபட்சத்தால் வண்ணம் பூசப்படுகிறது, நீ உனது அறிவின் மூலமாகக் கேட்கிறாய். ஆகவேதான், என்னை உன்னால் உண்மையாகக் கேட்க

முடியவில்லை. உன்னை வந்தடையும் அனைத்தும், சொல்லப்பட்டதற்கு முற்றிலும் மாறானதாக இருக்கிறது. நான் சொல்லிக்கொண்டிருப்பது ஒன்று, நீ கேட்டுக்கொண்டிருப்பது மற்றொன்று. ஆகவேதான், இந்த புரிந்து கொள்ளாத நிலை. அதனால்தான், நீ என்னை புரிந்து கொள்ளவில்லை. மற்றபடி நான் மிகவும் சாதாரண வார்த்தைகளையே பயன்படுத்துகிறேன்.

நான் வார்த்தை ஜாலங்கள் புரிவதில்லை. நான் பேச்சு வழக்கையே பயன்படுத்துகிறேன். பெரிய வார்த்தைகள் ஒருபோதும் நான் பயன்படுத்துவதில்லை. எனது வார்த்தைகள் எந்த அளவு எளிமையாக இருக்க முடியுமோ, அந்த அளவு எளிமையானவை. உனக்கு அது புரியவில்லையெனில், நீ உனக்குள் ஒரு செவிடனாக இருக்கிறாய் என்றே அர்த்தம். வார்த்தைகள், எண்ணங்கள், முடிவுகள், தியரிகள், பாகுபாடுகள், அறிவு, அனுபவம், இந்து, முஸ்லீம், கிறிஸ்தவன், யூதன் இப்படி எல்லாமாக ஒரு பெரிய இரைச்சலாக உள்ளே இருக்கிறது. உனக்குள் வழி கண்டுபிடிப்பது என்பது எனக்கு மிகவும் கடினம். உன்னைத்தொடுவது கிட்டத்தட்ட முடியாத காரியமாக இருக்கிறது.

இது புரிந்துகொள்வதைப்பற்றிய கேள்வியல்ல. நீ ஒரே ஒரு செயலை செய்ய முடிந்தால், புரிந்துகொள்ளுதல் தானாகவே மலரும். ஆம், உன்னால் கேட்க முடிந்தால், அல்லது உன்னால் என்னை உனக்குள் அனுமதிக்க முடிந்தால், அல்லது உன்னால் உள் இதயத்தைத் திறக்க முடிந்தால், அல்லது நீ செவிடனாக உனக்குள் இல்லாமலிருந்தால், அப்போது புரிந்துகொள்வது கண்டிப்பாக நிகழும். புரிந்து கொள்வதற்கு வேறு எந்த முயற்சியும் அவசியமில்லை. அதற்கு தயாராகயிருத்தலும், திறந்திருத்தலும் மட்டுமே போதும். ஒரே ஒரு ஜன்னலை எனக்கு திறந்துவிடு, ஒன்றே ஒன்று போதும், நான் உனக்குள் வந்துவிடுவேன். ஏதாவது ஒரு ஜன்னல் போதும். உன்னால் உனது வாசல் கதவுகளை திறக்க முடியாவிட்டால் பரவாயில்லை, அதற்காக கவலைப்படாதே, எனக்குப் பின்புற கதவுகளே போதும். ஆனால், ஏதாவது ஒரு கதவை எனக்காகத் திற, என்னை உள்ளே வரவிடு, அதன்பின் புரியாமலிருப்பது சாத்தியமல்ல, தவறாகப் புரிந்துகொள்வதும் சாத்தியமல்ல.

சத்தியம் என்பது புரிந்துக்கொள்ளப்பட்டவுடன், உனது வாழ்வு முழுவதையுமே மாற்றியமைக்கக்கூடிய அளவு தெளிவானது. ஒருமுறை

கேட்கப்பட்டால், அது புரிந்துவிடுகிறது. சத்தியம் மிக எளிமையான வழிமுறையையே உடையது: அது ஒருமுறை கேட்கப்பட்டால், புரிந்து கொள்ளப்படுகிறது. ஒருமுறை புரிந்தவுடன் , அது உன் வாழ்வையே மாற்றியமைக்கிறது. சரியாகக் கேட்டிருந்தால் நீ ஒருபோதும் எப்படிப் புரிந்து கொள்வது என்றே வினவமாட்டாய். சரியாகப் புரிந்திருந்தால், நீ ஒருபோதும் “நான் என் வாழ்க்கையை சத்தியத்தை ஒட்டி மாற்றியமைத்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்?” என்று வினவ மாட்டாய் சத்தியம் மாற்றியமைக்கிறது, சத்தியம் விடுதலையளிக்கிறது.

நீ எதைக்கேட்கமுடியுமோ, அதைத்தான் நீ காதில் வாங்கிக்கொண்டே இருக்கிறாய். நீ சொல்லபடாததையெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கிறாய். பின் அவைகளை வியாக்கியானம் செய்கிறாய். எல்லா வியாக்கியானங்களும் தவறான வியாக்கியானங்களே. நீ என்ன செய்தபோதிலும், நீ உடைந்துதான் போவாய், ஏனெனில், உன் தவறான வியாக்கியானங்கள் உன்னை சத்தியத்துடன் சேர்க்க முடியாது. சத்தியம் என்பது ஒரு இரண்டறக் கலத்தல்.

“ஒரு நண்பனைக் கண்டுபிடி, ஒரு குருவைக் கண்டுபிடி, பின் அந்தக் குருவுடன் இரண்டறக் கலந்துவிடு”. என்று புத்தபிரான் கூறுகிறார். இரண்டறக்கலத்தல் என்றால் என்ன? எல்லா நிபந்தனைகளையும் விட்டுவிடுவது, எல்லாப் பாகுபாடுகளையும் கலைந்துவிடுவது, கரையை அடைந்த ஒருவரிடம் சரணடைவது, தன்னறிவு பெற்ற ஒருவர் முன் மீண்டும் குழந்தையாவது என்பவைத்தான், இரண்டறக்கலத்தலின் பொருள். ஒரு சிறிய குழந்தையைப் போலக்கேள்: உன்னிப்பாக, பணிவோடு, ஆச்சரியத்தோடு கேள். உனது இதயம் உடனே துளைக்கப்படும். நான் ஒரு அம்பு போல பாய்ந்து உன்னை அடைவேன்.

ஆமாம், சிறிதளவு வலியும் இருக்கும். ஆனால், அது மிகவும் சுவையானது. இதுவரை நீ அறிந்த சுவைகளிலேயே, இதைவிட இன்பமான சுவையை நீ ஒருபோதும் அறிந்திருக்கமுடியாது. ஆமாம், முதல்முறை சத்தியம் உன் இதயத்தில் ஒரு அம்புபோல பாய்ந்து துளைக்கும்போது, அது உன்னைக் கொல்லும், அகங்காரமாயிருக்கிற உன்னைக் கொல்லும். அது சிலுவையில் அறைவது. ஆனால், உடனடியாக மீண்டும் உயிர்தெழுவாய். ஒருபுறம் இதுவரை இருந்த நீ இறக்கிறாய். மறுபுறம் புதிதாக நீ பிறக்கிறாய், நீ ஒரு இருமுறை பிறந்தவனாகிறாய், நீ ஒரு பிராமணனாகிறாய், நீ ஒரு அறிந்தவனாகிறாய்.

ஆனால், அறிதலுக்கு குருவுக்கும், சிஷ்யனுக்கும் இடையே மிகப்பெரிய காதல் தேவைப்படுகிறது. அந்த அன்பு முழுமையானதாய் இருந்தால் மட்டுமே,

முழுமையான பொறுப்பேற்ற நிலையில் மட்டுமே, முழுமையான ஈடுபாட்டோடு இருக்கும் நிலையில் மட்டுமே, அறிதல் சாத்தியம். ஒரு வேடிக்கை பார்ப்பவனைப்போல நீ கேட்டால், நீ தவறவிட்டுக்கொண்டே இருப்பாய். வெறும் ஆர்வத்திற்காக மட்டுமே நீ கேட்டால், நீ தவறவிட்டுக் கொண்டேதான் இருப்பாய். உன்னுடைய யோசனைகள், தத்துவங்கள் ஆகியவற்றுடன் நீ கேட்டால், சொல்லப்படாதவைகளையெல்லாம் நீ கேட்பாய்.

இது என்னுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வது பற்றிய கேள்வியல்ல: இது நான் இருப்பதை புரிந்து கொள்வது பற்றிய கேள்வி. சிஷ்யர்கள் மட்டுமே வாழ்த்தப்பட்டவர்கள்.

ராம்கோபால், நீ இன்னும் ஒரு சிஷ்யனாகவில்லை நீ ஒரு ஆர்வமுள்ளவன். நீ என்ன நிகழ்கிறது என்று பார்க்க வந்திருக்கிறாய், நீ இன்னும் பொறுப்பேற்றவன் இல்லை. நீ என் பேச்சைக் கேட்கிறாய். ஆனால், குறிப்பிட்ட தூரம் எட்டியே நிற்கிறாய். ஏனெனில், அப்படி இருப்பதால், எப்போது மிகவும் சங்கடமாக இருக்கிறதோ, அப்போது தப்பி ஓடிவிட முடியும். நீ வட்டத்தின் விளிம்பிலேயே இருக்கிறாய், நீ இன்னும் வட்டத்துக்குள் நுழையவில்லை.

வட்டத்தினுள் வா, நான் உனக்கு அழைப்பு விடுகிறேன். எனது விருந்தாளியாக மாறு: நான் உனக்கு விருந்தோம்புபவனாக அனுமதி. என்னைப் பருகு, பின் நீ மூழ்கிவிடுவாய். பின் நீ நிலைமாறிவிடுவாய் இது உறுதி.

Taken From: The Book of the Book Vol - 2

## *தந்திரசாலித்தனம்*

அன்புள்ள ஓஷோ,

இரண்டு விஷயங்கள்: நான் எனது சுயநன்மையில் மிகவும் தந்திரசாலியாய் இருக்கிறேன். அடுத்து மென்மையாக இருக்க பயப்படுகிறேன்.

இரண்டுமே மிகவும் ஆபத்தான குணங்கள். தந்திரம் எப்போதுமே ஒரு தடை. மேலும் அது புத்திசாலித்தனமல்ல, அதற்கு ஒரு தவறான மாற்று. ஒரு புத்திசாலி வெகுளி, அப்பாவித்தனமானவன். நீ ஒரு புத்திசாலியை வெகு எளிதாக ஏமாற்றிவிட முடியும். ஆனால், ஒரு தந்திரசாலியை ஏமாற்ற முடியாது. ஏனெனில், தந்திரசாலி அவனே ஒரு ஏமாற்றுக்காரன்.

ஆகவே, தந்திரம் மிக்க மதிப்புடையது என்று ஒருபோதும் நினைத்துவிடாதே. அது பயத்தின் அடிப்படையிலானது. தந்திரத்தின் பின் உள்ள தர்க்கம் என்னவென்றால், நீ மற்றவர்களை ஏமாற்றாவிட்டால், மற்றவர்கள் உன்னை ஏமாற்றி விடுவார்கள் என்பதுதான். இதனால் எப்போதும் உன்னை தற்காத்துக்கொள், தந்திரத்தோடு இரு. மற்றவர்கள் உன்னை தாக்குவதற்கு முன் நீ தாக்கு. ஏனெனில், தாக்குவதுதான் மிகச் சிறந்த தற்காப்பு, இதுதான் தந்திரத்தின் தர்க்கம். எப்போதும் அறிந்தவனாக வேஷம் போடு. நீ அறியாத போதுக்கூட.

புத்திசாலித்தனம் மிகவும் வெகுளி. அப்பாவித்தனமானது. மேலும், தந்திரம் புத்திசாலிதனமாகாது என்பதை எப்போதும் நினைவில் கொள். அரசியல்வாதிகள் மிகவும் தந்திரசாலிகள். ஆனால், புத்திசாலிகளல்ல. நீ புத்திசாலித்தனமானவர்களை வெகு சுலபமாக ஏமாற்றலாம். ஏனெனில், அவர்கள் வெகுளித்தனமானவர்கள். அவர்கள் உண்மையானவர்கள். ஆனால், தந்திரம் ஒரு பாதுகாப்பு வளையமாக செயல்படுகிறது. ஆகவே, தந்திரத்தை விட்டுவிடு. அதை விட்டுவிடச் சொல்லி யாரும் உன்னை வற்புறுத்த முடியாது. நீ அது புத்திசாலித்தனமல்ல என்று பார்க்கின்ற அந்தக் கணமே...... ஏனெனில், உனக்கு நீயே கெடுதல் செய்து கொள்கிறாய். அப்படியெனில், அது எப்படி புத்திசாலித்தனமாக இருக்க முடியும்? மேலும் அது உனக்கும் தேரியும். உனக்கு நீ நல்லவனாக தோன்றுமளவு மிகவும் தந்திரசாலியாக, நீ இருப்பதை நீ உணர்கிறாய். இந்த தந்திரம் கிட்டத்தட்ட தற்கொலை செய்துகொள்வது போன்றது. விட்டுவிடு. எந்த முயற்சியும் செய்யாமல் விட்டுவிடு, எல்லா பகுத்தறிவு வாதங்களையும், தந்திரங்களையும் ஓரங்கட்டிவிடு. தந்திரம் ஒருபோதும் எவருக்கும் உதவியதில்லை. பதிலாக பல மக்களுடைய வாழ்வையும், வாய்ப்புகளையும் நாசப்படுத்தியிருக்கிறது.

இரண்டாவது விஷயம், நீ தந்திரசாலியாக இல்லாவிட்டால், வெகு எளிதாக, மென்மையானவனாக, மாற தயாராகிவிடுவாய். நீ மென்மையானவன், ஒரு வேளை நீ தந்திரசாலியாக முயற்சித்ததற்கு, அதுவே காரணமாயிருக்கலாம். ஒரு மனிதன் எந்த அளவு மென்மையானவனாக இருக்கிறானோ, அந்த அளவிற்கு பெரிதாகவும், கடினமாகவும் தன்னைச் சுற்றி தடையை உருவாக்கி கொள்கிறான், என்பது எனது அனுபவம். அந்தத் தடை உடைந்து விட்டால், அவன் இந்த

உலகத்தில், மிகவும் பாதிக்கப்படக் கூடியவனாக இருப்பான் என்பது, அவனுக்குத் தெரியும். ஆகவே, அவன் பயப்படுகிறான். இந்த உலகம் மிகவும் தந்திரத்தோடு இருக்கிறது. அவன் மிகவும் ஒளிவு மறைவு இல்லாதவனாக இருக்கிறான். ஆகவே, அவன் திருடப்படலாம். ஏமாற்றப்படலாம், அழிக்கப்படலாம். எனவே, உள்ளே மென்மையாக இருக்குமளவு ஒருவன் தன்னைச் சுற்றி கடினமான கூட்டை உருவாக்கிக் கொள்கிறான். ஆனால், கூடு கடினமாக இருக்க இருக்க நீ அந்த அளவு சுடுகாடு போன்ற சூழ்நிலையில், உனக்குள்ளேயே மூடிக்கொண்ட சூழ்நிலையில், வாழ்பவனாகிறாய். மேலும், அழகான எல்லாமும், உனது மென்மை வெளிக்காட்டப்படும்போது மட்டுமே நிகழும். அன்பு, தியானம், கடவுள், அழகு, சத்தியம், ஆனந்தம் - இவையெல்லாம் நீ திறந்தவனாக, மென்மையாக இருக்கும்போது மட்டுமே நிகழும். ஆகவே தந்திரத்தை விட்டுவிடு.

அது மறைந்துவிடும் - கவலைப்படாதே.

## *வியாதியஸ்தர்கள்*

அன்புள்ள ஓஷோ,

“ நோயுற்றவனை அன்பு செய், வியாதியஸ்தரிடம் அன்பு காட்டு ” என்று மதங்கள் சொல்கின்றன. நீங்கள் கருத்து தெரிவிக்க முடியுமா?

அவர்களுக்கு அன்பு தேவையில்லை.... நோயாளியிடம் அன்புகாட்டுவதன் மூலம், நீ அவனது நோயிலிருந்து விடுபட எந்த உதவியும் செய்வதில்லை. மாறாக, அவன் ஆரோக்கியமாக ஆகும் கணத்தில் யாரும் அவனை அன்பு செய்வதில்லை. நோயும், அன்பும் தொடர்புள்ளதாக ஆகிவிடுகிறது. நான் இதை உனக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறேன். நோயாளியிடம் அக்கறை எடுத்துக் கொள். ஆனால், ஒருபோதும் அன்பு காட்டாதே. நோயாளியிடம் அக்கறை எடுத்துக் கொள். வயதானவர்களிடம் அக்கறை எடுத்துக் கொள். ஆனால், அக்கறை முற்றிலும் மாறுபட்ட விஷயம். அன்புக்கும், அக்கறைக்கும் உள்ள வித்தியாசம், தாய்க்கும், தாதிக்கும் உள்ள வித்தியாசம் ஆகும். தாதி அக்கறை எடுத்துக் கொள்கிறாள். தாய் அன்பு

காட்டுகிறாள். குழந்தை உடல் நலமில்லாமல் இருக்கும்பொழுது, தாய் ஒரு தாதியாக நடந்துகொள்வது மிகவும் நல்லது. குழந்தை ஆரோக்கியமாக இருக்கும்பொழுது எவ்வளவு அன்பு செலுத்த முடியுமோ அவ்வளவு அன்பு காட்டு. ஆரோக்கியம், வலிமை, புத்திசாலித்தனம் ஆகியவற்றுடன் தொடர்புள்ளதாக அன்பு இருக்கட்டும். அது குழந்தைக்கு வாழ்க்கையில் வெகு தொலைவுக்கு கை கொடுக்கும்.

**Taken From : Zarathustra the Laughing Prophet.**

## *வாழும் வழி*

அன்புள்ள ஓஷோ,

எனக்குள் சக்தி பொங்கி எழும்போது, அதற்கு பாயும் திசையில்லாமலிருக்கிறது. இதை நான் எவ்வளவு கவனித்தும் பயனில்லை. நான் அதை கவனிப்பதில் தொடர்ந்து முயற்சிக்கிறேன். அப்போது ஒரு நாலு வயதுக் குழந்தை போல நடந்து கொள்கிறேன். சில சமயம் என்னை சுற்றியிருப்பவர்களிடம் ஏராளமான அன்பு எனக்குள் பெருகுவதாக உணர்கிறேன். ஆனால், அந்த நிலையில் என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.

இது நல்லது. கவலைப்பட எதுவுமில்லை. மேலும், அதை மையப்படுத்து. திசை முக்கியமல்ல, மையமாதல்தான் முக்கியம். திசைக்கும், மையமாதலுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது. திசை வெளியே பாய்வது, மையமாதல் உள்நோக்கியது. திசைகள் பலவாக இருக்க முடியும், ஆனால், மையமாதல் என்பது ஒன்றே ஒன்றுதான்.

சாதாரணமாக, நாம் அனைவரும் ஒரு திசையை நோக்கி, அதாவது ஒரு குறிக்கோளை நோக்கி நமது சக்தியை செலுத்தவே கற்றுக் கொடுக்கப் பட்டுள்ளோம். ஆனால், நான் சொல்வது இதுவல்ல. வாழ்க்கை எந்த திசையும் கொண்டதாக இல்லை - இதுதான் மக்களை தாறுமாறாக ஓடவைக்கிறது. வாழ்க்கை ஒரே நேரத்தில் எல்லாத் திசைகளிலுமாக வெடிக்கிறது. அது ஒரே நேரத்தில் ஏற்படும் வெடிப்பு. அது எந்தவிதமான, எப்படிப்பட்ட குறிக்கோளின் திசையிலும் செல்வதல்ல. அது ஒரு

திசைப்பட்டதல்ல, ஒரு நேர்க்கோடு அல்ல. அது ஒரு ரயில்பாதை அல்ல. அது எல்லாத் திசைகளிலும், சாத்தியமான எல்லா வழிகளிலும் வெடிக்கிறது. வாழ்க்கை என்பது அதுதான். ஆகவே, உனது வாழ்க்கைக்கு திசை வைத்துக்கொள்வது என்பது, நீ உன் வாழ்க்கையோடு போராட முடிவு செய்தது ஆகிவிடும். மேலும், தன்னை ஒரு குறிப்பிட்ட வழியில் மாற்றிக்கொள்ள முயற்சிக்கும், ஒரு மனிதன் வாழ்வோடு உள்ள அனைத்து தொடர்புகளையுமே, இழந்து விடுவான். சிலர் பணத்தின் பின்னால், அவர்களுக்கு திசை இருக்கிறது. மேலும் சிலர் அரசியல் அதிகாரத்தின் பின்னே - அவர்களுக்கும் திசை இருக்கிறது. ஆனால், அவர்கள் மடத்தனமான மக்கள். ஒரே திசையில் செல்லும் எல்லா மக்களும் மடத்தனமானவர்களே.

மையமாதலே தேவை. அது முற்றிலும் மாறுபட்டது. நீ வெடிக்கும்போது, நீ உன் மையத்தில் இருக்க வேண்டும். அங்கிருந்துதான் சுற்றியுள்ள எல்லா இடங்களுக்கும் வெளிப்பாடு செல்லவேண்டும். நீ மலராக மாறுகிறாய், மலர் இதழ்கள் எல்லா திசைகளிலும் விரிகின்றன, மலரின் எல்லா இதழ்களும் ஒரே திசையில் விரிந்தால் என்ன ஆகும்? பூ அங்கு இருக்காது. அவை எல்லாத் திசைகளிலும் விரிகின்றன. மணம் எல்லாத் திசைகளுக்கும் பரவுகிறது. அதற்கு திசைகள் இல்லை. அது எதை நோக்கியும் இல்லை. அது எங்கே போகிறதென்று அதற்கேத் தெரியாது, ஆனால், ஒரு விஷயம் முக்கியமானது. அது மையமாகி இருக்கிறது. மலருக்கு அதன் மையம் என்ற ஒன்று அதனிடம் இருக்கிறது.

ஆனால், மக்களுக்கு திசைகள் பற்றி சொல்லித் தரப்படுகிறது. அதே சமயம் மையமாதல் பற்றி சொல்லித் தரப்படுவதில்லை. மையமடைதல் பற்றிக் கற்றுத் தரும் ஒரு நாகரீகம் இதுவரை தோன்றவில்லை. ஆனால், இதுவே தேவைப்படுகிறது. திசை மக்களை தாறுமாறாக ஓட வைக்கிறது. ஏனெனில், நீ வாழ்க்கையோடு உள்ளத் தொடர்பை இழந்து விடுகிறாய். இது பொய்யானது. இந்த திசைகள் பொய்யானவை. திசை எதிர்காலத்தை நோக்கி நடைபோடுகிறது. ஆனால், வாழ்க்கைக்கு நேர்கோடு என்பதே தெரியாது. அதற்கு வெறும் வட்டங்களேத் தெரியும். வாழ்க்கை ஒரு வட்டம். பருவங்கள் வட்டமாக சுற்றி வருகின்றன. மேலும் நட்சத்திரங்கள், இந்த பூமி, இந்த சந்திரன், இந்த சூரியன், ஏன்? இந்த வாழ்க்கையேக் கூட

பிறப்பு, இளமை, முதுமை, இறப்பு, பிறப்பு, இப்படி ஒரு வட்டதிலேயே நகருகிறது. இது ஒரு வட்டப்பாதை.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட திசையைப் பற்றி யோசிக்க ஆரம்பிக்கும்பொழுதே, நீ வாழ்க்கைக்கு எதிராகப் போய் விடுகிறாய். நீ ஒரு கோடு போடுகிறாய், நீ ஒரு திசைப்பட்டவனாகிறாய். நீ ஒரு பரிமாணத்தையே உடையவனாகிறாய். இப்படி ஆவதுதான், பயித்தியம் பிடித்தல் என்பது. ஒன்றையேப் பற்றி நிற்பது என்பது ஒரு பரிமாணம்தான். ஒன்றையேப் பற்றி நிற்பவன் ஒரே நேர்க்கோட்டில் தான் நகர முடியும். இது இயற்கையானதல்ல, இது நிதர்சனத்திற்கு நெருங்கி வரக்கூடியதல்ல.

ஆகவே, திசைகளைப் பற்றி கவலைப்படாதே. அதற்கு அவசியமில்லை. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் நிறுத்து. நீ சக்தியை உணரும்போது, நீ உன் மையத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான், உனக்குள் ஒரு மையமிருக்கும், ஒரு ஹப்பும் (Hub) வீலும் (Wheel) போல. அச்சக்கரம் ஹப்புடன் நபரமுடியும். மேலும் எந்த திசையானாலும், அப்படி நகருவது அழகானதுதான். அது ஒரு வெறும் சக்தியின் விளையாட்டு.

வாழ்க்கைக்கு குறிக்கோள் கிடையாது. அது வெறும் லீலை. ஒரு தூய்மையான சக்தியின் விளையாட்டு மட்டுமே.

ஆகவே குறிக்கோள் - திசை கொண்டவனாக ஒருபோதும் ஆகாதே! நாம் எங்கும் போகவில்லை. நாம் இங்கே மகிழ்வதற்காக, ஆடுவதற்காக, ரசிப்பதற்காக இருக்கிறோம். இந்தக் கணம்தான் எல்லாமும். இந்த முழு படைப்பும் இந்தக் கணத்தில் ஒன்றுக்கூடி நிற்கிறது. நாம் எங்கும் செல்லவில்லை. செல்வது என்பது எல்லாமே, தவறுதான். இங்கு இருத்தல் மட்டுமே சரி.

ஆகவே அடுத்தமுறை சக்தியை உணரும்போது, அதை வெறுமனே மையப்படுத்து. விரைவில் - இரண்டு, மூன்று வாரங்களுக்குள் - உன்னால், மையத்தை உணர்ந்துக் கொள்ள முடியும். ஒருமுறை மையத்தை உணர்ந்து விட்டால், அங்கு பெருமகிழ்ச்சியும், பேரானந்தமும் கிட்டும்.

- **"The Shadow of the Whip"**

# புதுவகைத் தியானங்கள்

அந்த அரக்கன் விடாப்பிடியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கட்டும்!

**LET THE MONSTER GO ON!**

அன்பார்ந்த ஓஷோ!

உள்ளார்ந்த அமைதி நிலை( INNER SILENCE) குறித்தும், வெறுமை நிலை (EMPTINESS) குறித்தும், அண்மைக் காலங்களில் தாங்கள் நிரம்ப எடுத்துக் கூறி உள்ளீர்கள். நான் தங்களுடைய சீடராக மாறி இத்துடன் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நிலையிலும்கூட, பெரும்பாலான நேரங்களில் குறிப்பாக நமது ஆன்மீகக் கூடத்தில் ( COMMUNE) தியான முறைகள் பயிற்றுவிக்கப்படும் சமயங்களிலெல்லாம் என் மனம்(MIND) முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு என் கட்டுப்பாட்டை மீறி, கெட்டுப்போன ஒரு கம்ப்யூட்டரைப் போல( LIKE A COMPUTER GONE MAD) அலைப்பாய்ந்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த முழு முட்டாள்தனத்தைப் பொறுத்தவரையில், ஒரு பார்வையாளனைப் (WITNESS) போல ஆவதற்கு முயன்று கொண்டிருக்கிறேன். ஆனால், அந்த அரக்கன் விடாப்பிடியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறானே!

அந்த அரக்கன் விடாப்பிடியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கட்டும்; நீ அதைக் குறித்துக் கவலைப்படாதே. உனது கவலைதான் இங்கே மலைப்பை உண்டாக்குகிறதே தவிர, அந்த அரக்கன் அல்ல.

இந்த முழு உலகமும் விடாப்பிடியாகத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது; ஆறுகள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன; வானத்தில் மேகங்கள் சென்று கொண்டேயிருக்கின்றன; மரங்களில் பறவைகள் அமர்ந்து ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கின்றன. நிலைமை இவ்வாறிருக்க, உன் மனம் விடாப்பிடியாகத் தொடர்ந்து செல்ல எத்தனிக்கும்போது மட்டும், நீ ஏன் அதற்கு எதிர்ப்பு காட்டுகிறாய்? அதையும் அதன் போக்கில் போகும்படி விட்டுவிட்டு, நீ கவலையற்று இருப்பாயாக.

பார்வையாளனாய் இருப்பதற்கு, ( WITNESSING) நீ முயற்சி எதுவும் செய்யத் தேவையில்லை. நீ கவலையற்று இருக்கும்போது அது தானாக ஏற்படுகிறது. உன் மனதை அசட்டை செய்துவிட்டு, ஏனோ தானோவென்று

இருக்கும் அந்த சூழ்நிலையில்தான், பார்வையாளனாய் இருக்கும் தன்மை உன்னில் உண்டாகிறது. நம்முடைய மனம் என்பது நம்மை விட்டு மாறாமல், எப்போதும் தொடர்ந்து இருந்து வருகிற ஒரு நடைமுறை ஆகும். நிலைமை இவ்வாறு இருக்கும்போது, அந்த மனதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று நீ நினைப்பதே ஒரு தவறான செயல் ஆகும். அந்த மனதின் கொந்தளிப்பைத் தணிய வைக்க வேண்டும் என்று, நீ எண்ணுவதே ஒரு தவறான செய்கை ஆகும். நீ எதுவும் செய்யத் தேவையில்லை. நீ ஏதாவது செய்ய ஆரம்பித்தால், அது உனக்கு உதவிகரமாக இராது. அதனால், உன் மனக்கலக்கம்தான் அதிகரிக்கும். எனவே தான், நீ தியானம் செய்யும்போது அந்த மனம் மென்மேலும் பித்துபிடித்து ஆடுவதைப் போன்று நீ உணருகிறாய். நீ தியானம் செய்யாதிருக்கும்போது, அதன் பித்தம் அந்த அளவுக்கு இருப்பதில்லை. நீ தியானம் செய்துகொண்டு இருக்கும்போது, அந்த மனதைப் பற்றிய கவலையில் ஈடுபட்டிருக்கிறாய்; அந்த மனதை உன்னாலான மட்டும் தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறாய். அந்த மனதை தடுத்து நிறுத்த நீ யார்? மேலும் அந்த மனதைக் குறித்து நீ ஏன் கவலைப்பட வேண்டும்? அந்த மனது என்ன தவறு செய்தது? அந்த மனதின் நினைவலைகளை தடுக்காமல் அப்படியே விட்டுவிடு - வானத்தில் மேகங்கள் ஊர்ந்து சென்றுகொண்டே இருப்பதைப் போல, உன் நினைவலைகளும் ஊர்ந்து சென்று கொண்டே இருக்கட்டும்.

நீ விருப்பு வெறுப்பு இல்லாதவனாக, பட்டும் படாமலும் இருக்கும்பொழுது, உன்னுடைய நடமாட்டங்களை நீயே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் இயல்புடையவனாக, விழிப்புணர்ச்சி உள்ளவனாக மாறுகிறாய். இந்த மாற்றமானது உடனடியாக, திடீரென்று உனக்கு ஏற்படுகிறது. இனி நீ செய்து முடிக்கவேண்டிய செயல் ஒன்றுமேயில்லை, என்ற நிலை உனக்கு வரும்பொழுது, மென்மேலும் என்னென்ன செயல்களை உன்னால் செய்துகொண்டே இருக்க முடியும்? என்னென்ன நடக்கிறது என்று உன்னால் கவனித்துக் கொண்டுதான் இருக்க முடியுமேத் தவிர, ஒரு பார்வையாளனைப் போல்தான் உன்னால் இருக்க முடியுமேத் தவிர, வேறு என்ன உன்னால் செய்ய முடியும்? இப்படியாக ஒரு பார்வையாளனைப் போன்ற நிலை உனக்கு ஏற்படும்பொழுது, அந்த மனதின் இயக்கம் நின்று விடுகிறது. அந்த மனதின் இயக்கத்தை உன்னால் தடுத்து நிறுத்தவிட

முடியும் என்று நான் இங்கே சொல்ல வரவில்லை. மனதை தடுத்து நிறுத்தும் முயற்சியில் இதுவரை ஒருவரும் வெற்றி பெற்றதில்லை. ஏனெனில், அவ்வாறு அதைத் தடுத்து நிறுத்துகிறவனும், அந்த மனதின் ஒரு பகுதியாகத் தான் இருக்கிறான். தியானம் செய்யவேண்டும் என்ற எண்ணமும் அந்த மனதில் இருந்துதான் பிறக்கிறது. நீ மௌனவிரதத்தை கடைபிடித்தால், அந்த பரம்பொருளை அடையலாம் என்ற எண்ணமும் அந்த மனதிலிருந்துதான் பிறக்கிறது. எனவே முட்டாள்தனமாக இராதே! மனதை மனதால் அடக்க முடியாது. இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பது யார்? நீயா அல்லது அந்த மனமா?

நீ உன்னைக் குறித்து ஒருபோதும் உணர்ந்துகொள்ளவில்லை. அந்த மனதின் விளையாட்டுதான் இது. உன் மனதைப் பொறுத்தவரையில் ஒரு லட்சிய சுபாவம் உடையவனாக நீ மாற வேண்டும். உன் மனதை உன் பிடியினின்றும் தளர்த்தி, அதைப் போக விட்டுவிடு. இதுவே நீ செய்யக்கூடிய ஒரே செயல் ஆகும். நீ ஏனோதானோவென்று இருக்கும்போது, உனக்கும் அந்த மனதிற்கும் இடையில் ஒரு இடைவெளி திடீரென ஏற்படுகிறது. அந்த மனம் உன் இதயக்கதவை இடைவிடாமல் தொடர்ந்து தட்டிக் கொண்டுதான் இருக்கிறது; நீயும் அந்த ஒலியைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாய். எனினும், இப்போது நீ அலட்சிய சுபாவம் உடையவனாக மாறிவிட்டிருப்பதால், அந்த ஒலியைக் குறித்து உனக்கு எந்த கவலையும் கிடையாது. ஏனெனில், இப்போது நீ உன் வீட்டுக்கதவை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு உன் வீட்டிற்குள் பத்திரமாக இருக்கிறாய். இந்த நிலையில், உன்வீட்டிற்கு வெளியிலிருந்து வரும் அந்த ஒலியானது தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால்தான் என்ன, அல்லது நின்று போனால்தான் உனக்கென்ன? “நீ தொடர்ந்துஒலி எழுப்பிக் கொண்டிருக்க விரும்பினாலும், அல்லது ஒலி எழுப்புவதை நிறுத்திக் கொள்ள விரும்பினாலும், உன் இஷ்டம்போல செய்; அதைக் குறித்து எனக்கு கவலை இல்லை”, என்று நீ அந்த மனதிற்குத் தெளிவுபடுத்துகிறாய்.

இதைப் போன்ற ஒரு அலட்சிய சுபாவம்தான் தேவை. இதுமாதிரி ஒருவிதமான அக்கறையுமில்லாமல், கவலையற்று இருக்கும் இந்த சூழ்நிலையில்தான் பார்வையாளனாய் இருக்கும் அந்த தன்மை உனக்கு உண்டாகிறது. அந்த மனது உனக்கு சொந்தமாக ஒருபோதும்

இருந்ததில்லை என்றும், அது ஒரு கம்ப்யூட்டர்; அது ஒரு இயந்திரம் போன்றது என்றும், நீ அதைவிட்டு முற்றிலும் தனியனாக இருக்கிறாய் என்றும் திடீரென்று உனக்கு ஞானோதயம் உண்டாகிறது.

அந்த மனதை அமைதிப்படுத்த நீ மேற்கொண்டுள்ள முயற்சிகள் அனைத்தையும், அப்படியே விட்டுவிடு. உன்னைச் சுற்றி எது நடந்தாலும், அதற்கு எதிர்ப்பு ஏதும் தெரிவிக்காமல், அப்படியே செயலற்ற நிலையில் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பாயாக. " இம்மாதிரி இரு ", என்று அந்த மனதிற்கு நீ கட்டளை ஏதும் கொடுக்காதே. அந்த மனதிற்கு நீ ஒரு வழிகாட்டியைப் போல் இருக்க வேண்டாம். அந்த மனதைக் கட்டுப்படுத்தி அதை அடக்கி ஆளுபவனாகவும் நீ இருக்காதே. எல்லாம் அடங்கிய இந்த உயிர்வாழ்க்கை அதன் போக்கில் போய்க்கொண்டே இருக்கிறது. ஒன்றும் உன்னை தொந்தரவு செய்வதில்லை. அப்படியிருக்க, ஒரு கம்ப்யூட்டரைப் போன்ற, ஒரு சிறிய இயந்திரத்தைப் போன்ற இந்த மனம் மட்டும் உன்னை தொந்தரவு செய்வதாக நீ ஏன் நினைக்க வேண்டும்? உன்னால் முடியுமானால், அதை அனுபவி; இல்லையேல், - அதற்கு ஒதுங்கி வழிவிட்டுவிடு, நீ அலட்சியமாக இரு. இப்படி நீ அலட்சியமாக இருந்து கொண்டே வரும் சமயத்தில், இதுநாள்வரை உனக்குள் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த ஏதோ ஒரு சக்தி உயிர் பெற்று எழுந்துக் கொண்டிருப்பதை, நீ திடீரென்று ஒருநாள் கண்டுகொள்வாய். மேலும், அந்த மனதுடன் நெருங்கிப் பழகாது விலகியிருக்கிற ஒரு புதிய ஆற்றல் உன்னிடம் தோன்றிக் கொண்டிருப்பதையும், நீ கண்டுகொள்வாய். இவ்வாறு நீ இருப்பதினால் அந்த மனம் விரைவில் உன்னைவிட்டு விலகி ஓட ஆரம்பிக்கிறது; தொடர்ந்து மென்மேலும் தொலைதூரத்திற்குச் சென்று கொண்டே இருக்கிறது. பயனற்ற அதன் வெறும் பேச்சு அதற்குப் பின்னரும் அடிக்கடி உனக்குக்கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும், எங்கோ தொலைதூரத்தில் உள்ள ஒரு நட்சத்திரத்தின் அருகில் அது எதிரொலித்துக் கொண்டிருப்பதைப் போன்று நீ உணருகிறாய். அந்தக் குரல் வெகுதொலைவில் இருந்து உனக்குக் கேட்பதால் அது என்ன கூறுகிறது என்றுக்கூட, உன்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு இந்த இடைவெளியானது தொடர்ந்து நீண்டுகொண்டே இருக்கும் பட்சத்தில், ஒருநாள் திடீரென்று பார்த்தால், அந்த மனம் எங்கே போயிற்று என்பதை, உன்னால் கண்டுபிடிக்க இயலாது போய்விடும்.

நீ முயற்சி செய்து அடையக்கூடிய மௌனநிலையை விட, இந்த மௌனநிலை தனித்தன்மை வாய்ந்ததாகும். உண்மையான மௌனநிலை என்பது, எவருடைய தூண்டுதலும் இன்றி தானாகவே ஒருவனுக்கு அமைவதாகும். அது முயற்சியின் மூலம் சாத்தியமாகக்கூடிய ஒன்றல்ல. நீ அந்த மௌன நிலையை அடைவதற்காக பயிற்சி செய்யத் தொடங்குவாயானால், உன்னால் போலித்தனமானதொரு மௌனநிலையினையே தோற்றுவிக்க முடியும். அந்த மனம் இந்த விஷயத்தில் மிகவும் தந்திரம் வாய்ந்தது. மௌனமாய் இருப்பதைக் குறித்து பொய்யானதொரு விளக்கத்தினை அது உனக்கு தர முற்படலாம். அந்த விளக்கமும், அந்த மனதினைச் சார்ந்த ஒன்றாகவே இருக்கும். எனவே, அந்த மனதை அமைதிப்படுத்த பெருமுயற்சி எதுவும் எடுத்துக்கொள்ளாதே. சரியாக சொல்லப்போனால் நீ இது விஷயத்தில் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? தெருவோரமாக விலகி நின்று, பாதையில் போகும் வாகனங்களையும், மனிதர்களையும் வெறுமனே நின்றபடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதனைப் போல், இருக்க வேண்டும். அதைப்போல, உன் மனதில் தோன்றி மறையும் எண்ணங்களை சும்மாப் பார்த்துக் கொண்டேயிரு; விருப்பு வெறுப்பற்ற முறையில் உன் கண்கள் அதை அப்படியே, நோக்கிக் கொண்டே இருக்கட்டும். இப்படி நீ செய்து கொண்டிருந்தால், இதுநாள்வரை நீ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொருள் (அமைதி) உனக்கு கிட்டும். ஆனால், நீ இதற்காக விரும்பி ஏதாவது செய்ய முற்பட்டால், அது உனக்குக் கிட்டாது. ஏனெனில், நீ அலட்சிய சுபாவம் உடையவனாய் ஆவதற்கு, இந்த விருப்பமே உனக்கு முட்டுக்கட்டையாக இருக்கும். புத்தர் உபேட்சை ( UPEKSHA) என்ற ஒரு சொல்லை பயன்படுத்துகிறார் . உபேட்சை என்றால், முழுக்க முழுக்க அலட்சிய சுபவம் உடையவனாய் இருத்தல், என்பது பொருளாகும். இந்த உபேட்சை நிலையினை, இந்த அலட்சிய சுபாவத்தை நீ பெற்றிராவிட்டால், இந்த தியான நிலை உனக்கு ஒருபோதும் கைக்கூடாது என்று அவர் கூறுகிறார். அதுவே சரியானதொரு அடிப்படைச் சூழ்நிலையாகும். இந்த சூழ்நிலையில் விதைக்கப்பட்ட விதைகளிலிருந்துதான் தியானம் பிறக்கிறது. வேறு வழி ஏதும் இல்லை.

**TAKEN FROM: THE THREE TREASURES, VOL- 1**

# மைத்தரி பாவனா

அன்புள்ள ஓஷோ,

உங்களிடம் வருவதற்கு முன் நான் 'மைத்ரி பாவனா' என்ற புத்தமத தியானம் செய்து வந்தேன். அது, ஒருவன் தனக்குத்தானே, "நாம் நன்றாக இருப்போம், நாம் ஆனந்தமாக இருப்போம், நாம் பகையுணர்ச்சியிலிருந்து விடுபட்டவனாக இருப்போம், நாம் நமக்கே ஊறு விளைவிப்பதிலிருந்து விடுபட்டவனாக இருப்போம்", என்று சொல்லிக் கொள்வதிலிருந்து துவங்குகிறது. இந்த எண்ணங்கள் ஏற்படுத்தும் உணர்வுகளால், நாம் ஊடுருவப்பட்டவுடன், இந்த தியானத்தின் அடுத்த நிலையாக, மற்றவர்களைப் பொறுத்தும் விரிவுப்படுத்துதல் வருகிறது. இதில் ஒருவன், இந்த நல்ல உணர்வுகளை தன்னை நேசிக்கும் மற்றவர்களுக்கு கொடுப்பது, அதன்பின் தன்னை குறைவாக நேசிப்பவர்களுடன் அதையே செய்வது, இப்படியாக தான் வெறுப்பவர்களிடம்கூட, கருணை தனக்குள் எழுமளவு தொடர்ந்து செய்வது. இந்த தியானம் ஏதோ ஒரு வகையில் மற்றவர்களிடம் என்னை திறக்கச் செய்கிறது என்று நான் உணர்ந்து வந்தேன்... ஆனால், உங்களிடம் வந்தவுடன் நான் அதை விட்டுவிட்டேன். ஏனெனில், அதில் நம்மை நாமே வசியப்படுத்திக கொள்ளும் ஒரு அபாயம் இருப்பதை நான் பார்த்தேன்.... அதை நான் மீண்டும் தொடர்வதா... அல்லது விட்டுவிடுவதா? தயவு கூர்ந்து தாங்கள் இந்த தியானத்தைப் பற்றி விளக்க முடியுமா?

ஆழமாக ஊடுருவும் தியானங்களில் "மைத்ரி பாவனா" வும் ஒன்று. தனக்குத் தானே வசியப்படுத்திக் கொள்வதில், (SELF – HYPNOSIS) மாட்டிக் கொள்வோமோ என்று நீ அஞ்சத் தேவையில்லை. ஏனெனில், இது அப்படியல்ல. உண்மையில் இது ஒருவகையில் வசியத்திலிருந்து மீட்பது, இது வசியப்படுத்தும் முறைப்போலத் தெரிகிறது. ஆனால், இதற்கு காரணம் இது வசியத்தை போக்கும் ஒரு பின்னோக்கிய சுழற்சியாக இருப்பதே.

மனிதன் ஏற்கனவே வசியத்தில் இருக்கிறான். தற்போது வசியப்படுத்துவதோ, வசியப்படுத்தாமலிருப்பதோ கேள்வியல்ல. ஏனெனில், நீ ஏற்கனவே வசியத்தில்தான் இருக்கிறாய். இந்த முழு சமுதாய அமைப்பு

முறையுமே, ஒரு வசியப்படுத்துவதுதான்.... நான் துன்பத்தில் இருக்கிறேன் என்று நீ நினைத்தால், இதுவும் ஒரு வசியம்தான். எனக்கு ஏராளமான பிரச்சினைகள் என்று நீ நினைத்தால், இதுவும் ஒரு வசியம்தான்.

மைத்ரி பாவனா வசியத்தைப் போக்குவது. இது உனக்கு உன் சுயரூபத்தை திருப்பித் தரும் முயற்சி. உன்னை இந்த சமுதாயம் கறைப்படுத்துவதற்கு முன், நீ பிறந்தபொழுது, நீ இருந்த நிலைக்கு உன்னை கொண்டு செல்லும் ஒரு முயற்சி. ஒரு குழந்தை தான் பிறக்கும்பொழுது மைத்ரி பாவனாவில்தான் இருக்கிறது. மைத்ரி பாவனா என்றால் ஒரு நட்பு, அன்பு, கருணை என்ற, மிக மேன்மையான உணர்வுகள் என்று பொருள். ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அதற்கு அன்பு மட்டுமே தெரியும், வெறுப்பு என்பது தெரியாது. அன்பு இயற்கையாகவே அங்கு இருக்கிறது. வெறுப்பை அது பின்னால் தெரிந்து கொள்கிறது.

குழந்தை முழு பிடிப்போடு உள்ளது. ஆனால், கொஞ்சங் கொஞ்சமாக அவைகள் ஏமாற்றப்படுவதும், அவைகள் சங்கடத்தில் மாட்டிக் கொள்வதும், அவைகள் எதிர்த்து ஒடுக்கப்படுவதும், அவைகள் பயப்படும்படியானதும் ஆன அனுபவங்கள் ஏற்படுகின்றன. கொஞ்சங் கொஞ்சமாக, அவைகள் இந்த உலகத்தின் எல்லா தந்திரங்களையும் கற்றுக் கொள்கின்றன. இதுதான் கிட்டத்தட்ட எல்லோர் விஷயத்திலும் நடக்கிறது.

இப்போது மைத்ரி பாவனா, மறுபடியும் அதே சூழ்நிலையை உருவாக்குகிறது. இது வசியத்தைப் போக்குவது. இது நீ முதன்முதலில் வந்த உலகத்திற்கே உன்னை திரும்பக் கொண்டு செல்ல வெறுப்பு, கோபம், பொறாமை, கடுப்பு ஆகியவற்றை விட்டுவிடச் செய்யும் முயற்சி. நீ இந்த தியானத்தை தொடர்ந்து செய்து வந்தால், முதலில் நீ உன்னை நேசிக்க ஆரம்பிப்பாய். ஏனெனில், நீதான் உனக்கு மற்ற எவரையும்விட அருகிலிருப்பவன். பின் உனது அன்பை, உனது நட்பை, உனது கருணையை, உனது நேசத்தை, உனது வாழ்த்தை, உனது அருளை, உனது ஆனந்தத்தை, நீ பரப்புவாய். நீ அன்பு செலுத்துபவர்களிடம் நீ இவைகளை பரப்புவாய்...

பிறகு, நீ அவ்வளவாக அன்பு செலுத்தாதவர்களிடம் இவைகளை பரப்ப தொடங்குவாய், பின் நீ அக்கறை கொள்ளாதவர்களிடமும், அதன்பின் கொஞ்சங்கொஞ்சமாக நீ வெறுப்பவர்களிடமும் இவைகளைப் பரப்புவாய்.

மெதுவாக நீயே உன்னை வசியத்திலிருந்து விடுவித்துக் கொள்வாய். மெதுவாக நீ உன்னைச்சுற்றி மறுபடியும் அன்பினாலான ஒரு கருவறையை சிருஷ்டித்துக் கொள்வாய்.

வெறுப்பு, எதிர்ப்பு, போராட்டம் ஆகியவைகளால் ஆனது தன்முனைப்பு.நீ தன்முனைப்பை விடவேண்டும் என்ரு விரும்பினால் நீ அன்புணர்வை அதிகம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். நீ அன்பு செய்யும்போது, தன்முனைப்பு மறைந்து விடுகிறது.

> அன்பில் நீ கூறுவாய், "நான் மட்டுமல்ல, நீயும் முக்கியம்தான்" என்று. மேலும் அன்பு ஆழமாக வளர்ந்தால் நீ கூறுவாய், "நீ என்னை விட மிக முக்கியம். இருவரில் ஒருவர் மட்டும் உயிர் தப்பலாம் என்ற சந்தர்ப்பம் வந்தால், நான் உனக்காக இறக்கவே விரும்புகிறேன். நீ உயிர் வாழ்வதையே விரும்புகிறேன்", என்று இப்படி மேன்மேலும் வளர்ந்தால், மைத்ரி பாவனாவில் வளர்வதைப் போல வளரும்போது, நீ சிறிது சிறிதாக மறைய ஆரம்பிப்பாய். நீயே அங்கு இல்லாத பல கணங்கள் அங்கு வரும் - முழு மௌனமாக, தன்முனைப்பு சிறிதும் இல்லாத, மையமாக எதுவும் இல்லாத, வெறும் தூய்மையான வெட்டவெளியாக...

முடிவில்லாத வெட்டவெளியின் செயல்பாடுதான் ஆனந்தம் என்பது. முழுமை, அது உள்ளுள் நுழையும் அளவு நீ இடம் மிக்கவனாக ஆகும்போதுதான் உன்னால் ஆனந்தமாக இருக்க முடியும்.

## *பார்வையாளர் மட்டுமே நடனமாட முடியும்*

" ONLY A WITNESS CAN REALLY DANCE"

அன்பார்ந்த ஓஷோ அவர்களே: "எச்சரிக்கையாய் இரு" என்றும் "ஒரு பார்வையாளனாய் இரு" என்றும் இடைவிடாமல் நீங்கள் எங்களுக்கு கூறிக்கொண்டே இருக்கிறீர்கள். ஆனால், எச்சரிக்கையாய் இருக்கும் பார்வையாளன் ஒருவனால் இவ்வாழ்க்கையை பாடி, ஆடி, சுவைக்க

முடியுமா? பார்வையாளன் என்பவன் இவ்வாழ்க்கையில் வெறுமனே ஒரு பார்வையாளன் மட்டுந்தானா? அதில்அவன் என்றுமே பங்கு கொள்வதில்லையா?

கட்டாயம் ஏதாவது ஒரு சமயத்திலாவது மனம் இக்கேள்வியினை நிச்சயமாக எழுப்பக் கூடும். ஏனெனில், நீ ஒரு பார்வையாளனாக மாறுவதைக் குறித்து மனமானது மிகவும் பயப்படுகிறது. நீ ஒரு பார்வையாளனாக மாறினால், அதற்காக அந்த மனமானது ஏன் மிகவும் பயப்படவேண்டும்? ஏனென்றால், நீ ஒரு பார்வையாளனாக மாறத் தொடங்கும்போது, அந்த மனம் மரணம் அடைகிறது என்று பொருளாகும். எப்பொழுதும் எதையாவது செய்துகொண்டே இருப்பது மனதின் இயல்பாகும் - அது பல செயல்களைச் செய்ய விரும்புகிறது. ஆனால், பார்வையாளனாய் இருத்தல் என்பது ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும் ஒரு நிலையாகும். “நீ ஒரு பார்வையாளனாக மாறினால் நான் உனக்குத் தேவைப்படாமல் போய் விடுவேனே”, என்று அந்த மனமானது பயப்படுகிறது.

ஒரு வகையில் பார்த்தால், அந்த மனம் இவ்வாறு எண்ணுவதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. உனது அறைக்குள் வெளிச்சத்தை நீ பரவச் செய்தவுடன் அங்குள்ள இருள் விலகத்தானே வேண்டும்? அதைப் போலவே பார்வையாளனாய் இருக்கும் தன்மை உன்னில் குடி கொண்டவுடன், அந்த மனம் மறைந்து போவது என்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகின்றது. நீ ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தால் மட்டுமே, மனத்தினால் வாழ்ந்து கொண்டிருக்க முடியும். ஏனெனில், கனவு காண்பதைப் போன்ற ஒரு வாழ்க்கை நிலையினையே, நாம் மனம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றோம். மேலும், தூக்கத்தில்தான் கனவுகள் தோன்றும்.

நீ ஒரு பார்வையாளனாக மாறத் தொடங்கியவுடன் உன் தூக்கம் கலைந்து விடுகிறது; நீ விழித்துக் கொள்கிறாய். பளிங்கைப் போல் தெளிவான - சீரிளமைத்திறம் வாய்ந்த - புத்தம் புதிய - உயிர்த்துடிப்பு மிக்க - ஆற்றல் வாய்ந்த விழிப்புணர்வாக, நீ மாறுகிறாய். மும்மரமாக இருபுறமும் கொழுந்து விட்டு எரியும் ஒரு தீப்பந்தத்தைப் போன்று நீ மாறிவிடுகிறாய். அதைப் போன்றதொரு தீவிரமான விழிப்பு நிலையின் மெய்ஞான

வெளிச்சத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மனம் இறந்து விடுகிறது., மனம் தற்கொலை செய்துகொள்கிறது.

எனவே, அந்த மனம் பயபடுகிறது; இதன் காரணமாக அது பல்வேறு சிக்கல்களை உனக்கு உண்டாக்கும். பலப்பல கேள்விகளை அது எழுப்பும். இன்னதென்று தெரியாத ஓரிடத்திற்கு, நீ திடீரென தாவிக் கடந்து செல்வதற்கு அது உன்னைத் தயக்கம் காட்டும்படி செய்யும்; அது உன்னை பின்னுக்கு இழுக்க முயற்சி செய்யும்.

"என் வசத்தில் நீ இருந்தால் பத்திரமாக, பாதுகாப்பாக இருப்பாய். என்னுடன் இருப்பதானது, பாதுகாப்பான ஒரு கோட்டையினுள் வாழ்வதற்குச் சமமானதாகும். எல்லா வகையிலும், நான் உன் மீது அக்கறை எடுத்துக் கொண்டு உனக்கு துணையாக இருப்பேன். என்னுடன் நீ இருக்கும் வரையிலும்தான், தகுதி பெற்றவனாகவும், திறமைசாலியாகவும் இருப்பாய். என்னை விட்டு நீ விலகிப் போகும் அந்தக் கணமே, உன்னுடைய அனுபவப் பழக்க அறிவு அனைத்தையும், நீ துறந்து விட வேண்டியதாக இருக்கும். அந்தக் கணமே உன்னுடயை பாதுகாப்பு நிலையையும், பத்திரமான தன்மையையும், இழந்துவிட நேரிடலாம். உன்னுடையக் கவசத்தை களைய வேண்டியதாக இருக்கும். மேலும், கண்காணாத இடத்திற்கு நீ போய் கொண்டிருப்பாய். காரணகாரியம் எதுவுமின்றி நீ இப்படி ஆபத்தை அநாவசியமாக விலைகொடுத்து வாங்குவானேன்" என்று பல்வேறு நியாயங்களை உன்னிடம் அழகாக எடுத்துக்காட்டி, உன்னை அதன் போக்குக்கு இணங்க வைக்க முயற்சி செய்யும். தியானம் செய்ய ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும், ஏறக்குறைய இது மாதிரி தான் நிகழ்கிறது.

நீ இந்தக் கேள்வியை கேட்கவில்லை; உன்னுடைய விரோதியான உன் மனம்தான் இந்தக் கேள்வியை உன் மூலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. "எச்சரிக்கையாய் இரு என்றும், பார்வையாளனாய் இரு என்றும் இடைவிடாமல் கூறிக்கொண்டிருக்கும் ஓஷோ அவர்களே, எச்சரிக்கையாய் இருக்கும் பார்வையாளன் ஒருவனால் இவ்வாழ்க்கையை பாடி, ஆடி சுவைக்க முடியுமா?" என்று உன் மனதுதான் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஆம்! எச்சரிக்கையாய் இருக்கும் பார்வையாளன் ஒருவனால் மட்டுமே உண்மையில் இவ்வாழ்க்கையை பாடி, ஆடி சுவைக்க முடியும். நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயல்புக்கு மாறான செய்தியாக. ஒரு புதிராக. இது தோற்றமளிக்கும். அது ஒரு புதிர்தான்! உண்மை அனைத்துமே எப்பொழுதுமே ஒரு புரியாப்புதிராகத்தான் இருக்கும். ஒரு புரியாப் புதிராக இல்லாத பட்சத்தில், உண்மையை உண்மை என்று நாம் பெயரிட்டு அழைக்க முடியாது என்றும், பின்னர் அது வேறு ஏதோ ஒன்று என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வாயாக.

புரியாப் புதிராக இறுத்தல் என்பது, உண்மையின் இயல்பான அடிப்படைப் பண்பு ஆகும். உண்மையானது எல்லாவிதத்திலும் ஒரு புரியாப்புதிராகத்தான் இருக்கும் என்ற விவரத்தை, உன் இருதயத்தில் ஆழமாகப் பதிந்து வைத்துக்கொள். நம்மால் புரிந்து கொள்ள முடியாத, முரண்பாடான பொருள்கள் அனைத்தையும் நாம் உண்மையானவை என்று கூறிவிட முடியாது; ஆனால், அதே சமயத்தில், எல்லா உண்மைகளும் நம்மால் புரிந்து கொள்ள முடியாத, முரண்பாடான பொருள்களாகத்தான் இருக்கும். உண்மையென்பது முரண்பாடு உடையதாகத்தான் இருக்க வேண்டும்; ஏனெனில், அது உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரு துருவங்களைக் கொண்டது; இருப்பினும், அந்த இரண்டு துருவங்களையும் கடந்த நிலையிலும் விளங்குவது ஆகும். அது வாழ்வு, சாவு ஆகிய இரண்டாகவும் மற்றும் அதன் கூடுதலாகவும் இருக்க வேண்டும். “கூடுதல்” என்று சொல்லும்போது, நான் அவை இரண்டினையும் கடந்த ஒரு நிலையினை குறிப்பிடுகிறேன். இரண்டினையும் கடந்த ஒரு நிலை மற்றும் அவ்விரண்டும் இல்லாத ஒரு நிலை. அதுவே இறுதியான புதிராகும்.

மனம் உன்னை ஆட்சி செய்தால், எவ்வாறு உன்னால் பாடி மகிழ முடியும்? அந்த மனம் துயரத்தை உண்டாக்குகிறது. துயரம் இருக்கும்போது அங்கே தூயகீதம் பிறக்க வழியில்லை. மனம் உன்னை ஆட்சி செய்தால், எவ்வாறு உன்னால் ஆடி, பாடி மகிழ முடியும்? ஆம், நடனம் என்ற பெயரால் வெறுமையான அங்க அசைவுகளை நீ உண்டாக்கலாம். ஆனால், அது உண்மையான ஒரு நடனம் ஆகாது.

உண்மையான நடனம் ஆட ஒரு மீராவால்தான் முடியும்; அல்லது, ஒரு கிருஷ்ணர், ஒரு சைதன்யர் போன்றோரால்தான் முடியும். உண்மையான

நடனமாடத்தெரிந்தவர்கள் இவர்கள்தான். மற்றவர்கள் நடனக்கலையின் நுணுக்கத்தை மட்டும் அறிந்தவர்களாக இருக்கிறார்களேத்தவிர, அக்கலையினால் முழுவதும் ஆட்கொள்ளப்பட்டு பொங்கி வழியத்தக்க வகையில் அவர்களிடத்தில் சிறப்பு அம்சம் ஏதுமில்லை; அவர்களது வீரியம் அவர்களுக்குள்ளேயே தேங்கிக்கிடக்கிறது. மனதின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மக்கள் 'நான்' என்ற தன்முனைப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 'நான்' என்னும் தன்முனைப்பு உடையோரால் நடனமாட முடியாது. அவர்களால் ஒரு நடன நிகழ்சியினைத்தான் நடத்திக் காட்ட இயலுமேத் தவிர, ஒரு நடனம் ஆட அவர்களால் முடியாது.

நீ ஒரு பார்வையாளனாக மாறியப் பிறகுதான், அந்த உண்மையான நடனம் நிகழ்கிறது. ஒரு சிறு கவலையும் இல்லாமல் இன்ப நிறைவினால், நீ நிறைந்திருக்கும்போது அந்த நிறைவானது உன்னிலிருந்து வழிந்தோடத் தொடங்குகிறது; அந்த நடனம் என்பது அதுதான். அந்த இன்ப நிறைவே தன்னில் தானே பாடத் தொடங்குகிறது. எவருடைய தூண்டுதலும் இல்லாமல் ஒரு பாடல் தானாகவே எழுகிறது. மற்றும் நீ ஒரு பார்வையாளனாக இருந்தால் மட்டுமே உன்னால் வாழ்க்கையை ருசிக்க முடியும்

## குகையின் உள்ளே!

"பின்னர் குகையினுள் சென்று அமர்ந்து

தியானம் செய்யத் தொடங்குவாயாக! இது

தியானத்தினுள் ஒரு தியானம் போன்றது ஆகும்"

ஓஷோவின் அனைத்து புத்தகங்களும் அடங்கிய "ஓஷோ ஆய்வு நூலகம்" ஒன்று (பூனாவில்) உள்ளது. ஒரு சமயத்தில் இந்த நூலகம் தொடர்ந்தாற்போல் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை வேளையில் மூடப்பட்டது. பத்திரிக்கை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பல அறிஞர்கள் அந்நாட்களில் அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் சிற்றுண்டியுடன் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

அவர்களுக்கு இடப்பட்ட பணி என்ன தெரியுமா? ஓஷோவின் தரிசன நாட்குறிப்புகளை (DARSAN DIARIES) வகைப்படுத்துவது ஆகும்!

இந்நாட்களை உண்மையிலேயே ஒரு விழாக்காலம் என்று கூறலாம். ஒரு சில நிமிடங்களுக்கொருமுறை அங்கே மகிழ்ச்சியின் எதிரொலி கேட்டுக்கொண்டேயிருக்கும். அடக்கமுடியாத சிரிப்பொலிகள், பெருமூச்சுகள் ஆகியவற்றால், அந்த அறை நிறைந்து காட்சியளிக்கும், மற்றும் சில சமயங்களில் யாரேனும் ஒருவர் திடீரென்று, “இதோ இதைக் கேளுங்கள்” என்று குரலெழுப்புவார். அதைத் தொடர்ந்து, பரம இரகசியங்களை விளக்குவதன் பொருட்டு தமது சீடர் ஒருவருக்கு ஓஷோ அவர்கள் தனியாக எடுத்துச் சொன்ன உவமைக் கதையொண்று உரக்க படித்துக் காட்டப்படும்.

இம்மாதிரியான நிகழ்ச்சி ஒன்றில்தான், விலை மதிக்க முடியாத மணி போன்ற, இந்த சிறிய தியான முறையானது ஓஷோவின் தரிசன நாட்குறிப்பிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டது. ஓஷோவுடன் அந்தரங்கமாக அளவளாவுவதற்கு இது நமக்கு வாய்ப்பளிக்கிறது.

தற்காலத்திற்கேற்ற என்னவிதமான அருமையான கண்டுபிடிப்பு இது!

“ இரவு நேரத்தில் விளக்கை அணைத்துவிட்டு, உன் படுக்கையின் மேல் அமர்ந்து, கண்களை மூடிக்கொள். நீ ஒரு காட்டில் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்”; என்ன சரியா?

பச்சை பசேலென்று காட்சியளிக்கும் பிரம்மாண்டமான காட்டு மரங்கள்! அங்கே நீ நின்று கொண்டிருப்பதாக பாவனை செய்துகொண்டு அங்கிருந்து நகரத் தொடங்கு, ஒரு குறிப்பிட்ட மரத்துக்கருகில் நீ போக விருப்பப்பட்டால், அது தானாக நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமேயல்லாது, நீயாக எதையும் கட்டாயப்படுத்தாதே ஒரு ஐந்து ஆறு நிமிடங்கள், இந்தவிதமாக நீ அந்த காட்டுப்பாதையில் நடந்து வந்துகொண்டிருந்தாயானால், ஒரு குகைக்கு அருகில் வந்து சேருவாய்.

அந்தக் குகைக்கு அருகில் வந்தவுடன், அதன் ஒவ்வொரு அம்சத்தையும் நீ உணர்ந்து பார்க்க வேண்டும். அந்தக் குகையைத் தாங்கிக் கொண்டிருக்கும் பூமியை உற்று நோக்கு; மற்றும் அந்தப் பாறையின் குளிர்ச்சி பொருந்திய

கற்பாறைச் சுவர்களை உன் கைகளினால் தொட்டுப்பார்த்து, அந்தக் கற்களின் நயத்தை உணர்ந்து கொள்.

குகைக்கு அருகில் ஒரு நீர்வீழ்ச்சி உள்ளது. அதை நீ கண்டுபிடிப்பாய். அது ஒரு சிறிய நீர்வீழ்ச்சி சலசலவென விழுந்துக்கொண்டிருக்கும் நீரின் இனிமையான ஓசை. அதைக் கவனி. அதை மட்டுமா? சந்தடியில்லாத அந்தக் காட்டின் இனிமை, மற்றும் அங்குள்ள பறவைகளின் அமைதி ஆகியனவற்றையும்தான்.

ம்...! என்ன, நான் சொல்வதைக் கேட்டாயா? நீ இந்த இயற்கைக் காட்சிகளையெல்லாம் இவ்வாறு கண்ணாரக் கண்டு கேட்டு, உய்த்து உணர வேண்டும்.

பின்னர் குகையினுள் சென்றமர்ந்து தியானம் செய்யத் தொடங்குவாயாக! இது தியானத்திற்குள் ஒரு தியானம் போன்றது ஆகும். சீனப்பெட்டிகளை நீ பார்த்திருக்கிறாயா? பெட்டிக்குள் பெட்டி.... பெட்டிக்குள் பெட்டி.....

ஆகவே, இந்தவிதமாக நீ தியானம் செய்து கொண்டிருப்பாய்; ஐந்து நிமிடங்கள் கழித்து நான் உன் தியானத்தில் தோன்றுவேன். நீ அந்த நேரத்தில் ஏதாவது கேள்வி கேட்க விரும்பினால் ஒரே ஒருகேள்விக்கு மட்டும் உனக்கு அனுமதியுண்டு! நான் உன்னுடைய கேள்விக்கு என்ன பதில் கூறினேன் என்று இதன் பின்னர் நீ என்னிடம் வந்து கூற வேண்டும். நீ என்னை ஏமாற்ற முடியாது; ஏனெனில், இந்த பதில் எனக்குத் தெரியும் (சிரிப்பு)

இது மிகப் பழமையான ஒரு தியான நுணுக்கமாகும். ஆகவே, இந்த இரவு நேரத்திலிருந்து இந்த தியானத்தைச் செய்வதற்கு நீ ஆரம்பிப்பாயாக!

இந்த தியான முறையை தமது சிஷ்யை ஒருவருக்கு, ஓஷோ அவர்கள் மேற்கண்டவாறு விளக்கிக் கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இரண்டு வாரங்கள் கழிந்தன.

ஓஷோ அவர்கள் தமது சீடருக்கு தரிசனம் தரும் நிகழ்ச்சியொன்று, இதற்குப் பின்னர் ஒருநாள் நடைபெற்றது. இந்த தரிசன நிகழ்ச்சியில் ஓஷோ அவர்கள் தமது சிஷ்யையை நோக்கி, இந்த தியான முறையை

முயற்சி செய்து பார்த்ததின் விளைவாக அந்த சிஷ்யைக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறும்படி கேட்டுக்கொண்டார்.

“கற்பனைக் கண் கொண்டு நான் அந்தக் காட்டை பார்க்க முயற்சி செய்தேன்; ஆனால் எளிதில் தூங்கிப்போனேன்! என்னுடைய குழந்தைப் பருவத்தில், என்னுடைய கடந்த காலத்தில் நடைபெற்ற அனேக நிகழ்ச்சிகள் என் மனத்திரையில் ஓடி மறைந்தன...”

“அப்படியானால் நீ அந்தக் குகையை சென்றடையவே இல்லையா?”

“இல்லை; ஆனால், நான் உங்களைப் பார்த்தேன்; எனினும் நீங்கள் மறைந்து விட்டீர்கள்”.

“ம்.. என்ன; நீ என்னை ஒருமுறை பார்த்தாயா? சரி அது” இருக்கட்டும்; மொத்தத்தில் இதில் உன் அனுபவம் எப்படி? நன்றாக இருந்ததா?

“ஆம்! மிகவும் அமைதியாக இருந்தது”.

“இந்த தியான முறையை நீ தொடர்ந்து செய்து கொண்டிரு, வெகு சீக்கிரத்தில் அந்தக் குகையைச் சென்றடைவாய், இன்னும் அது சிறிது தூரத்தில்தான் இருக்கிறது. (உள்ளூர நகைக்கிறார்) தளராமல் தொடர்ந்து பிரயாணம் செய்து, அந்தக் குகையை அடைவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடி.

மிகவும் நீண்டதாயிருக்கிற, பழைய பாதை ஒன்றிலேயே நீ இன்னமும் பிரயாணம் செய்துக் கொண்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு, புதிய பாதை ஒன்றைக் கண்டுபிடித்து, அந்தப் பாதையில் உன் பிரயாணத்தை மேற்கொண்டு, மீண்டும் உனக்கு தூக்கம் வருவதற்குள் அந்தக் குகையை அடைவதற்கு முயற்சி செய்வாயாக! (சிரிப்பு)

வேகமாக ஓடு! அந்தக் குகையை நீ அடைந்தே ஆக வேண்டும்! எனவே சைக்கிள் அல்லது வேறு ஏதாவது வாகனங்களை நீ இதற்காகப் பயன்படுத்தினாலும், தவறில்லை. (மீண்டும் சிரிப்பொலிகள்) அந்தக் குகை அங்கேதான் இருக்கிறது; அந்தக் குகையின் உள்ளே நான் உனக்காக காத்துக் கொண்டிருப்பேன்! அந்த குகைக்குள்ளே நீ வந்து சேர்ந்தால்தான் . என்னை உன்னால் கண்டுபிடிக்க முடியும்! (உள்ளூர நகைக்கிறார்) மற்றபடி என்னைக் கண்டுக்கொள்வதென்பது கஷ்டமான காரியமாகும். முன்பு

ஒருமுறை என்னை நீ பார்த்ததாக கூறினாயல்லவா; அப்போது நான் உனக்காக குகையின் வெளியே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; எனவேதான் உன்னால் என்னைப் பார்க்க முடிந்தது, நீ பார்த்துக் கொண்டேயிரு!

**BE REALISTIC: PLAN FOR A MIRACLE**

## *வேலையில் விழிப்புணர்வு*

அன்புள்ள ஓஷோ!

நீங்கள் எல்லாவற்றையும் பற்றி விழிப்புணர்வோடு இருக்கச் சொல்லுகிறீர்கள். அதாவது எல்லா செயல்கள் மற்றும் அனைத்திற்கும் சாட்சியாக, நான் வேலை செய்யும்பொழுது விழிப்போடிருப்பேன் என்று முடிவு செய்வேன். ஆனால், விழிப்புணர்வை மறந்து விடுவேன். நான் விழிப்புணர்வோடில்லை என்பதை உணரும்பொழுது, எனக்குள் ஏதோ தவறு செய்துவிட்டதாக குற்ற மனப்பான்மை ஏற்படுகின்றது. இந்நிலை ஏன்? விளக்குவீர்களா!

எவர் ஒருவர் வேலை செய்யும்பொழுது விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ, அவருடைய பிரச்சினை இதுதான். ஏனெனில், வேலையானது உங்களை நீங்களே முழுமையாக மறக்கும்படி செய்கின்றது. நீங்கள் அதனுள் அப்படி மூழ்குகிறீர்கள், உங்களையே மறந்து அதனுள் ஒரு முழு ஈடுபாடு இல்லையேல், அது வேலையாகாது.

உயர்ந்த பொருட்கள் என்று போற்றப்பட்டு மனிதனால் உருவாக்கப்படும் ஓவியம், கவிதை, சிற்பம் மற்ற கலைகளனைத்தும் முழு ஈடுபாடின்றி செய்ய முடியாது. இதனுள், நீங்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டுமென்று நினைத்து செய்தீர்களானால், உங்கள் கலை முதல்தரமானதாக இருக்காது. ஏனெனில், நீங்கள் அதனுள் இல்லை.

எனவே வேலை செய்வதில் விழிப்புணர்வு என்பதற்கு நிறைய பயிற்சியும், கட்டுப்பாடும் தேவை. இப்பயிற்சி சிறுசிறு பொருட்களிலிருந்து ஆரம்பமாகும். உதாரணமாக நடத்தல், சாப்பிடுதல் நடக்கும்போது ஒவ்வோரடியும் விழிப்புணர்வு நிறைந்ததாக அமையட்டும். ஸென் (ZEN) மடங்களில் தேநீர் அருந்த ஒரு குறிப்பிட்ட வழிமுறை உண்டு. அதற்கு

தேநீர் விழா என்பார்கள். ஏனெனில், டீ குடிக்கும்போது ஒருவன் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

இதுபோல் சின்னசின்ன பொருட்களிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். உயர்ந்த கடினமான கலைகளான ஓவியம், நடனம் முதலியவற்றில் ஆரம்பிக்க முடியாது. தினசரி வாழ்க்கையில், சிறுசிறு செயல்களுக்கு இதை நடைமுறைப்படுத்துங்கள். நாளாக, நாளாக எந்த வேலை செய்தாலும் இது தானாக வருவதை (SPONTAREONS) மூச்சு விடுவதைப் போல் வருவதை உணர்ந்து பழக்கப்பட்டு விடுவீர்கள்.

இதற்கும் ஒரு கட்டுப்பாடு உண்டு. இது முயற்சியில்லாமல் தானாக வரவேண்டும். அப்போதுதான் நீங்கள் வரையும்பொழுது, இசையமைக்கும்பொழுது, நடனமாடும்பொழுது, உன் எதிரியுடன் வாள் சண்டை போடும்பொழுதுகூட முழுமையாக விழிப்பணர்வுடன் இருக்க முடியும். இந்த விழிப்புணர்வு நீங்கள் தேடும் விழிப்புணர்வு அல்ல. இது ஒரு ஆரம்பம். இது ஒரு நீண்ட கட்டுப்பாட்டின் (DISCIPLINE) முடிவு. இது ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாடில்லாமலும் ஆகும்.

ஆனால், இது எப்போதாவதுதான் ஆகும். தினசரி வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட இலகுவான பாதையைக் கடைபிடிக்க வேண்டும். முதலில் எந்த செயல்களில் உங்கள் ஈடுபாடில்லை என்பதை முடிவு செய்யுங்கள். நீங்கள் நடந்துகொண்டே யோசிக்கலாம். சாப்பிட்டுக் கொண்டே சிந்திக்கலாம். நீங்கள் சிந்திப்பதை விழிப்புணர்வாக மாற்றுங்கள். சாப்பிட்டுக்கொண்டே, நீங்கள் விழிப்போடிருப்பதை உணருங்கள். விழிப்புணர்வு சிறு சிறு செயல்களில் சாத்தியமானது. பழக்கப்பட்டபின் கடின செயல்களில் இதை நடைமுறைப்படுத்துங்கள். இவ்வாறு செய்வதால், உலகில் எல்லா செயல்களையும் நீங்கள் விழிப்புணர்வோடு, முழுமையாக (TOTALITY) செய்வீர்கள்.

நீ கூறுகிறாய் “நான் வேலை செய்யும்பொழுது விழிப்புணர்வோடு இருக்க நினைப்பேன். ஆனால், மறந்து விடுவேன்”. இது உன்னுடைய ஒரு முடிவாக இருக்கக்கூடாது. இது ஒரு நீண்ட கட்டுப்பாட்டின் முடிவாயிருக்க வேண்டும். இது தானாக வரவேண்டும்; கூப்பிட்டோ கட்டாயப்படுத்தியோ அல்ல.

“நான் விழிப்புணர்வோடு, இல்லையென்பதை உணரும்போது நான் ஒரு தவறு செய்துவிட்டதாக குற்றமனப்பான்மை ஏற்படுகின்றது” இது முழு முட்டாள்தனம். நீ விழிப்புணர்வோடில்லை என்பதை உணரும்பொழுது இப்பொழுதாவது உணர்ந்தேனே என்று சந்தோஷப்படு. என் போதனையில் குற்ற உணர்வு (CONCEPT OF GUILT) என்ற பேச்சுக்கே இடமில்லை.

நான் உன்னுடைய நிலையை, முழுதும் மாற்ற விரும்புகின்றேன். நான் எவ்வளவு முறை விழிப்புணர்வோடு இருக்க மறந்தேன் என்று எண்ணுவதை விட்டுவிட்டு, எவ்வளவு முறை நான் முழுமையாக விழிப்புணர்வோடிருந்தேன் (CRYSTAL CLASS & AWARE) என்பதை எண்ணு. இந்த சில க்ஷணங்கள் உன்னைக் காப்பாற்ற, உன் காயத்தை குணப்படுத்த போதுமானவை. எப்போது நீங்கள் அதன்மீது கவனம் செலுத்துகிறீர்களோ அவை வளர்ந்து உங்கள் எண்ணம் முழுதும் வியாபிக்கும். மெதுமெதுவாக அறியாமை என்ற இருட்டு விலகும்.

ஆரம்பத்தில் வேலை செய்யும்பொழுது, விழிப்போடிருத்தல் முடியாத காரியமாக இருக்கலாம். ஆனால், நான் கூறுகின்றேன். இது மிகவும் சுலபம் சரியான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். X Y Z லிருந்து ஆரம்பிக்காமல், அ ஆ இ யிலிருந்து ஆரம்பியுங்கள்.

வாழ்க்கையில், நாம் பலவற்றை இழக்கின்றோம் தவறான ஆரம்பங்களினால். நம்முடைய மூளை மிக அவசரத்தன்மையுடையது. எல்லாவற்றையும் மிக விரைவாக முடிக்க நாம் விழைகின்றோம். நாம் ஏணியின் ஒவ்வொரு படியாக ஏறாமல் உச்சிக்குப் போக அவசரப்படுகின்றோம்.

இது ஒரு முழுமையான தோல்விக்கு வழிவகுக்கும். விழிப்புணர்வு, இதில் நீங்கள் தவறினால், இது ஒரு சிறு தோல்வி ஆகாது. ஏனெனில், நீங்கள் மறுபடி முயற்சி எடுக்க மாட்டீர்கள். தோல்வியோ, துன்பம் தரக்கூடியது.

எனவே, இந்த வாழ்வில் உள்ள அனைத்து அதிசய அற்புதங்களுக்கு திறவுகோலாக இருந்து, இறைவனின் கோவில் வரை சேர்க்கும் இந்த விழிப்புணர்வை நீங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன், ஆரம்பத்திலிருந்து செய்ய ஆரம்பித்து, மெதுவாக செய்ய வேண்டும். கொஞ்சம் பொறுமையோடிருந்தால், உங்கள் இலக்கு தூரமாகயிருக்காது.

